# வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்



பாவை பப்ளிகேஷன்ஸ்

# வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்

வல்லிக்கண்ணன்

பாவை பப்ளிகேஷன்ஸ்
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 14.

*VALLIKKANNANIN SIRAPPU SIRUKADHAIKAL*

*by Vallikkannan*

வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்

வல்லிக்கண்ணன்.

பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு

© உரிமை :

Code No. A : P0074

ISBN :81-7735-070-6

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 2002
இரண்டாம் அச்சு : ஜூன், 2004

விலை : ரூ. 60.00

ஒளி அச்சு : ஹைடெக் கிராஃபிக்ஸ்
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**
142, ஜானி ஜான் கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
☎: 28482441, 28482973

## பதிப்புரை

# வல்லிக்கண்ணனின் சிறப்புச்சிறுகதைகள்

இலக்கியச் செல்வர் என்று போற்றப்படும் மூத்த முற்போக்கு எழுத்தாளர் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள் எழுதிய 18 சிறுகதைகளின் தொகுப்பாகும். இந்த நூல். நண்பர் திரு வ. விஜயபாஸ்கரன் அவர்கள் 1955 முதல் 1962 வரை நடத்திய முற்போக்கு இதழ் 'சரஸ்வதி'யில் வெளிவந்தவை இச்சிறுகதைகள். நூலாசிரியர் பற்றிய ஒரு குறிப்பை இத்துடன் இணைத்துள்ளோம். 60 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கிய வாழ்வில் அவரின் சாதனைகளை (சிறுகதை, குறுநாவல், கட்டுரை, கவிதை, நாடகம் முதலியன) ஓரளவு இது எடுத்துக்கூறும் என நம்புகிறோம். தமிழ் இலக்கியத்தில் சிறுகதைகள் வரலாறு பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையையும் அவர் எழுதியுள்ளார். 82 வயது ஆகியும் இளைஞன் போன்று சுறு சுறுப்புடன் தமது இலக்கிய பணியை தொடர்ந்து செய்து கொண்டும் இளம் எழுத்தாளர்களை ஊக்கு வித்தும் வருகிறார்.

1959 ம் ஆண்டின் சரஸ்வதி ஆண்டு மலரில் வெளிவந்த 'துணிந்தவன்' என்ற இவரது நாவலை நாம் ஏற்கனவே வெளியிட்டோம். அது நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. அவரது இந்த சிறுகதைத் தொகுப்பும் தமிழக வாசகர்களின் நல்ல ஆதரவைப் பெறும் என்பதில்

ஐயமில்லை. இக்கதைகள் எழுதி 35 - 40 ஆண்டுகள் ஆகியும் இப்பொழுது படித்தாலும் படிப்பதற்கு ஆர்வத்தைத் தூண்டுகின்றன. காரணம் நூலாசிரியர் கூறுவது போல வாழ்க்கையின் யதார்த்தங்களையும் மனிதர்களின் பலவித இயல்புகளையும் செயல்பாடுகளையும் எளிய நடையில் கற்பனைப் பூச்சோடு எழுதியதால் தான் சாமான்ய மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும் பெண்கள் படும் அவலங்களையும் நெஞ்சைத் தொடுமாறு அவர் சித்தரிக்கிறார்.

நாட்டுப்பற்று, மனிதநேயம் நேர்மை, திக்கற்ற பெண்ணைக் காப்பாற்றும் பண்பு, வறுமை, படாடோபம், போலித்தனம், பீதி, துரோகம் ஆகியவற்றை அவரது கதாபாத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. இச்சிறுகதைத் தொகுப்பை வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திரு. வல்லிக்கண்ணன் அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றி.

'சரஸ்வதி' யில் தமது சிறுகதைகள் கட்டுரைகள் முதலியவற்றை எழுதியதோடு அதன் வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்தவர் திரு.வல்லிக்கண்ணன், 'சரஸ்வதி காலம்' என்ற தொடர்கட்டுரையை 'தீபம்' இதழில் எழுதினார். 'துணிந்தவன்' என்ற நாவலுக்கு எழுதிய அணிந்துரையில் 'சரஸ்வதி'யின் பன்முக சாதனைகளைப் பற்றி பின் வருமாறு கூறுகிறார்.

''நண்பர் வ.விஜயபாஸ்கரன் முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்காகவே 'சரஸ்வதி' பத்திரிகையை நடத்தியதே துணிச்சலான செயல்தான். எட்டு வருடகாலம் வளர்ந்த 'சரஸ்வதி' இதழியல் வரலாற்றில் தடம் பதித்துள்ள சிறப்பான சிற்றிதழ் ஆகும். தமிழில்

முற்போக்கு இலக்கியம் செழுமை பெறுவதற்கு 'சரஸ்வதி' பெரிதும் உதவியுள்ளது. திறமை நிறைந்த படைப்பாளிகள் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தி வாசகர்களின் கவனிப்பைப் பெற்று வளர்ச்சியடைவதற்கும் அது துணை புரிந்தது. புதுமையான சிறுகதைகள், சிந்தனைக் கட்டுரைகள், தத்துவ விளக்கங்கள், நூல் விமர்சனங்கள், அயல் நாட்டு நாவல்களின் சுருக்கங்கள், இலக்கிய விவாதங்கள் என்று பல வகைகளிலும் 'சரஸ்வதி' சாதனை புரிந்து தனக்கெனத் தனி இடம் பெற்றிருக்கிறது''

'சரஸ்வதி'யில் வெளிவந்த சிறந்த படைப்புகளை தொகுத்து 'சரஸ்வதி' களஞ்சியம் என்று நண்பர் விஜயபாஸ்கரன் சென்ற ஆண்டில் (2001) வெளியிட்டார். அதற்கு அணிந்துரை வழங்கிய திரு.வல்லிக்கண்ணன் சரஸ்வதியின் சாதனைகளைப் பட்டியலிட்டுள்ளார். 'சரஸ்வதி' ஆரோக்கியமான இலக்கிய விவாதங்களை வளர்த்தது, என்றும் சுவாரசியமான சர்ச்சைகளுக்கு இடம் அளித்தது என்றும் கூறியுள்ளார். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், மகாகவி பாரதி பற்றியும், சிறுகதை சாம்ராட் புதுமைப்பித்தன் பற்றியும் விவாதிக்க 'சரஸ்வதி'யில் விவாத மேடை அமைத்துத் தந்தார். திரு.விஜயபாஸ்கரன். அதில் முற்போக்கு எழுத்தாளர்கள் பங்கு பெற்றனர். பாரதி பற்றிய கட்டுரைத்தொகுப்பை நாம் வெளியிட்டோம். புதுமைப்பித்தன் பற்றிய கட்டுரைத் தொகுப்பை என்.சி.பி.எச். வெளியிட்டது. 'சரஸ்வதி'யில் வந்த சாமிசிதம்பரனார் திரு. எஸ். ராமகிருஷ்ணன் ஆகியோரின் படைப்புகளை வெளியிடத்திட்டமிட்டுள்ளோம்.

'சரஸ்வதி' இதழ்களை பிரதிகள் எடுத்து கொள்ள வசதிசெய்து கொடுத்து அதன் முக்கிய

படைப்புக்களைப் பல நூல்களாக வெளியிட அன்புடன் அனுமதியளித்த நண்பர் விஜய பாஸ்கரனுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

– பதிப்பகத்தார்.

## நூலாசிரியரைப் பற்றி

திருநெல்வேலி மாவட்டம் ராஜவல்லிபுரத்தில் பிறந்த ரா.சு. கிருஷ்ணசுவாமி 12-11-1920 ல் பிறந்தவர். பள்ளி இறுதி வகுப்புப் படிப்பை முடித்து விட்டு, நான்கு ஆண்டுகள் அரசுப் பணியில் உழைத்த பிறகு, எழுத்தாளனாக வளரவேண்டும் என்ற நோக்கத்தோடு அதை உதறிவிட்டு வல்லிக்கண்ணன் அதிக உற்சாகமாக எழுத ஆரம்பித்தார். 1939 முதல் இவரது சிறு கதைகளும் கட்டுரைகளும் வெளிவரலாயின. ‘திருமகள்’, ‘சினிமா உலகம்’ ‘நவசக்தி’ (இலக்கிய மாத இதழ்) ஆகியவற்றில் உதவி ஆசிரியராகப் பணியாற்றி விட்டு, 1943 முதல் 1947 மே முடிய ‘கிராம ஊழியன்’ எனும் மறுமலர்ச்சி இலக்கிய மாதம் இரு முறைப் பத்திரிகையின் ஆசிரியராக வளர்ச்சி பெற்றார். 1950 -51 ல் சென்னையில் ‘ஹனுமான்’ வார இதழில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் எந்த நிறுவனத்திலும் சேராது சுதந்திர எழுத்தாளராக வாழ முற்பட்டார். தனது 62 வருட இலக்கிய வாழ்வில் சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை, கவிதை, வாழ்க்கை வரலாறு, நாடகம், கடிதங்கள், மொழிபெயர்ப்பு எனப் பல துறைகளிலும் அறுபதுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் எழுதியுள்ளார்.

‘புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்’ என்ற நூலுக்காக இந்திய சாகித்திய அகாதமிப் பரிசு 1998 ல் இவருக்கு வழங்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிப் பரிசு ‘எழுத்தாளர்கள் பத்திரிகைகள் -

அன்றும் இன்றும்' எனும் நூலுக்கு 1987 ல் அளிக்கப் பட்டது. 'அக்னி- அக்ஷர விருது', ஆழ்வார்கள் ஆய்வு மையம் விருது, தமிழ் சான்றோர்கள் பேரவை விருது மற்றும் பல இலக்கிய அமைப்புகளின் தமிழ்ப்பணி விருதுகள் இவருக்கு வழங்கப்பெற்றுள்ளன.

நான்கு தலைமுறை எழுத்தாளர்களுடன் அன்புத் தொடர்பும் நட்பும் கொண்டிருக்கும் (வருங்கால) இளைய எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து கவனிப்பைப்பெற்றிருக்கிறார். ஆடம்பரமற்ற முறையில் எளிமையாக வாழும் இந்த 81 வயது பிரமச்சாரி இப்போதும் எழுதுவதிலும் படிப்பதிலும் பலரோடும் கடிதத் தொடர்பு கொள்வதிலும் மகிழ்ச்சி காண்கிறார்.

[redacted] [redacted]

# முன்னுரை

தமிழில் சிறுகதைத் துறை வளமாக, வனப்புடனும் வலிமையோடும் புதுமைப்பொலிவோடும் வளர்ந்துள்ளது.

சிறுகதை அப்படி செழித்து வளர்வதற்கு பத்திரிகைகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளன. முக்கியமாக சிற்றிதழ்கள்.

தமிழ் இதழியல் வரலாற்றில் தனக்கெனத் தனிஇடம் அமைத்துக் கொண்டுள்ள 'சரஸ்வதி' இதழ் சிறுகதை வளர்ச்சிக்கும் நல்லமுறையில் தொண்டாற்றியிருக்கிறது. ஒரு அர்ப்பணிப்பு உணர்வுடன் 'சரஸ்வதி' இதழை எட்டு ஆண்டுகள் நடத்திய நண்பர் வ. விஜயபாஸ்கரன், முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார். அத்துடன் இலக்கியத்தின் பலவிதமான முயற்சிகளுக்கும், சோதனைகளுக்கும் வரவேற்பு அளித்தார். படைப்பாளிகளுக்கு சுதந்திரம் அளிக்கவும் அவர் தயங்கவில்லை.

அதனால், வகை வகையான–புதுமையான சிறுகதைகள் மலர்ந்து மணம் பரப்பக் கூடிய இனிய நந்தவனமாக "சரஸ்வதி" விளங்கியது.

"சரஸ்வதி"யில் கட்டுரைகள், உதிரிப்பூக்கள், நாவல் சுருக்கம், நூல் மதிப்புரை, சுவையான துணுக்குகள் என்றெல்லாம் எழுதிய நான் விதம் விதமான சிறுகதைகளையும் எழுதினேன். வாழ்க்கையின் யதார்த்தங்களையும், மனிதரின் பலவித இயல்புகளையும் செயல்பாடுகளையும், நடை நயத்தோடும் கற்பனைப் பூச்சோடும் ரசமான கதைகளாக எழுதிவந்தேன்.

"சரஸ்வதி"யில் வெளிவந்த எனது சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து நல்ல முறையில் புத்தகமாக இப்போது பிரசுரிக்கிறது பாவை பதிப்பகம்.

என் சிறுகதைகளை வெளியிட்ட "சரஸ்வதி" இதழ் ஆசிரியர், நண்பர் விஜயபாஸ்கரன் அவர்களுக்கும், அவற்றை தேர்ந்தெடுத்து தொகுப்பாக வெளியிடும் பாவை பதிப்பகத்தாருக்கும் என் நன்றி உரியது.

**- வல்லிக்கண்ணன்**

# உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1, | படிப்பும் பதவியும் | 1 |
| 2. | கோளாறு | 8 |
| 3. | இரண்டு பாபிகள் | 14 |
| 4. | மனோபாவம் | 24 |
| 5. | உயர்ந்தவன் | 30 |
| 6. | பிரமை அல்ல | 37 |
| 7. | கண்ணில் படாத காதல் | 47 |
| 8. | நல்ல காரியம் | 54 |
| 9. | காட்டிக் கொடுத்தவன் | 64 |
| 10. | இளகிய மனசு | 74 |
| 11. | ஒரே ஒரு மனிதன் | 80 |
| 12. | உரிமை | 85 |
| 13. | சூரன் குத்து | 102 |
| 14. | மனப் பிராந்தி | 107 |
| 15. | பொம்மைகள் | 117 |
| 16. | கொடிது, கொடிது! | 125 |
| 17. | சிலந்தி | 132 |
| 18. | பெரிய மனசு | 141 |

# 1

# படிப்பும் பதவியும்

"தம்பி, நீ பரீட்சைகள் எல்லாம் எழுதிப் பாஸ் பண்ணி, பட்டங்கள் வாங்கியிருக்கலாம். ஓயாது புத்தகங்களைப் படித்துப் படித்து அறிவு விருத்தி செய்துகொண்டிருக்கலாம். ஆனால் வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்திருப்பதனாலே ஒண்ணும் நடக்காது. தபாலில் எழுதிப் போட்டு விடுவதனாலும் பிரயோசனமில்லை. பல பேரையும் நேரில் பார்த்துப் பேசிப் பழகணும். பெரிய மனிதர்கள் சில பேருடைய தயவு உனக்கு வேணும். இதெல்லாம் இல்லையென்றால், இந்த உலகத்தில் நீ நன்றாக வாழ முடியாது..."

"வேலையில்லாதவன்" என்ற பட்டத்தோடு உலாவிய இளையபெருமாளுக்கு, அவனுடைய உறவினர் சூரியன் பிள்ளை அடிக்கடி கூறுகிற உபதேசம் இது.

அவனுக்கு ஏதாவது உத்தியோகம் தேடிக் கொடுக்கவேண்டியது தமது கடமை என்று கருதிய "சமூகப் பெரிய மனிதர்" அவர். அவரால் உபதேசம் புரியத்தான் முடியுமே தவிர, உருப்படியாக எதுவும் செய்ய இயலாது என்பது அவனுடைய அபிப்பிராயம்.

ஆயினும், "அட, சூரியன் பிள்ளையால்கூட ஏதோ உதவி செய்ய முடியும் போல் தோணுதே!" என்று இளையபெருமாள் எண்ண வேண்டிய சந்தர்ப்பமும் வந்து சேர்ந்தது.

ஒரு நாள் பிள்ளை அவர்கள் ஒரு கடிதத்தோடு வந்தார். "தம்பி, உனக்கு அக்கறை இல்லையென்றால் கூட, நான் உனக்காக எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக்

கொண்டுதான் இருக்கிறேன். ஏன்னு கேட்கணும். அந்தக் காலத்திலே உங்க அப்பா எனக்கு நிறைய உதவிகள் செய்திருக்காக. அந்த நன்றியினாலேயும், உன்னைக் கவனித்துக் கொள்ளும்படி உங்க அம்மா தன் கடைசிக் காலத்திலே என்னிடம் சொல்லிவிட்டுப் போனதனாலேயும்தான் நான் இவ்வளவு சிரத்தை காட்டுகிறேன்..."

சூரியன் பிள்ளை இவ்வாறு பேசத் தொடங்கிவிட்டால், இளையபெருமாள் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியது தான். தப்புவதற்கு வேறு வழி கிடையாது. இப்போதும் அவன் "சிவனே என்று" உட்கார்ந்திருந்தான்.

"நம்ம அறம் வளர்த்த நாதர் இருக்கிறாரே அவருக்குக் காரியதரிசி தேவை என்று கேள்விப் பட்டேன்... அறம் வளர்த்தாரைத் தெரியாது உனக்கு? என்ன பிள்ளையப்பா நீ! வெறும் புத்தகப் பூச்சியாக இருக்கியே... பெரிய தலைவரு சிறந்த பேச்சாளரு, அப்படி இப்படீன்னு அவர் பேரு எங்கும் அடிபடுது. நீ என்னடான்னா அந்த ஆளைப்பற்றி எனக்கு ஒண்ணுமே தெரியாது என்கிறீயே!" என்று வருத்தப்பட்டார் பெரியவர்.

"ஓ, அந்த எம்.எல்.ஏயை சொல்கிறீர்களா?" என்று இளையபெருமாள் கேட்டான். "அப்பாடா! இது புரிவதற்கு இவ்வளவு நேரமாச்சுதா?" என்று பிள்ளை அலுத்துக் கொண்டார். "ஆமா, அவரேதான். அவருக்கு ஒரு செக்ரடரி வேணுமாம்"...

"அதுக்கு நான்-நீ என்று எத்தனையோ பேரு விழுந்தடிச்சு ஓடுவாங்களே! மேலும், அவருக்குத் தெரிந்த பெரிய மனுஷங்க தங்களுக்கு வேண்டிய ஆசாமிகளுக்கு சிபாரிசு செய்வாங்க..." என்று இழுத்தான் இளையவன்.

"அதை எல்லாம்பற்றி உனக்கென்ன? நீ நான் சொல்கிறபடி செய்; அறம் வளர்த்ததாருக்கு ரொம்பவும் சிநேகிதரான ஒருவரைப் புடிச்சு, நான் ஒரு கடிதம் வாங்கி வந்திருக்கிறேன். உனக்காகத்தான். நீ அதை எடுத்துக் கொண்டு, நம்ம எம்.எல்.ஏ.யை பார்க்கப் போ. அவர் என்ன சொல்கிறார் என்று பாரேன்" என நம்பிக்கையோடு அருள் புரிந்தார் சூரியன்பிள்ளை.

எம்.எல்.ஏ. அறம்வளர்த்தநாதபிள்ளையைச் சந்திக்கப் போக வேண்டும் என்கிற எண்ணமே இளையபெருமாளுக்குக் கசப்பாக

இருந்தது. "சனியன் பிடிச்ச இந்தச் சூரியன் பிள்ளைக்காகத்தான் போய்த் தொலைக்க வேண்டும்" என்று அவன் மனம் புலம்பியது. பிறகு பரவால்லே. அதனாலே கால நஷ்டம் தவிர வேறு நஷ்டம் எதுவும் ஏற்படாது. மூணெழுத்து வாலர் எப்படி இருக்கிறார் என்றும் பார்த்துவிடலாமே!" என்று அவன் தனக்குத்தானே உபதேசித்துக் கொண்டான்.

அறம்வளர்த்தநாதர் எம்.எல்.ஏ.யை இளையபெருமாள் சந்திக்கச் சொன்ற வேளையில், வேறு அநேகரும் அவர் பேட்டிக்காகக் காத்து நின்றார்கள். காரில் வந்த கனவான்கள் இருவரோடு அவர் உரையாடிக் கொண்டிருந்தார். அவருக்கு ஓட்டுப்போட்டு அவரைப் பெரிய மனிதராக ஆக்கிவிட்ட "இந்நாட்டு மன்னர்"களில் பலர் அவருடைய தயவைக் கோரி "பல்லெல்லாம் தெரியக் காட்டி.... சொல்லலாம் சொல்லி நாட்டி, துணைக்கரம் விரித்து நீட்டி"க் கெஞ்சுவதற்காகக் காத்துக் கிடந்தார்கள். படித்துப் பட்டம் பெற்றவர்களும், படிக்காமலே வாழ்வில் உயர்நிலையை எட்டிப் பிடித்துவிட்டவர்களும், பணக்காரர்களும் - பணமில்லாதவர்களும் பல தரத்தினரும் எம்.எல்.ஏ.யிடம் ஏதாவது ஒரு உதவி பெறுவதற்காக அலைந்து கொண்டிருந்தார்கள். அவர் ஆளுக்குத் தக்கபடி பேசி, வந்தவரை எல்லாம் திருப்தி செய்து அனுப்பி வைத்தார்.

"வயல் விளைந்து சாப்பிடவேண்டிய நிலையில் இருப்பவர்கள் அநேகர். வாய் விளைந்து சாப்பிடுவோர் பலர்-இப்படி ஒரு பெரியவர் சொல்வது வழக்கம். அறம்வளர்த்தார் வாய்த் திறமையால் வயிறு வளர்ப்பவர்; வாழ்க்கையை வளர்ப்பவரும்கூட. இல்லையென்றால் அவர் எம்.எல்.ஏ. ஆகியிருக்க முடியுமா?'' இவ்விதம் இளையபெருமாளின் மனக்குறளி முணமுணத்துக் கொண்டிருந்தது.

அவசரக்காரர்கள் அனைவரும் போய்ச் சேர்ந்த பிறகு, இளையபெருமாள் பெரியவர் திருமுன் ஆஜரானான். அவருக்கு "வேண்டியவர்" எழுதித் தந்திருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தான். தமிழில்தான் எழுதப்பட்டிருந்தது அது. எழுதியவரின் தமிழ்ப்பற்றை அது காட்டுகிறது என்றே இளையபெருமாள் எண்ணியிருந்தான்.

"உனக்கு இங்லீசு பேச வருமா?" என்று கேட்டார் எம்.எல்.ஏ.

"நான் பி.ஏ. பாஸ் செய்திருக்கிறேன்" என்று ஆங்கிலத்தில் அறிவித்தான் அவன்.

அறம் வளர்த்த நாதர் புன்னகை பூத்தார். "நீ என்னிடம் இஞ்லீசு பேசணும்கிற அவசியமே கிடையாது. என் செக்ரடரி எனக்காக மற்றவர்களிடம் இஞ்லீசில் பேசினால் போதும்" என்றார். அவன் பெயர், ஊர். உறவுப் பெரியவர்கள் பற்றி எல்லாம் விசாரித்தார். திடீரென்று, "எனக்குக் காரியதரிசியாக வேலை பார்ப்பதனால், என்னென்ன செய்யணுமின்னு உனக்குத் தெரியுமா? அந்தப் பொறுப்பை சரியாக நிர்வகிக்க முடியும்கிற நம்பிக்கை உனக்கு இருக்குதா?" என்று கேட்டார்.

"ஒரு செக்ரடரிக்கு என்னென்ன கடமைகள் உண்டோ அவற்றை எல்லாம் செய்யத் தயாராக இருக்கிறேன். கடிதங்கள் எழுதுவது, செய்யவேண்டிய அலுவல்கள் பற்றி நினைவு படுத்துவது, பார்க்க வருகிறவர்களுக்கு..."

ப்சா! என்று கையசைத்தார் தலைவர். "அதெல்லாம் சரிதாம்பா. அவை தவிர முக்கியமான சில ட்டீடிகளும் உண்டு" என்றார். சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு கேட்டார்: "ஆங்கிலத்தில் உள்ளது எதையும் தமிழாக்க முடியுமா உன்னாலே?"

"முடியும் ஸார். பல கதை கட்டுரைகளை நான் தமிழ்ப்படுத்தியிருக்கிறேன்..."

"தினசரி பத்திரிகைகள் படிக்கிறது உண்டுமா?"

"மேலோட்டமாகப் பார்ப்பது வழக்கம். ஒன்று விடாமல் செய்திகள் பூராவையும் நான் படிப்பதில்லை".

"நீ ஹிண்டு பேப்பரை வரி விடாமல் படிக்கணும். அதில் வருவதில் முக்கியமானவற்றை எனக்குச் சொல்லணும். என்னைப்பற்றி எந்த இங்லீசுப் பேப்பர்லே என்ன வந்தாலும் சரி; அவைகளை என் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு, எழுத்துவிடாமல் தமிழாக்கித் தரணும். உனக்கு ஞாபகசக்தி அதிகம் இருக்கணும். நான் எங்கே எப்போது என்ன பேசினேன் என்பதை நீ நினைவில் வைத்திருக்கணும். நான் மறந்துவிட்டால் நீ ஞாபகப் படுத்தவேண்டும். சில சமயங்களிலே நான் வேணுமென்றே மறந்து போகிற விஷயங்களும் உண்டு. அவற்றை நீ சந்தர்ப்பம் தெரியாமல் எனக்கு ஞாபகப் படுத்த முன்வரக்கூடாது. உதாரணமாக, நம்ம கட்சி அரசியல் கட்சி என்று சில சமயங்களில் எழுதியிருப்பேன். பேசியுமிருப்பேன்.

அவசியம் ஏற்படுகிறபோது, நம்ம கட்சி அரசியல் அடிப்படையில் உள்ள கட்சி அல்ல; அது வெறும் கலாசார அமைப்பேயாகும் என்று சொல்லுவேன். ஆனால், மாற்றுக் கட்சிக்காரர்கள் இப்படியெல்லாம் சொல்ஜாலம் பண்ணினால் அதைக் கண்டிக்கத் தயாராவேன். இதுகளை எல்லாம் கவனிச்சு அதுக்குத் தக்கபடி நடந்து கொள்ளணும். என்ன, தெரியுதா?'' என்று கேட்டு இளையவனின் முகத்தை நோக்கினார் பெரியவர்.

"உம்ம்" என்று இழுத்தான் அவன்.

"எனக்கு பிரசங்க விஷயங்கள் தயாரித்துக் கொடுக்கவேண்டிய பொறுப்பும் உனக்கு உண்டு. அரசியல், பொருளாதாரம், கலை. இலக்கியம், சமூகம் சம்பந்தமான நல்ல நூல்களை எல்லாம் நீ படிக்கணும்... பத்திரிகைக் காரனுக ஆண்டு மலரு, தீபாவளி மலரு, சுதந்திர மலரு, பொங்கல் மலருன்னு எழவெடுப்பாங்க. அப்போல்லாம் நம்ம உசிரை வாங்குவானுக. அப்பப்போ கட்டுரைகள் எழுத வேண்டியிருக்கும். அந்த வேலையும் உனக்குத்தான். என்ன, தெரியுதா?"

இளையபெருமாள் வெறுமனே தலையாட்டினான்.

"நான் செய்கிற பிரசங்கங்களைக் குறிப்பெடுத்து வந்து, பிறகு விரிவாக எழுதித்தரணும். சில சமயம் எனக்காக நீயே புத்தகம் எழுதவேண்டிய அவசியம்கூட ஏற்படலாம். அதாவது நீ எழுதவேண்டியது. ஆசிரியர் என்கிற இடத்திலே நம்ம பேரு இருக்கும்... இன்னும் பல அலுவல்கள் இருக்கும். அதை எல்லாம் அவ்வப்போது சொல்வேன்" என அருள் புரிந்தார் அறம்வளர்த்தார்.

அவராகச் சொல்வார் என்று எதிர்பார்த்து ஏமாந்த இளையபெருமாள், ''சம்பளம் எவ்வளவு தருவீர்கள்?'' என்று கேட்டான்.

"சம்பளமா?" என்று தலையைச் சொறிந்தார் தலைவர். "சம்பளமா!" என்று மோவாயைத் தடவினார். "எழுபத்தஞ்சு" என்றார். "எழுபத்தஞ்சு போதாது?'' என்றும் கேட்டார், ஏதோ பெருந்தொகையை வாக்களித்துவிட்டவர் போல.

இளையபெருமாள் வறட்டுச் சிரிப்பு சிரித்தான். ''உங்கள் காரியதரிசியாகப் பணி புரிவதற்கு இது மிகவும் சொல்பமான சம்பளம் ஸார். இது காணாது" என்றான்.

"ஹேறங்!" என ஒலி உதிர்த்தார் பெரியவர். "உங்களுக்கு இதைவிட அதிகமாக எங்கே அள்ளித் தாறாகளாம்? குமாஸ்தா வேலைக்குப் போனாலும் உனக்கு என்ன கிடைக்கும்? எம்.எல்.ஏ. அறம்வளர்த்தநாதரின் செக்ரடாரின்னு சொன்னா, அதுக்கு எவ்வளவு மதிப்பு உண்டு தெரியுமா? முன்னாலே ஒரு பையன் நம்மகிட்டே இருந்தான். அவனுக்கு சம்பளமின்னு நான் கொடுத்ததே கிடையாது. அவன் கேட்டதுமில்லை. அப்போ அப்போ செலவுக்கு என்று பத்து, இருவது கொடுப்பேன். ஆனால் அவன் சாமர்த்தியசாலி. எம்.எல்.ஏ.யின் செக்ரடரி - தனித்துவக் கட்சித் தலைவரின் காரியதரிசி என்ற ஹோதாவிலே புகழும் பணமும் பெறவேண்டிய முறை அவனுக்குத் தெரிஞ்சிருந்தது..."

இளையபெருமாள் குறுக்கிட்டான்: "அதெல்லாம் வேண்டாம் ஸார். நியாயமான சம்பளம்..."

"ஓகோ, நான் அநியாயமாகவா பேசுறேன் உன்கிட்டே?.... நமக்கும் உனக்கும் சரிப்படாது ஐயா, போ. உடனே போய்ச் சேரு!" என்று கட்டளையிட்டார் அவர்.

"நன்றி. மிக்க மகிழ்ச்சி" என்று கும்பிடுபோட்டுவிட்டு வெளியேறினான் இளையவன்.

அவன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்த சூரியன்பிள்ளை, ஆவலுடன், "என்னடே? போன விஷயம் என்ன ஆச்சு? காயா, பழமா?" என்று விசாரித்தார்.

"ஒண்ணும் ஆகலே!" என்ற இளையபெருமாள் நிகழ்ந்தது பற்றி அறிவித்தான்.

பொறுமையோடு கேட்டிருந்த சூரியன் பிள்ளை படபடத்தார். "அட போ, புத்தி கெட்டவனே! பிழைக்கத் தெரியாத பிள்ளை..."

"பிழைக்கணுமே என்று எதை வேண்டுமானாலும் செய்யணுமாக்கும்? அவர் பதவி அவர்மட்டுக்கு! சரியாகப் படிக்கக்கூடத் தெரியாத அவருக்கு ஏகப்பட்ட வேலைகள் செய்யணுமாம். எழுபத்தஞ்சு ரூபா தருவாராம்!" என்று ஏளனமாகச் சொன்னான்.

"படிப்பு இல்லே என்கிறதுனாலே அவருக்கு என்ன குறைஞ்சு போச்சு? பி.ஏ. படிச்சுக்கிழிச்ச நீ என்ன உசந்திட்டே? இல்லை

கேட்கிறேன். மெத்தப் படிச்ச மேதாவிகள், பணக்காரனுக, பெரிய இடத்து ஆசாமிகள் எல்லாரும் இன்னிக்கு அவரு தயவை நாடி அவர் வீட்டு வாசலில் காத்துக் கிடக்கிறாங்க. எத்தனையோ பி.ஏ.க்களும் எம்.ஏ.க்களும கவனிப்பாரற்றுக் கிடக்கிறாங்க. அப்படிப்பட்ட பெரியவருடைய செக்ரடரி என்றால் சும்மாதானா? எவ்வளவு கௌரவம், என்ன மதிப்பு, எத்தகைய செல்வாக்கு!" என்று நீட்டினார் சூரியன் பிள்ளை.

"அதுக்காக, பண்பாடு குறைந்த வகையில்....

"சீ போ!" என்று சீறினார் பிள்ளை. "இவரு பெரிய இவரு பண்பாடு, அது இதுன்னு பேச வந்துவிட்டாரு!... பிழைக்கத் தெரியாத மடையன்" என்று எரிந்து விழுந்தவாறே வெளியேறினார்.

இளைய பெருமாள் அலட்சியமாகச் சிரித்தான். "என்னவோ சொல்வார்களே-இருவேறு உலகத்து இயற்கை; திரு வேறு தெள்ளியராதல் வேறு என்றா? அதை இப்படியும் சொல்லாம்னு தோணுது-

பல்வேறு உலகத்து இயற்கை;

பணம் வேறு, பதவி வேறு

படிப்பு வேறு, பண்பும் வேறுவேறே!"

அவனுடைய அறிவின் மின்வெட்டை ஏற்று, ரசித்து, மகிழ்வதற்கு அருகில் யாரும் இல்லை. அவன் வெறும் நபர்தானே!

*

# 2

# கோளாறு

சாவித்திரிக்கு ஒரே பரபரப்பு. அவள் ஏற்பாடு செய்திருந்த விருந்து வெற்றிகரமாக அமைய வேண்டுமே என்றுதான். பிறர் மதிப்பையும் பாராட்டுதலையும் பெறத் தவிக்கிற எந்த அம்மாளுக்கும் இயல்பாக இருக்கக்கூடிய ஆசை தானே அது!

சாவித்திரி சமூக அந்தஸ்தில் மிக உயர்ந்து விட்டவளும் அல்ல; தாழ்ந்து கிடப்பவளும் அல்ல. மத்தியதர வர்க்கத்துக் குடும்ப விளக்குகளுக்குச் சரியான பிரதிநிதி அவள். பிறந்த இடத்திலோ, புகுந்த இடத்திலோ செல்வம் குப்பை மாதிரிச் சிதறிக் கிடக்காவிட்டாலும் கூட, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே பிறந்து வளர்ந்து வாழும் பெருமை பெற்றவள்போல்தான் அவள் நினைப்பாள்; நடப்பாள்; செயல்புரிவாள்; ஜம்பமாகப் பேசி மகிழ்வடைவாள்.

அவள் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, விருந்து ஏற்பாடு செய்துவிட்டாள். மேனாமினுக்கி இனத்தின் பிரதிநிதியாக விளங்கும் வசந்தா, வாய்வீச்சு வீசுவதில் வல்லவளான பத்மா, தனது திறமைக்கு அகில உலகமும் தலைவணங்கக் காத்திருக்கிறது என்று பெருமை கொள்ளும் கர்வி ஜானகி, "புதுப் பணக்காரி" மீனாட்சி அம்மாள்-விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்த இத்தனை பேரும் ஆடம்பர அலங்காரங்களோடு ஆஜராகி விட்டார்கள்.

அதையும் இதையும் பார்த்து, அவளையும் இவளையும் பற்றிப் பேசி, ஒவ்வொருத்தியும் மற்றவளின் நகை-உடை-சிங்காரிப்பு முதலியவைகளை ஆராய்ச்சி செய்து முடித்துவிட்டு, சாப்பிடுவதற்குத் தயாரானார்கள்.

சாவித்திரி அடுப்பங்கரைக்குப் போனவள் "ஐய்யோ!" என்று கூவதற்கு வாயெடுத்தாள். உடனடியாகவே, தனக்குத் தானே கட்டுப்பாடு விதித்து, ஓங்கிவந்த ஓலத்தை அமுக்கிக் கொன்றுவிட்டாள். அவள் சிரத்தையோடு தயாரித்து வைத்திருந்த பால் பாயசத்தை, கறுப்புப் பூனை ஒன்று - "அதுக்கு இழவெடுக்க! இந்த வீட்டிலே அசந்து மறந்து ஒரு சாமானைத் திறந்து போட்டுவிட்டுப் போக வழியில்லே!" - சுவாரஸ்யமாக ருசிபார்த்துக் கொண்டிருப்பதைக் காணும்போது "சபாஷ்டா பாண்டியா!" என்று பாராட்டும் மன எழுச்சியா சாவித்திரிக்கு உண்டாக முடியும்? தன் வயிற்றெரிச் சலையும் வசவு வேகத்தையும் அவள் ஒடுக்கிவிட முயன்றதன் காரணம், "விருந்தாளிகள் பசியுடன் காத்திருக்கிறார்கள்; விருந்து வெற்றிகரமாக நிகழ வேண்டுமே" எனும நினைப்புத்தான்.

பூனை தலைநிமிர்ந்து பார்த்தது. மீசை மயிரைச் சரிசெய்துகொள்வது போல் நாக்கினால் அப்படியும் இப்படியும் தடவிக்கொண்டது. "பாயசம் பலே ஜோர்!" என்று சொல்வது போல் அவள் பக்கம் பார்த்துக் கண்களைச் சிமிட்டி, "மியூவ்" என்று மென்குரல் கொடுத்துவிட்டு, ஒய்யார நடை நடந்து சென்றது.

இன்னொரு சமயமாக இருந்திருக்குமேயானால், சாவித்திரி சும்மா பொம்மை மாதிரி நின்றிருக்கமாட்டாள். தாளிதச் சட்டியில் போடப்பட்ட கடுகுகள் மாதிரி சூடான வார்த்தைகள் வெடித்துச் சிதறும் அவள் வாயிலிருந்து. அவள் கை வெறும் விறகுக் கட்டையையோ அல்லது கேவலம் துடைப்பக் கட்டையையோ அந்தப் பூனைமீது - "அது நாசமாய்ப் போக! அதுக்குச் சாவு வரமாட்டேன்கிறதே!" - வீசி அடித்திருப்பாள்.

இப்பொழுதோ, விருந்தாளிகள் வந்து காத்திருக்கிறார்கள். பெரிய தனமும், ராங்கியும் பெற்ற "ராணிகள்" அவர்கள்! அவர்களின் மதிப்பையும் பாராட்டுதலையும் பெற ஆசைப்படும் சாவித்திரி முட்டாள் தனமாகக் காரியம் செய்யத் துணிவாளா என்ன?

ஆகவே விருந்து ஜாம்ஜாமென்று நடந்தது. பால் பாயாசத்தோடுதான். அறியாத்தனமாக ஒரு பூனை - "அதுக்குப் பாடைகுலைய்! அதுக்கு வாந்திபேதி வர!" வாய் வைத்துவிட்டது என்பதற்காக, ஒரு சட்டி பாயாசத்தையும் கழுநீர்த் தொட்டியிலே கொட்டிவிட மனம் வருமாபின்னே?

எல்லோரும் பாயாசத்தை விரும்பிக் குடித்தார்கள். தாராளமாகப் பாராட்டினார்கள். அவசரம் எதுவும் இல்லாமல் நிதானமாகவே சாப்பிட்டு முடித்தார்கள்.

இதற்குள், ஒரு அரை மணி நேரம் பறந்து போய்விட்டது.

அரைமணி நேரத்திற்குள் ஊரிலே உலகத்திலே என்னென்னவோ நடந்திருக்கக் கூடும்-எங்கும் எதுவேண்டு மானாலும் நடக்க முடியும்-என்பது சாவித்திரிக்குத் தெரியாத விஷயமில்லை. என்றாலும், இப்படி ஒரு காரியம் நிகழ்ந்துவிடும் என்று அவள் சொப்பனத்திலேகூட நினைத்திருக்க முடியாது. தனது பத்தினித் தன்மையின் மின்சக்தி அப்பாவிப் பூனையைக் கொல்லும் ஆற்றலுடையதுதான் என்ற எண்ணம் ஏனோ அவளுக்கு வரவில்லை! பூனை சாகட்டும் என்று அவள் தீவிரமாக எண்ணினாள். வாஸ்தவம். பூனை தோட்டத்திலே செத்துக் கிடந்தது. அதுவும் மறுக்க முடியாத உண்மையேயாகும். அவள் மகிழ்ச்சி அடைய வேண்டியது தானே நியாயம்? ஆனால், பாருங்கள், இந்த உலகத்தில் மகிழ்ச்சி-மன நிறைவு-திருப்தி என்பதெல்லாம் யாருக்கும் சுலபத்தில் ஏற்பட்டுவிடும் என்று தோன்றவில்லை. சாவித்திரியும் மனிதப் பிராணிகளின் பிரதிநிதிதானே!

அவள் மறுபடியும் திடுக்கிட்டாள். "ஐயோ!" என்று இரண்டாவது தடவையாக அலறத் தவித்தவள் அதை அடக்கிக் கொண்டாள்.

விருந்தினர் வெற்றிலை போட்டுக் கொள்வதற்காக, சுண்ணாம்பு எடுத்துப்போக அந்தப் பக்கம் வந்தவள் அவள். அவளுடைய பார்வையில் அந்தக் காட்சி உறுத்தியது. தோட்டத்தில், ஒரு செடியின் அருகில் பூனை கிடந்தது; செத்துக் கிடந்தது. சாவித்திரி அருகில் சென்று நன்றாக ஆராய்ந்து "பூனை செத்தேவிட்டது" என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

அது செத்து நாசமாகட்டும் என்று மனசாறச் சபித்த சாவித்திரியின் நெஞ்சு இப்போது "பக்-பக்" என்று அடித்துக் கொண்டது. அவள் உள்ளம் கலவரம் அடைந்தது. அவள் வயிற்றை எதுவோ என்னவோ செய்வது போலிருந்தது. "கடன்காரப் பூனை! அது இருந்தும் கெடுத்தது; செத்தும் கெடுத்தது என்பது சரியாயிருக்கு. எனக்கு ஏன்தான் இதெல்லாம் வரணுமோ? என்று வருத்தப்பட்டாள் அவள். பாயசத்தைப் பருகியதனால்தான் அந்தப் பூனை செத்துவிட்டது. இதில் சந்தேகமே கிடையாது. இல்லையென்றால்,

நல்லாயிருந்த பூனை அரைமணி நேரத்திற்குள் எப்படிச் செத்திருக்க முடியும்? - இவ்விதம் அவள் மனம் புலம்பியது. அறிவு ஆமோதித்தது. உணர்வுகள் குழம்பின.

என்ன செய்வது என்றே புரியவில்லை அவளுக்கு. தான் விருந்து நடத்திப் பெயர்பெற ஆசைப்பட்ட மடத்தனத்துக்காகத் ளதன்னைத்தானே நிந்தித்துக் கொண்டாள் சாவித்திரி. உணவிலே விஷம். அங்கே சாவு; இங்கே பலர் பலி. சர்க்கரையிலும் விஷம் கலந்துவிட்டது-இந்த மாதிரிச் செய்திகள் பலவும் (பத்திரிகைகளில் அவள் படித்தவை எல்லாம்) இப்பொழுது அவளது உள்ள அரங்கிலே மின்னல் நாட்டியம் ஆடின. அவளுக்குப் பயம் அதிகரித்தது.

"சரி, நடக்கிறபடி நடக்கட்டும். வருவது வரட்டும்!" என்று துணிந்தாள் சாவித்திரி, எனவே, வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டாள் என்று எண்ணவேண்டாம். சாவித்திரி நேர்மையானவள். அவசியமிருந்தால் பொய் சொல்வாள். அதேமாதிரி, அவசியம் ஏற்படும்போது உண்மையை உள்ளபடி எடுத்துச் சொல்லவும் தயங்கமாட்டாள்.

விருந்து உண்டு மகிழ்ச்சியோடும், உண்ட களைப்போடும் சாய்ந்திருந்த சிநேகிதிகளிடம் உள்ளதை உள்ளபடி சொன்னாள் சாவித்திரி. பூனை செத்துக் கிடப்பதையும், பாயாசத்தில் விஷம் கலந்திருக்குமோ என்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டிருப்பதையும் அவள் விளக்கமாக எடுத்துரைத்தாள்.

"ஆங்!" என்றாள் வசந்தா. "இதை அப்பவே சொல்லியிருக்கப்படாதோ? நான் பாயசத்தை "டச்" பண்ணியிருக்கவே மாட்டேனே!" என்று பதறினாள் பத்மா. "விருந்து வைக்க ஆசைப்பட்ட மூஞ்சியைப் பாரு!" என்று முனங்கினாள் கர்வி ஜானகி. "ஐயய்யோ! மற்றவங்களை விட நான் தானே அதிக அளவு பாயசம் சாப்பிட்டேன்" என்று திடுக்கிட்டாள் புதுப்பணக்காரி மீனாட்சி. ஒவ்வொருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றாள் சாவித்திரி.

"நிக்கிறதைப் பாரு முண்டம் மாதிரி. டாக்டருக்கு போன் பண்ணு. போன் இல்லைன்னா ஆளை அனுப்பு. அர்ஜன்ட்" என்று கத்தினாள் ஜானகி.

"எனக்கு மயக்கம் வருவது போலிருக்கே!" என்று தலையில் கைவைத்துக் கொண்டு சுவரிலே சாய்ந்தாள் வசந்தா.

பத்மா வாந்தி எடுக்க வாசல் பக்கம் ஓடினாள். மீனாட்சி அம்மாளோ "பேச்சுமூச்சு இல்லாமல்" நீட்டி நிமிர்ந்து விட்டாள்.

பாவம், சாவித்திரி! அவள் தன் போதாத காலத்தையும் பொல்லாத விதியையும் எண்ணித் தவித்தாள் கண் கலங்கினாள். கைகளைப் பிசைந்தாள். டாக்டருக்கு ஆள் அனுப்பினாள். அங்குமிங்கும் அலைந்தாள். அமைதியையும் ஆனந்தத்தையும் அடியோடு இழந்து விட்டாள் அவள்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. சாவித்திரியின் உள்ளம் வேதனையைச் சுமந்து, குழப்பத்தால் கலங்கி, அவதியுற்றது.

டாக்டர் வந்து பார்த்தார். அபாயம் எதுவுமில்லை என்று சொன்னார். பத்மா நிம்மதியாக மூச்சுவிட்டாள். ஜானகி மௌனமாகத் 5லையை ஆட்டினாள். மீனாட்சி அம்மாள் அசைந்து கொடுத்தாள்.

சாவித்திரி, டாக்டரை வழி அனுப்புவதற்காக வெளியே வந்தவள், அடுத்த வீட்டின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அங்கே நின்ற சூரியகாந்தம். "சாவித்திரி. உன்னிடம் ஒரு சமாச்சாரம் சொல்லணும்" என்று கூறியபடி நெருங்கி வந்தாள்.

"அப்பவே சொல்லியிருக்கணும். சொல்லிவிடலாம்னு கூட நினைச்சேன் ஆனால் உங்க வீட்டிலே யார்யாரோ வந்திருப்பதாகத் தெரிஞ்சுது. சரி, அப்புறம் சொல்லிக் கொள்ளலாமே; எல்லோரும் சந்தோஷமா இருக்கிறபோது, நாம போயி அநாவசியமாக..."

அவசரம் இல்லாமலே பேசத் தொடங்கிய அம்மாளிடம் "என்ன" என்ன விஷயம்?" என்று அவசரமாக விசாரித்தாள் சாவித்திரி.

"உன் பூனை இருக்குது பாரு... அதாவது, ஒரு கறுப்புப் பூனை இருந்தது பாரு...அது வந்து..." அடுத்த வீட்டு அம்மாள் அவசரப்படும் பண்பு இல்லாதவள். இழுத்து இழுத்துப் பேசிக் கொண்டிருந்தாள். அது சாவித்திரிக்குப் பிடிக்கவில்லை.

"சீக்கிரம் சொல்லுங்க" என்று தூண்டினாள் அவள்.

"எங்க வீட்டு அவர் வந்து ஷெட்லேயிருந்து காரை எடுத்தார். எடுக்கிறபோது இந்தப் பூனை சக்கரத்திலே் அடிப்பட்டுவிட்டது. மூதேவி அது காருக்கடியிலே போயிப் படுத்துக் கிடக்கும்னு யாருக்குத் தெரியும் ஒரு பூனைக்கு ஒன்பது ஆயுசு; அது லேசிலே

சாகாது என்பாக. ஆனால் இந்தப் பூனை-இதனுடைய ஒன்பது ஆயுசும் முன்னாலேயே தீர்ந்து போச்சோ என்னவோ! இது பத்தாவது ஆயுசாக இருக்குமோ என்னவோ!-செத்தே போச்சு. இதிலே ஒரு அதிசயம் பாரு. அது உடம்பிலே காயம் பட்டதாகவே தெரியலே. பூனை செத்துப்போன உடனேயே உன்கிட்டே அறிவித்துவிடலாம்னு எட்டிப் பார்த்தேன். ஏதோ விருந்து நடந்துதா? அப்ப வந்து இந்த விஷயத்தைச் சொல்வானேன்னு நினைச்சு பூனையை எடுத்து உங்க, வீட்டுத் தோட்டத்திலே படுக்கப்போட்டேன்..."

"உன் பண்பாட்டிலே இடி விழ!" என்று வாழ்த்தியது சாவித்திரியின் உள்ளம். "பரவால்லே மாமி. இப்ப அதனாலே என்ன!" என்றது அவள் வாய்.

இந்த உரையாடலைக் கேட்டு நின்ற டாக்டர் சிரித்துக்கொண்டார். "இப்போ உங்களுக்கு எல்லாம் தெளிவாகியிருக்கும். இல்லையா!" என்றார்.

சாவித்திரி வெட்கத்தோடு தலை அசைத்தாள்.

"வியாதியால் சாகிறவர்களைவிட, மனம் சிருஷ்டிக்கிற பீதியினால் பாதிக்கப்படுகிறவர்கள் தொகை அதிகமானது. உண்மையான நோய் செய்கிற அழிவைவிட, நோய் எனும் நினைப்பு செய்கிற சேதம்தான் மிகவும் பயங்கரமானது. புலியைவிடக் கிலி அதிக சக்திபெற்றது. உணவிலே விஷம் கலந்திருக்கும் என்ற பயம்தான் உங்கள் சிநேகிதிகளுக்குக் கோளாறை உண்டாக்கியதே தவிர, விஷம் எதுவுமில்ல. மனிதருக்கு வாய்த்திருக்கிற மனசே ஒரு பெரிய கோளாறுதான்...."

டாக்டர் தமது அறிவின் விசாலத் தன்மையை அம்பலப்படுத்த முயன்றார்.

"ரொம்ப தேங்க்ஸ் ஸார்" என்று கூறி அவரை அனுப்பி வைப்பதில் ஆர்வம் காட்டினாள் சாவித்திரி. எப்பொழுதும் எதிலும்-எதற்கெடுத்தாலும் அவசரம் என்பது அவள் குணவிசேஷங் களில் ஒன்றாகும்!

*

# 3

## இரண்டு பாபிகள்

இருள் கவியவில்லை இன்னும்..

நாகரிகப் பெருநகரம் அசுரவேகத்தோடு, ஆரவாரமாய், இயங்கிக் கொண்டிருக்கும் வேளை. மாலை நேரம்.

புற்றுக்களிலிருந்து கிளம்பி எங்கெங்கும் திரிகிற எறும்புகள் போல, அலுவலகங்களில் அடைப்பட்டுக் கிடந்துவிட்டு வெளியேறிய உழைப்பாளிகள்- இயந்திரங்களை ஓட்டிப் பிழைக்கிறவர்களும், பேனா ஓட்டி வாழும் குமாஸ்தாக்களும், பிறரும்-வீடுகளை நோக்கிச் செல்லும் வேளை. உளச் சோர்வும் உடல் சோர்வும் இருந்த போதிலும், வீடு எனும் ஜம்பப் பெயரை உடைய பொந்துகளிலும் வளைகளிலும் குகைகளிலும் ஒடுங்கிவிடும் ஆசையோடு சென்ற இந்த அப்பாவிப் பிராணிகளின் நடையிலே வேகம் துடித்தது. நடக்கத் தெம்போ ஆசையோ இல்லாதவர்கள் பஸ்களில் முட்டிமோதி ஏறி, இடித்து நெருக்கி அவஸ்தையுற்றும் பிரயாணம் செய்வதிலே சுகம் கண்டார்கள்.

வசதி' உள்ளவர்கள் கார்களிலே பறந்து கொண்டிருந்தார்கள்.

எவ்வளவு விதமான கார்கள்!
எத்தனை வர்ண பேதங்கள்!
எத்தனை உருவ விசித்திரங்கள்!

பெரிய நகரத்தின் ஜீவ நரம்புகளில் ஒன்றான முக்கிய ரஸ்தாவின் ஓரத்தில், பேவ்மெண்டின் விளிம்புபோல் அமைந்திருந்த சிறு சுவரின் கல் முகட்டின்மீது உட்கார்ந்திருந்த ஞானப்பிரகாசத்தின் கண்கள் கார்களை மட்டும் தானா எடைப்போட்டன?

கார்கள், மோட்டார் பைக், லேம்பிரட்டா, சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா நாகரிக வேகத்தில் சிக்கி அவதியுறுகிற மனித ஜாதியின் அவசரத்துடிப்புக்கு ஈடு கொடுப்பதற்காக ஏற்பட்டவிதம் விதமான இரும்பு அவதாரங்களையும், அவற்றிலே ஹாயாக சவாரி செய்த ஆண் பெண்களையும் அவர் கண்கள் ஆராய்ந்து கொண்டிருந்தன. வேகமாகவும், அவசரமற்ற கதியிலும், நடந்து சென்றவர்களையும் அவர் கவனிக்கத்தான் செய்தார்.

நாகரிகம் அழகோடும் அலங்காரத்தோடும், பகட்டோடும் மேனாமினுக்கித் தனத்தோடும் புரண்டு கொண்டிருந்த இடம் அது. நகரத்துக்குப் பெருமை தந்த கடற்கரையை ஒட்டிய அழகிய ரஸ்தா. அது ஜீவனோடும் பூரணப் பொலிவுடனும் திகழ்கிற நேரம் அப்பொழுது.

எவ்வளவு மனிதர்கள்! எத்தனை எத்தனை ரகங்கள்! எவ்வளவு மொழி பேதங்கள்!

ஞானப்பிரகாசம் தன்முன்னால் மெதுவாகவும் வேகமாகவும் இயங்கிக் கொண்டிருந்த மனித ஓட்டத்தைக் கவனித்துப் பெரு மூச்சு விட்டார்.

இந்த ஜனசமுத்திரத்திடையே நான் ஒரு ஒற்றைத் தீவு மாதிரி! அசைகின்ற இம் மனித நதியின் மத்தியிலே தனித்து நிற்கும் மணல் திட்டு மாதிரித் தான் நானும்!

அவரைக் கவனியாமல்-அவரைப் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்ற பிரக்ஞையே இல்லாதவர்களாய் - எல்லோரும் போய்க்கொண்டிருந்தார்கள். எல்லோரையும் வேடிக்கை பார்த்தபடி சோம்பி இருப்பதிலே சுகம் கண்டார் அவர்.

தன்னை மறப்பதற்கு, தனது வேதனைகளை மறப்பதற்கு, ஒவ்வொருவனுக்கும் ஒரு போதைச் சரக்கு தேவை. தன்னிலே தானே ஆகி, தன்னைப் பல்வேறு கூறுகளிட்டு விநியோகிப்பது போல், ஆக்குதல் தொழிலில் ஈடுபடுகிறவனுக்கு உள்ளத்து வேதனை அதிகம்தான். அவற்றை மறப்பதற்காக அவன் உலகத்தை வேடிக்கை காண முற்படுகிறான்.

ஞானப்பிரகாசம், ஜனசமுத்திரத்தின் மத்தியிலே வசித்த போதிலும், தன்னந்தனியனாகிவிட்டது போலவே உணர்ந்து வந்தார்.

அவருடைய இன்பங்களில் பங்குகொள்ளக் காத்திருக்கும் துணை யாரும் இல்லை. துயரங்களைப் பகிர்ந்து ஆறுதல் கூறுவதற்கும் எவருமில்லை. கனவுகளை, ஆசைகளை, ஏக்கங்களை, இதயத் துடிப்புகளை எல்லாம் கேட்டு ரசிப்பதற்கோ-அல்லது பொறுமையோடு கேட்டுச் சகித்துக் கொள்வதற்கோ-ஒருவர்கூட இல்லை.

அவர் தனியன்., உள்ளத்திலே தனிமை வேதனையாய், பெருஞ்சுமையாய், கோடையின் கடும் உஷ்ணமாய், கவிந்து கனத்துக் கிடந்தது.

அந்த வேதனையைத் தணித்துக் கொள்வதற்காகவே-சுமையை இறக்கி வைக்கவே-உஷ்ணத்துக்கு மாற்றாகக் குளுமை பெறத்தான் அவர் நாகரிகம் மிதந்து செல்லும் பெரிய ரஸ்தாவின் ஓரத்தில் உட்கார்ந்திருந்தார்.

காலத்தைப் பற்றி அவருக்குக் கவலை கிடையாது. உறுத்துகின்ற கடமை உணர்வு எதுவும் அவருக்கு இல்லை.

விண்ணில், பொன்வெயிலில், பூத்தொகுப்பில் இன்பமாய் நீந்தும் பாக்கியம் பெறவிருக்கும் வண்ணாத்திப் பூச்சியாகப் பரிணமிக்கப் போகிற உணர்வு உள்ளூர இருந்தோ-இல்லாமலோ, குட்டிப் புழு ஓய்வு ஒழிவு இன்றி இலைகளை அரித்துத் தின்று தின்று வளர்கிறது. பிறகு தூங்குகிறது. புதுமைகளைச் சிருஷ்டிக்கின்ற சிந்தனைத் திறனும ஓயாது அரித்துக் கொண்டிருக்கும் புழு மாதிரித்தான். அதற்கும் தூக்கம் தேவைதான். ஆனால் அது தூங்குவது இல்லை. தன்னைப்பற்றி எண்ணுவது அதைப் பற்றக்கூடிய ஒரு நோய் என்றே எனக்குத் தோன்றுகிறது.

ஞானப்பிரகாசத்தின் பார்வையில் தம்மிலே தாமே ஆகிவிட்ட சூழ்நிலை மறந்து. தங்கள் தனி இன்பத்திலே சொக்கிப்போன இரண்டு பேர் தென்பட்டார்கள். ஓடிக்கொண்டிருந்த "லேம்பிரட்டா"வில் இருந்த ஒருவனும் ஒருத்தியும், முன்னாலிருந்த அவன் தோள்களில் கையை சொகுசாகப் போட்டுக்கொண்டு, பின்னால் ஒய்யாரமாக அமர்ந்திருந்த அவள் முகம் மகிழ்ச்சியினால் முழுதும் மலர்ந்து திகழ்ந்தது. அத்தோற்றம் அழகாக விளங்கியது. அவன் சந்தோஷமாக என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான். வாகனம் வேகமாக ஓடியது.

அவர்களும் தம்மிலே தாமே ஆகிவிட்ட தனியர்தான். ஆயினும், அவனுக்கு அவள் துணை. அவர்கள் எப்பொழுதாவது

செய்ய முனைவதும் "சிருஷ்டித் தொழில்"தான். ஆனால், இலக்கிய சிருஷ்டியில் ஈடுபடுகிறவனுடைய தன் மயமும் தனிமையும் தனிரகமானவை. அது வேதனை. அது சுமை. தானேயாகித் தனித்திருந்த கடவுள் அந்தத் தனிமையை-வேதனையை-சுமையைத் தாங்கமாட்டாமல்தான் உலகத்தைப் படைத்து களிப்பதை "அலகிலா விளையாட்டு" ஆகக் கொண்டுவிட்டான்...

இருள் பரவத் தொடங்கியது எங்கும்...

ரஸ்தாவின் பரபரப்பு வடிந்து விடவில்லை. பொழுது போக்குவதற்காக அசைந்தவர்களும், காதல் மோப்பம் பிடித்து நடந்தவர்களும். ஜோடிகளும், நண்பர் குழுக்களும், தனி மனிதர்களும் அப்படியும் இப்படியும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு அருகே, அவர்களைப் பார்த்தபடி, அவர் இருந்தார். ஆனாலும் அவர்களை விட்டு வெகு தொலைவில் எங்கோ வழி தவறி நிற்பது போன்ற உணர்வுதான் அவருக்கு இருந்தது. அப்பொழுது மட்டும்தான் என்று சொல்வதற்கில்லை. எப்பொழுதுமே அப்படித்தான்.

அவரது கண் தூண்டில் ஒரு உருவத்தின் மீது குத்தியது. அதனால் உறுத்தப்பட்டவள் போல அவளும் திரும்பி அவரைப் பார்த்துவிட்டுப் போனாள். நாகரிக மைனர் ஒருவனைத் தொடர்ந்து நடந்தாள் அவள்.

எலிப் பத்தயம், எலிப் பொறி, "எலி போன்" என்றெல்லாம் இருப்பதுபோல "மேன்-ட்ரேப் (Man-trap) என்பதற்கும் தமிழில் ஒரு பதம் தேவை. இந்த மாதிரிப் பெண்களைக் குறிப்பிடுவதற்கு..இவள் சரியான "ஆள் பிடிக்கி"தான். இவளுக்குப் பணத் தேவை அதிகம் இருக்கும்போலும்!... பணத்தேவை என்பது யாருக்குத்தான் இல்லாமல் போய்விட்டது?

இருள் நன்றாகக் கவிந்துவிட்டது. தெருவிளக்குகள் ஒளி சிந்தி மின்னின. பகட்டையும் பரபரப்பையும் பேரொளியையும் விட இருட்டே மனசுக்கு இதமாக இருக்கும் என்று தோன்றியதனால், ஞானப்பிரகாசம் எழுந்து நடந்தார். இருள் மலிந்த கடற்கரை மணல் பரப்பில் ஒரு இடம் கண்டு அமர்ந்தார்.

தூரத்தில் ஒளியும் இருளும் "கண்ணாம்பூச்சி" விளையாடி மகிழ்வது போல் ஓடித் திரிந்துகொண்டிருந்தது. தீபஸ்தம்பச் சுழல்

விளக்கு. "இருளின் ஆழத்திலே எதையோ நழுவ விட்டுவிட்டு ஏதோ ஒரு சக்தி மாய ஒளிக்கரம் நீட்டித் தடவித் தேடுகிறது" என்று நினைத்தார் அவர். அப்புறம் நினைப்பு எதுவுமற்றுச் சும்மா கிடக்க முயன்றார்.

எவ்வளவு நேரம் சென்றிருக்குமோ தெரியாது. அவருக்கு அருகே மிகச் சமீபத்தில் - "பெண் வாடை" வீசியது. அவர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். அவள் தான். ஆணுக்கு வலைவீசி அலையும் பண்பு பெற்று விட்ட பெண் தான். அவளை அவர் எவ்வளவோ நாட்களாகக் கவனித்திருக்கிறாரே! அவளை இனம் கண்டு கொள்வது கஷ்டமில்லை தான்.

அவருக்குச் சிரிப்பு வந்தது. அவள் ஏமாறப் போவதை எண்ணித்தான்!

அவர் அவளையே பார்த்தபடி இருந்தார். அவள் அவரையே கவனித்தபடி நின்றாள். இரவருக்குமிடையே மௌனம் தூங்கிக் கிடந்தது.

எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்? "என்ன?" என்று கேட்டார் அவர்.

அக் கேள்விக்குப் பதிலாக வெறும் ஒலிக்குறிப்பு காட்டிச் சிரிக்கும் சிறு பெண் போல அவளும் "தொன்னெ" என்றாள். களுக்கென நகைத்தாள்.

"பாயசம் வாங்கிச் சாப்பிடுவது தானே!" என்று அலட்சியமான ஒரு பதில் கிடைக்கும் என அவள் எதிர் பார்க்கவில்லை. "ஊங்?" என்றாள்.

"என்ன என்றேன். தொன்னை என்றாய். தொன்னை பாயாசமோ, ரசமோ வாங்கிக் கொள்ள உபயோகப்படுவது தானே? நீ பாயாசமே வாங்கிக் கொள்ளலாம். அது தான் இனிக்கும்" என்று அவர் பேசினார். நீண்ட கால மௌனத்துக்குப் பிறகு, யாரிடமாவது விளையாட்டாகப் பேச வேண்டும் போல் இருந்தது அவருக்கு.

அவள் சிரித்தாள். அங்கேயே உட்கார்ந்து விட்டாள். "என்னிடம் காசு இல்லையே!" என்றாள்.

"இதுவுமதே!....அல்லது இஃதும் அஃதே என்க!"

"உங்கள் பேச்சு எனக்குப் புரியலியே" என்று அவள் சொன்னாள்.

"அது ரொம்பப் பேருக்குப் புரியாது என்ற உண்மை எனக்கு ரொம்ப காலமாகவே தெரியும். அதனால் தான் நான் அதிகமாகப் பேசுவதில்லை!"

"நீங்கள் கதை எழுதுகிறவரா?"

"உனக்கு எப்படித் தெரிந்தது" என்று ஆச்சரியப்பட்டார் ஞா.பி.

"கதை எழுதுகிறேன், காரணத்தை எழுதுகிறேன்னு அலைகிறவங்க தான் இப்படி யெல்லாம் உளறிக்கிட்டிருப்பாங்க" எனும் பதிலை அவளிடமிருந்து அவர் எதிர்பாக்க வில்லைதான்.

"பரவால்லியே. உனது அனுபவம் அகண்டமானது, ஆழமானது என்று தான் தோன்றுகிறது" என்றார் அவர்.

அவள் பெருமூச்செறிந்தாள்.

எங்கோ போயிருந்த மௌனம் மீண்டும் ஓடிவந்து அவர்களுக்கிடையே உட்கார்ந்து கொண்டது.

அந்நிலைமை சகிக்க முடியாததாக இருந்தது அவருக்கு.

"ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? வேறு யாரையாவது தேடிப் போ. உனக்கு பணம் தானே குறி? என்னிடம் பணமே கிடையாது. அள்ள அள்ள வற்றாது கொடுத்து வந்த அமுத சுரபி மாதிரி பணச்சுரபி ஏதாவது கிடைக்காதா என்று தான் நானும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன்..."

தலைகுனிந்து உட்கார்ந்திருந்த அவள் அழுகிறாள் என்று புரிந்தது. ஏன், ஏன் என்று பதைத்தது அவர் உள்ளம்.

"நீ ஏன் இங்குவந்து அழவேண்டும்? அழுவதற்கு வீட்டு மூலையோ, தெய்வச் சிலையோ அகப்படவில்லையா உனக்கு?" என்றார் அவர். பிறகு ஏன் இப்படிப் பேசினோம் என்ற வருத்தம் ஏற்பட்டது அவருக்கு.

அவள் விம்மி விம்மி அழுதாள்.

மனப்புழுக்கம் தீரும் வரை அவள் அழுது தீர்க்கட்டும் என எண்ணி அவர் சும்மா இருந்துவிட்டார்.

அவளாகத் தேறிய பிறகு. அவள் சோகக் குரலில் முனங்கினாள்; "எல்லாரும் அப்படித்தான் நினைக்கிறார்கள். காசு ஆசை பிடித்தலையும் பிசாசு என்றுதான். நான் என்ன பணத்துக்காகமட்டும்தானா இப்படித் திரிகிறேன்? நானும் மனுஷப் பிறவிதானே? நாலுபேரைப்போல வாழவேண்டும் என்ற ஆசை எனக்குக் கிடையாதா? நாலு பேரோடு பேசிப் பழகிச் சிரித்துக் கலகலகப்பாக இருக்க வேணும் என்ற நினைப்பு எனக்கு இருக்காதா? எனக்கும் மனம் உண்டு. உணர்ச்சிகள் உண்டு என்று யார் நினைக்கிறார்கள்? காசை வீசிவிட்டால், அவர்கள் சொல்படி எல்லாம் இயங்கக் கூடிய - நடந்தாக வேண்டிய - மிஷின் என்றுதானே எல்லோரும் எண்ணுகிறார்கள்?..."

அவள் பேச்சில் தொனித்த உண்மை அவர் இதயத்தைத் தொட்டது. ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக அவர் பேசினார். "நீ ஏன் இந்தத் தொழிலில் ஈடுபட்டாய்?" என்று கேட்டார்.

"ஏனா? ஏன் என்றா கேட்கிறீர்கள்? உயிர் வாழ வேண்டுமே அதற்காகத்தான். எலலோரும் ஏதாவது ஒரு தொழில் செய்துதானே பிழைக்கவேண்டியிருக்கிறது. எனக்கு வேறு என்ன தொழில் தெரியும்?" என்று வெறிபிடித்தவள் மாதிரிக் கத்தினாள் அவள்.

பிறகு தன் வரலாற்றைச் சொன்னாள். அவள் கதையில் புதுமை எதுவுமில்லை. நகரத்துக்கு வந்தால், சினிமாவில் சேர வாய்ப்புகள் கிட்டிவிடும்; சினிமாவில் சேர்ந்துவிட்டால் சுலபத்தில் புகழும் பணமும் பெறலாம்; பிறகு ராணி மாதிரி வாழ்க்கை நடத்தலாம் என்று ஆசைப்பட்டு, பட்டணத்துக்கு வந்து, எவன் எவனையோ நம்பி ஏமாந்து வஞ்சிக்கப்பட்டு - நாசமாய்ப்போன ஆயிரக்கணக்கான பெண்களில் அவளும் ஒருத்தி. ஒரு தடவை வழுக்கி விழுந்த பிறகு நிமிர்ந்து நிற்க வகை அற்றவளாய், தெம்பற்றவளாய், துணையற்றவளாய் தவித்து, தறிகெட்டு பாழ்பட்டுப் போனவள் அவள். அவளுடைய பிழைப்பும் நடந்து கொண்டு தானிருந்தது.

"யாருடைய பிழைப்புதான் நடக்கவில்லை? யாருக்குத்தான் சாக மனம் வருகிறது?" என்று அவள் கேட்டாள். அவர் தலையசைத்தார்.

அவள் வாழ்விலே அமைதி இல்லை. இன்பம் இல்லை. வளம் இல்லை. பசுமை இல்லை. வறுமை இருந்தது. பயம் இருந்தது...வெறுப்பு

இருந்தது. வேதனை இருந்தது. ஒரே வீட்டில் தங்கி இருக்க முடியவில்லை அவளால். சட்டம் அவளை வேட்டையாடியது. சமூக மதிப்பு அவளை விரட்டி அடித்தது.

அவளுக்குச் சாகவும் பயமாக இருந்தது. எல்லோரும் அவளை அவமதித்தனர். அலட்சியம் செய்தனர். கேவலமாக நடத்தினர். அன்புக்காக ஏங்கிய அவளுக்கு அனுதாபம் காட்டக்கூடிய மனித உள்ளம் இந்தப் பரந்த உலகத்திலே ஒன்றுகூட இல்லை என்றே தோன்றியது. வெறுமையாகிவிட்ட அவளுடைய வாழ்வில், அவளுக்குத் துணையாகிவிட்ட தனிமை வேதனையாக மட்டும் தானா இருந்தது? சித்திரவதை செய்யும் சைத்தானாக இருந்தது. பயங்கரமான எதிர்காலத்தைக் கண்முன்நிறுத்தி அவளை அலற வைக்கும் பூதமாகத் தோன்றியது. அவளைப் பாடாய்ப்படுத்தும் சித்தப் பிரமையாக - மனநோயாக - மாறி வளர்ந்தது அது. அதிலிருந்து தப்புவதற்காகத்தான் - தன்னிலிருந்து தானே நழுவி ஓடுவதற்காகவே - அவள் ஆண்களைத் துரத்தித் திரிந்தாள். இம் முயற்சியில் காசு கிடைத்தது; எனினும் அதுவே அவளுடைய முக்கிய நோக்கமாக அமைந்ததில்லை.

இதை அவள் "ஒரு மாதிரியாக"ச் சொல்லி முடித்தாள். "நான் பாவிதான். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஆனால் இந்த உலகத்திலே நான் மட்டும் தானா பாபி? பணம் பெற்றிருப்பவர்கள், அதன் ஒளியினால் மற்றவர் கண்களைக் கூசவைத்துவிட்டு, எவ்வளவோ பாபங்களைச் செய்து கொண்டிருக்கிறார்களே! அவர்களை ஏன் யாரும் ஒதுக்கி வைக்கவில்லை? ஏன் வெறுப்பதில்லை?" என்று அவள் கேட்டாள்.

பதிலை எதிர்பாராமலே கேட்கப்படும் எவ்வளவோ கேள்விகளில் இவையும் சில என்று எண்ணினார் ஞா.பி.

..தங்களைப்போல் வாழக் கற்றுக் கொள்ளாதவர்களை - வாழமுடியாதவர்களை - வாழ விரும்பாதவர்களை எல்லாம் பாபிகள் என்றுதான் மற்றவர்கள் நினைக்கிறார்கள். சிந்திப்பதிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டவர்களும், சிந்தனைக்குச் சீட்டுக் கிழித்து விட்டவர்களும் மலிந்த மனித ஜாதியிலே சிந்தனையாளன் கூட ஒரு பாபிதான்.

"நான் கூட ஒரு பாபிதான்" என்று சொன்னார் ஞானப் பிரகாசம்.

"உங்களைப் பார்க்கும் போதெல்லாம், பாவம் செய்யத் தெரியாத சாதுக் குழந்தை என்று அல்லவா நான் எண்ணினேன்!" என்றாள். அவர் ஒன்றுமே சொல்லவில்லை.

"உங்கள் அருகே இவ்வளவு நேரம் இருந்ததில் எனக்கு எவ்வளவோ சந்தோஷம் ஏற்பட்டுவிட்டது. உங்களோடு பேசியதில் எனக்கு எவ்வளவோ வேதனை கரைந்தது போலிருக்கிறது. உங்களிடம் எனக்கு மரியாதையும் அன்பும் ஏற்பட்டுவிட்டன. உங்களை நான் எத்தனையோ தினங்களாகக் கவனித்து வந்திருக்கிறேன். இன்று தான் உங்கள் அருகில்வர எனக்குத் துணிவு பிறந்தது..."

அவள் பேசிக்கொண்டே இருந்தாள். அவருக்கும் அது புதிய அனுபவமாகத்தான் இருந்தது.

அன்றுவரை, இருட்டில்-தனிமையில் அவர் அருகே அமர்ந்து எந்தப் பெண்ணும் பேசியதில்லை. எவளும் அழுததில்லை. ஒருத்திகூட முணுமுணுத்ததில்லை. ஒரு பெண்ணும் சிரித்ததில்லை.

அவளுடைய "சாமிப்பியம்" அவருக்கு இதமாக இருந்தது. இனிமை தந்தது. குளுமை புகட்டியது. உள நிறைவு கொடுத்தது அவரை வதைத்த தனிமை எனும் கொடு நோய்க்குஅவளே ஒரு மருந்தாக வந்து சேர்ந்திருந்தாள். அது அவளுக்குத் தெரியாது.

நான் உன்னை மதிக்கிறேன். நான் உன்னைப் போற்றுகிறேன். உனக்கு நான் நன்றி கூறுகிறேன்.

ஏதோ வேத வாக்கியத்தை உருப் போடுவதுபோல அவர் உள்ளம் ஜெபித்துக் கொண்டிருந்தது.

ஏசுமுனி மரியா மகதலேனாளை மதித்ததுபோல; புத்தன் ஆம்ரபாலியை கௌரவித்தது போல; உபகுப்தன் வாசவத்தத்தைக்கு நன்றி அறிவித்தது போல...

"சரி, நேரமாகிவிட்டது. நான் போய்வருகிறேன். எப்பொழுதாவது இத்தகைய பாக்யம்கிடைக்க நீங்கள் அருள் புரிவீர்கள் என்று நம்புகிறேன். ஊம்? மறுக்க மாட்டீர்களே?"

"நீங்கள் தான்..." என்று அவர் உதடுகள் வரை வந்துவிட்டது வார்த்தை. அவர் சமாளித்துக் கொண்டார். "நீ தான் மனமிசைந்து அருள்புரிய வேண்டும்" என்றார்".

"தங்கள் சித்தம், என் பாக்கியம்" என்று கூறிச் சிரித்தாள் அவள். ளஅங்கிருந்து போக மனமில்லாதவளாய் நகர்ந்தாள். திடீரென்று நினைத்துக் கொண்டவராய், "ஆமாம் உன் பெயர்?" என்று கேட்டார் ஞா.பி.

"உங்களுக்கு பிடித்தமான பெயரைச் சொல்லி அழைக்கலாம். எனக்கு இதுவரை எத்தனையோ பெயர்கள் வந்து போய்விட்டன. விலாசம் மாறும் போதெல்லாம் என் பெயரும் மாறிவிடும். பிரேமா, வசந்தா, பத்மா, சகுந்தலா... இப்படி அழகு அழகான பெயர்கள் எனக்கு உண்டு..."

"உன்னை நான் வசந்தா என்றே கூப்பிடுவேன். ஏனெனில் நீ வசந்தத்தைப் போல் இனியவளாக இருக்கிறாய். குளுமை தருகிறாய்..."

"நன்றி. மகிழ்ச்சி. வணக்கம் என்று கூறிக் கும்பிட்டு விட்டு நகர்ந்தாள் அவள். பார்வைப் புலனுக்கு எட்டாதவளானாள்."

இருள் கனத்துக் கடந்தது நெடுகிலும்...

அறியாமை இருளிலே உண்மையைத் தேடிப்பிடிக்க அலைகின்ற அறிவுக் கதிர் மாதிரிச் சுற்றிச் சுழன்று திரிந்து கொண்டிருந்தது லைட் ஹவுஸின் ஒளிக்கற்றை.

*

# 4

# மனோபாவம்

பால்வண்ணம் பிள்ளையைப் பார்த்தவர்கள் உறுதியாக எண்ணினார்கள். அவர் பிழைத்து எழுவது கஷ்டம் என்று.

டாக்டருக்கு நிச்சயமாகத் தெரிந்துதானிருந்தது, பிள்ளையின் வியாதி குணமாவது அரிது என்பது. இருப்பினும் அவர் தமது கடமையை ஒழுங்காகச் செய்யத்தானே வேண்டும்? ஆகவே டாக்டர், பிள்ளையை அடிக்கடி பரிசோதித்தார்; வேளை தவறாமல் குறிப்பு எழுதி வைத்தார். மருந்து கொடுத்தார். முறைப்படி "ஊசி போட்டு" நோயாளிக்கு நம்பிக்கை ஊட்டவும் தவறவில்லை அவர்.

வாழ்க்கையில் "ஸ்ரீமதி பால்வண்ணம் பிள்ளை" என்ற அந்தஸ்தைப் பெற்று, அவரோடு கூட வாழ்ந்து குப்பை கொட்டிய" விசாலாட்சி அம்மாளுக்கும் மனசில் தெளிவாகப்பட்டிருந்தது. "இந்தப் பூட்டுக்கு அவுகபிழைத்து எழமாட்டாக" என்கிற உண்மைதான்.

ஆயினும், "வஞ்சனை இல்லாமே நாம பாக்கிறதைப் பார்த்துவிடுவோம். அப்புறம் ஈசன் விட்ட வழி!" என்ற எண்ணத்தோடு, அவள் எத்தனையோ வைத்தியர்களுக்கு ஏற்பாடு செய்தாள். சோசியர்களிடம் ஜாதகம் பார்த்தாள். மந்திரவாதிகளை அழைத்து என்னென்னவெல்லாமோ செய்து தீர்த்தாள். "கடவுள் கடன் நமக்கு என்னத்துக்கு?" என்று நினைத்து ஏகப்பட்ட கோயில்களுக்கும் செலவு செய்தாள். எல்லாம் தன் மனசைத் திருப்தி செய்து கொள்வதற்கும். செத்துக் கொண்டிருந்த கணவனுக்கு ஆத்மதிருப்தி ஏற்படுத்துவற்காகவும்தான்.

சாகப்போகிற மனுஷன் சாகிற நேரத்தில் "பாதகத்தி பணத்தைத் தான் பெரிசாக மதிச்சாளே தவிர என்னைப்

பெரிசாக நினைக்கவில்லை, பார்த்தியா! சரியானபடி சீக்கு பார்த்திருந்தால் நான் பிழைத்தாலும் பிழைத்திருப்பேன்" என்று வயிற்றெரிச்சலோடும், உள்ளக் கொதிப்போடும் எண்ணிவிடக் கூடாதே! அப்படி ஒரு ஆத்மா குமைந்து குமறுமானால் அந்தக் குலம் ஏழேழு தலைமுறைக்கும் துலங்காமல் போய்விடுமே என்றுதான் அந்த அம்மாள் கருதினாள். பக்தி விசுவாசம்- பாவ புண்ணிய பயம் முதலியன பெற்றிருந்த உத்தமி அவள்.

ஸ்ரீமான் பால்வண்ணம் பிள்ளையின் உள்ளக் குகையில் ஒரு மூலையில் அந்த உணர்வு "நாம் பிழைக்க மாட்டோமோ" எனும் பயத்தில் விளைந்த அரிப்பு-பிறந்து, பின் கறுத்து கனத்து பேயிருளாய் அடர்ந்து மண்டிக் கிடந்திருக்கவும் கூடும. எனினும் அவர் அதை-தனது உட்கிடக்கையை தன் மனைவிக்குப் புலப்படுத்த வேயில்லை. பாவம் விசாலாட்சி வீணாக அழுது புலம்பி மனம் நொந்து போவாளே! பிள்ளை குட்டிகள் வருத்தப்படுமே! என்ற "பரோபகார எண்ணம்" அவருக்கு இருந்திருக்கலாம்.

விசாலாட்சி "பணத்தைப் பணம் என்று பாராமல்" அள்ளி அள்ளி வைத்தியனுக்கும், மருந்துக் கடைக்கும், சாமிகளுக்கும், சாமிபேர்சொல்லி வாழும் ஆசாமிகளுக்கும் இறைத்து விடுவாள் என்று தோன்றியதும், பால் வண்ணம் பிள்ளை குறுக்கிட்டார். தலையிட்டுத் தடைசெய்ய வேண்டியது அவசியம் என்று கருதித் தான் அவர் அப்படிச் செய்தார்.

"விசாலம்! நீ செய்யறது நல்லாயில்லே. எதுக்கு இப்படி எல்லாம் செலவு பண்ணணும்? என்னைத் தரும ஆஸ்பத்திரியிலே கொண்டு போய்ச் சேர்த்துவிடு, அதுதான் உத்தமம்" என்ற பிள்ளை சொன்னார்.

"நான் உங்களை நன்றாகக் கவனிக்கலியா? இன்னும் கண் முழிச்சப்பாடு பார்க்கக் காத்திருக்கிறேனே நான்" என்று விக்கலோடும் வேதனையோடும் விசாலாட்சி முறையிடத் தொடங்கவும், பிள்ளை அலுத்துக் கொண்டார்.

"இது தான் இந்த வீட்டிலே பெரிய தொல்லை. அட, மனுசன் சொல்றானே, அதைக் கேப்போமே என்று கிடையாது..."

"ஐயோ. ஐயோ, கோயில் மாதிரி நீங்க உங்க மனசிலே குறை இருக்கப்படாது என்று நான் எவ்வளவோ் பாடு படுகிறேனே" எனத் தர்மபத்தினி புலம்பினாள்.

"அப்படியானால் என்னை ஏன் ஆஸ்பத்திரியிலே சேர்க்க மறுக்கிறே? அங்கே நல்ல டாக்டர்கள் இருக்கிறார்கள். அருமையாகக் கவனித்து மருந்தெல்லாம் கொடுக்கிறார்கள்" என்று அடுக்கினார் பிள்ளை.

ஆகையினால் பால்வண்ணம் பிள்ளையை "தரும ஆஸ்பத்திரி"யில் சேர்ப்பது தவிர வேறு வழியில்லை என்று ஆயிற்று. விசாலாட்சி அம்மாள் தன் கணவனின் ஆசைக்கு பங்கம் விளைவிக்க விரும்பவில்லை.

அதனால் ஒரு குறைவுமில்லை. ஆஸ்பத்திரியில் நன்றாகத்தான் கவனித்தார்கள். நல்ல மருந்து, நல்ல போஷிப்பு. மணிப் பிரகாரம் மருந்தும், வேளை தவறாமல் உணவும் கிடைத்தது. ரொட்டி பால், பழங்கள் எதற்கும் குறை கிடையாது. பிள்ளைக்கு ரொம்பவும் திருப்தி.

பால்வண்ணம் பிள்ளைக்கு நிச்சயமான சில நம்பிக்கைகள் இருந்தன. வாழ்வில் தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் உய்விக்கக் கூடிய மதம் ஒன்றே ஒன்று தான் உண்டு. அது பணம் தான்...சர்வ வியாபகமான, சர்வ வல்லமை பொருந்திய, சர்வ சமய நாதனான கடவுள் ஒருவனே உண்டு. "அப்பன் பணநாதன் தான், அவன்".. நினைத்ததை எல்லாம் எய்திட வைக்கும் சகல இன்பங்களையும் பெற்றுத் தந்திடும்-எவரையும் ஏவல் கொள்ளும்-அற்புதங்கள் பலவும் செய்யும் மந்திரம் போன்ற ஒரு சக்தி இந்த உலகத்தில் ஒன்றே ஒன்றுதான் உண்டு அதுதான் பணம். இவ்வாறு நம்பி, பணபக்தி பண்ணி, பணத்தைச் சேர்த்துவைக்கும் ஆசை மிகுதியும் பெற்றவராய் விளங்கினார் அவர்.

முதலில் கொஞ்சகாலம் விசாலாட்சி தாராளமாகச் செலவு செய்ததை அவர் ஆட்சேபிக்காததன் காரணம், "நாம் பிழைத்து விடுவோம்" என்ற நினைப்பு அவருள் குடியிருந்தது தான். பிறகு அவர் தம்மை ஆஸ்பத்திரியில் சேர்த்தே ஆகவேண்டும் என்று அடம் பிடித்ததிலிருந்தே "நாம் பிழைப்பது சந்தேகம்தான்" என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டு விட்டது என்பது விசாலாட்சிக்கும் மற்றவர்களுக்கும் புரிந்தது.

எனினும், அப்படி ஒரு சந்தேகம் தன்னுள் முளைகட்டி, முகிழ்த்தெழுந்து, குருத்து விட்டு, இலைகள் விரித்துப் பெரிதாகிக்

ரொண்டிருந்ததாக பிள்ளை ஒருவரிடம்கூட, வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. எனவே, அவரைக் குஷிப்படுத்தி அவருக்கு நம்பிக்கை அளிக்க வேண்டியது தங்கள் கடமையாகும என்றுதான் எல்லோரும் எண்ணினார்கள்.

விசாலாட்சிகூட அவ்வாறு தான் நம்பினாள். அவள் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு, அவரைப் பார்ப்பதற்காக, ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். போகிறபோது வெறும் கையோடு போகலாமா என்று எண்ணி, ஆப்பிள் பழங்களும் ஆரஞ்சுப் பழங்களும் வாங்கிக் கொண்டு போனாள்.

முதல்நாள் பால்வண்ணம் பிள்ளை எதுவும் பேசவில்லை. "இதெல்லாம் எதுக்கு?" என்றாரே தவிர, எரிந்துவிழவில்லை.

மறுநாளும் அவள் பழங்கள் வாங்கி வந்தபோது, அவர் முகத்தைக் கடுகடுவென வைத்துக் கொண்டு, "வீணாக இதை எல்லாம் வாங்கி வருவானேன்?" என்று முனங்கினார். வியாதியின் உக்கிரம் தாங்காமல்தான் கணவன் உஷ்ணமாகப் பேசுகிறார் என்று எண்ணினாள் பத்தினி அம்மாள்.

மூன்றாம் நாளும் அவள் ஆப்பிள்கள், ஆரஞ்சு, முந்திரிப் பழம் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து நின்றதும் பால்வண்ணம் பிள்ளையின் கோபம் எரிமலையின் அக்கினிக் கொதிப்புபோல் ஆயிற்று வார்த்தைகள் தீக்குழம்பு போலவும் புரண்டு ஓடிவந்தன.

"உனக்கு மூளை என்பது கொஞ்சம்கூடக் கிடையாது. வடம்வருத்தம் இல்லவே இல்லை. கண்மூடித்தனமாக செலவு செய்துவிட்டு, நீயும் உன் பிள்ளைகளும் நாதியற்று நடுத்தெருவிலேதான் நிற்கப்போறீங்க. நான் செத்ததற்குப் பிறகு, நீ பிச்சைதான் எடுப்பாய்" என்றெல்லாம் பொரிந்து தள்ளினார் அவர்.

தான் செய்த தீங்கு என்ன என்பதை உணர்ந்துகொள்ளும் திறனற்றவளாய் கண்ணீர் வடித்து, இதயம் நொந்து நின்றாள் விசாலாட்சி. பிள்ளைகள் விழித்தபடி நின்றார்கள்.

"நான் தான் பழமெல்லாம் வாங்கி வரவேண்டாம் என்றேனே. நீ ஏன் தெண்டத்துக்கு அரை டசன் ஆப்பிளும் அரை டசன் ஆரஞ்சும் வாங்கி வரணும்? ஆப்பிள் பழம் விக்கிற விலையிலே நம்மைப்போல உள்ளவங்க தினசரி வாங்கினால் கட்டுபடி ஆகுமா? நீ ஏன் தினம்

அதை வாங்கணும்? ஆரஞ்சுப் பழங்கள்தான் ஆஸ்பத்திரியிலேயே தருகிறாங்களே. உனக்குப் பணத்தின் மதிப்பு என்றைக்குத்தான் தெரியப்போகிறதோ? கண்ணு மூக்குத் தெரியாமல் பணத்தைக் காலி பண்ணிப்போட்டு, அப்புறம் கஷ்டப்படணுமா என்ன?" என்று உபதேசித்தார் அவர்.

அதன் பிறகுதான் அவள் செய்த தவறு அவளுக்கே விளங்கியது! நீண்ட பெருமூச்செறிந்தாள் விசாலாட்சி. "இன்னமே இப்படிச் செய்யலே" என்று மன்னிப்பு கோரினாள் அவள்.

பிறகு விசாலாட்சியும் பிள்ளைகளும் வீடு திரும்பும்போது, "ஏய்! என்றார் குடும்பத் தலைவர்.

அவள் திடுக்கிட்டுத் திகைத்து நின்றாள்.

"இந்தப் பழங்களை எல்லாம் எடுத்துக்கிட்டுப் போ" என்று உத்திரவிட்டார் அவர்.

அவருடைய கோபம் அடங்காத கோபமாகத்தான் நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது என்று பயந்தாள் விசாலாட்சி.

"ஏன் முழிச்சுக்கிட்டு நிக்கிறே? பழங்களை எடுத்துப் பையிலே வை. வீட்டுக்குப் போனதும் குழந்தைகளுக்குக் கொடு. இங்கே இருந்தால் வீணாகத்தானே போகும்" என்று கூறி, லேசாகச் சிரித்தார் பிள்ளை.

அவர் கோபமாகச் சொல்லவில்லை, குணத்தோடு தான் பேசுகிறார் என உணர்ந்த விசாலாட்சி தான் கொண்டு வந்த பழங்களை எடுத்துப் பைக்குள் போட்டாள்.

"இதையும் கொண்டு போ. இதை எல்லாம் குழந்தைகளுக்குக் கொடு. நீயும் தின்னு" என்று உற்சாகமாகப் பேசி, ஆரஞ்சுப் பழங்களை அள்ளி அள்ளிப் பையினுள் போட்டார் பிள்ளை.

"அப்புறம் உங்களுக்கு வேண்டாமா?" என்று தயங்கித் தயங்கி விசாரித்தாள் விசாலாட்சி.

"இங்கே நிறையவே ஆரஞ்சுப் பழங்கள் தருகிறாங்க. சீக்காளியான ஒருவன் தின்னக் கூடிய அளவுக்கும் அதிகமாகவே கொடுக்கிறாங்க. எல்லாம் வீணாகப் போவதைவிட அல்லது

அவங்களிடமே திருப்பிக் கொடுப்பதைவிட-நீ வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போவது நல்லதில்லையா? குழந்தைகளுக்கும் உனக்கும் ஆகுமே!" என்று அவர் அறிவித்தார்.

அவள் பதில் பேசவில்லை.

"விசாலம், இனி நான் இங்கே இருக்கிற வரைக்கும் நம்ம குழந்தைகளுக்கு ஆரஞ்சுப்பழம் கிடைத்துக் கொண்டே இருக்கும். நீ கவலைப்படவேண்டாம். அநாவசியமாகக் காசு செலவு பண்ணி எதையும் நீ வாங்கி வரவும் வேண்டாம்" என்றார் பால் வண்ணம் பிள்ளை. தனக்கு ஏற்பட்ட ஆத்ம திருப்தியை ஒலி பரப்புவது போல் நன்றாகச் சிரித்தார் அவர்.

அவர் முகத்தையே பார்த்தபடி நின்ற விசாலாட்சிக்குத் தன் அழுகையை அடக்க முடிந்தது; விம்மி வந்த பெருமூச்சை அடக்கமுடியவில்லை.

*

# 5

# உயர்ந்தவன்

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்"சாமே! அப்படியென்றால், அநேக இடங்களில் பாத்திரம் துலக்கியும் .வீடு பெருக்கியும் வயிறு வளர்த்து வந்த பார்வதிக்கு அவள் மகன் ராசா ஆகவும், "துரை"ஆகவும் விளங்கியதில் தவறு இல்லைதானே?

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று எண்ணிக்கொள்ள உரிமை பெற்றிருந்த போதிலும், பார்வதி தன் மகனை மன்னன் ஆக்கி மகிழ ஆசைப்பட்டதே இல்லை. வருங்காலத்திலே அவன் ஒரு மந்திரியாகி "ஜெயம் ஜெயம் என்று" வாழ்ந்து விடுவான் என்றுகூட அவள் கனவு கண்டது கிடையாது. அவளது கனவு அதிகபட்சமாகப் போயிருந்தால், ஒரு தாசில் உத்தியோகத்தையோ அல்லது கலெக்டர் பதவியையோ தான் தொட்டிருக்கக்கூடும்.

தனது உறைவிடமான கிணற்றில் நாலுதரம் அப்படியும் இப்படியும் தாவிக் குதித்துவிட்டு, "என்ன இருந்தாலும் நீ சொல்கிற கடல் என்கிற விஷயம் இதைவிடப் பெரிசாக இருந்துவிட முடியாது" என்று அடித்துப்பேசிய தவளையின் கண்ணோட்டம்தான் அவளுக்கும் இருந்திருக்க முடியும்.

பார்வதி அம்மாள் படிக்காதவள். பல ஊர்களுக்கும் போய் வந்து அறியாதவள். "கலெக்டர் பிள்ளை" என்று ஜில்லா பூராவும் பெயர் பெற்றுத் திகழ்ந்த ஒருவர் வீட்டில் "வாசல் தெளித்துப் பெருக்கும்" பணி புரிந்தவள். கலெக்டருக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கமுடியும் என்பதைத் தனது கண்ணால் கண்டிருந்தாள் அவள், "தாசில் பிள்ளை" பெருமையும் அவள் அறிவாள். ஆகவே தன்

மகன் கலெக்டர் ஆகிவிடுவான்; இல்லாவிட்டாலும், தாசில் வேலை பார்த்தே தீருவான் என்று "ஆசைப்பயிர்" வளர்த்து வந்தாள் அத் தாய்.

காலப்போக்கிலே அவள் "கண்ணீரும் செந்நீரும்" கொட்டித்தான் தனது ஆசைகளைப் பாதுகாக்க நேர்ந்தது. பெரிய காக்கை தன் குஞ்சு பொன் குஞ்சுதான் என்று எண்ணுவது தவறில்லை. அதற்காக அது "எண்ணியது எண்ணியவாறே எய்திவிடும்" என்று சொல்லமுடியுமா? தாய் யார் யாரையோ சிபாரிசு பிடித்து, "சாமியார் பள்ளிக்கூட"த்தில் சம்பளம் இல்லாமலே மகனைப் படிப்பிப்பதற்கு ஏற்பாடு செய்தாள்.

மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டியே தீருவது எனும் நோக்கத்தோடு "சாமியார்"களாக வாழ்ந்து, பள்ளிக்கூடம் நடத்தி நல்ல பெயரும் பெறுகிற பாதிரிகள் ஸ்தாபனத்தின் "ஐயா"க்கள் கூட பார்வதி மகன் செல்லையாவின் மூளையிலே பாடப் புத்தகத்தில் உள்ள விஷயங்களைப் பதிய வைக்க முடியவில்லை.

"ஸிலபஸி"ல் சேராத விஷயங்கள் எல்லாம் அவன் மூளையில் சுலபமாகவே புகுந்துகொண்டு அவனைப் படாதபாடு படுத்தினால், அந்தச் சிறுவன் பாடங்களைக் கற்றுக்கொள்வது எங்கே? பரீட்சையில் தேறுவது தான் எப்படி? அரியோன் அரி" என்று யாரோ சொல்லிக் கொடுத்தால், "அண்ணாவி வீட்டிலே பொரி" என்று எவரும் சொல்லி தராமலே கத்துவதற்குக் கற்றுக்கொண்டான் அவன். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்று புத்தகம் சொல்கிற தாக்கும்? அவன் வாய் அதைத்தான் சொல்லவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லையே! "வாத்தியார் சாகாரா! வயித்தெரிச்சல் தீராதா" என்று தான் அது ராகம்போடும்.

செல்லையா தானும் உருப்பட மாட்டான்; மற்றவர்களையும் உருப்பட விடமாட்டான் என்று தெரியவந்ததும், பாதிரி பள்ளிக் கூடத்து ஐந்தாம் வகுப்பு "ஐயா" பையா! நீ இனிப் பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டாம்" என்று சொல்லிவிட்டார். "கண்டிப்பு - கட்டுப்பாடு - ஒழுங்குமுறை - நல்லபடிப்பு - அருமையான பலன் வகையராக்களுக்குப் பெயர் பெற்றது "சாமியார் பள்ளிக்கூடம்".

இருந்தும் என்ன செய்ய? பார்வதியிடம் நல்ல பெயர் சம்பாதிக்க முடியவில்லை அதனால். "வாத்தியாராம் வாத்தியாரு! எங்க ராசாவுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியலே அவங்களாலே.

பையன் தலையிலே களிமண்ணு தான் இருக்குது என்று ஒரு ஐயா சொல்லி விட்டாரு. மேல்மாடி காலி என்கிறாரு ஒருத்தரு. சுட்டுப் பொசுக்கினாலும் படிப்பு வராது என்று பெரிய ஐயா சொன்னாரு. அவங்க எல்லோருமே சோம்பேறிகதான். என் துரைராசா நல்ல புத்திசாலி ஆச்சுதே. அவனுக்கு விளையாட்டுத்தனம் அதிகம். அதனாலே தான் படிப்பிலே கவனமில்லை. கவனம் வைத்து அக்கறையோடு படித்தான் என்றால் அவனை யாரும் மிஞ்ச முடியுமா?" என்று அவள் சொன்னாள். தன் மகனைப் பற்றி வேறு விதமாகப் பேச, பெற்ற மனசு இடம் கொடுக்குமா?

பார்வதியின் "ராசா" வான செல்லையா "அவிழ்த்து விட்ட கழுதை" மாதிரி! அலையும் சுதந்திரம் பெற்றுவிட்டான். அவனுடைய "கீர்த்தி" எங்கும் பரவியது. பாடப் புத்தக விஷயத்தில்தான் அவ்ன் மூளை "தடிமன்" பெற்றிருந்ததே தவிர, வயிற்றுப் பாடு என்கிற பிரச்னை வரும்பொழுது ''ரொம்ப சூட்டிக்கமாக''த் தான் வேலைசெய்து வந்தது. அப்படி வேலைத்தனங்கள் செய்து அகப்பட நேரிட்டால், எளிதில் தப்பி விடுவதற்கு உரிய உபாயங்களையும் ஒரு கணத்தில் கண்டுவிடும் சக்தி அதற்கு இருந்தது. அட தப்பித் தவறி அடியும் உதையும் பெற நேர்ந்தது என்றாகிவிட்டால் தான் என்ன? ''தோலுக்கு மேலே தொண்ணூறு அடி; துடைத்து விட்டால் ஒண்ணுமில்லே!" என்று சுட்டிக்காட்டக்கூடிய "பரிபூரணானந்த பக்குவம்" அதற்கு இருந்தது.

பார்வதி தான் கண்ணீர் வடித்தாள். தனது "ராசா"வின் மேனியில் கசிந்து பொறுக்கிட்டிருக்கும் ரத்தக் கறைகளைக் காணும்போது அத் தாயின் உள்ளம் வேதனையோடு ரத்தம் கக்கும், "அடே, ஏண்டா இந்த வரத்து வருகிறே? நல்லவன்னு பெயரெடுத்து நீ நாலு பேரு மதிக்க வாழணுமின்னு நான் எவ்வளவு ஆசைப்பட்டேன்! என் எண்ணத்திலே மண்ணைப் போட்டுவிட்டையேடா ராசா!" என்று வயிற்றெரிச்சல் தாங்காமல் புலம்பினாள் தாய்.

"இப்போ எனக்:கு என்னம்மா குறை? நாலு பேரு மதிச்சு நமக்கு என்ன ஆகப் போகுது?" என்று கேட்டான் பையன்.

சர்வ சமய சஞ்சீவியான பழமொழிதான் பார்வதி அம்மாளுக்கும் புகல் அளிப்பது வழக்கம். இந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு பழமொழி தான் அவளுக்கு ஆறுதல் கூறியது ஊம் என்னாலே என்னடா செய்ய

முடியும்? தலையிலே எண்ணெய்தான் தேய்க்க முடியும்; தலை எழுத்தைக் கண்டால் அழிச்சு எழுத முடியுமா?" என்று அவள் முனங்கினாள்.

செல்லையா நண்பர்களின் நல்மதிப்பு வேண்டும் என்று கூட எண்ணுவதில்லை. தான் தப்புவதற்கு நண்பனைக் காவு கொடுக்கவும் அவன் தயங்க மாட்டான். அப்பாவி நன்பன் ஒருவன் ளஅகப்பட்டுக்கொண்டால், தப்பிவிட்ட அவன் கை கொட்டிச் சிரித்து மகிழ்ப் பின் வாங்கவும் மாட்டான்.

ஒரு சமயம் அப்படித்தான் ஆயிற்று. ஒரு தோப்பில் மாமரங்களில் குலைகுலையாகக் காய்கள் தொங்கின. அவற்றின் பசுமை பையன்களை ஆசைகாட்டி அழைத்தன அதனால், கற்கள் பறந்தன; காய்கள் விழுந்தன. காய் அடித்துத் தின்னும் சுவாரஸ்யத்தில் பையன்கள் தோப்புக் காவல்காரன் வந்ததைக் கவனிக்கவில்லை. முதலில் கவனிக்க நேர்ந்த செல்லையா "டேடேய்! ஓடுங்கள்!" என்று கூவிக்கொண்டு விழுந்தடித்து ஓடவும்தான் மற்றவர்கள் கால்களிலும் உணர்வு பிறந்தது. எனினும் ஒருவன் அகப்பட்டுக் கொண்டான். காவல்காரன் அவனை மிரட்டவும், மற்றப் பையன்களுக்கு பயம் காட்டவும் ஒரு வேலை செய்தான். அச்சிறுவனின் கைகளைக் கயிற்றினால் கட்டி, அவனை ஒரு கிணற்றினுள் இறக்கினான். தண்ணீர் அதிகம் இல்லாத கிணற்றுக் குள்ளே அந்த "மனித வாளி" இறங்கியது; அலறி ஓலமிட்டுக் கொண்டே இறங்கியது. அலறி "ஐயோ ஐயோ, என்னை உள்ளே போட்டுவிடாதே! மேலே தூக்கு" என்று பயந்து. நடுங்கிக் கதறினான் பையன்.

அந்த அலறல் கேட்டு எல்லாச் சிறுவர்களும் அங்கே வந்து கூடினார்கள். அவனை விட்டுவிடும்படி சிலர் கெஞ்சினார்கள். "வாத்தியார் ஐயர் மகன் தானே இந்தப் பையன்?" என்று தோப்புக்காரன் கேட்டான். "ஆமாம்" என்றனர் சிலர். "அப்போ எல்லாரும் கத்துங்க... "ஐயரே ரெண்டரே. அமுக்கிப் புடிச்சா ஒண்ணரே!... உம். கத்துங்கள்!" என்றான் காவல்காரன். அவனுக்கு அது தமாஷாக இருந்தது.

பயந்தனர் சிலர். பரிதாபப்பட்டனர் பலர். செல்லையா தான் முதல் குரல் கொடுத்தான். தயங்கித் தயங்கி நாலைந்து குரல்கள் மெதுவாக இணைந்தன. பிறகு எல்லாக் குரல்களும் கூவின. அதுவரைஅந்தச்

சிறுவன் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தான். "நம் உயிர் நம்ம கையில் இல்லை" என்ற தவிப்பு அவன் உள்ளத்தில் பதை பதைத்துக் கொண்டிருந்தது. பீதி என்பதன் உயிர்ச்சித்திரமாக மாறியிருந்தது அவன் முகம்.

முடிவில் அவனை வெளியே தூக்கி, கட்டை அவிழ்த்து விட்டதும் அவன் யாருடனும் பேசவில்லை. கும்பலாக நின்று கூவிய பயல்கள் ஒவ்வொருவரும் "செல்லையா தான் முதல்லே கத்தினான்" என்று ஏதோ ஒரு மகா உண்மையை உரைப்பது போல ஓதினார்கள்.

''ஆமா நான் தான் கத்தினேன். நாம் கத்தாவிட்டால் தோப்புக்காரன் அவனை கரைக்குத் தூக்கமாட்டான் என்று எனக்குப் பட்டது. அதனாலேதான் கத்தினேன்" என்றான் அவன்.

"நீ அகப்பட்டுக் கொண்டு முழிச்சிருக்கணும். அப்ப தெரியும்" என்றான் "அனுபவ ஞானம்" பெற்றவன்.

"நான் ஏன்டா அகப்படப் போறேன்!" என்று அலட்சியமாக அறிவித்தான் செல்லையா. அந்தப் பையன் அவனோடு சில தினங்கள் வரை பேசாமலிருந்தான். அதைப் பற்றி செல்லையா கவலைப்படவில்லை.

பொதுவாக, அவன் எதைப் பற்றியுமே கவலைப்படுவது கிடையாது. கவலை வளர்த்து வாழ்ந்த அன்னைக்குக் கூட அவன் ஆறுதல் கூறக் கற்றுவிட்டான்.

"நீ ஏனம்மா கவலைப்படுகிறே? கவலைப்படுவதனாலே என்ன நடக்கப் போகுது? ஒன்றும் நடக்காது என்கிறபோது மனுசன் ஏன் கவலைப்படணும்?" என்று சொல்வான் அவன்.

"அம்மா. நீ நிச்சயமாக நம்பலாம். நான் பெரியவன் உயர்ந்தவன் என்று நிரூபிக்கும் படியான காரியம் எதையாவது என்றாவது செய்யாமலா போகப் போறேன்" என்றும் அவன் கூறுவான்.

ஆனால், பார்வதி மகன் செல்லையா "உருப்படாத பயல்" என்று தான் ஊர்க்காரர்கள் முடிவுகட்டியிருந்தார்கள். "கழுதை எதுக்கு லாயக்கு? சோத்துக்குக் கேடு; பூமிக்குப் பாரம்" என்றும் சொன்னார்கள். "தாயார்க்காரி" வேண்டிக்கொண்டதற்கு இணங்க எவராவது பெரிய மனிதர். ஏதாவது மளிகைக் கடையிலோ வேறு எங்கோ சிபாரிசு

செய்து அவனுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதும், சில தினங்களிலேயே அவன் அந்த வேலையை விட்டு விடுவதுடன், வேலைதேடித் தந்தவர் முகத்தில் "கரியைப் பூசுவதும்" இயல்பாகிவிட்டது. அதனால் அப்புறம் அவனுக்கு உதவி புரிய எந்தப் பெரியவரும் முன்வரவில்லை "அவன் கெட்டது அவனுடைய அம்மாவினாலேதான். ரொம்பவும் செல்லம் கொடுத்துக் கெடுத்துவிட்டாள் அவள் இருக்கிற வரை அவனுக்குக் கவலையா கஸ்டமா?" என்றுதான் பலரும் சொன்னார்கள். "தடிமாடு அவன். தின்னு போட்டு ஊரு சுற்றுவதும் வம்புச் சண்டையைவிலைக்கு வாங்குவதும் தவிர அவன் வேறு என்ன செய்யப் போகிறான்?" என்றார்கள்.

ஒருநாள் அவன் கையில் கயிறு அறுந்த காற்றாடி ஒன்று சிக்கியது. அதற்குக் கயிறு கட்டிப் பறக்கவிடவேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. எங்கிருந்தோ கயிறு சம்பாதித்தான். இரண்டு பையன்களையும் துணை சேர்த்துக் கொண்டு பட்டத்தைப் பறக்க விடுவதில் ஈடுபட்டான்.

கனத்தில் "விர்ரென்று" எவ்விப் பாய்ந்தது காற்றாடி. பழக்கம் பெற்றிராத செல்லையா முதலில் திணறினாலும் சீக்கிரமே சமாளித்துக்கொண்டான். அவன் "டைரக்ட்" செய்த காற்றாடி விண்ணிலே நெளிந்தது; நீந்தியது; ஏறி இறங்கியது; சுகமாக மிதந்தது. உயர்ந்து உயர்ந்து சிறு பறவைபோல் திரிந்தது. வர்ணப் புள்ளிபோல் நிலைத்து நின்றது.

செல்லையாவின் உள்ளமும் அளவில்லாத ஆனந்த அனுபவத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அதுவரை அவன் உணர்த்திராத மகிழ்ச்சி அங்கு நிரம்பியது. தனது கவிதா சிருஷ்டியில் சொக்கிவிடுகிற கவிஞன் மாதிரி-தன் கைத்திறனிலே பூரித்துப் போகிற ஓவியன்போல - தன்னுடைய குரலின் ஏற்ற இறக்கங்களில் மெய்மறந்து திளைத்து அற்புத இசை பொழிந்து களிக்கிற சங்கீதக் கலைஞன் போல, அவனும் காற்றாடிவிடும் அனுபவத்தில் ஆழ்ந்து நின்றான்.

தினந்தோறும் அதே வேலையாக முனைந்துவிட்டான் அவன். புதிய பட்டங்கள் செய்து பறக்க விடுவதில் அவனுக்கு அதிக உற்சாகம் ஏற்பட்டது. வானவெளியில் தடங்கலற்று மிதக்கும் வேறு

காற்றாடிகளை அறுத்து விழத் தட்டுவதிலும் ஆர்வம் பிறந்தது அவனுக்கு. மேலே எவ்வுகிற பட்டத்தோடு தானும் உயர்ந்துவிடுவது போன்ற நம்பிக்கையும் ஆனந்தமும் ஏற்படுவது இயல்பு என்கிற மனத் தத்துவத்துக்கு உயிர்ப் பிரமாணமாக மாறி நின்றான் அந்தச் சோமாறி.

எப்படியானால் என்ன! ''நான் உயர்ந்தவன்'' என்று நிரூபித்துவிட்ட பெருமையோடு தலை நிமிர்ந்து நடக்கலானான் செல்லையா. பார்வதி அம்மாள் வருத்தப்பட்டுக் கொண்டுதான் இருந்தாள்.

"திறமைசாலிகளை உலகம் உரிய முறையில் போற்றுவதில்லை. மேதாவிகளை சொந்தத் தாய்கூட மதிப்பதில்லை!" என்றுதான் செல்லையா எண்ணினான். அதற்காக அவன் வருந்தவில்லை. அவன்தான் எதற்காகவும் கவலைப்படுவது கிடையாதே! "விண் உண்டு; காற்று உண்டு; பறக்க விடக் காற்றாடியும் உண்டு" என்று தேர்ந்துவிட்ட பிறகு அவனுக்குப் புதுசாக ஏதாவது கவலை வந்துவிட முடியுமா என்ன?

*

# 6

# பிரமை அல்ல

பண்ணையார் சூரியன் பிள்ளை தமது அனுபவத்தை யாரிடமாவது சொல்லவேண்டும் என்று ஆசைப்பட்டார். சொல்வதற்கும் தயக்கமாக இருந்தது அவருக்கு. தான் ஆலோசனை கோரி அதைச் சொல்லப் போக, மற்றவர்கள் கேலி செய்து பரிகாசிக்கத் துணிந்தால் தனது கௌரவம் என்ன ஆவது என்ற அச்சமும் அவருக்கு இருந்தது. ஆகவே, "பார்க்கலாமே, பார்க்கலாமே!" என்று தன் எண்ணத்தை ஏலத்தில் விட்டுவந்தார் அவர்.

ஆனால் தொடர்ந்து நாள்தோறும் அதே நிகழ்ச்சி எதிர்ப்படவும் அவர் உள்ளம் குழம்பியது. உணர்வுகள் தறிகெட்டு, உடல் பலவீனம் ஏற்பட்டது. தனது எண்ணங்களை வெளியிடாமல், தன் உணர்ச்சிகளை வெளியே காட்டாது ஒடுக்கி வந்தால் கட்டாயம் தனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் என்று கருதினார் அவர். ஒருவேளை இப்பொழுதே பைத்தியம் பிடித்திருந்ததோ என்னவோ! இல்லையென்றால் அதை நிஜமாக நிகழ்ந்தது என்று எப்படிக் கொள்வது? யார்தான் அதை நம்புவார்கள்?...

அது நிஜமான தோற்றம் அல்ல என்றும் உறுதியாக நம்ப இயலவில்லை அவரால். அவருடைய கண்கள் அவரை ஏமாற்றிக் கொண்டிருந்தன என்று நினைக்க அவர் தயாராக இல்லை. அவர் மூளைதான் ஏதாவது சித்து விளையாட்டு புரிந்து கொண்டிருந்ததோ? இந்தச் சந்தேகம் அவருக்குச்சிறிதே உண்டு. ஆனால் இதர விஷயங்களில் எவ்விதமான குழப்பமும் ஏற்படவில்லையே. கொடுக்கல்வாங்கல், கணக்கு வழக்கு, பண்ணை விவகாரங்கள் முதலியவற்றில் எல்லாம் அவருடைய

அறிவுத் தெளிவு வழக்கம் போல் மிளிரவில்லையா என்ன? அப்படியென்றால் இந்த நிகழ்ச்சிக்கு என்ன விளக்கம் கொடுப்பது, இதைப் புரிந்துகொள்ள முடியாமல் தான் திணறினார் பண்ணையார்.

முதன் முதலில் அது எப்பொழுது எப்படிக் காட்சி அளித்தது என்பது அவருக்கு வெகு நன்றாக ஞாபகமிருந்தது...

அப்பொழுது அந்திவேளை. மாடுகள் எல்லாம் தொழுவத்தில் ஒழுங்காகக் கட்டப்பட்டுள்ளனவா; அவற்றுக்குத் தீவனம் சரியாக வைக்கப்பட்டிருக்கிறதா என்று "மேற்பார்வை" இட்டுவிட்டுத் திரும்பிக் கொண்டிருநதார் சூரியன் பிள்ளை, திடீரென்று அவர் உடலில் புல்லரிப்பு ஏற்பட்டது. அவருக்கு முன்னால் கறுப்பாக ஏதோ ஒன்று ஓடுவதுபோல் தோன்றியது. அவர் கண்களைக் கசக்கிவிட்டு நன்றாகக் கவனித்தார். அது நின்றும் நகர்ந்தும் முன்னேறி வந்தது. நன்கு வளர்ந்து கொழுத்த காட்டுப் பன்றி அது என்பதை அவர் புரிந்துகொண்டார். எனினும் அவர் உள்ளத்தில் பயம் பரவியது உடல் நடுக்கியது. "சீ!" என்று காரித்துப்பினார்.

அந்தப் பன்றி-சிற்றானைக் குட்டி மாதிரி இருந்த மிருகம்-நின்று, நிமிர்ந்து பார்த்தது. சிறிய வட்டக் கண்களால் அவரை வெறித்து. நோக்கி, "உர்ர்-உர்ர்" என்று உறுமியது. பிறகு அவரை அலட்சியப் படுத்திவிட்டு நகர்ந்தது.

"இந்தத் தடிப்பண்ணி இங்கே எப்படி வந்தது? நம்ம சுற்று வட்டாரத்திலே இதுமாதிரிப் பண்ணி எதுவும் கிடையாது" என்று எண்ணினார் அவர்.

அந்நேரத்தில் தோட்டத்தில் வேலையாட்கள் யாருமில்லை. எல்லோரும் அன்றைய அலுவல்களை முடித்துவிட்டு, அவரவர் வீட்டுக்குப் போய்விட்டார்கள். வண்டிக்காரன் மட்டும் இரவு ஏழு மணிக்கு வருவான். வீட்டிலும் யாரும் கிடையாது. பண்ணையாரின் மனைவி விசாலாட்சி அம்மாள் "மஞ்சளும் குங்குமமுமாக" போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து சில வருஷங்கள் ஆகிவிட்டன. அவருடைய புத்திர பாக்கியம் பட்டணத்திலே படித்துக் கொண்டிருந்தான். "பனைகுடி ஆச்சி" என்று பெயர் பெற்ற ஒரு பெரியம்மா பகலில் சாதம் ஆக்கி வைத்துவிட்டுப் போய்விடுவாள். இரவு நேரத்துக்கு "வெந்நீர்ப் பழையது" தான். காப்பி-டீ என்கிற நாகரிகமெல்லாம் பண்ணையாருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவை

வேண்டும் என்று அவர் கவலைப்பட்டதுமில்லை. அதனால் சமையல்காரி மாலை வேளையில் வந்து எட்டிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லாது போயிற்று.

ஆகவே, சத்திரம் மாதிரி மிக விசாலமான-பெரிய-அறைகள் மலிந்த - அந்த வீடு வெறிச்சோடியே கிடக்கும் எப்போதும். தனியாகவே வாழ்ந்து பழக்கப்பட்ட சூரியன் பிள்ளைக்கு தனிமை ஒரு சுமையாகவோ வேதனையாகவோ தோன்றியதில்லை. இது வரையில்தான். ஆனால் அன்று-எதிர்பாராத வகையிலே அந்தத் தடிப்பன்றியைப் பார்த்ததும்-அவருக்கு அவருடைய தனிமையே சோகமாய் சுமையாய் தோன்றியது.

அதன் பிறகு அந்த உணர்வு வளர்ந்து வந்ததே தவிர, இல்லாது தேய்ந்துவிடவில்லை. காரணம், அந்தப் பன்றிதான். அவருடைய தனிமையைப் பயன்படுத்திக் கொண்டு அவருக்குத் தொல்லை கொடுப்பதற்காகவே எங்கிருந்தோ வந்து முளைத்திருந்தது அது!

"பன்றியா அது? எனக்கு என்னமோ அப்படித் தோணலே!" இந்த எண்ணம் பண்ணையாரின் உள்ளத்தில் நன்கு வேரோடி விட்டது. அவர்சுற்றி வளைத்து விசாரித்துப் பார்த்ததில், அண்டை அயலில் பன்றி வளர்ப்பவர் எவருமேயில்லை என்று நிச்சயமாகிவிட்டது. சேரியில் வளரும் பன்றிகள் ஊருக்குள் வருவதில்லை. அப்படியே தப்பித் தவறி ஒன்றிரண்டு வரக்கூடும் என்று சொல்லலாமென்றாலோ, பண்ணையார் பார்வையில் பட்டது போன்ற கொழுத்த பன்றி சேரியில் இல்லவே இல்லை. பின், "தடிப்பண்ணி" எங்கேயிருந்து வருகிறது? அதுதான் அவருக்குப் புரியவில்லை.

காலையில், பட்டப்பகலில், ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கும் சமயங்களில் எல்லாம் அந்தப் பன்றி தலை காட்டுவதே இல்லை. அந்திசந்தியில், ஆட்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்ட பிறகு, யாருமே இல்லாமல் பண்ணையார் மட்டும் தனியாக இருக்கிறபோதுதான் அது வரும். தோட்டத்தில் திரியும் தொழுவத்தில் நிற்கும். வாசல் படியண்டை வரும். ஒரு நாள் திண்ணை மீது கூட ஏறிவிட்டது!

அப்போதெல்லாம் அவர் உடல் பதறும். உள்ளம் நடுங்கும். தெளிவற்று - காரணம் புரியாத - ஒருபயம் அவரை ஆட்கொள்ளும் அவர் மிகுந்த பிரயாசையோடு "தூ!" என்று துப்பமுயன்று; சீ! போ சனியனே!" என்று சொல்லி முடிப்பார். அது-எருமைக் கன்றுக்குட்டி

மாதிரி வளர்ந்துவிட்ட தடிப்பன்றி-நிதானமாக நின்று, மந்தமான - அழுக்குப் படிந்து மங்கிவிட்ட மஞ்சள் நிறக் கண்ணாடி வட்டங்கள் போன்ற-சிறு கண்களால் அவரை வெறித்துப் பார்க்கும்.

அக் கண்கள்..அவற்றை அவர் எங்கே பார்த்திருக் கிறார்?...அவரை என்னென்னவோ செய்யும். அவற்றில் பிறக்கிற ஒளியற்ற ஒளி அவருக்கு அச்சமும் அருவருப்பும் தரும், அந்தப் பன்றி வாயை விசித்திரமாக இழுத்துச் சுளிக்கும், அது அவரைப் பரிகாசிப்பது போலிருக்கும். அவருக்கு விளக்க முடியாத வெறுப்பும் வேதனையும் எழும்.

“ஒரு நாள் அந்திக் கருக்கலில்-அவர் பட்டாசாலையில் இருந்த குத்து விளக்கை ஏற்றிவிட்டு, அரிக்கன் லைட்டில் ஒளி ஏற்படுத்தி அதை எடுத்துக்கொண்டு திண்ணைக்கு வந்தகொண்டிருந்தார். திண்ணைக்கும் இரண்டாம் கட்டுக்கும் இடையில் உள்ள வாசல்படியில் கறுப்பாய், உயரமாய், அது என்ன?... அவர் தேகம் நடுங்கியது. ஆமாம். அந்தப் பன்றிதான். ஏனோ அவர் அலறிவிட்டார். தெளிவற்ற ஓலம் தெறித்து விழுந்தது அவர் வாயிலிருந்து. நடுங்கிய கையிலிருந்து நழுவி விழுந்தது விளக்கு. விழுந்த விளக்கின் சிம்னி “சிலீர்” என்ற ஒலியோடு உடைந்து சிதறியது. ஒளி அவிந்துவிட்டது.

அந்தக் கணத்தில் அவர் அனுபவித்த பயம்-தெளிவற்றது; அளவற்றது; அர்த்தமற்றது. அந்தப் பன்றி வீட்டுக்குள்ளேயே வந்து விடுமோ என்ற அச்சம், வந்துவிட்டதுபோல் தன்னை நெருங்கிக் கொண்டிருப்பதுபோல், அசிங்கமான அதன் வாய் தன் உடல் மீது பதிவதற்காகத் துணிவதுபோல் ஒரு குழப்பம்... அது நீங்குவதற்குச் சில நிமிஷங்கள் பிடித்தன. தெளிவு ஏற்பட்ட பிறகுகூட அவரது உடல் நடுக்கம் தீர்ந்து விடவில்லை.

அவர் உள்ளே சென்று வேறொரு விளக்கை எடுத்து ஏற்றிக்கொண்டு வெளியே வந்தார். அப்பொழுது தெருவில் காலடி ஓசை கேட்கவும் அவருக்குத் “திக்-திக்” கென்றது. “யாரது” என்று கத்தினார் அவர். கூப்பாடாக வெடித்த அக்கேள்வி அவர் குரலை விசித்திரமானதாக ஒலிபரப்பியது.

அதனால் திகைப்படைந்த வண்டிக்காரன், “என்ன எசமான், நான் தான்-மாணிக்கம்!” என்று அறிவித்தான்.

"நீ வந்துட்டியா!" இதில் அவருக்கு ஏற்பட்ட ஆனந்தம் நன்கு ஒலி செய்தது. "நல்ல வேளை, இப்பவாவது வந்து சேர்ந்தியே!" என்ற அர்த்தம் தொனித்தது. "என்ன, சாப்பாடெல்லாம் ஆச்சுதா?" என்று கேட்டுவைத்தார் அவர். பேச வேண்டும்-பேச்சுக் குரலைக் கேட்கவேண்டும்-என்ற துடிப்பு அவருக்கு.

"நீ உள்ளே வரும்பொழுது வாசல் பக்கமாக ஒரு பன்றி போச்சுதா? தடியாய், உயரமாய், கொழு கொழு என்று..."

பண்ணையாரின் கேள்வி மாணிக்கத்தின் ஆச்சரிய உணர்வையும் திகைப்பையும் அதிகப்படுத்தியது. "பன்றியா? இங்கே எதுவும் வரலியே, எசமான்! என்றான் அவன். "காம்பவுண்டின் கம்பிக் கதவு அடைத்தேதான் கிடந்தது. உள்ளே சிறு நாய்கூட வந்திருக்க முடியாது. எசமான்" என்றும் உறுதியாகச் சொன்னான் அவன்.

"உம், உம்" என்று முனகினார் பண்ணையார். சில தினங்களாகத் தனக்கு நேர்ந்த அனுபவங்களை-தன் வாழ்க்கையில் பூத்துவிட்ட விசித்திரத்தை-பற்றி அவனிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்தார் அவர். பலத்த ஆலோசனைக்குப் பிறகு, மிகுந்த தயக்கத்தின் மீது. அவர் எல்லாவற்றையும் அவனிடம் கூறினார். அவனுடைய அபிப்பிராயத்தை விசாரித்தார்.

"இது ஏவல்தான் எசமான். அதிலே சந்தேகமே வேண்டாம்" என்று அறிவித்தான் மாணிக்கம். "ஏவல்" என்கிற மாயத்தைப் பற்றியும் அவன் சொன்னான். கண்ணுக்குப் புலனாகாத சக்தி எதுவோ விட்டெறியக்கூடிய கற்களைப் பற்றியும், திடீர்திடீர் என்று தீப் பற்றி எரிவது போல் தோன்றுவது பற்றியும், ஒருவர் பார்வையில்மட்டும் கோரமான-கொடுமையான-அசிங்கமான விஷயங்கள் பலவும் தென்படக்கூடிய விதம் பற்றியும், இன்னும் பல மர்மங்கள் பற்றியும் அவன் எடுத்துச் சொன்னான். "அவருக்கு இப்படித்தான் நேர்ந்தது" "இங்கே எனக்குத் தெரிஞ்ச ஒருவருக்கு இதுமாதிரித்தான்..." என்று ஆரம்பித்து, கதை கதையாகச் சொன்னான் அவன். அவற்றில் அநேகம் நம்பக்கூடியனவாகவும், சில நம்ப முடியாதவையாகவும் தொனித்தன.

"இப்படியெல்லாம் நடக்குமா. மாணிக்கம்?" என்று சந்தேகத்தோடு கேட்டார் பண்ணையார்.

"நடக்குமாயின்னு மெதுவாக்கேக்கிறீங்களே! நடக்குது எசமான், நடந்துகொண்டே இருக்குது. இந்த உலகத்திலே என்னென்ன அநியாய மெல்லாமோ அதிசயமெல்லாமோ நடக்குது. எவ்வளவோ சங்கதிகளை நம்மாலே புரிஞ்சுகொள்ள முடியலே" என்றான் மாணிக்கம். "உங்களுக்கு சந்தேகமிருந்தால் மாடசாமியிடம் கேட்டுப் பாருங்கள். நாளைக்கு நானே அவனைக் கூட்டிவாறேன்" என்றும் கூறினான்.

மறுநாள் மாடசாமி வந்து சேர்ந்தான். அவ்வூர் அம்மன் கோயில் பூசாரி அவன். "விபூதி மந்திரித்துப் போடுதல்", "திருவிளக்கு மை வைத்து நடந்தது-நடக்கப் போவது எல்லாம் அறிந்து சொல்லுதல்" போன்ற வித்தைகளையும் அவன் ஒரு சிறிது கற்றிருந்தான். அதனால் அவனுக்கு நல்ல செல்வாக்கும், திருப்திகரமான வரும்படியும் கிடைத்தன.

அவன் வந்தான். "மை போட்டு"ப் பார்த்தான். "இதெல்லாம் சூனியக்காரன் ஒருவன் செய்கிற வேலைதான்" என்று சொன்னான். அதற்கு மாற்று வைக்கும்படி மாணிக்கம் வேண்டிக் கொள்ளவும் மாடசாமி பணிவுடன் தலை அசைத்தான்.

"எனக்கு அவ்வளவு தூரத்துக்கு சக்தி இல்லை. இது மாதிரி மந்திர தந்திர வேலைகள், சூனியம் வைப்பது. வைத்ததை எடுப்பது, செய்வினை வைத்திருந்தால் அதை முறிக்கத் தகுந்த நடவடிக்கைகளைக் கையாள்வது முதலியவற்றுக்கெல்லாம் மலையாளத்து மந்திரவாதிள்தான் கைகாரர்கள். எனக்கு அவ்வளவாக ஞானம் பற்றாது" என்று சொன்னான் அவன்.

"அது சரி. இந்தப் பண்ணி கண்ணிலே படாமல் இருக்கணு மின்னா என்ன செய்யவேண்டும்?" என்று சூரியன்பிள்ளை கேட்டார்.

"உங்க பண்ணையிலே வேலைசெய்கிற ஆட்களிலே ஒருவனேதான் இதுக்கு மூலகாரணம். நீங்க ஒண்ணு பண்ணுங்க, கொதிக்கக் கொதிக்க வெந்நீரை ரெடியா வச்சிருங்க. அந்தப் பண்ணி கண்ணிலே படும்போதெல்லாம் வெந்நீரை அள்ளி அது மேலே வீசி அடியுங்க பயப்படாமே - என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று கவலைப்படாமல் - வெந்நீரைக் கொட்டிக்கொண்டே இருங்க. அப்புறம் என்ன-நடக்குதோ, பார்ப்போம்" என்று மாடசாமி வழி வகுத்துக் கொடுத்தான்.

சூரியன் பிள்ளைக்கு இந்த வழி மிகவும் பிடித்துவிட்டது. சுலப சாத்தியமானதாகவும் தோன்றியது. அந்தத் தடிப்பன்றி அந்திநேரத்தில் தானே ஆஜராகிறது? சாயங்காலம் அஞ்சு மணியிலிருந்தே வெந்நீர் தயாராக இருக்கவேண்டும் என்று உத்திரவிட்டார் அவர்.

தொழுவத்தில் அடுப்புக் கட்டிகள் மீது ஒரு கொப்பரை நிறையத் தண்ணீர். தோட்டத்தில் அடுப்புமீது ஒரு "அண்டா"விலே தண்ணீர். வாசலில்திண்ணை ஓரத்தில் விசேஷமாக அடுப்பு அமைத்து அதான் மீதும் ஒரு கொப்பரைத் தண்ணீர். இவற்றைச் சூடுபடுத்தத் தனித்தனி ஆட்கள். அருகிலே கைக்கு வசதியாக வாளி செம்பு வகையரா. தீவிரமாகச் செயல் புரிவதற்கு வழி கிடைத்துவிட்ட உற்சாகத்திலே திட்டம் தீட்டினார் பண்ணையாளர்.

இவ்விஷயம் வேலையாட்கள் எல்லோர் காதுகளையும் எட்டியது. ஒவ்வொருவரும் பண்ணையாரின் போக்கைப் பற்றி ஒவ்வொரு விதமாகப் பேசினார்கள். ஆயினும் அதிசயம் நிகழாது போகவில்லை.

வெந்நீர் தயாரிக்கத் தொடங்கிய நாளிலிருந்து தடிப் பன்றி தலைகாட்டாமலே போய்விட்டது. ஒருநாள், இரண்டு நாள், ஒரு வாரம்-ஊஉம் ஹூம், அது விஜயம் செய்யவே இல்லை.

"வெந்நீர் வைத்தியம் பற்றி பண்ணியா பிள்ளைக்கு தெரிஞ்சு போச்சு! அதனாலதான் அவரு பயந்துபோயிப் பம்மிகிட்டாரு!" என்று பண்ணையார் மாணிக்கத்திடம் சொன்னார். ரசித்துச் சிரித்தார்.

அதற்காக வெந்நீர் தயாரிப்பை நிறுத்திவிடவில்லை அவர். அதுபாட்டிற்கு ஒழுங்காக தினந்தோறும் மூன்று கொப்பரை நிறைய வெந்நீர் கொதிக்கக் கொதிக்கத் தயாராகி வந்தது. பண்ணையாருக்கு என்ன! விறகு இல்லையே என்ற கவலை ஏற்படப் போகிறதா? தண்ணீர் கஷ்டமா? இல்லை, வேலை ஆட்களுக்குத்தான் குறைவா? ஆகவே தினசரி சாயங்காலம் வெந்நீர் தயாராகிக் கொண்டிருந்தது.

"வரும் வரும். என்றாவது ஒரு நாள் அந்தத் தடிப்பண்ணி திரும்பவும் வராமலா இருந்துவிடும்? அப்ப பார்த்துக்கொள்வோம்" என்று நம்பியிருந்தார் பண்ணையார்.

அவர் நம்பிக்கை வீண் போகவில்லை.

பத்து நாட்கள் வராதிருந்த பன்றி பதினோராவது நாள் வந்து சேர்ந்தது.

அப்பொழுதும் அந்தி நேரம்தான், ஆட்கள் எல்லோரும் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டார்கள். மாணிக்கம் மாத்திரம் இருந்தான்.

பண்ணையார் தொழுவத்தின் பக்கம் நின்றார். மாணிக்கம் மாடுகளுக்குப் பருத்திக் கொட்டையும் தவிடும் கலந்து வைத்துக் கொண்டிருந்தான். திடீரென்று சூரியன் பிள்ளை "ஏ ஏய். வெந்நி எடு! வாளியை எடு!" என்று கத்தினார். பாய்ந்து சென்று ஒரு வாளியில் வெந்நீரை அவசரம் அவசரமாக மொண்டு எடுத்தார்.

"மாணிக்கம், ரெடியா நில்லு, அதோ பண்ணி வருது...நம்ம பக்கமாகத்தான் வருது" என்று மெதுவாக-ஆனால் பதட்டத்தோடு கூறினார்.

மாணிக்கம் அங்குமிங்கும் பார்வை எறிந்தான். அவன் கண்ணில் எதுவுமே தென்படவில்லை. அதைச் சொல்ல வாயெடுத்தான் அவன்.

ஆனால், "சத்தம் போடாதேடா முட்டாள்!" என்று சீறினார் பண்ணையார். வாளித் தண்ணீரை வேகமாக வீசி அடித்தார். இன்னொருதடவை வெந்நீரை அள்ளி வாளியோடு விட்டெறிந்தார். வேகமாகக் குனிந்து செம்பை எடுத்தார். இன்னும் வெந்நீர் கோதுவதற்காகத்தான்.

"எசமானுக்குப் பைத்தியம் சரியானபடி முத்திவிட்டது!" என்றுதான் எண்ணினான் அவரையே கவனித்து நின்ற மாணிக்கம். ஆனால் அவன்கூடத் திடுக்கிட்டுத் திகைப்படைய நேர்ந்தது அதே வேளையிலே.

பண்ணையார் வெந்நீரை வாளியோடு விட்டெறியவும், அது பன்றிமீது நன்றாகத் தாக்கியது. கொதிக்கும் நீர் படவும்-வாளியின் தாக்குதலும் சேரவே-பன்றியிடமிருந்து ஒரு அலறல் பிறந்தது. வேதனைக் குரல். மிருகத்தின் கூச்சலாகவும் இல்லாமல் மனித ஓலமாகவும் இல்லாமல் ஆயினும் இரண்டும் ஒன்றிக் கலந்தது போன்ற துயரக் கதறலாக ஒலித்தது அது. சூரியன் பிள்ளையின் உடலை உலுக்கியது. மாணிக்கத்துக்குப் பெருத்த அதிர்ச்சி

உண்டாக்கியது அது. பண்ணையார் கண் முன்னாலேயே அந்தப் பன்றி மறைந்துவிட்டது.

அது எப்படி மறைந்தது, எங்கே போயிருக்கும் என்று பண்ணையாருக்கும் புரியவில்லை. பன்றியைக் காண முடியாது நின்ற மாணிக்கத்துக்கோ அந்த அலறலே பயங்கரமாய், புரிந்து கொள்ள முடியாத மர்மமாய், உள்ளத்தை என்னென்னவோ பண்ணுவதாய் அமைந்துவிட்டது.

அவ்விருவரும் அதைப்பற்றிப் பேசக்கூடத் தயங்கினர். இனம் புரிந்துகொள்ள முடியாத ஒருவித அச்சம் இருவர் தேகத்தையும் நடுங்க வைத்தது...

மறுநாள் வழக்கம்போல் விடிந்தது. வழக்கமான அலுவல்கள் தொடங்கின. பண்ணையில் வேலை செய்யும் ஆட்களில் ஒருவன் மட்டும் வரவில்லை.

"திடீரென்று அவனுக்கு என்னவோ ஏற்பட்டுவிட்டது. உடம்பெல்லாம் ஒரே ரணம். தீ பட்டது போல் தேகம் வெந்து புண்ணாகியிருக்குது. நெஞ்சுக்கிட்டே பலமான காயம் வேறே. அதெல்லாம் எப்படி ஏற்பட்டது என்று விசாரித்தால் அவன் வாய் திறந்து பதிலே சொல்ல மாட்டேன்கிறான்" என்று ஒருவன் பண்ணையாரிடம் முறையிட்டான்.

சூரியன் பிள்ளைக்கு இந்தப் பேச்சு எதையோ தெளிவுபடுத்துவது போலிருந்தது. பூசாரி மாடசாமி சொன்னதும் வேறு நினைவில் எழுந்தது. அவர் மாணிக்கத்தையும் கூட்டிக்கொண்டு சுடலைமுத்து என்கிற அந்த நபரைக் காணச் சென்றார்.

அவரிடம் ஒருவன் வர்ணித்தானே அதே நிலையில்தான் அவன் கிடந்தான். பண்ணையாரைக் கண்டதும் அவன் கண்கள் ஆத்திரத்தோடும், பகைமையோடும், வெறியோடும் அவரை உற்று நோக்கின. அந்தக் கண்கள்...அவற்றின் பார்வை...பண்ணையாருக்கு தடிப்பன்றியின் நினைவு தானாகவே எழுந்தது. மிகத் தெளிவாக - கண் முன் நிற்பதுபோல் - நிழலாடியது அத்தோற்றம்.

அவர், என்ன சொல்வது என்று புரியாதவராய் - என்ன செய்ய வேண்டும் என்று அறியாதவராய் - மேலும கீழும் பார்த்தபடி நின்றார்.

சுடலைமுத்து சரியாக வேலை செய்யவில்லை என்பதற்காக ஒரு சமயம் அவர் அவனைச் சாட்டையில் அடித்ததும், இன்னொரு தடவை அவனைப் பட்டினிபோட்டதும் அவர் நினைவுக்கு வந்தது.

"அதுக்கெல்லாம் சேர்த்து, பயல் நமக்குப் பாடம் கற்பிக்க ஆசைப்பட்டான் போலிருக்கு! அவனே சரியானபடி பாடம் படித்துவிட்டான்!" என்று எண்ணினார் பிள்ளை. வாய்விட்டுச் சிரித்தார். "அடேய் பண்ணிப் பயலே! உனக்கு ஏன்லேய் இந்தப் புத்தி வந்தது?" என்று கேட்டுவிட்டு, மேலும்சிரித்தார் பண்ணையார்.

*

# 7

## கண்ணில் படாத காதல்

டெலிபோன் மணி அலறியது.

சோபாவில் சுகமாகக் கிடந்த கானப் பிரியனின் மனம் பதறியது. சில தினங்களாகவே அவருக்கு டெலிபோன் மீது ஒருவித பயம் ஏற்பட்டிருந்தது. அதன் மணிச் சத்தம் அவர் ஆசையைத் தூண்டுவதாகவும் இருந்தது.

கானப்பிரியன்-அவர் புகழ் பெற்ற நடிகர் என்பது ரொம்பப் பேருக்குத் தெரிந்திருக்கும்-இதைத் தனது வாழ்க்கையில் குறுக்கிட்டுள்ள விசித்திர அனுபவமாகவே கருதினார். அதனால் தான் அவர் அதற்கு முடிவு கட்டிவிடவோ, அல்லது அதை அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடவோ விரும்பவில்லை. சுவை மிகுந்த இந்த நாடகம் எப்படி வளர்கிறது என்று தான் பார்க்கலாமே எனும் ஆசை அவருடைய உள் மனசின் அச்சக் குறுகுறுப்பை அமுக்கிவிட்டு மேலோங்கி நின்றது.

இப்பொழுது கூட அப்படித்தான், மணி அலறியதும், "அவள் தான், வேறு யாராக இருக்கமுடியும்? இந்த வேளை கெட்ட வேளையிலே நம்மைக் கூப்பிட்டுப் பேசவிரும்புவது!" என்று அவரது மனம் முனங்கியது. போனைக் கையில் எடுக்காமலே இருந்துவிடலாமே என்று எண்ணினார் ஒரு கணம். "நமக்கும் பொழுது போகவேண்டுமல்லவா! தமாஷாக இருக்குமே அவள் பேசுவது!" என்ற நினைப்பும் எழுந்தது அவருக்கு.

அவர் திடமான முடிவுக்கு வருவதற்குள் டெலிபோன் மணி அலறித்தள்ளிவிட்டது. இனியும் காலதாமதம் செய்வது சரியல்ல என்று கருதி அவர் போனை எடுத்தார். 'ஹல்லோ!"

என்று இயந்திர ரீதியில் குரல் எழுப்பிய வாய், "யாரது?" என்றும் கேட்டு வைத்தது.

"வணக்கம், நடிகர் ஸார்! நான்தான் அழைக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா என்ன?" - எங்கோ இருந்து வந்த அந்த ஒலித் தொடர் கனவுக்குரல் போல் அவர் காதுகளில் ரீங்காரம் செய்தது.

"தினம் எவ்வளவோ குரல்களைக் கேட்கிறேன். யார் யாரோ கூப்பிடுகிறார்கள். என்னென்னவோ பேசுகிறார்கள், யாரை அல்லது எதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடிகிறது?" என்று லெக்சர் அடித்தார் அவர்.

"ஊம். உங்களுக்கென்ன! யோகவான். கானப்பிரியர் என்றால் சும்மா தானா! கலை உலக ஜோதி! நடிப்பு உலக நட்சத்திரம்! ஆகாகா!" என்று நீட்டி நீட்டிப் பேசியது மறுமுனைக் குரல்.

"நீ யார்? அவசரமாக என்னைக் கூப்பிடுவானேன்? முதலில் அதைச் சொல்லு!" கானப் பிரியனின் குரலில் கரகரப்பு தட்டியது.

"உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இன்சுவைக் கீதம் பொழியும் கானப் பிரியர் அவர்களே வாழ்க! இன்னுமா என் குரல் உங்களுக்குப் பிடிபடவில்லை?"

"தினசரி திடீர் திடீரென்று தொல்லை கொடுக்கத் துணிந்திருக்கிற பீடை சனியன்-தரித்திரம் ஏதோ ஒன்று..."

அவள் எரிந்து விழுவாள்; அல்லது கோபமாக விலகிவிடுவாள் என்றுதான் கானப்பிரியன் எண்ணினார். ஆனால் அவர் காதில் பாய்ந்த ஒலி அவருக்குத் திகைப்பையே தந்தது.

"கானப்பிரியருக்கு அவசரம் போலும், இராதா பின்னே? கொஞ்சிடக் கோலமயில் ஒருத்தி அருகே காத்திருந்தால், வெறும் பேச்சுப் பேசுகிறவர்கள் மீது..."

"நான்சென்ஸ். ஷட் அப்!" என்று கத்தினார் அவர். அதனால் கூட அவளது தவறான யூகம் வலுப்பெறுமே அல்லாது கரைந்து போய்விடாது என்ற உணர்வு வரவும் அவர் பேசினார்: "நீ நினைப்பது தப்பு. இங்கே யாருமே யில்லை, சினிமாவை அதிகம் பார்த்துப் பார்த்து அநேகருடைய மூளையே கெட்டு விட்டதாகத் தோன்றுகிறது.

இல்லாததை எல்லாம கற்பனை செய்து கொண்டு கதைக்கத் தொடங்கிவிடுகிறார்கள்!"

"இல்லாதது ஒன்றுமில்லை. இன்று காலையில் உங்களுடன் காரில் ஒருத்தி வந்தாளா இல்லையா? செம்பட்டு போர்த்திய சொகுசுக்காரி. தேவமோகினி படத்தில் "என் இச்சைக்குரிய பச்சை மயிலே! துள்ளி ஓடும் புள்ளி மானே! கூவத் தெரியாக் குயிலின் குஞ்சே!" என்றெல்லாம் நீங்கள் புலம்பினீர்களே அந்த உளறலை ஏற்றுக்கொண்டு சொக்கிப்போன குரங்குதானே இன்று உங்கள் அருகில் இருந்தது? சொல்லுங்கள் ஸார்!"

"பொறாமைப் பிண்டம்!" என்று முணுமுணுத்துவிட்டு போனை வைத்தார் கானப்பிரியன். இவள் யார்? யாராகத்தான் இருப்பாள் இவள்? ஒரே கேள்வியை ஒன்பது விதமாக விட்டெறிந்து வில்லடிக்கத் தொடங்கியது அவர் மனம். அவள் யாராக இருக்கும் என்பது தான் அவருக்குப் புரியவில்லை.

"அவள் யாராகவும் இருந்து தொலையட்டும்! என்னைவிட அவளுக்குப் பல சௌகரியங்கள் இருக்கின்றன. அவள் என்னைத் தெரிந்து வைத்திருக்கிறாள், அது மட்டுமல்ல, என்னைஅடிக்கடி பார்க்கும் வசதியும் அவளுக்கு இருப்பதாகத் தோன்றுகிறது" என்று எண்ணினார் அவர்.

"செச்சே! நாம் அறியாமலே, நமக்குத் தெரியாத நபர் ஒருவர் நம்மைக் கண்காணித்துத் திரிவது நமக்கு உற்சாகம் அளிக்கும் விஷயம் இல்லைதான்" என்ற நினைப்பு அவர் உள்ளத்தில் மிதந்தது.

"ப்சர்! அதுக்கு நாம் என்ன பண்ணுவது?" என்று அலட்சியப்படுத்த முயன்றார் அவர். ஆயினும் எவளோ ஒருத்தியான அவளை அப்படி அலட்சியப் படுத்திவிட இயலவில்லை அவரால்.

அவள் திடுமெனப் பிரவேசித்த பூதம்போல்தான் தோன்றினாள் அவருக்கு. ஒரு நாள் திடீரென்று டெலிபோன் அவரை அழைத்தது. வழக்கமான அசிரத்தையுடன் கானப்பிரியன் பேசத் தொடங்கினார். ஆனால் காதைத் தொட்ட பேச்சின் சுவை அவர் உள்ளத்தில் மகிழ்வை விதைத்தது. புகழ்ந்து பேசப்படுகிறவருக்கும் புகழ் மொழி கசந்தா கிடக்கும்? அதிலும், யார் எனத் தெரியாத அந்நியர்-அதிலும் ஒரு பெண்! அவள் யுவதியாகத்தான் இருக்க வேண்டும்-பேசும்

புகழ்ச்சி "இன்பத் தேன்" ஆக வந்து பாய்ந்தது அவர் செவியில், அது ஆச்சர்யமில்லையே!

"உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் ரசிகர்கள் இருக்கலாம். இருந்தாலும் என்ன? உங்கள் பாட்டுத் திறத்தாலே நீங்கள் என் உள்ளத்தையும் கவர்ந்துவிட்டீர்கள். உங்கள் அழகு சூரிய ஒளி மாதிரி அதனால் நானும் சூரியகாந்திப் பூ மாதிரி ஆகிவிட்டேன்...."

இப்படிப் பேசிய குரல் சினிமா பார்த்துப் பார்த்து "பித்தியிலும் ஏபித்தி பெரும் பித்தியாகி" விட்ட ஒரு யுவதியினுடையது தான் என்று தீர்மானித்தார் அவர். அவள் நல்ல ரசிகையாகத்தான் இருக்கவேண்டும்; இலக்கியம்-கலை முதலியவைகளில் பற்றுதல் கொண்டு பொழுதை இனிமையாகக் கழிப்பதில் ஈடுபட்டவளாக இருக்கலாம் என்று அவர் நினைத்தார்.

மறுநாள் அவள் அதே நேரத்துக்கு அவரை போனில் அழைத்துப் பேசினாள். "உங்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாக அறிகிறேன். உங்கள் மனைவி பாக்கியம் செய்தவளாகத்தான் இருக்கவேண்டும்....ஆமாம், நடிகர் ஸார். ரொம்ப காலமாக எனக்கு ஒரு சந்தேகம், நீங்கள் நடிக்கிற படங்களில் எல்லாம் காதல் காட்சிகள் மிகப் பிரமாதமாக இருக்கின்றன. ஓடுவதும் பிடிப்பதும், விலகிச் செல்வதும் தேடிக் காண்பதும், சிரிப்பும் விளையாட்டும்...ஆகா! எவ்வளவு இனிமை நிறைந்த விளையாட்டு! உங்கள் காதல் மனைவியோடும் நீங்கள் இப்படி விளையாடி மகிழ்வது உண்டோ?" என்று அவள் கேட்டாள்.

அவருக்குக் கோபம் வந்தது. "என்ன வேடிக்கையான பெண் இவள்!" என்ற எண்ணத்தினால் சிரிப்பும் எழுந்தது. "குறும்புத்தனமாகக் குறுக்கிட்டு வம்பளக்கும் நீ யார்?" என்று கேட்டார் அவர்.

"அருமையான சந்தர்ப்பம். அடாடா! நழுவ விட்டுவிட்டீர்களே! நிலவு செயும் முகம் படைத்த நேரிழையே, நீ யாரோ என்று புதுநிலவு படத்தில் நீங்கள் அற்புதமாகப் பாடினீர்களே, அதையே இப்பொழுதும் பாடியிருக்கலாமே!" என்றாள் அவள்.

"எனக்காக ஒரு பாட்டுப் பாடுங்களேன்" என்றும், "காதல் தீஞ்சுவை நிரம்பிய வசனங்கள் சிலவற்றைப் பேசி என்னை மகிழ்விக்கக்கூடாதா, அன்பரே!" என்றும் அவள் வெவ்வேறு சமயங்களில் கெஞ்சினாள்.

அவள் யார்? அவள் எங்கிருக்கிறாள்? இதே கேள்விதான் அவர் மனசை அரித்தது.

"என் குரல்-நான் எங்கிருந்து பேசினாலும்-உங்களுக்குப் பிடிபடுகிறதா?" என்று ஒரு தடவை அவள் கேட்டாள்.

"போன் மூலம் வருகிற குரலைச் சரியாகப் புரிந்து கொள்ளும் திறமை எனக்குப் போதாது என்றே தோன்றுகிறது. ஒரே குரல் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு தினுசாகத் தொனிப்பது போல் எனக்குப் படுகிறது" என்றார் அவர்.

"நான் எங்கிருந்து பேசுகிறேன் என்று ஆராய்ச்சி பண்ணும் ஆசை இருந்தால் சொல்லி விடுங்கள்" என்று அவள் ஒரு சமயம் அறிவித்தாள்.

"ஏன்?" என்று அவர் கேட்டதும் அவள் கலகலவெனச் சிரித்தாள். "நான் ஒரே இடத்திலிருந்து பேசுவதில்லை. எனக்கு அநேக சிநேகிதிகள் இருக்கிறார்கள். பலர் வீடுகளில் போன் இருக்கிறது. நான் லேடீஸ் கிளப்பிலிருந்தும் பேசுவது உண்டு" என்றாள்.

"உன் பெயர் என்ன?" என்று அவர் விசாரித்தார்.

"என்ன பெயராக இருந்தாலென்ன, நடிகர் ஸார்! - நாடகமே உலகம். உங்கள் தொழில் மட்டும்தானா நடிப்பு மயமானது? இல்லையே. உங்கள் வாழ்க்கை கூட நடிப்பு நிறைந்தது தான்... ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு பெயரால் ஒரே பெண்ணை அழைத்துப் பழக்கப்பட்டவர்தானே நீங்கள்! என்னையும் ஏதாவது ஒரு பெயரால் கூப்பிடுங்களேன்!"

"உனக்கென்று ஒரு பெயர் இருக்குமே, அது என்ன? அதைச் சொல்லேன்".

"புஷ்பா என்று கூப்பிடுங்கள். நான் ஊம் என்று குரல் கொடுக்காவிட்டால் அப்புறம் கேளுங்கள்."

"அப்படியானால் உன் பெயர் புஷ்பா இல்லை?"

"உங்கள் ஒளியால் கவர்ச்சிக்கப்படும் புஷ்பம் தான் நான்!"

"இந்த விளையாட்டு உனக்கே நன்றாகப் படுகிறதா, புஷ்பா?"

"தேங்க்ஸ் மிஸ்டர் கானப்பிரியர்!"

"ஏனோ?"

"நான் விரும்பியபடியே என்னை அழைத்ததற்காக!"

அன்று அதற்குமேல் அவள் பேசவில்லை.

எனினும், தினம் தினம் இது வளர்ந்து வந்தது. "தொல்லை" என்று அவர் எண்ணும் அளவுக்கு அது வளர்ந்துவிட்டது. அவ்வளவுதானா?

"நம் நடவடிக்கைகளைத் துப்பறிய முயல்கிறாளே அவள்" என்ற கோபமும் ஏற்பட்டது அவருக்கு. ஆனாலும், அவளைக் கண்டுபிடிக்கவோ, அவள் பேச்சுக்குத் தடைவிதிக்கவோ அவர் முயலவில்லை.

ஆகவே அவள் போனில் பேசிக் கொண்டுதான் இருந்தாள். "என்னைக் கண்டுபிடித்து விட்டீர்களா? நான் யார் புரிந்ததா?" என்று தினம் கேட்டுத் தொல்லை தந்தாள். நினைத்த வேளைகளில் எல்லாம் போன் செய்து ஒரு பாட்டுப் பாடுங்கள் ஸார்" என்று கெஞ்சினாள். "நீலப் புடவைக்காரியோடு சிரித்துப்பேசியபடி சினிமாவுக்குப் போனீர்களே? அது யார்?........"கனகாம்பரப் பூவைத் தலை நிறையச் சுமந்தபடி திரிந்த சில பெண்களோடு நீங்கள் கடற்கரையில் காட்சி அளித்தது உண்டா, இல்லையா?" என்று மிரட்டினாள். "என்னைச் சந்திக்க வேண்டும் என்கிற ஆசை உங்களுக்கு இன்னும் வரவில்லையா?" என்று அவள் விசாரித்தாள்.

கானப்பிரியன் அவளோடு விளையாடுவதில் ஆனந்தமே கண்டார். அதனால் சில சமயங்களில் சில பாடல்களை மெதுவாக முனங்கிவைத்தார். ஒன்றிரு சமயங்களில் "லவ் டயலாக்" பேசவும் துணிந்தார் அவர்.

"வசந்தம் வந்துவிட்டது நண்பரே! இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் நாம் முகம் அறியாக் காதலர்களாகப் பேசிப் பொழுது போக்குவது?" என்று அவள் குழைந்தாள். போனில்தான்.

அவர் ஒரு இடத்தைக் குறிப்பிட்டார். நல்ல நேரத்தையும் குறித்தார்.

"எந்தன் இடது தோளும் கண்களும் துடிப்பதென்ன; இன்பம் வருகுதென்று சொல், சொல், சொல் கிளியே!" என்று இசைத்தாள் அந்தப் பெண்.

கானப்பிரியன் நடிப்புச் சிரிப்பைச் சிதறி வைத்தார்.

குறித்த காலம் வந்தது

குறிப்பிட்ட இடம் சேர்ந்தார் கானப்பிரியன். அவர் கண்கள் புஷ்பத்தைத் தேடும் வண்டுகளாயின. அவள் குறிப்பிட்டிருந்தபடி நீலப்புடவையும் அதற்கேற்ற ஜாக்கெட்டும் ஒய்யாரத் தோற்றமும் ஒயில் நிறைந்த போஸுமாய்க் காத்திருந்த பெண்ணைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார். "நம் கண்கள் நம்மை ஏமாற்றுகின்றனவா?" என்ற ஐயுற்று அவர் தன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டார்.

அவள் குறும்பத்தனமாகச் சிரித்து, வணக்கம் அறிவித்தாள்.

அவர் திகைத்துத் திண்டாடி, "நீயா? நீதானா பத்மா?" என்று குழறினார். அவர் பார்வை அங்கும் இங்கும் ஓடியது." வேறு யாராவது வந்து காத்திருக்கிறார்களா என்று ஆராய முயன்றது.

அங்கு வேறு எவருமில்லை. அவள் தான் நின்றாள், விஷமச் சிரிப்புடன் அவரைப் பார்த்தபடி.

"ஆமாம். இன்னும் என்ன சந்தேகம்? உங்கள் பத்மாவேதான்" என்றாள் அவருக்காகக் காத்திருந்த அவர் மனைவி.

"நீ செய்தது குற்றம், பத்மா!" என்று கண்டிப்புக் குரலில் பேசினார் அவர்.

"இல்லை; போனில் குரலைப் புரிந்து கொள்ளாமல் போனது உங்கள் குற்றம், பொழுது போகட்டுமே என்ற நினைப்பில் நம் விளையாட்டை வளரவிட்டதும் குற்றம். உங்கள் மனைவியான என்னோடு நீங்கள் தாராளமாகச் சிரித்துப் பேசி விளையாட மறந்துவிட்டதும் உங்கள் குற்றம்தான். அதனால் நானாகவே உங்களோடு விளையாட ஆசைப்பட்டேன். அதற்குக்கூட எனக்கு உரிமை கிடையாதா என்ன?" என்று சொல்லிச் சிரித்தாள் பத்மா.

பண்பினால் அவள் என்றுமே குறும்புக்காரிதான்!

*

# 8

# நல்ல காரியம்

உலகம் மிகவும் பயங்கரமானது நண்பரே, மிகவும் பயங்கரமானது.

"வாழ்க்கை மிக மிகக் கொடியது நண்பரே, மிக மிகக் கொடியது".

ஒவ்வொருவரும் எத்தனையோ தடவைகள் சொல்லி விட்ட, அல்லது ஒரு தடவையாவது சொல்ல விரும்புகிற அல்லது சொல்லியே தீரக்கூடிய இந்த வார்த் தைகளை இப்பொழுது தான் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையென எடுத்துக்கொண்டு "ஆர்க்கிமிடீஸின் பேரன் மாதிரி" நான் ஓலமிடத் துணிந்திருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை.

பம்பாயிலிருந்து எனது நண்பர் ஒருவர் எனக்கு எழுதியுள்ள கடிதம் இப்படி ஆரம்பமாகிறது.

எனக்கு எப்பொழுதாவது மிகவும் சுவையான கடிதங்கள் வருவது உண்டு. பம்பாய் நண்பர் எழுதியுள்ள கடிதம் வெறும் கடிதமாக இல்லை. அதைப் படித்து "நான் பெற்ற இன்பத்தை இவ் வையகமும் பெறட்டுமே" என்ற நல்லெண்ணத்தோடு கடிதத்தை இங்கே தருகிறேன்.

"வாழ்க்கையை, அது காட்டும் உண்மைகளை ஆராய்ந்து, உணர அவாவுகின்ற மாணவன் நான் என்று நீங்கள் பல இடங்களில் எழுதியிருக்கிறீர்கள். அதனால் தான் நான் உங்களுக்கு இவ் விஷயம் பற்றி விரிவாகவே எழுதத் துணிகிறேன்.

"அகல்யாவைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது... இந்திரனோடு "காமப் புது மண மதுவின் தேறல்

ஒக்க உடன் உண்டிருந்து" பின்னர் "நெஞ்சினால் பிழை இலாள்" என்ற ஸர்டிபிகேட் பெற்று பத்தினிமார் பட்டியலிலே அழியாத இடம் பெற்று விட்டாளே தாடிமுனியின் இளம் மனைவி, அவளைப் பற்றி நான் இங்கே குறிப்பிட வில்லை என்பது உங்களுக்கே புரிந்திருக்கும். நான் இங்கு அறிமுகம் செய்ய விரும்புவது இரட்டைச் சடைக்காரி, ஐடெக்ஸ் விழிக்காரி, லிப்ஸ்டிக் இதழ்க்காரி, க்யூட் கைகாரி ஹைஹீல்டு ஷுக்காரி ஒருத்தியைத்தான்.

"நண்பரே, உங்களோடு போட்டியிட்டு ஒரு கதாசிரியனாக மாறும் எண்ணம் எனக்குக் கிடையவே கிடையாது. ஜோராக வர்ணனை பண்ணுவதில் ஈடுபட்டு விட்டேனே என்றால், பெண்ணைப் பற்றி எண்ணப் புகழ்ந்தால் யாருக்குத் தான் குஷி கிளம்பாது? அதிலும், அகல்யா இருக்கின்றாளே...

"ஹலோ மிஸ்டர் வனா. கானா., நீங்கள் ஏன் ஒரு தடவை பம்பாய் பக்கம் வரக்கூடாது? தென்னாட்டிலிருந்து யார் யார் எல்லாமோ இங்கே வந்து போகிறார்கள்; நீங்கள் ஏன் வருவது பற்றி ஒருவரிகூட எழுதுவதில்லை? இங்கு வந்தால் நீங்கள் எவ்வளவோ அற்புதங்களைப் பார்க்க முடியுமே..சென்னையின் மூலையில் கிருஷ்ணாம்பேட்டைச் சுடுகாட்டின் அருகே ஒரு தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு நீங்கள் பம்பாய் போன்ற மாபெரும் நகரத்தைக் கற்பனையினால் கூட பிடித்து அடைத்துவிட முடியாது. பம்பாயை அறிய வேண்டுமானால் நீங்கள் இங்கு வந்து கேம்ப் போட்டுத்தான் ஆக வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் வாழ்க்கையைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் மேலும் எவ்வளவோ கற்றுக் கொள்ள முடியும். நீங்கள் கற்கக்கூடிய பாடங்களுக்கு ஒரு சிறு சாம்பிள் மாதிரி இருக்கட்டுமே என்பதனால் தான் அகல்யாவைப் பற்றி எழுதுகிறேன்.

"அகல்யா-

"அவளை சோகத்தின் திரு உருவம் என்பதா? வைராக்யத்தின் வஜ்ர பிம்பம் என்பதா? சமூகம் சமூகம் என்கிறார்களே, அந்த உருவமற்ற-இதயமற்ற-மொந்தையின் கண்ணற்ற மூஞ்சியில் கரியை அள்ளிப் பூசத் துணிந்த வீர வடிவம் என்பதா? நண்பரே, எப்படி அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அவள் பெண்களில் பெரும்பாலோர் செய்யத் துணியாத ஒரு காரியத்தைச் சாதித்து முடித்த ஒரு பெண் என்று சொல்லி வைக்கிறேன்...

"ஒரு நாள் நானும், பம்பாய் நண்பர்களில் எனக்கு மிகவும் பிடித்த "கொழுக்கட்டையும்" சைக்கிளில் போய்க்கொண்டிருந்தோம்.

"இந்தக் கொழுக்கட்டை இருக்கிறானே, அவன் ரொம்பவும் ஜாலி பிரதர். அவன் பெயர் வேறு. இந்தி பேசுகிறவன் தான். அவனுக்கு தமிழ் நாட்டுக் கொழுக்கட்டை மீது அபாரமான காதல். எங்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் "கொழுக்கட்டை இருக்குதா? கொழுக்கட்டை இருக்குதா?" என்று பறப்பான். ஆகவே, எங்கள் வீட்டில் கொழுக்கட்டை டிபன் செய்கிற தினங்களில் எல்லாம் அவனை நான் விருந்துக்கு அழைப்பது உண்டு என்பது "சொல்லாமலே பெறப்படும்" என்கிற இலக்கணத்துக்கு உட்படும் ஒரு விவகாரம் என்க...

"அவனும் நானும் வீதி வழியே போய்க் கொண்டிருந்தோமா? அப்போ என்ன ஆச்சுது? வீதியின் ஓரமாக ஒரு பெண் நடந்து போனாள். வேகம் வேகமாக நடந்து கொண்டிருந்தாள். என் நண்பன் கொழுக்கட்டை அழகு ரசிகன். கோகுலத்துக் கண்ணனையும் அர்ஜுனனையும் வியந்து பாராட்டி விழுந்து கும்பிட்டு, ஓரளவுக்காவது பின்பற்றத் துடிக்கிற மகாரசிகன். அவன் சைக்கிளை வேகமாக மிதித்து முன்னேறிப் போனான். கொஞ்சதூரம் போய்விட்டு மறுபடியும் திரும்பி வந்தான். அந்த இரட்டைச் சடைக்காரியின் பின்னழகைப் பார்த்து வியந்த கண்கள் அவளது முன்னழகைக் கண்டு களிக்காமல் இருக்கலாமா? அதற்காகத்தான். ஒரு தடவை பார்த்தவனுக்கு ஏதோ சந்தேகம் வந்துவிடவே, இரண்டாவது தடவையாக முன் சென்று, கீழிறங்கி சைக்கிளைத் தள்ளிக்கொண்டு நடந்து வந்தான். அவளை நன்றாகக் கவனித்தபடி நடந்தான்.

"அவள் அவனை ஒரு தடவை தலைநிமிர்ந்து பார்த்தாள். பிறகு அவனை லட்சியம் செய்யாமல், கம்பீர நடை போடும் அராபிக் குதிரை மாதிரி, மிடுக்காக நடந்து சென்றாள். அவள் கையில் சில புத்தகங்கள் இருந்தன. எனவே அவள் கல்லூரி மாணவியாக இருக்கலாம் என்று பட்டது.

"கொழுக்கட்டை என் அருகில் வந்ததும், "என் மூளையை சலவைக்குத் தான் போடணும்!" என்று அலுத்துக்கொண்டான். "அழுக்கேறி ரொம்பவும் தடித்து விட்டதாக்கும்?" என்று கேட்டேன். "மறதி, மறதி, மறதி. அதைச் செருப்பில் அடிக்க!" என்று அவன்

குமைந்தான். "என்னப்பா விஷயம்? இந்தப் பெண்ணைப் பார்த்த பிறகு உனக்கு ஏன் இப்படி ஒரு ஞானோதயம் ஏற்பட்டது?" என்று விசாரித்தேன்.

"இவளை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறேன். வேறு எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே என்று ஞாபகம் வரமாட்டேன் என்கிறதே!" என அங்கலாய்த்தான் அவன்.

"இவள் காலேஜ் படிக்கிறவள் என்று தெரியுது. அதனாலே, காலேஜ் முன்போ, ரஸ்தாவிலோ, சினிமா தியேட்டரிலோ நீ பார்த்திருக்கலாம். நீ தான் அங்கிங்கெனாதபடி எங்கும் ஆஜராகிவிடும் ஆனந்தன் ஆயிற்றே!" என்று நான் சொன்னேன்.

"இடியட், உளராதே! ஸீரியஸ் விஷயம்".

"ஓகோ, காதலா! கண்ட உடனேயே அட்ராக்ஷன் தானாக்கும்? என்றேன். அவன் எரிந்து விழுந்ததைப் பார்க்கவும், உண்மையிலேயே ஏதோ ஸீரியஸ் விஷயம் தான் என்று நான் ஊகித்துக் கொண்டேன். அப்புறம் நான் அவனைக் கேலி பண்ணவில்லை.

"அந்தப் பெண் ஆகா-அழகு சுந்தரி ஓகோ ஒய்யாரி என்றெல்லாம் நான் சொல்லமாட்டேன். சராசரி உருவம். ஒரு தடவை பார்த்தால் ஒன்பது தடவை பார்க்கும் ஆசையையோ, "ஒன்பது இன்ட்டு ஒன்பது" தடவை எண்ணி எண்ணி ஏங்கவைக்கும் துடிப்பையோ தூண்ட முடியாத "ஆவரேஜ்கர்ள்". வயசு என்ன, 20, 21 இருக்கலாம். அவள் குள்ளியும் அல்ல; நெட்டச்சியும் அல்ல. தடிச்சியுமல்ல; ஒல்லிச்சியுமல்ல. சகல அம்சங்களிலும் "சராசரி ரகம்" தான். அவளுடைய ஆடை அலங்காரத்திலோ, நடை ஒய்யாரத்திலோ அப்படி ஏதாவது அதிவிசேடத் தன்மை இருந்தது கொல் என்று கேட்டாலோ, அது ஒரு எழவுமில்லை. ஆகவே, கொழுக்கட்டையின் ரசனை உணர்வு மீது எனக்கே சந்தேகம் ஏற்படத் தொடங்கியது.

"அதன் பிறகு அந்த யுவதியை நான் சில தடவைகள் அதே பாதையில் காண நேர்ந்தது. அதன் மூலம் மகத்தான ஒரு உண்மையை நான் புரிந்து கொள்ள முடிந்தது. (நான் புரிந்துகொண்டது மகோமகா உண்மையின் ஒரு துணுக்கு தான் என்பது பின்னர் எனக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. இப்போதைக்கு இது தூங்குக) அந்தப் பெண் கல்லூரிக்கு நடந்தே போனாள். வீட்டுக்குத் திரும்புகிற போதும்

நடைதான். அவள் வீட்டுக்கும் கல்லூரிக்கும் இரண்டு மைல் தூரம் இருக்கலாம். அவள் மழை என்று பயப்படுவதில்லை. வெயில் என்றும் தயங்குவதில்லை. நடப்பதில் இன்பம் காண்பவள் போலும். அவள் நடக்கவில்லை. எங்கோ ஏதோ பறிபோவது போல, அல்லது எதையோ பறி கொடுத்துவிட்டுப் பதறி ஓடுகிறவள் போல், வேகம் வேகமாக நடந்தாள். ஆகவே, பஸ்ஸுக்குக் கொடுக்க அவளிடம் காசு கிடையாது என்று எண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

"இரண்டு வார காலம் எனது நண்பன் கொழுக்கட்டையை நான் சந்திக்க முடியவில்லை. மறுமுறை அவனைப் பார்த்தபொழுது அவனாகவே அந்தப் பெண்ணைப் பற்றிய பேச்சைத் தொடங்கினான். அவள் மற்ற நவயுவதிகளைப் போன்றவள் அல்லள். அவள் சினிமாவுக்குப் போவதே இல்லை. பணத்தைப் பிடுங்குவதற்காக ஏற்பட்ட எந்த இடத்தின் அருகிலும் அவள் செல்வதில்லை. உல்லாச உணவு விடுதிகளுக்கும் அவள் போவதில்லை.

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது என்று நான் அவனைக் கேட்டேன்.

"அவனோ தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தான்:

"நான் அவளை முன்பு எங்கோ பார்த்திருப்பதாக நினைக்கிறேன் என்று சொன்னேன் அல்லவா? அது எந்த இடம் என்பது எனக்குத் தெரிந்து விட்டது. பம்பாய் நகரத்தின் "சிகப்பு விளக்குப் பிராந்திய"த்தில் தான். உடலின் உணர்வுப் பசியால் தவிப்பவர்களுக்கு தங்கள் உடல்களை வாடகைக்கு விட்டுத் தமது பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் பெண்கள் வசிக்கிற வட்டாரத்திலே தான்." அங்குள்ள விபசார விடுதி ஒன்றிலே தான் அவன் அவளைக் கண்டான்.

"முதலில் என்னால் இதை நம்பமுடியவில்லை. எப்படி ஐயா நம்பமுடியும்?" தான் உண்டு, தன் படிப்பு உண்டு என்ற கொள்கை உடையவள் போல தினந்தோறும் கல்லூரிக்குப் போய் வருகிற ஒரு இளம் பெண்ணை, "மெய் வருத்தம் பாரார். பசி நோக்கார்" என்ற தன்மையில் "கருமமே கண்ணாகி" இயங்கிய நவயுவதியை இரவு நேரத்தில் விபசார விடுதியில் "தொழில் செய்யும்" ஆளாகக் கண்டேன் என்று ஒருவன் சொன்னால், நான் அதை எப்படி நம்ப முடியும்? இல்லை, யாரால் தான் நம்ப முடியும் அதை?

"எனது திடமான மறுப்பு கொழுக்கட்டையின் வெள்ளை முகத்தை போண்டாவின் நிறத்துக்கு மாற்றிவிட்டது. அவனுக்கு எவ்வளவு கோபம்! "போடா முட்டாள்! உன்னிடம் வந்து சொல்ல வந்தேனே!" என்று சிடுசிடுத்தான். பிறகு "இன்று ராத்திரி என் கூடவா. காட்டுகிறேன்" என்றான்...

"நண்பரே, பம்பாய் நகரத்தின் விபச்சாரவிடுதிகளைப் பற்றி பம்பாயிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில வாரப் பத்திரிகைகள் படங்களோடு பிரசுரித்திருந்த உண்மைகளை நீங்களும் படித்திருக்கக் கூடும். நாகரிகத்தின் மேற்படியில் கோலாகலக் கொலுவிருக்கின்ற இம் மாநகரத்தின் பயங்கரச் சாயைகளாகவும் பாப நிழல்களாகவும் திகழ்கின்ற எத்தனையோ விஷயங்களைப் பற்றி பத்திரிகைகளில் எவ்வளவு தான் எழுதிவிட முடியும்? இல்லை, கடிதத்தில் தான் என்ன எழுத முடியும்? அதனால் தான் நான் சொல்கிறேன், வாழ்க்கையின் உண்மைகளைக் கற்க ஆசைப்படுகிறவர்கள் அவசியம் பம்பாய் வந்தாக வேண்டும் என்று....

"அன்றிரவு கொழுக்கட்டை என்னை ஒரு விடுதிக்கு அழைத்துச சென்றான். விடுதித் தலைவியுடன் பேசிய முறையிலிருந்து அவனுக்கும் அந்த இடத்துக்கும் "ரொம்ப நாள் பழக்கம்" என்பது நன்கு புரிந்தது. பேச்சோடு பேச்சாக அவள் சொன்னாள்: "இங்கு ஒரு ஸ்டூடன்ட் இருக்கிறாள். கல்லூரியில் படிக்கிற மாணவி என்பதால் கொஞ்சம் மிடுக்காகத் தான் பழகுவாள். அதனால் அவளோடு பொழுது போக்குவதற்கு அநேகருக்குத் தயக்கம் உண்டு. சிலருக்கு பயம் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அவள் நல்லவள். இப்படிச் சொல்லிவிட்டு அவள் மாணவியை அழைத்தாள். அங்கு வந்து சேர்ந்த பெண்ணைப் பார்த்ததும் நான் திடுக்கிட்டேன் என்று தான் சொல்லவேண்டும். ஆமாம். அவளே தான். வழியோடு போகிற யுவதிதான்.

"கொழுக்கட்டை "டொமட்டோபிராண்டு" குட்டி ஒன்றைத் சேர்ந்துகொண்டு தனி அறைக்குப் போய்விட்டான். இந்த அதிசயப் பெண்ணோடு பேசிப் பார்க்கலாமே என்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. அதனால் நான் அவளோடு ஒரு அறை சேர்ந்தேன்.

"தன்னைத் தேர்ந்தெடுத்து, தன்னோடு தனி அறை சேருகிறவன் என்ன எதிர்பார்ப்பான் என்பதை உணர்ந்த அலட்சியத்தோடு -

ஏதையும் அல்லது எவரையும் பெரிதாக மதிக்காத அசிரத்தையோடு - தனக்கே உரிய ஒரு கர்வத்தோடு அவள் நின்றாள். நடந்தாள். உட்கார்ந்தாள். சகல காரியங்களையும் சகஜமாகச் செய்தாள்.

"என்னை நீ பார்த்ததில்லையா? பார்த்த நினைவு உனக்கு இல்லையா?" என்று கேட்டேன்.

"இருக்கலாம். அதைப்பற்றி இப்ப என்ன?" என்று மிடுக்காகக் கேட்டாள் அவள்.

"நீ படிக்கிற மாணவி என்று நான் நினைத்தேன்."

"நான் மாணவிதான். படித்துப் பட்டம் பெறுவதுதான் என் லட்சியம்" என்றாள் அவள்.

"பின்னே நீ இங்கே இருப்பானேன்? இந்தத் தொழிலில் நீ எப்படி ஈடுபட்டாய்?"

"இந்த நிலையில் உள்ள எந்தப் பெண்ணிடமும் யாரும் கேட்கத் தவறாத ஒரு கேள்வி இது" என்று சொன்னாள். சற்றே மௌனமாக இருந்தாள். "நான் எப்படி ஈடுபட்டேன் என்றா கேட்கிறீர்கள்? நானாகவே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். படித்துப் பட்டம் பெறவேண்டும், நல்ல நிலைமையில் வாழவேண்டும் என்பது என் லட்சியம். இரண்டுக்கும் பணம் வேண்டுமே? நான் வசதிகளற்ற குடும்பத்தில் பிறந்தவள். படிக்காமல் இருந்தால் என் வாழ்க்கை எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். பெரிய மனிதர்கள் வீட்டில் வேலைக்காரி ஆக நேரிடலாம், அப்பொழுது மட்டும் என் உடலுக்கும் ஒழுக்கத்துக்கும் களங்கம் ஏற்படாமலா போய்விடும்... அல்லது, குடிகாரனோ முரடனோ, கயவனோ எவனோ ஒருவனுக்குப் பெண்டாட்டி ஆக நேரிடலாம். அப்பொழுது என் வாழ்விலே அமைதியும் ஆனந்தமும் வளமும் கிட்டிவிடுமா? நான் படித்து உயர்வது என்று உறுதி செய்தேன். கீழ் வகுப்புகள் வரை உபகாரச் சம்பளத்தில் படித்துவிட முடிந்தது. கல்லூரிப் படிப்புக்குப் பணம் தரக்கூடியவர்கள் கிடைப்பது அரிதாகிவிட்டது. வள்ளல்கள் என்று பெயர்பெற்ற சிலரை அணுகினேன். அவர்கள் என் உடல் உறவை விரும்பினார்கள். சில பெரிய மனிதர்களை நாடினேன். அவர்களின் வைப்பாட்டியாக மாறினால் அவர்கள் பண உதவி செய்வார்கள் என்று புரிந்தது. நான் எவ்வளவோ முயற்சிகள் செய்தேன். பார்ட்-டைம் அலுவல்கள்

கிடைக்குமா என்று பார்த்தேன். அந்த வசதி இந்த நாட்டில் ஏது? பணம் படைத்தவர்களின் கயமைக் குணத்துக்கு இணங்கி அவர்களின் இருட்டு வேலைக்குத் துணைக் கருவியாக மாறி, பிறகு வெளி உலகில் அவர்கள் பெறத் தவிக்கிற புகழ் வெளிச் சத்துக்கு நானும் ஒரு சாதனமாக மாறுவதை விட, இப்படி "உடல் உழைப்பில்" ஈடுபட்டுப் பணம் சம்பாதிப்பது உயர்ந்தது என்று நான் முடிவு செய்தேன். தொழிலில் இறங்கிவிட்டேன்.... கிடைப்பதைக் கொண்டு, சிக்கனமாக வாழ்ந்து முன்னேறுகிறேன். விரைவில் வெற்றி பெற்று விடுவேன்" என்று நம்பிக்கையோடும் உறுதியோடும் அவள் பேசினாள்.

"இது பாவம் என்று..."

"நான் முடிப்பதற்குள் வெடுக்கெனச் சொன்னாள் அவள்: "எது பாவம்? பணத்துக்கு முதல் பூஜையும் முக்கியத்துவமும் கொடுக்கிற மனித ஜாதியிலே பணம் இல்லாமல் இருப்பது தான் பாவம். வறுமை தான் பாவம். வறுமை தான் மகாப் பெரிய பாவமும் குற்றமும் ஆகும்...இன்னும் சில மாதங்களில் என் படிப்பு முடிகிறது. அதன் பிறகு நான் ஏன் இங்கு வரப்போகிறேன்? எனக்கு நிச்சயமாக ஒரு வேலை கிடைத்துவிடும். படித்த பெண்ணுக்கு-பி.ஏ. பாஸ் செய்துவிடுகிற பெண்ணுக்கு-தானா வேலை கிடைக்காமல் போய்விடும்?"

"உன் பெயரை அறிந்து கொள்ளலாமோ?" என்று கேட்டேன்.

"அகல்யா" என்றாள் அவள்.

அவளும் நானும் ஆங்கிலத்தில் தான் பேசிக்கொண்டோம் என்பது குறிப்பிட வேண்டிய விஷயமாகும்.

"உயரிய முடிவை எய்த நல்லவழி இல்லை என்றாகுமானால், பிறர் தவறு-மோசம் என்று கருதுகிற வழிகளைப் பின்பற்றி காரிய சாதனை பெறுவது பிசகு அல்ல; பாவமும் அல்ல". இவ்வாறு அறிஞர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். மதியூகிகள் வழிகாட்டியும் இருக்கிறார்கள். ஆனால், அவாவிய பலனை அடைந்துவிட்ட பிறகும் மீண்டும் மீண்டும் தவறான பாதையிலேயே போவது தான் குற்றம் ஆகும். நான் கல்வி அறிவு பெற விரும்புகிறேன். படித்தாக வேண்டிய உயரிய நூலை விலை கொடுத்து வாங்க இயலாவிட்டால் கெஞ்சியாசித்துப் பெறு;

திருப்பித் தருவதாகக் கேட்டு வாங்கு; அல்லது, திருடியாவது படி என்று சொல்லி வைத்திருக்கிறார்கள் அறிவின் பக்தர்கள். நான் கெஞ்சினேன். யாரும் பண உதவி பண்ணவில்லை. கடனாகக் கேட்டேன். தருவார் எவருமில்லை. பிச்சை எடுக்கவோ திருடவோ நான் தயாராக இல்லை. ஆகவே, இந்த வழியில் பணம சம்பாதிக்கத் துணிந்தேன்" என்றும் அவள் சொன்னாள்.

"கற்கை நன்றே; கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று விதிவகுத்துத் தந்தவர்கள் வந்த சமுதாயத்தில் வாழும் பெரியவர்கள் அபலைப் பெண் தேர்ந்துஎடுத்துக் கொண்ட இந்த வழியைப் பற்றிப் பாராட்டுரை வழங்குவார்களோ என்னவோ!....

"பரீட்சை முடிந்த பிறகு அகல்யா அந்த விடுதிக்கு வருகிறாளா என்று அறியும் ஆவல் இயல்பாகவே எனக்கு ஏற்பட்டது. ஒருநாள் கொழுக்கட்டையிடம் அவளைப் பற்றிக் கேட்டேன். அவள் அங்கு வருவதில்லையாம் என்றுதான் சொன்னான்.

"பரீட்சைகளின் முடிவு வெளியான போதும் எனக்கு அகல்யாவின் நினைப்பே எழுந்தது. பாஸாகா விட்டால், மனமொடிந்து தற்கொலை செய்து கொள்ளக் கூடிய மாணவ மணிகளில் அவளும் ஒருத்தியாக மாறியிருப்பாளோ என்னவோ? இவ்வறெல்லாம் வீண் எண்ணங்களை வளர்த்து அவதிப்பட்டது என் உள்ளம்.

"இரண்டு மாதங்களுக்குப்பிறகு தற்செயலாக நான் அவளைச் சந்திக்க நேர்ந்தது. அவள் பார்த்தும் பாராதது போல் போய்விடக்கூடும் என்று நான் நினைத்தேன். நானாகப் பேச்சுக் கொடுத்தாலும் அவள் பேசாமலே மூஞ்சியைத் திருப்பிக் கொண்டு போய்விடுவாள் என்றும் எண்ணினேன். முன்பெல்லாம் அவள் அப்படிச் செய்வது தான் வழக்கம்.

"இருப்பினும், முயற்சி செய்வதில் நஷ்டம் எதுவும் இல்லை எனத் துணிந்து அவள் அருகில் போய், "நமஸ்காரம், மிஸ் அகல்யா" என்றேன்.

"அவள் என்னை கவனித்தாள். உற்று நோக்கிவிட்டுப் புன்னகை புரிந்தாள் "நமஸ்காரம்" என்றாள், "நான் பரீட்சையில் தேறிவிட்டேன். எனக்கு வேலையும் கிடைத்துவிட்டது. நல்லவர்கள் சிலர் நடத்தும் ஒரு கம்பெனியில் கிளார்க் வேலை. இப்பொழுது நூற்றி

இருபத்தைந்து ரூபாய் சம்பளம்" என்று அவளாகவே சொன்னாள். வெற்றி தந்த பெருமிதமும். இதயபூர்வமான மகிழ்ச்சியும் அவள் முகத்திலும் பேச்சிலும் பொங்கி வழிந்தன.

"ரொம்ப சந்தோஷம். ரொம்ப ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லி விட்டு நான் என் வழியே நடந்தேன். நல்ல காரியத்துக்கு நல்ல வழியில் பணம் கிடைக்கத் துணை புரியாத இந்த உலகத்தைப் பற்றி என்ன எண்ணுவது, எப்படி ஏசுவது என்றே எனக்கு விளங்கவில்லை!"

*

# 9

## காட்டிக் கொடுத்தவன்

அன்று பொழுது என்னவோ வழக்கம்போல்தான் விடிந்தது. தாமோதரனும் வழக்கம் போலவே அதிகாலையில் எழுந்துவிட்டார். காகங்கள் கரைவதும், இதர புள்ளினங்கள் ஆர்த்ததும், அற்புத ஒளி வீசிக் கதிரோன் வந்ததும், உலகம் இனிய காட்சிப் பொருளாகத் திகழ்ந்ததும்–எல்லாம் வழக்கம்போல்தான் இருந்தன.

என்றாலும் தாமோதரன் உள்ளத்தில் மட்டும் புரிந்துகொள்ள முடியாத ஒரு குழப்பம் குடிகொண்டு விட்டது. ஏதோ இன்னல். விளையப்போகிறது என உணர்த்தும் முன்னறிவிப்பு போன்று ஒரு குறுகுறுப்பு அவர் உள்ளத்தில் கறையான் மாதிரி அரித்துக்கொண் டிருந்தது. ஏன்? என்ன காரணம்? அவருக்கு எதுவும் புரியவில்லை. வருவதை உணர்ந்துகொள்ள முடியாதபோது, என்னவோ நேரப் போகிறது என்ற அர்த்தமற்ற, தெளிவற்ற, குழப்பம் மனசை அரித்துக் கொண்டிருப்பதனால் என்ன பிரயோசனம்? இவ்வாறு எண்ணினார் அவர்.

எனினும் அவர் தனது அலுவல்களை ஒழுங்காகச் செய்து கொண்டிருந்தார். அவரைச் சந்தித்துப் பேசுவதற்காக வந்த அனைவரோடும் பேசினார். அன்றாட நடப்புகளை அவரிடம் சொல்லிப்போக வந்தார்கள் சில பேர். அவருடைய அறிவுக்கூர்மையை உணர்ந்து பயன்பெறவும், தங்கள் அறிவொளியைக் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளவும், அவருடைய ஆழ்ந்த கல்வியின் பலனைத் தாங்களும் ஓரளவாவது பெறலாமே என்றும், தங்களுடைய படிப்பின் தன்மையை விவாதத்தின்மூலம் வெளிப்படுத்திக் கொள்ளலாமே என்றும், வெவ்வேறு நோக்கங்களுடைய

விதம்விதமான மனிதர்கள் அவரைக் காண வருவது உண்டு. இது நித்திய நியதி ஆகிவிட்டது.

இப்படி அவர் எல்லார்க்கும் எளியவனாக விளங்குவதால் அவருடைய பொன்னான காலம் வீணாகிப் போகிறதே என்று சில மெய்யன்பர்கள் வருத்தப்படுவது வழக்கம். அவர்கள் அவ்விதம் எடுத்துச் சொல்லும் போதெல்லாம் தாமோதரன் மோகன முறுவல் ஒன்றையே பதிலாகத் தந்துவிடுவார். "சிற்றொளி சிதறக் கூடிய சிறு விளக்காயினும் பலருக்கும் அது பயன்படக்கூடுமாயின் அதன் சிறப்பே தனிதான். தன்னால் இயன்றவரை இருளை அகற்றவும், வேறுபல விளக்குகளில் ஒளி ஏற்றவும் அது பயன்படுவது நல்லதா? அல்லது குடத்துள் வைத்த விளக்காகி விடுவது நல்லதா?" என்று கேட்டுவிட்டுச் சிரிப்பார் அவர். அவருடைய சிரிப்பு குழந்தையின் களங்கமிலா நகை ஒலி போல் தொனிக்கும். ஞானியின் கவலையற்ற சிரிப்பாகவும் தோன்றும்.

"நீங்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாகக் கருதுகிறீர்கள். அது சரியல்ல" என்று சில நண்பர்கள் அவரிடம் சொல்வது உண்டு.

"மனிதர்கள் எல்லோரும் சமம். இல்லையா?" என்று புன்னகை புரிந்தவாறே கேட்பார் அவர்.

"உண்மைதான், ஆனால் மனிதர்கள் உருவில் கயவர்களும் இருக்கிறார்களே!" என்று யாராவது சொன்னால், "மனித சுபாவத்தை ஒரே அடியாக மாற்றி விட முடியாது அல்லவா? சிலரின் பண்பாட்டை முற்றிலும் மாற்றி விட இயலாது என்பதற்காக, அவர்களை ஒதுக்கி வைப்பதும் நல்லதில்லைதான்" என்பார் தாமோதரன்.

அவர் உயர்ந்தவர். அவர் உத்தமர். அவர் சிந்தனையாளர். அவர் நல்லவர். அவர் ஞானி இவ்விதம் அவருடைய புகழ் பரவியிருந்தது.

உயர்ந்த கொள்கைகள் உடைய லட்சியவாதி. உண்மை தெரிந்து சொல்பவர். ஊருக்கு நல்லது செய்பவர். ஓயாது உழைப்பவர். பிறரை உழைக்கத் தூண்டுகிறவர். உழைப்பவர்கள் உரிமைகளைப் பெற்றே தீர வேண்டும் என்று வாதாடுபவர். உரிமை களைப் பெறுவோர் தம் கடமைகளைத் தவறாது செய்தாக வேண்டும் என வற்புறுத்துபவர். வாழ்விக்க வந்த வழிகாட்டி - அவரைப் பற்றி அறிந்தவர்கள் இவ்வாறு சொல்வர்.

தாமோதரனின் பேச்சும் எழுத்தும், உணர்வும் உயிர்ப்பும் உடையனவாகத் திகழ்ந்தன. மக்களின் உள்ளத்தைக் தொட்டான. அங்கு உணர்வு கனலச் செய்தன. அவருடைய செயல்கள் நாட்டிலே விழிப்பு ஏற்படுத்தின.

ஆகவே அவா கிளர்ச்சி செய்கிறார்; நாட்டின் அமைதியைக் குலைக்கிறார் என்றெல்லாம் குறை கூறியது ஆளும்வர்க்கம். கண் காணித்தது. எச்சரிக்கை விடுத்தது. அவர் தனது பணிகளைத் தொடர்ந்து செய்துவந்ததால், ஆட்சியினர் அவரைச் சிறையில் அடைத்து வைக்க விரும்பினர். அவ்விஷயம் தெரியவந்ததும் அவர் "அஞ்ஞாத வாசம்" புகுந்தார். சிறையில் அடைபட்டுக் கிடப்பதைவிட, மக்கள் மத்தியில் இருந்து கொண்டு, தான் செயல் புரிவதோடு பிறரையும் செயல் புரியத் தூண்டுவதே சிறந்தது என்பது அவர் கருத்து.

தாமோதரனுக்கு வேண்டியவர்கள் பலர் இருந்தார்கள். அழகான, அருமையான, பாதுகாப்பான இடங்களில் வசித்துவந்தார்கள். அவர்களில் அநேகர் அவரைத் தங்களோடு வந்து வசிக்கும்படி கோரினார்கள். அவரும் ஒவ்வொரு இடத்திலும் கொஞ்ச கொஞ்சகாலம் தங்கியிருக்க இசைந்தார்.

தாமோதரன் நிறைய நிறையப் படித்தவர். மதிப்பு பெற்றவர். என்றாலும் கர்வம்கொள்ளாதவர். எல்லோரிடமும் பழகி, எல்லோரையும் போலவே சாதாரணத் தோற்றத்தில் திரிந்து, சகல அலுவல்களையும் செய்யும் பண்பு பெற்றிருந்தார். அதனால் அவர் தங்கியிருக்கும் இடத்தில் வசிப்பவர்களில் ஒருவராகவே அவரையும் கருதினாாகள். அவரைச் சந்தேகிப்பதற்கோ அல்லது காட்டிக் கொடுப்பதற்கோ காரணமாகக் கூடிய விசேஷத் தன்மைகள் அவரிடத்திலும் அவரது சூழ்நிலையிலும் இல்லாதவாறு தாமோதரனும் கவனித்துக் கொண்டார்; அவருடைய நண்பர்களும் விழிப்புடன் இருந்தார்கள்.

எனினும், சிலருக்குச் சில நண்பர்கள் மீதே சந்தேகம் இருந்தது. "கேசவன் விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது" என்று அவர்கள் தாமோதரனிடம் சொல்லவும் தவறவில்லை. "நல்ல நண்பர்களால் ஆபத்து வராது. விரோதிகளினால் ஆபத்து விளையக்கூடும் என்றாலும் அவர்களை நாம் விழிப்புடன் கவனித்துக்

கொண்டிருப்பதனால், எதிர்பாராத விபத்து எதுவும் அவர்களால் ஏற்பட்டு விடாது. நண்பர்கள்போல் நடிக்கிறவர்கள்தான் ஆபத்தானவர்கள்" என்று ஒருவர் கூறினார்.

ஆனால், தாமோதரன் புன்னகை புரிந்தவாறே சொன்னார்; "சந்தேகம் என்கிற பூதக்கண்ணாடி கொண்டு கவனிக்கிற மனம் எதையும் சரியாக எடைபோடத் தவறிவிடுகிறது. அதன் நோக்கில் எல்லாமே கோணல்மாணலாகவோ, குறுகியதாகவோ அல்லது பூதாகாரமாகவோதான் தென்படும்".

"எதற்கும் நாம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லதில்லையா? கேசவன் கண்காணிப்புக்கு உரிய புள்ளிதான்" என்று மற்றவர்கள் குறிப்பிட்டார்கள்...

இன்று-அவருடைய மனநிலை அமைதி இழந்து குழம்பியபோது தாமோதரனுக்கு ஏனோ கேசவனின் நினைப்புதான் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

"நமக்கு அறிமுகமில்லாத மனிதர் அனைவரும் அயோக்கியர்களே என்று சிலர் எண்ணி விடுகிறார்கள். ஆகவே அவர்கள் பலருடன் பழக விரும்பாமல், கூட்டுக்குள் பதுங்கி வாழும் நத்தை மாதிரி சுயநலக் கூட்டினுள்ளேயே ஒடுங்கிக் கிடக்கிறார்கள்...நமக்கு நன்கு அறிமுகமானவர்களிலும் அயோக்கியர்கள் உண்டு என்று நம்பி, தங்களுக்குள்ளேயே சந்தேகித்துக் கொண்டு அவதிப்படுகிறார்கள் அநேகர்...எப்படிப் பார்த்தாலும் மனிதர்கள் மனிதர்களாக வாழக் கற்றுக்கொள்ள வில்லை என்பதுதான் புலனாகிறது" என்று அவர் எண்ணினார்.

"என்ன ஐயா, தீவிரமான யோசனையோ?" என்ற குரல் அவர் கவனத்தைத் திருப்பியது.

அங்கே வந்து நின்றவனைப் பார்த்ததும் அவர் திகைப்படைந்தார். "நினைத்தவுடனேயே சைத்தான் எதிரே வந்து நிற்பான் என்பது சரியாக இருக்கிறதே!" என்றுதான் அவர் மனம் முதலில் நினைத்தது. பிறகு "சே! நான் ஏன் கேசவனை சைத்தான் என்று கருத வேண்டும்?" என மனசின் நற்பண்பு கூறியது.

கேசவன் வழக்கம்போல் பல விஷயங்களை பற்றியும் பேசினான். அவருடைய வேலைத் திட்டங்கள் பற்றியும், அன்று

அவர் செய்யப்போகிற வேலைகளைப் பற்றியும் நேரடியான கேள்விகள் மூலமும் சுற்றி வளைத்துப் பேசியும் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

அவனுடன் பேசிக் கொண்டிருந்தபோது தாமோதரனுக்கு அவன் பேரில் சந்தேகம் எழத்தான் செய்தது. முன்புகூட சில சந்தர்ப்பங்களில் அவனது பேச்சிலும் பார்வையிலும் கள்ளத்தனம் கலந்து கிடந்ததாக அவருக்குத் தோன்றியது உண்டு. "சந்தேகம் கொடிய தொத்து நோய். அது யாரையும் எளிதில் பற்றிக்கொள்கிறது" என்று அவர் ஆத்ம உபதேசம் செய்து கொள்வதும் வழக்கம்தான். இன்று அத்தகைய சுயபோதனை கூட அவருக்கு அமைதி அளிக்கத் தவறிவிட்டது.

கேசவன் போன பிறகு யார் யாரோ வந்தார்கள். அவருடன் விளையாடிப் பொழுது போக்கவரும் குழந்தைகள் வந்தன. விளையாடின. அவற்றின் பேச்சும் விளையாட்டுக்களும் கூட அவருக்கு மன அமைதி தரவில்லை. "இன்று ஏதோ நேரப் போகிறது" என்று உள்ளுணர்வு அரித்துக் கொண்டே இருந்தது. "ஏதாவது ஆபத்து வரலாம்" எனத் தோன்றியது.

அதற்காக அவர் வழக்கமான அலுவல்களைச் செய்யாமல் சோம்பிக் கிடக்கவில்லை.

சோம்பி இருக்கும் சுகம் அறியாத காலமும் ஓடிக்கொண்டுதான் இருந்தது.

பொழுது மயங்கி அந்தி வந்தது. அதை விழுங்கிவிட்டு இருள் வளர்ந்தது.

இரவு அடி எடுத்து வைத்ததும், வெளியே சிறிது தூரம் உலாவி விட்டு வருவது தாமோதரனின் பழக்கம்.

அன்றும் அவர் வழக்கம்போல் வெளியே போய்விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். வானத்து அதிசயங்களையும், வயல் வெளியில் காற்றிடையே தலையசைத்து நிற்கும் பசும் பயிர்களின் அழகு இரவின் கருமையில் கலந்து மடிவதையும், மரங்களும் வீட்டுக் கூரைகளும் கோயில் கோபுரமும் கரிய புகைப் புலனில் நிழல் உருவங்களாக மாறிவருவதையும் ரசித்தபடி நடந்தார் அவர். "இயற்கை எப்பொழுதும் வசீகரமாகத் தான் இருக்கிறது" என்றது அவர் மனம்.

திடீரென்று அவருக்கு ஒரு திகில் பிறந்தது. அர்த்தமற்ற, காரணமற்ற நடுக்கம் என்று அவர் உள்ளம் குறிப்பிட்டது.

அவருக்கு முன்னால், பூமியிலிருந்து முளைத்தெழுந்தவன் போல ஒருவன் நின்றான். அவனுடைய கண்கள் பூனையின் விழிகளைப் போல் அவரைக் கூர்ந்து நோக்கின. சிரிப்பதுபோல் அகன்று நீண்டிருந்த உதடுகளினூடே பளிச்சிட்ட பற்களின் வெண்மை தாமோதரனைப் பரிகசிப்பது போலிருந்தது. அவன் எங்கிருந்து வந்தான், அதுவரை எங்கே பதுங்கி நின்றான் என்பதைக் கவனிக்கத் தவறிவிட்ட அவர் ஏன் அவன் அப்படிச் சிரிக்கிறான் எனப் புரிந்துகொள்ள இயலாமல் திகைத்தார்.

"என்ன தாமோதரன் ஸார், உலாவப்போய்விட்டு வருகிறீர்களாக்கும்?" என்று கேட்டான் கேசவன்.

பெயர் சொல்லி அழைக்கும் பழக்கம் பெற்றிராத கேசவன் ஏன் திடீரென்று இவ்வாறு முன் வந்து விசித்திரமாக நடந்து கொள்ள வேண்டும்? குடிபோதையாக இருக்குமோ?-இந்த ரீதியில் தான் எண்ணமுடிந்தது அவரால்.

கேசவனின் திட்டம் வெற்றி கரமாகச் செயல்பட்டது. "இவர் தான் நமக்கு வேண்டிய ஆள்" என்று அறிவிக்க முயல்கிறவன் மாதிரி அவன் உரத்த குரலில் பெயரைக் குறிப்பிட்டதும், தயாராகப் பதுங்கியிருந்த போலீஸ் வீரர்கள் வேகமாக முன்வந்தனர் தாமோதரனைப் பிடித்துக் கொண்டனர். ஊருக்கு வெளியே சற்று தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரியை நோக்கி அவரை அழைத்துச் சென்றார்கள்.

"இப்படி ஒரு அபாயம் வரவிருக்கிறது என உணர்த்துவதற்காகத் தான் என் உள்ளம் குறுகுறுத்தது போலும்!" என்று அவர் எண்ணினார். எல்லாம் வழக்கமான நியதிப்படி இயங்கிக் கொண்டிருந்த போதிலும், மனிதர்களில் ஒருவன்-நண்பர்களில் ஒருவன்-ஏறுமாறாக நடந்து கொள்ளத் துணிந்தானே!" என்று முனங்கியது அவர் மனம்.

இதற்குள் விஷயம் எப்படியோ தெரிந்து தாமோதரனின் நண்பர்கள் ஓடி வந்தார்கள். வேறு பலரும் விரைந்து வந்தார்கள். கேசவனைக் கண்டதும் அவர்களுடைய ஆத்திரம் அதிகரித்தது.

"துரோகி!"

"காட்டிக் கொடுத்தவன்!"

அயோக்கியன்! கருங்காலி! ஆள்காட்டி! கைக்கூலி!...

இன்னும் வேகமான வார்த்தைகள் சூடாக வந்து விழுந்தன. உள்ளத்தின் சூட்டை உணர்ச்சிக் கொதிப்போடு கூட்டி, பச்சை பச்சையான ஏச்சு வார்த்தைகளாக உதிர்த்தார்கள் சிலர். அவர்களுடைய கோபம் பேச்சு நிலையிலிருந்து மீறி, கைநீட்டும் வெறித்தனமாக ஓங்கி விடும் என்றே தோன்றியது.

"நண்பர்களே! கேசவனை விட்டு விடுங்கள். அவன் என்ன செய்கிறான்-செய்து விட்டான்-என்பதை அவனே உணரவில்லை. அவனுக்கு நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். ஒரு கெடுதியும் விளைவிக்கக் கூடாது" என்று தாமோதரன் பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

"உங்களுடைய இந்த நற்பண்பு தான் உங்களுக்கே ஆபத்தாக முடிந்தது" என்று சிலர் முண முணத்தார்கள்.

"பிறர் பண்பு கெட்டவர்களாக வாழ்கிறார்கள் என்பதற்காக நாமும் அவ்விதமே மாறவேண்டியது இல்லையே? நாம் போற்றி வளர்த்து - பாதுகாக்க விரும்புகிற - நல்ல பண்புகளை நாமே நாசமாக்க முற்பட்டால், அப்புறம் நமக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டுவிட்டு, மோகன முறுவல் புரிந்தார் அவர்.

எல்லோரும் தலை குனிந்து நின்றார்கள். கரம் குவித்து வணங்கினர் சிலர்.

அமைதி வழி அனுப்ப, அதிகாரம் துணை வர, இருளிலே நடந்து இருளாலே விழுங்கப்பட்டார் அறிவொளி பரப்ப அவாவிய தாமோதரன்.

இனி அவரை என்று காண்போமோ என்ற ஏக்கமே அவ்வூர்க்காரர்களின் உள்ளத்துச் சுமையாயிற்று. உறுத்தும் வேதனை ஆயிற்று. விழிகளின் சுடுநீராயிற்று. அவர்கள் கேசவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. அவன் "முகத்தில் விழிக்கக் கூட விரும்பவில்லை.

கேசவன் தனியனாய் நடந்து சென்றான். அன்று முதல் அவன் தனியனேயானான்.

தாமோதரனின் கடைசிப் பேச்சையும், புன்னகையையும் அறிந்தவுடனேயே, அவனுடைய உள்ளமே அவனைச் சுட ஆரம்பித்து விட்டது. ஒரு சில ரூபாய்களுக்கு ஆசைப் பட்டு-பதவியில் இருப்பவர்களின் தயவுக்கு ஆசை கொண்டு-கடமையைச் செய்து காட்டத் துடித்த அதிகாரவர்க்கத்தின் ஆட்களது மயக்குப் பேச்சுக்களால் அறிவு கெட்டு, அவன் பெரிய தீங்கு புரிந்து விட்டான். அழிக்க முடியாத களங்கத்தை ஏற்படுத்தி விட்டான். துடைத்து நீக்கிவிட முடியாத-திரையிட்டு மறைக்கவும் முடியாத-ஒரு கறையை அவன் தனக்குத்தானே ஆக்கிக்கொண்டான். பிராயச் சித்தம் எதுவுமே இல்லாத கொடிய பாவத்தை அந்த அப்பாவி தன் அறியாத்தனத்தினால் செய்து முடித்துவிட்டான். இந்த உண்மை சிறிது சிறிதாக அவனுள் உதயமாகி அவனையே தகிக்கலாயிற்று.

தாமோதரனின் வாக்கை கௌரவிக்கும் பண்புடைய ஊரார்கள் அவர் சொன்னவற்றை "வார்த்தைக்கு வார்த்தை சரியாக" செயல் புரியத் துணிந்தார்கள். "கேசவனை விட்டு விடுங்கள். நீங்கள் அவனுக்கு எதுவும் செய்யக்கூடாது" என்று தானே அவர் சொன்னார்? நாம் அவனுக்குத் தீயதும் எண்ண வேண்டாம்; நல்லதும் செய்ய வேண்டாம் என்று முடிவு பண்ணி விட்டார்கள் அவர்கள்.

கேசவன் எதிரே வந்தால் மற்றவர்கள் விலகிச் சென்றார்கள். அவன் சிரித்தால், யாருமே அவனை அறிந்தவராகக் காட்டி மீண்டும் புன்னகை புரியத் தயாராக இல்லை. அவனாகப் பேச்சுக் கொடுத்தாலும் கூட மற்றவர்கள் பேசாமல்-அவன் முகத்தைப் பார்க்காமலே-தங்கள் வேலைகளைக் கவனிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். "குடிக்கத் தண்ணீர் வேண்டும்" என்று வீட்டு வாசல்படி ஏறி அவன் கேட்டால் கூட வீட்டில் இருந்தவர்கள் அவனுக்குத் தண்ணீரும் தரவிரும்பவில்லை. "இல்லை" என்று வாயினால் சொல்லவும் முன்வரவுமில்லை.

மனிதனாக வாழத் தவறிவிட்ட ஒருவனை-மனித உருவில் திரிந்தாலும், மனித மாண்பை மதிக்க மனமற்றுப் போன ஒரு அதமனை-தம்மில் ஒருவனாக ஏற்றுக்கொள்ள அவ்வூர் மக்கள் ஆசைப்படவில்லை. தங்களின் மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரிய ஒரு உத்தம மனிதனை துன்பத்துக்கும், தண்டனைக்கும், இருண்ட வாழ்வுக்கும் காட்டிக் கொடுக்க முன் வந்த ஒருவன்-திட்டமிட்டு,

நண்பன் போல் பழகி, நாச வேலை செய்துவிட்ட நயவஞ்சகன்-தங்களை விட்டுவெகு தூரம் விலகிப் போனவன்; அவன் நிரந்தரமாக ஒதுக்கப்பட வேண்டியவனே என்று அவர்கள் தீர்மானித்துச் செயல் புரிந்தார்கள்.

கேசவனுக்கு அந்த நிலைமை சகிக்க முடியாததாக இருந்தது. அவன் யாருக்கு உதவி செய்தானோ அவர்களிடம் சென்றான். திரும்பத் திரும்பச் சென்றான்.

முன்பு அவனைக் கருவியாக்கிக் தாம் பயனடையத் திட்டமிட்டு, அவனை உற்சாகப்படுத்தி வந்த அதிகார வர்க்கத்து அங்கங்கள் தங்கள் காரியம் முடிந்துவிட்டதும் அவனை அலட்சியமாகவே பார்த்தார்கள். "என்ன வேணும்?" "ஏன் தொந்தரவு கொடுக்கிறாய்?" "ஓயாத தொல்லையாகிவிடுவாய் போலிருக்கிறதே!" என்றெல்லாம் கடுகடுத்தார்கள்.

அவன் மன ஆறுதல் பெறுவதற்காக, ஊராரின் போக்குப் பற்றி அவர்களிடம் ஒப்பாரி வைக்கத் தொடங்கினால், அவர்கள் சகஜ முறையிலே "தடை உத்திரவு" போட்டார்கள். "எங்களிடம் சொல்லி என்னப்பா பிரயோசனம்? யாரும் உனக்குக் காயம் ஏற்படுத்தவில்லையே? உன்னை உதைக்கவில்லையே? உன்னைக் கொன்று போடத் திட்டம் வகுக்கவில்லையே? அதற்காக நீ சந்தோஷப்படுவதை விட்டுவிட்டு மூக்கால் அழுது வழிகிறாயே!" என்று கேலி பேசினார்கள்.

"எல்லாம் உங்களுக்கு உதவி செய்ய இசைந்ததனால் வந்த வினைதானே? என்று அவன் முணங்கினால், "என்ன தம்பி, பூடம் தெரியாமல் சாமி ஆடுறதுக்கு வருகிறே? நீ சும்மாவா உதவி செய்தாய்? முள்ளங்கிப் பத்தை போல ரூபாய் ரூபாயாக எண்ணிக்கொடுத்தோமே நாங்க; அதை மறந்துவிட்டாயா?" என்று அவர்கள் உறுமினார்கள்.

"இவர்கள் தொடர்பு எப்பொழுதுமே ஆபத்தானதுதான்" என்று உணர்ந்து கொண்டான் அவன். அதனால், அவர்களை ஒதுக்கிவிட்டு அவனாகவே ஒதுங்கிப் போனான்.

இந்த நிலை ஏற்படவும் அவன் செய்த பாவத்தின் நினைவு மேலும் கடுமையாக அவனை வாட்டி வதைத்தது. அவன் உள்ளத்தில்

அமைதி இல்லை; ஆனந்தமில்லை. அவன் முகத்தில் மலர்ச்சி பிறக்கவே இல்லை. இருந்த இனிமையும் கருகிவிட்டது. பித்துப் பிடித்தவன் போல் திரியலானான் அவன்.

பாவம் என்றால் என்ன என்றே தெரியாத சிறு குழந்தைகள் கூட அவன் முகத்தைக் கண்டால் அஞ்சி நடுங்கினார்கள். அவன் வருவதைப் பார்த்தாலே ஓடி ஒளியலானார்கள். அவன் எங்கு போனாலும், "காட்டிக் கொடுத்தவன்" என்று யாரோ ரகசியக் குரலில் ளவேறு ஒருவருக்குச் சொல்வதை அவன் கேட்க முடிந்தது. கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

உண்மையாகவே யாரும் அப்படிச் சொல்லாத வேளைகளில் கூட-இடங்களில் கூட- "காட்டிக் கொடுத்தவன். மனிதத் தன்மை இழந்தவன்" என்று ஒரு குரல் வெறுப்புடன் உச்சரிப்பது போல் அவன் செவிக்குக் கேட்கும். கேட்பதாக நினைப்பான் அவன். அதனால் அங்கும் இங்கும் திரும்பித் திருமபி நோக்குவான். இவ்வாறு, பிறரது புறக்கணிப்புக்கும் தனது மனச் சாட்சியின் நுண்ணிய, தீவிரமான கண்காணிப்பும் இடையே அகப்பட்டுத் தவித்த கேசவன் ஒரு நாள் காணாமலே போய்விட்டான்.

அத்றகாக யாரும் வருத்தப்படவில்லை. "இந்த ஊரைப் பிடித்திருந்த சனியன் ஓடிப்போய் விட்டது. இனி இந்த ஊருக்கு நல்ல காலம்தான்" என்றுகூடச் சொன்னார்கள் சில பேர்.

*

# 10

# இளகிய மனசு

மீனாட்சி அம்மாளுக்கு ரொம்பவும் இளகிய மனசு.

அப்படித்தான் சொல்லி வாந்தார்கள் அவளை அறிந்தவர்கள் எல்லோரும். அவளும் அவ்வாறு எடுத்துக் சொல்லத் தவறுவதில்லை.

பெரிய இடத்தைச் சேர்ந்தவள் அவள். உருவத்திலும் அவள் பெரியவள்தான். பொதுவான ஸ்திரீ தர்மத்தை அவளும் அனுஷ்டித்து வந்தாள். அதனால் அவளது வயது, நின்றுபோன கடியாரத்தின் முட்கள் போல, கிழிக்கப்படாத காலண்டர் தாளைப்போல, ஒரே எண்ணில் நின்றிருந்தது. அஞ்சாறு வருஷங்களாகவே அவள் வயது இருபத்துநான்காகத்தான் இருந்தது!

அதற்காக அவளுடைய உடல் வளர்ச்சியுறாமல் போகவில்லை. கேவலம் நூற்றைம்பது பவுண்டு மாத்திரமே கனத்திருந்த அவளது தேகம் நாளடைவில் இருநூற்றுச் சொச்சம் பவுண்டு எடையாகப் பெருத்திருந்தது. வேலை எதுவுமே செய்யாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்தும், அப்படி உட்கார்ந்தே இருப்பது அலுத்துப் போனால் படுத்தும், உடலுக்குச் சுகம் தேடினால் அது பெரியதனம் பெறாதா என்ன? பெருஞ் சாப்பாட்டுக்கு இடைப்பட்ட வேளைகளில் எல்லாம் பழம் என்றும், பாதாம் பருப்பு என்றும், சாக்லெட் என்றும் உள்ளே திணித்துக் கொண்டிருந்தால், அதை எல்லாம் ஏற்றுக் கொள்கிற உடல், கொடியாகவா இருக்கும்? ஆகவே, மீனாட்சி அம்மாள் பிறப்பினால் மட்டுமல்ல, தோற்றத்தினாலும் பெரிய மனுஷியாகத்தான் விளங்கினாள்.

அவளுக்கிருந்த இளகிய மனசு அவளுடைய பெருந் தன்மையின் மற்றுமொரு எடுத்துக்காட்டு என்று தான் பலரும் சொன்னார்கள்.

"நம்ம பெரிய வீட்டு மீனாட்சிக்கு இருக்கிற தங்கமான மனசு வேறு யாருக்குமே இருக்க முடியாது. துன்பத்தைக் கண்டு சகிக்க முடியாது அவளாலே. இன்னொருத்தர் காலில் முள் தைத்துவிட்டால் அவளுக்குத் தனது கண்ணிலே குத்திவிட்டது போல் களகளவென்று கண்ணீர் வடித்து விடுவாள். அப்பாவி" இது அம்மாளை அறிந்த ஒரு அம்மையாரின் அபிப்பிராயம்.

"இதைப்போயி பெரிசாச் சொல்லுறியே! அன்னைக்கொரு நாள் நான் மீனாட்சியைப் பார்க்கப்போனேன் பாரு. அப்ப அவள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன். பிறகு அவளைத்தேற்றி விசாரிச்சதிலே விஷயம் புரிஞ்சது. அவள் ஒரு புத்தகத்தைப் படிச்சுக்கிட்டிருந்தாளாம். அதிலே உள்ள கதாநாயகிக்கு ஏகப்பட்ட கஷ்டமும் துன்பமும் வந்து அவள் வேதனைப்படுகிறாள். அதனாலே மீனாட்சிக்கு மனசு குழம்பி சோகம் முட்டி, அழுகை வந்துவிட்டது. ஐயோ பாவம்" என்று நீட்டி நீட்டிப் பேசினாள் பார்வதி என்றொரு அம்மாள்.

அவள் பேச்சு பொய் அல்ல. மீனாட்சியின் குணவிசித்திரங்களில் அதுவும் ஒன்று தான்.

பொழுதுபோக்கிற்காகக் கதை படிக்கிற மீனாட்சி அம்மாள். தான் படித்துக் கொண்டிருப்பது கதை என்பதை மறந்தே விடுவாள். கதா பாத்திரங்கள் அனுபவிக்கிற கொடுமைகள் அவள் உள்ளத்தைத் தொடும்: உணர்வைக் கிளுகிளுக்கச் செய்யும். கண்ணின் மணிகள் நீரிலே மிதக்கும். அப்புறம் கண்ணீர் பெருகி ஓடவேண்டியது தானே!

கலியாணம் ஆகாமல் ஏக்கமடைந்து "என்று வருவானோ?" என மனம் குமைந்து புழுங்குகிற கன்னிப் பெண்களின் நிலைமை அவளுக்கு வேதனை தரும். கணவனை இழந்து வாழ்க்கை வெயிலி ல் வாடி வதங்கும்இளம் விதவையின் துயரம் அவள் உள்ளத்தில் பெருத்த துக்கத்தை எழுப்பும். மாற்றாந் தாயின் கொடுமைக்கு இலக்காகும் சிறு பிள்ளைகள், ஏழை எளியவர்கள், பொதுவாக எல்லோருடைய வேதனையும் தான் அவளைக் கண்கலங்க வைத்துவிடும். கதைகளைப் படிக்கறபோது தான்!

சில கதைக்காரர்கள் ''இலக்கியம் பண்ணுகிறேன்'', "உணர்ச்சிகளைச் சித்திரிக்கிறேன்" என்று சொல்லி, எங்காவது கதையை ஆரம்பிப்பது - திடுதிப்பென்று முடித்து விடுவது - கதாபாத்திரங்களின் மனசைப் போட்டுத் ''தாளித்து புரட்டி துவட்டி எடுப்பது போன்ற உததிகளைக் கையாளுகிறார்கள் அல்லவா? அவ்வித எழுத்துக்களை பெரிய இடத்து மீனாட்சி அம்மாள்படிக்க நேர்ந்தால், அவளுக்குச் சில தினங்கள் தூக்கமே பிடிக்காமல் போய்விடும். கதாபாத்திரங்களின் உளப்போராட்டங்களைப் படித்தால் அவளுக்கு ஒடுக்க முடியாதவாறு உள்ளக் குழப்பம் ஏற்பட்டுவிடும்.

கதைச் சுவைக்காக, "வீட்டை விட்டுக் கிளம்பிய அவன் இருளோடு இருளாகக் கலந்து மறைந்தான்'' என்பதுபோல் எதையாவது எழுதிக் கதையை முடித்து விடுகிறார்களே சிலபேர். மீனாட்சி அம்மாள் எவ்வளவு கஷ்டப்படுவாள் என்பது அவர்களுக்குத் தெரியாது பாவம்!

"வீட்டை விட்டு வெளியே போனவன் சாப்பாட்டுக்கு என்ன செய்தானோ? எங்கே படுத்துத் தூங்கினானோ? என்ன ஆகிறானோ?" என்று பிரச்சினைகளுக்கு மேல் பிரச்சினைகளை அலைமோதச் செய்து தனது உள்ளத்தையே ஒரு கடலாக மாற்றிக்கொண்டு அவதியுறுவாள் அவள். என்றோ படித்த எதையாவது எண்ணிக்கொண்டு, "பாவம், அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு கஷ்டம்! உடம்பு பூராவும் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீ வைத்துக்கொள்ளணும் என்றால்? ஐயோ!'' என்று மனம் துணுக்குறுவாள். அவள் கண்கள் தானாகவே கலங்கிவிடும்.

"உள்ளம் உருக்கும் கதை" என்று விளம்பரப்படுத்தப்படுகிற சினிமாப் படங்களைப் பார்க்கப் போனால் மீனாட்சி அம்மாளின் கைக்குட்டை "சொட்டச் சொட்ட நனைந்து போகும். அதற்காகப் படங்களைப் பார்க்கச் செல்லாமல் இருந்து விடுவாளா அவள்? எந்தப் பெண் தான் அப்படி நின்று விடுகிறாள்?

இவற்றினால் எல்லாம் தான் பலரும் சொன்னார்கள் "மீனாட்சி அம்மாளுக்கு ரொம்பவும் இளகிய மனசு" என்று.

"இளகிய மனசு" படைத்த பெரிய வீட்டு அம்மாள் தர்மத்துக்குப் பயந்தவள்; நியாயத்தை அனுஷ்டிக்க ஆசைப்படுபவள்.

கண்டிப்பானவள். வீட்டு வேலைக்காரர்கள் சிறு தவறு செய்து விட்டாலும் அவர்களை மன்னிக்கத்துணியாதவள். அவர்களுடைய தவறின் தன்மை அவர்கள் மனசில் உறைக்கும்படி ஏசியும், தண்டித்தும் நேர்மையை நிலை நாட்டத் தயங்காதவள்.

அவளுடைய இளகிய மனசை அறிந்தவர்கள் இக்குணங்களை எல்லாம் "பாராட்ட வேண்டிய அம்சங்கள்" என்ற கணக்கில் தான் சேர்த்தார்கள்.

இவ்வாறு பாராட்டுப் பெற்ற பண்புகள் சில சமயங்களில் ஏற்படுத்திய விளைவுகள் பாராட்டியவர்களின் மனதில் எத்தகைய எண்ணங்களையும் எழுப்பவில்லை போலும்!

ஒரு நாள் பார்வதி அம்மாள் "பெரிய வீட்டு மீனாட்சி"யைக் காணச் சென்றிருந்தாள். அப்போது அந்த வீட்டில் கூப்பாடும் அழுகையுமாக இருந்தது. வீட்டு வேலைக்காரச் சிறுமியை அதன் அப்பன் அறைந்து கொண்டிருந்தான். முதுகில் "பளார் பளார்" என்று பேயறை கொடுத்தான் அவன். எட்டு வயதுச் சிறுமி, "ஐயோ...அம்மா... நான் இல்லே... எனக்குத் தெரியாது சாமி சத்தியமாக நான் எடுக்கலே" என்று அலறியது. விக்கலுக்கும் விம்மலுக்கும் ஓலத்துக்கும் ஊடாக எழுந்த அலறல் மிகவும் பரிதாபகரமாக ஒலித்தது.

அந்த இடத்தில்தான் மீனாட்சி அம்மாளும் நின்றாள். சிறுமியின் வேதனைக்குரல் அவள் உள்ளத்தைத் தொட முடியாமலா போய்விட்டது? " என்ன விஷயம்?" என்று விசாரித்தாள் பார்வதி.

மீனாட்சியின் இரண்டரை வயதுக் குழந்தை கையில் நாலணாக் காசு இருந்ததாம். அது காணாமல் போய்விட்டதாம். குழந்தையைக் கவனித்து கொண்டிருந்த சிறுமிதான் திருடியிருக்கவேண்டும்; அது ஐஸ்க்கிரீம் வாங்கித் தின்றது; ரிப்பன்காரனிடம் பேசிக் கொண் டிருந்தது என்றெல்லாம் மீனாட்சி அம்மாள் சொன்னாள். தோட்டத்தில் வேலைபார்த்து வந்தான் சிறுமியின் தந்தை. அவனிடம் தனது கட்சியைச் சொல்லி, "திருட்டுப் பிள்ளையை இங்கே வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாது. கூட்டிக்கொண்டு நீயும் போய்ச்சேரு. அதுதான் தண்டனை" என அறிவித்தாள்.

அவன் கெஞ்சினான். மன்னிப்புக் கேட்டான். தனது மகளை அறைந்து நொருக்கினான்.

"இப்படிச் செய்ய வேண்டியதுதான். இதென்ன திருட்டுப் புத்தி? நாலணா போனால் போகுது என்று விட்டு விடலாம். இன்னொரு நாளைக்கு இந்தப் புள்ளெ வெள்ளிப் பாத்திரம், தங்க நகைகளை எடுத்துக்கிட்டுப் போகாது என்பது என்ன நிச்சயம்?" என்று திடமாகத் தெரிவித்தாள் மீனாட்சி அம்மாள்.

"ஆமாம். நாலணாவை. இந்தப் பிள்ளைதான் எடுத்தது என்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்?" என்று கேட்கத் தோன்றவில்லை பார்வதி அம்மாளுக்கு. "முளைச்சு மூணு இலை விடலே. அதுக்குள்ள இந்த மூதேவிக்கு மூளைபோற போக்கைப் பாரேன்!" என்றுதான் அவள் ஆமோதித்தாள்.

"இளகிய மனம்" பெற்ற மீனாட்சி அம்மாளின் பண்பாட்டுக்கு மிகப் பெரிய உதாரணமாக விளங்கியது ஒரு நிகழ்ச்சி.

வண்டிக்காரன் வயது அதிகமானவன். இருந்தாலும் தனது கடமையை ஒழுங்காகச் செய்து வந்தான் அவன். அவனும் அவனது குடும்பத்தினரும் பெரிய வீட்டின் தோட்டத்து மூலை ஒன்றில் குடிசை அமைத்து வசித்தனர். திடீரென்று கடுமையான ஜுரத்தில் விழுந்தான் வண்டிக்காரன். அவன் குணமடைந்து எழ ஒருமாதம் பிடித்தது. அதற்குள் வேறொரு ஆளை நியமித்து விட்டதால், இனிமேல் அவன் வேலைக்கு வேண்டியதில்லை என்று எசமானியம்மாள் உத்திரவிட்டாள். உடனடியாகவே தோட்டத்துக்குடிசையையும் காலி செய்துவிட்டு அவன் போய்விட வேண்டும் என்றாள்.

"அம்மா, நான் பிள்ளைக்குட்டிக்காரன். இந்தத் தள்ளாத காலத்திலே நான் எங்கே அம்மா போவேன்? இந்த மூலையிலேயே ஒண்டிக்கிடக்கும்படி தயவுபண்ணுங்க" என்று கும்பிட்டுக் குழைந்து கெஞ்சினான். காலில் விழுந்து வேண்டினான்.

அவனும் அவன் குடும்பத்தினரும் மூலைக் குடிசையில் வசிப்பதனால் பெரியவீட்டு அம்மாளுக்கு நஷ்டம் எதுவும் வந்துவிடாது. எனினும் "கொள்கையில் உறுதி வேண்டும்" என நம்பிய மீனாட்சி அம்மாள் வேலைக்காரர்களை ஏவி; கிழவனின் சட்டி பானை தட்டு முட்டுச்சாமான்களை எல்லாம் எடுத்து ரோட்டிலே விட்டெறியும்படி கட்டளையிட்டாள்.

கிழவன் அழுத அழுகையும் பேசிய பேச்சும் அவள் உள்ளத்தைத் தொடவில்லை; ஆத்திரத்தைத்தான் அதிகப்படுத்தின.

மீனாட்சி அம்மாளுக்கு இளகிய மனசு தான். அவளை அறிந்தவர்கள் அனைவரும் உணர்ந்த உண்மை அது.

ஆயினும் அவள் கண்டிப்பானவள். பெரிய வீட்டு அம்மாளின் குணங்களை அறிந்தவர்கள் இதையும் அறியமாட்டார்களா என்ன?

*

# 11

## ஒரே ஒரு மனிதன்

ஒரு தெரு.

ஒதுக்குப்புறமான தெரு அல்ல. போக்குவரத்து அதிகமாக உள்ள முக்கியமான வீதிகளில் ஒன்றுதான் அது.

நாகரிக யுகத்தின் ஜீவத் துடிப்பான வேகம் அந்தத் தெருவிலும் மனித நடமாட்டமாகவும், சைக்கிள்களின் ஓட்டமாகவும், கார் வகையராக்களின் துரித இயக்கமாகவும் பரிணமித்துக்கொண்டு தானிருந்தது.

தெருவின் ஒரு இடத்தில் ஒரு நாய் செத்துக் கிடந்தது.

அது கிடந்த இடம் தெருவின் மத்தியுமல்ல; ஒரு ஓரமும் அல்ல. அந்த நாய் நடு வீதியில் காரிலோ வண்டியிலோ அடிப்பட்டு, வேதனையோடு நகர்ந்து நகாந்து தெரு ஓரத்தை அடைய முயற்சித்து, அம் முயற்சியிலேயே உயிரை விட்டிருக்க வேண்டும். தெரு நடுவில் அழுத்தமாகப் படிந்திருந்த ரத்தச் சிதறலும், நெடுகிலும் கறையாய் ஓடிக்கிடந்த சுவடும் அப்படித்தான் எடுத்துக் காட்டின.

நாய் எப்படி அடிப்பட்டது; எவ்வளவு வேதனை அனுபவித்தது; எப்பொழுது செத்தது என்பது எதுவும் யாருக்கும் தெரியாது. அது செத்துக்கிடந்தது. அது எல்லோர் பார்வையிலும் பட்டது. எவர் மனசிலாவது உறுத்தியதா?-தெரியாது!

கார்களில் போகிற பெரிய மனிதர்கள் பார்வையில் எல்லாம் பட்டாலும் எதுவும் படாத மாதிரித்தான். அவர்களில் பலர் காரில் ஏறி உட்கார்ந்ததும் தான் சுமக்கிற

தனது கூட்டுக்குள்ளேயே ஒடுங்கிவிடும் நத்தை மாதிரி தம்மில் தாமே முடங்கிவிடுவார்கள். பிறகு இறங்க வேண்டிய இடம் வந்ததும்தான் உயிர்ப்பு காட்டுவார்கள். அவர்களுக்குப் புற உலக விஷயங்களில் சிரத்தை எதுவும் இருக்க முடியாது.

தாமே இயங்கும் வேக வாகனங்களில் சவாரி போகிறவர்கள் சாதாரண விஷயங்களைக் கவனிக்க முடியுமா என்ன? தலை போகிற வேகத்திலே பறக்கிற அவர்களே ஏதாவது விபத்தில் மாட்டிக் கொண்டால்தான் "ஓகோ, இதுதான் பூலோகமா!" என்ற உணர்ச்சி பிறக்கும் அவர்களுக்கு.

–ஓ, மறந்துவிட்டேனே! வேறொரு சந்தர்ப்பத்திலும் உணர்வு பிறக்கும்தான். மினுக்கும அலங்காரத்தோடு அல்லது உறுத்தும் அலங்கோலத்துடன் நவயுக ஜூலியட் அசைந்து நடந்து செல்வதையோ, பஸ் ஸ்டாப்பில் நிற்பதையோ காணும் போதுதான்.

கேவலம் ஒரு நாய் - அதிலும், அடிபட்டுச் செத்த நாய் - பெரும்பாலோர் கண்களை உறுத்தாததில் அதிசயம் எதுவும் இல்லைதான்.

கார்கள் ஓடிக் கொண்டிருந்தன.

"சால மிகுத்துப் பெய்த" மனிதச் சுமையைத் தாங்கியவாறு பஸ்கள் போய்வந்துகொண்டுதான் இருந்தன. சைக்கிள்கள், ரிக்ஷாக்கள், வகையரா வகையரா- எதற்கும் குறைவு இல்லை அந்த வீதியிலே.

நடந்து போகிறவர்கள்?

அவர்கள் இல்லாமலா தெரு என்று ஒன்று இருக்க முடியும்? போனார்கள்; வந்தார்கள். பலப்பல பண்பினர் அவர்கள்...

"இதென்னய்யா?"

"என்னமோ செத்துக் கிடக்குது!"

"நாய் ஓய்!"

"காரிலே அடிபட்டிருக்கும். நாய் பெருத்தாப்பிலே என்பது சும்மா தானா? ஏகப்பட்ட நாய்கள்! அதிலே ஒரு நாய் செத்தால் என்ன கெட்டுவிடப் போகிறது?

போனார்கள்: அவர்கள். நாய் உடல் அப்படியேதான் கிடந்தது.

வெயில் ஏறிக்கொண்டிருந்தது. ஈக்கள் மொய்த்தன. சிறுவர்கள் வேடிக்கையாகப் பார்த்துவிட்டுப் போனார்கள். பெரியவர்கள் பார்த்தார்கள்; பாராமலும் போனார்கள்.

காற்றடித்தது மழை பெய்தது. இரவு வந்தது; போனது...பொழுது விடிந்தது. சூரியன் சுடும் வெயில் வீசினான்...

அந்த நாய் உடல் அங்கேயே தான் கிடந்தது. நடந்து போனவர்கள் மூஞ்சியைச் சுளித்தார்கள். சிலர் மூக்கைப் பிடித்துக் கொண்டார்கள்.

"சே, தரித்திரம்! தரித்திரம்!"

"நகரம் வரவர மோசமாகி வருகிறது. ஒரு தெரு கூட சுத்தமாக இல்லை".

"அதிலும் மழை பெய்துவிட்டால் கேட்கவே வேண்டாம். தெரு, பூராவும் ஆபாச மேடுதான்".

இப்படி இருவர்பேசிக்கொண்டு போனார்கள்.

"நகரசபை தன் கடமையைச் சரிவரச் செய்வதில்லை. பாருமேன் தெருவிலே இப்படியா கிடப்பது?"

"அப்புறம் அழகு நகரம் எப்படித்தான் அமையுமோ?"

"தெருக்களை தினம் சுத்தம் செய்வது இல்லை. அழகுபடுத்த பூங்காக்கள் அமைக்கிறார்களாம்!"

இது ஒரு சம்பாஷணை.

அவர்களும் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போனார்கள். தினந்தோறும் அப்படிப் போகத் தயங்கவும் மாட்டார்கள்.

அந்த நாய் அழுகிக் கிடந்தது அதே இடத்தில்.

ஒருவர் பார்த்தார், "அசுத்தமே வியாதிக்குக் காரணம்" என்ற போர்டு ஒன்றையும் பார்த்தார். ஏதோ எண்ணம் ஏற்படவே, முகத்திலே சிரிப்பு படர்ந்தது. அவர் வேகமாக முன்னேறினார். ஆபீசுக்குப் போனதும், ஆபீஸ் மேஜையிலிருந்த தாளை எடுத்து, ஆபீஸ் பேனாவினால், ஆபீஸ் மையை உபயோகித்து, "ஆசிரியருக்குக்

கடிதம்" எழுதினார். அதை பிரபல ஆங்கில தினசரிக்கு அனுப்பி வைத்தார். அந்த "லெட்டர் டு தி எடிட்ட"ரில், நகர வீதியின் அசுத்தம், அதனால் விளையக்கூடிய நோய் முதலியனபற்றிச் சூடாக எழுதியிருந்தார்.

அதைத் தபாலில் சேர்த்ததும், தன் கடமையைச் செய்த திருப்தி ஏற்பட்டுவிட்டது அவருக்கு.

அந்த நாய் அதே இடத்தில் தான் கிடந்தது.

"சமூக சேவை" செய்யும் மாதுசிரோமணிகள் இருவர் அவ்வழியாகப் போக நேர்ந்தது. அவர்கள் கூடை மாதிரியும், சட்டி மாதிரியும் இருந்த "வேனிட்டிபேக்"கைத் திறந்து எதையோ எடுத்து மூக்கருகில், பிடித்தபடி வேக நடைநடந்தார்கள். வாசனை படிந்த கைக்குட்டையால் வீசிக் கொண்டார்கள். "ரொம்ப டர்ட்டியாப் போச்சு!" என்று முனங்கினாள் ஒருத்தி.

"சுகாதார வார"த்துக்கு ஓடியாடி உழைத்த அம்மையார் அவள். "தெய்வத் தன்மை போன்றது சுத்தம். சுத்தம் என்பதே தனி அழகுதான்" என்றெல்லாம் உபதேசித்தவள் அவள். இன்னும் உபதேசிக்காமலா இருப்பாள்?

அவள் போனாள்.

அந்த நாய் உடல் அங்குதான் கிடந்தது.

பக்தி செய்வதைப் பிழைப்பாகக் கொண்டுவிட்ட இரண்டு உத்தமர்கள் நடந்தார்கள். மண்ணுலகத்து மோசமான வாடை அவர்கள் புலன்களைத் தாக்கியது. சிந்தனையைக் கிளறியது.

"நகரம் என்பது நரகத்தின் மறு உரு" என்றார் ஒருவர்.

மற்றவர் ஆமோதித்தார். "அதனால்தான் இராமலிங்கர் சொன்னார் - தேட்டிலே மிகுந்த சென்னையிலிருந்தால் என்னுளம்சிறுகுறும் என்று நாட்டிடை நல்லதோர் நகர்ப்புறம் நண்ணினேன்..."

"இந்த மனம் இருக்கிறதே, அதைக் குரங்கு என்றார்கள். பேய் என்றார்கள். நான் நினைக்கிறேன் - அதைக் கழுகு என்று கூடச் சொல்லலாம். "கழுகு அசுத்தங்களையும் ஆபாசங்களையும் உணர்ந்தறிந்து நாடுவது போலவே, மனமும் பறந்து பாய்ந்து

அவற்றைச் சுற்றி வட்டமிட்டு உழல்கிறது. பிணத்தின்மீது அதற்கு மோகம்"

"ஆமாம் ஆமாம். நீங்கள் சொல்வது சரிதான்...அதைச் சுடுகாட்டுக் காக்கை என்றும் சொல்லலாம்...காக்கை உகக்கும் பிணம் என்று ஒரு பாட்டு இருப்பதாக ஞாபகம்!"

அவ்விரண்டு பேரும் சொற்களைக் குத்தி இழுத்துக் குதறியபடி போனார்கள்.

நாய் நாறிக்கொண்டு கிடந்தது அதே இடத்தில்....

அவரவர் வேலை அவர் அவர்களுக்கு! அவரவர் கவலைகள் எவ்வளவோ!

வெயிலும், காற்றும், தூசியும், ஈயும் தம் தம் வேலையை ஒழுங்காகச் செய்து கொண்டுதான் இருந்தன...

அவ்வழியே ஒருவன் வந்தான். ...நின்றான்...அங்குமிங்கும் பார்த்தான்.

சற்று தள்ளி ஒரு பள்ளம் தென்பட்டது. அவன் கையில் மண் வெட்டியும் இருந்தது.

அவன் அந்த உடலை எடுத்துக் குழியில் சேர்த்தான். மண்ணைக் அள்ளிப் போட்டான். நன்கு மூடினான். தன் வழியே போனான். அப்படி ஒரு வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்டவன் இல்லை அவன். அவன் செய்த வேலைக்குக் கூலி கிடைக்காது என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். இருந்தாலும், நாறிக்கிடந்த நாய் உடல் அவன் பார்வையில் பட்டதும், ஏதாவது செய்தாகவேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

*

12

# உரிமை

மனிதர்கள் மிருகங்களாக மாறிக் கொண்டிருந்தார்கள்...

இப்படிச் சொல்வது கூடத் தவறுதான்; மனிதர்களுக்குள்ளே நித்தியமாய் நிரந்தரமாய் வைகும் மிருக சுபாவம்-குலம், குணம், கல்வி, தர்ம நியாய உணர்வுகள், சமூகக் கட்டுப்பாடு, நாகரிகம், சட்ட பயம் முதலிய வேலிகளினால் ஒடுக்கம்பெற்று, உள்ளத்தினுள்ளேயே பதுங்கிக் கிடக்கும் இயல்பு-இப்பொழுது கட்டறுத்துக் கொண்டு துள்ளி எழுந்தது; குதித்துக் கும்மாளியிடத் தொடங்கியது; தன்னிச்சையாக வெறியாட்டம் ஆடிக் கொண்டிருந்தது. இதுவே கண்ணுக்குப் புலனாகும் உண்மையாக ஊர் பூராவும் பரவி நின்றது.

முந்திய தினம் வரை-ஏன்! உணர்ச்சிகள் குமுறிக் கொதித்துச் சூறையாகச் சுழன்று பின்வெறித் தீயாக வெடிப்பதற்கு ஒரு கணத்துக்கு முந்திகூட-"நன்றாக இருந்தவர்கள்" திடீரென்று தங்களை மறந்தார்கள். உறவையும், ஊரையும் மறந்தார்கள். இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் மறந்தார்கள். நிகழ் காலத்திலே எவ்வளவு தீமை புரியமுடியுமோ-எத்தனை எத்தனை கொடுமைகள் இயற்ற முடியுமோ-என்ன என்ன அட்டூழியங்கள் செய்ய முடியுமோ, அத்தனையையும்-அனைத்தையும் உடனடியாகச் செய்தே தீர்ப்பது என்று துணிந்தவர்களாய், வெறியர்களாய், பித்தராய், பேயராய் சுழன்று கொண்டிருந்தார்கள் அந்த ஊர் மக்களில் ஒரு பகுதியினர்.

அந்த ஊர்-அதன் பெயர் நமக்குத் தேவை இல்லை. வெறி நிலைக்கு முறுகிவிட்ட அகச் சக்திகளும், அவற்றுக்கு. மேலும் முறுக்கேற்றி செயலுக்கு உந்தித் தள்ளும் புறச் சக்திகளும் தூண்டுகின்ற ஒரு சந்தர்ப்பத்தில்-அறிவிலே இருட்டும், பார்வையில் குருட்டுத்தனமும், உணர்ச்சியில் வெறித்தனமும் பெற்றுவிடக் கூடிய மனிதர்கள் வசிக்கிற எந்த ஊரிலும் இத்தகைய விளைவுகள் தான் ஏற்படும்.

கொள்ளை-கொலை-தீ!

கற்பழிப்பு-கதறல்-கயமைத்தனம்.

எதிர்த்தல்-தாக்குப் பிடித்தல்-தப்பி ஓடுதல்.

பயந்து பம்முதல்-பழி தீர்த்தல்-சரண் அடைதல்...

இப்படி எவ்வளவோ செயல்கள்...உணர்ச்சி நிறைந்த மனித உருவங்களின் உயிர் இயக்கங்கள்!-

எல்லாம் அவ்வூரிலும் நிகழ்ந்து கொண்டிருந்தன.

இரவு நேரம். எங்கும் ஆட்சி செலுத்தி வந்த இருள் அரக்கனின் அதீதமான சிரிப்புபோல பெரும் நெருப்பு அவ்வூரில் திடீர் திடீரென்று பொங்கி எழுந்தது. வான மண்டலத்தில் அகற்றமுடியாதவாறு பதிந்து கிடந்த இருட்டை சுவைத்து விழுங்க முயல்வன போல் தீ நாக்குகள் எவ்வி எவ்விக் குதித்துக் கொண்டிருந்தன. கனல் பொறிகள் பூலோகத்திலிருந்து கிளம்பிய நட்சத்திரங்கள் என்று சொல்லும்படி பரவிச் சிதறின; மினுக்கின; காற்றோடு கலந்து போயின.

காற்றிலே குழம்பிக் கலக்க முயன்ற அவலக் குரல்களை, அரற்றல் ஒலிகளை, அழுகை ஒலங்களைப் பிரித்துப் பாகுபடுத்துவது என்பது சாத்தியமே அல்ல. அச்சத்தால் ஆட்டிப் படைக்கப்பட்ட மனிதர்களின் ஓலம்-ஆண்களின் வெறிக்கூச்சல்...பெண்களின் ஒப்பாரி, கீச்சொலி, ஏச்சொலி...குழந்தைகளின் அடங்காத - அடக்க முடியாத - அழுகை... ஒளி மயமாக மாற முயன்று கொண்டிருந்த அந்த ஊர் நானாவிதஒலிகளின் அஞ்சல் நிலையமாகவும் விளங்கியது.

மனிதரின் ஆக்கல் திறமைக்கு எடுத்துக் காட்டுகளாகத் தலை நிமிர்ந்து நின்ற வீடுகளும் பிறவும் அதே மனிதரின் அழிக்கும் சக்தியை விளம்பரப்படுத்துகின்ற சாதனங்களாக மாறிக் கொண்டிருந்த சூழ்நிலையிலே -

ஒதுங்கி நின்ற ஒற்றை வீடு ஒன்று.

அதனுள் பயந்து ஒடுங்கிக் கிடந்த மனித உருவங்கள் இரண்டு. ஒன்று ஆண்; ஒன்று பெண்.

அவன் கணவன். அவள் மனைவி. வாழ்க்கைத் துணைவர்கள்!

கொடிய சோதனையாக எதிர்ப்படுகிற வாழ்க்கையில், தனித்தனியே பயந்து செத்துக் கொண்டிருக்கிற இரண்டு பேர் ஒருவருக்கு ஒருவர் துணையாக முடியுமா என்ன?

எப்படியாயினும், அவள் தனக்குத் துணையாகத் தன் கணவனையே நம்பியிருந்தாள். அவன்?

வெளி உலகத்துப் பயங்கர ஓசைகளைக் காற்றெனும் தூதுவன் கொண்டுவந்து சுவரில் மோதி அடிக்கிறபோது-

அலறல்களும் அபாயக் கூச்சல்களும் வெறி ஒலிகளும் விம்மி எழுந்து பரவிப் பாய்கையில், அவற்றில் ஒரு பகுதியை சன்னல் வடிகட்டி உள்ளே செலுத்தும் போது-

அதே தெருவில் காலடி ஓசைகள் திடும்திடுமென ஒலிக்கும் போது-

வழியோடு போகிற வீணர்களில் எவராவது விளையாட்டாகக் கைத்தடியைச் சுழற்றிச் சுவர் மீது அடிப்பதனாலோ, கல்லை எடுத்து ஓட்டின் மேலே வீசுவதனாலோ ஒலி எழுகிறபோது-

இவ்வாறு; இயல்புக்கு விரோதமான ஓசைகள் அலைமோதும் போதெல்லாம்,

அவன் உள்ளத்தில் பெரும் பயம் தாக்கியது. உடல் நடுங்கியது. அவன் கண்கள் வீட்டினுள்முட்டி மோதி, மோட்டை எட்டிப் பிடித்து, சுழன்று தவித்து, முடிவில் அவள்மீது படிந்தது.

அவள் ஒரு மூலையில் "குறுகுறு வென்று" குந்தியிருந்தாள். முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, சேலையை இழுத்துப் போர்த்திக் கொண்டு, ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். பயம் எனும் பண்பின் பரிணாமமாகக் காட்சி அளித்த அவளுடைய கண்கள் திகிலுற்ற சிறு பிராணியின் கண்களைப் போலவே மிதந்து புரண்டு கொண்டிருந்தன. வெளியே "திம் திம்" என்று சத்தம் எழுகிற போது

அவள் தேகம் பதறியது. அச்சமயத்தில் அவள், உதறலெடுத்து ஒடுங்கி நிற்கும் முயல் குட்டி மாதிரியே காணப்படுவாள். தனது கணவனோடு ஒண்டி இருந்தால் கொஞ்சம் தெம்பாக இருக்கும் என அவள் எண்ணியது உண்டு. ஆரம்பத்தில் அவள் அப்படிச் செய்தபோது, பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த அவன் சீறி விழுந்தான். தான் பயப்படாமல் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்குப் பாடுபட்டான் அவன்.

"சீ, என்ன இது சும்மா சும்மா இடிச்சுக்கிட்டு! அப்புடி என்ன பயம் இப்ப? சுத்த வெருவுணி ஆக இருக்கியே, போயி அந்த மூலையிலே கிட!" என்று அவன் சிடுசிடுத்தான்.

அவனுக்கும் பயம்தான் என்பதை அவள் அறியாமல் இல்லை. அவனுடைய பார்வையே அதைக் காட்டிவிட்டதே! அதனால்தான் அவன் அவள் பக்கம் பார்வை எறிவதற்குக் கூசினான். ஆயினும், அவளைப் பாராமல் இருக்கவும் இயலவில்லை. ஒரே அறையில் கிடந்து ஒரே விதமான உணர்வுகளை அனுபவிக்க நேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் ஏறெடுத்தும் பாராமல் இருந்து விடுவது என்பது எவ்வளவு நேரத்துக்கு சாத்தியமாகும்?

நேரம் பறக்கவுமில்லை, பாய்ந்து செல்லவுமில்லை - அவர்களைப் பொறுத்தவரை. ஆகவே, அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனைகளுக்கு ஒரு கால அளவு இல்லை என்றே தோன்றியது. அதனால் அவர்களுடைய தேகத்தின் நரம்புகள் எல்லாம் - அவற்றிலே விளையாடும் உணர்ச்சிகள் எல்லாம் - முறுக்கேற்றப்பட்டு, எந்தச் சமயத்திலும் சீர்கெட்டு நிலைகுலைந்து விடக் கூடிய தன்மையில் தான் இருந்தன. சிறு சலசலப்பு கூட, தெருவோரத்து நாயின் வெறும் குரைப்புகூட, எங்கோ யாரோ எவரையோ கூவி அழைக்கும் கூச்சல்கூட அவர்களுடைய உடல்களைக் குலுக்கி எடுத்தது. எதிர்பாராத வேளையிலே காற்று, குடிபோதையில் தள்ளாடுகிறவன்போல், ஆடி அசைந்து கதவின்மீது மோதுகிற போது-கதவு, லேசாகக் குலுங்கிச் சிற்றொலி எழுப்புகிறபோது - அவள் பதறிப் போய் கதவைப் பார்ப்பாள். அப்புறம் அவனைப் பார்ப்பாள். அவளைப் பார்க்கும் அவனோ மண்ணையும் முகட்டை பார்க்க முயலுவான்.

இவ்வாறு பத்தயத்தினுள் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் எலிகள் மாதிரிக் கிடந்த அவர்களுடைய வீடு அடக்கமான பாதுகாப்பு-நல்லதொரு அரண்-சுகமான தங்குமிடம் எனும் தகுதியை இழந்து பயங்கரமான சிறை மாதிரி-எந்த நேரத்திலும் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய இடிந்த கோட்டை மாதிரித்தான் இருந்தது. அதனுள் நெருப்பின் மீது அமர்ந்து விட்டவர்கள் போல் துயர் அனுபவித்துக் கொண்டிருந்த - என்ன நேரும் என்று தெரியாத போதிலும் எதையோ எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் போல்சிரமப்பட்டுக் கொண்டிருந்த - அவ்விருவரின் இதயத்தின் மீது விழுந்த பலத்த அடிப்போல், வயிற்றில் விழுந்த நெருப்புத் துண்டுப் போல், கதவின் மேல் விழுந்தது கனத்த உதை. "ஏய், உள்ளே யாரு?" என்ற உறுமல் தொடர்ந்தது.

அவள் சுவரோடு சுவராகிவிட ஆசைப்பட்டவள் மாதிரி மூலைக்குள் முடங்கினாள். அவன் மிரள மிரள விழித்தான்.

தொடர் இடி எனச் சட சடத்தது கதவின் மேல் விழுந்த தாக்குதல். "மரியாதையாகக் கதவைத் திறக்கிறீங்களா இல்லியா? நாங்களாத் திறந்து கொண்டு உள்ளே வந்தால், அப்புறம் அவ்வளவுதான்! உள்ளே இருக்கிறது யாராயிருந்தாலும் சரி-எத்தினி பேராயிருந்தாலும் சரி - குளோஸ்தான். ஒரே போடு! மண்டையைக் குழைச்சு மாவிளக்கு ஏத்திப் போடுவோம். ஆமா" என்ற பயமுறுத்தல் அழுத்தமாய், கனமாய், வெறிவேகத்தோடு வந்தது.

விளக்கு மங்கலாக எரிந்து கொண்டுதான் இருந்தது. ஆயினும் பேய்த்தனமான கும்மிருட்டு, தாங்க முடியாத - தள்ளி விலக்கிடவும் முடியாத - பாரம் மிகுந்த போர்வை மாதிரித் தங்கள் மீது கவிந்து, தங்களையே அமுக்கி திக்குமுக்காடச் செய்வதாக உணர்ந்தார்கள் அவ்விருவரும்.

கதவு பலமான தாக்குதலை ரொம்ப நேரமாகத் தாங்கி நிற்க முடியாமல் நிலைகுலைந்து இற்று வீழ்ந்தது. திடீரென்று ஏற்பட்ட வழியினூடாகக் காற்று வேகமாகப் பாய்ந்ததும், அவளுடைய தேகம் சிலிர்த்து நடுங்கியது. அது காற்றினால் மட்டுமே ஏற்பட்டதன்று.

இடிந்து சிதறிய வாசலின் நடுவே நிமிர்ந்து நின்றது மனித உருப் பெற்றிருந்த மிருகம். பிரகாசம் இல்லாத ஒளியில் அது நெடிதுயர்ந்து

காணப்பட்டது. பின்னால் வெளி உலகில் எங்கும் நிறைந்து கவிந்து கிடந்த காரிருள் அதன் மூர்க்கத்தன்மையை அதிகப்படுத்திக் காட்டியது, இருட்டில் வேறு யாராவது நின்றார்களா - எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் - இது எதுவும் உள்ளே அஞ்சிக் கிடந்த இரண்டு பேருக்கும் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள அவர்கள் ஆசைப்படவுமில்லை.

முன்னால் ஆஜராகி நின்ற ஒருவனே அவர்களைச் சாகடிக்கும் சக்தி பெற்றவனாக இருந்தான். அவனுடைய சக்தியைவிட அதிக வலு உள்ளதாக இருந்தது அவர்களுக்குள்ளிருந்து அவர்களை ஓயாது அரித்துக் கொண்டிருக்கும் பயம் எனும் உணர்வு.

அவன் அவர்களையே பார்த்து நின்று பல்லைக் காட்டினான்.

பற்களைக் காட்டிக்கொண்டு, பயமில்லாமல், எதற்கும் துணிந்துவிட்ட தோற்றத்தோடு முன்னேறுகிற வெறிநாய் மாதிரித்தான் அவனும் நடந்து கொண்டான். அவன் முகத்தைப் பார்ப்பதற்கே பயமாக இருந்தது. அவன் என்ன செய்வானோ என்ற திகைப்பும், அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான் எனும் நினைப்பும் அவளை உலுக்கின. அவள் தன் கணவன் பக்கம் நகர முயன்றாள். அவனோடு சேர்ந்து இருந்தால் சிறிது தைரியம் ஏற்படாதா என்ற ஆசைதான் காரணம்.

அவர்களை மாறி மாறிப் பார்த்துக்கொண்டே மெதுவாக முன்னால் அடி எடுத்து வைத்த வெறியன் கத்தினான்: "ஏய் நகராதே! யாரும் நகரக் கூடாது. கையைக் காலை அசைத்தீர்களோ, அவ்வளவுதான்!"

அவனது வெறும் அதட்டலே அவளைத் தரையோடு தரையாக ஒட்டிக்கொள்ளச் செய்யும் வன்மை பெற்றிருந்தது. அவள் உடல் நடுங்கியது. உள்ளம் பதைபதைத்தது.

அவளையே வைத்த கண் வாங்காது கவனித்தான் அவ்வெறியன். அவன் உள்ளத்தில் தீய எண்ணம் கிளர்ந்தெழுந்தது என்பதை அவனுடைய கண்களில் பளிச்சிட்ட புதிய ஒளி காட்டிக் கொடுத்தது. தனது பருமனான உதடுகளை அவன் நாவினால் தடவிக் கொண்டான். அவளை நெருங்க நகர்ந்தான்.

அவள் பயங்கரமாய் கிரீச்சிட்டு அலறினாள். அந்தக் கூச்சல் அவ் வெறியனைக் கூட உலுக்கி நிறுத்தியது ஒரு கணம். அவளுடைய கணவன் பயந்து வெலவெலத்துப்போனான். அவள் அவனைப் பார்த்தாள் - பயத்தோடு, பரிதாபகரமாக, வேதனையோடு. அவன் உதவி புரிய மாட்டானா என்ற ஏக்கத்தோடு - உதவி புரியவேண்டும் என்ற கெஞ்சுதலோடு - வந்த பார்வை கணவன் என்கிற அந்தஸ்து பெற்றிருந்த அவன் உள்ளத்திலே உரிய கிளர்ச்சியை உண்டு பண்ணவில்லை. தன்னல உணர்வுதான் தலையெடுத்துநின்றது அவனிடம்.

அவன் தலையைத் தூக்கி நெடுகிலும் கவனித்தான். வெளியே நின்று எவரோ எட்டிப் பார்ப்பதுபோல் தோன்றியது அவனுக்கு அறையினுள் நின்ற முரடன் செயல் திறம் இழந்துகிடந்த பெண்ணையே காமக்கனல் ஜொலிக்கும் வெறிக் கண்களால் நோக்கியபடி நின்றான். தன்னிடமிருந்து அவள் தப்பிவிடமுடியாது என்ற நம்பிக்கையோடும். தனக்குக் கிட்டப்போகிற சுவைமிகுந்த விருந்தைப் பற்றிய ஆசை நினைப்பு எழுப்பிய மகிழ்ச்சியோடும் அவன் அவளது உடலை உடலின் ஒவ்வொரு அங்கத்தையும் - பார்வையால் ருசித்துக் கொண்டிருந்தான்.

அவள் தனது தைரியத்தை எல்லாம் பிடித்து இழுத்து ஒன்று திரட்டிக்கொண்டு எழுந்து தன் கணவன் அருகே வந்துவிட ஆசைப்பட்டாள்; முயற்சித்தாள்.

அவள் கணவன் அசைந்தான்.

தனது காரியத்துக்குச் சாதகமாக இருக்கட்டும் என்று தானோ - அல்லது, அவன் திடீரென்று தன்னைத் தாக்கினாலும் தாக்கிவிடக்கூடும் என்ற பயத்தினால் தானோ - அல்லது, எதற்கும் முன்னெச்சரிக்கையோடு பாதுகாப்பாக இருப்பது நல்லது என்ற நினைப்பினால் தானோ என்னவோ, அவ்வெறியன் முதலில் கணவனைக் கவனித்து ஒரு முடிவு கட்டிவிடவேண்டியது அவசியம் என்று தீர்மானித்தான். "ஏய், என்னடா நீ?" என்று கத்திக் கொண்டு அவனை நோக்கி அடி எடுத்து வைத்தான். கோரமான இரும்பு முட்கள்போல் வளைந்திருந்த விரல்களை நீட்டி அவனுடைய கழுத்தை இறுகப்பற்றி நெரித்துக் கொல்லத் துணிந்தவன்போல் அம் முரடன் முன்னேறினான். "என்ன முறைக்கிறே?" என்று உறுமினான்.

இயல்பாகவே பயந்து செத்துக் கொண்டிருந்த கணவன் இப்போது விதிர் விதிர்த்தான். முரட்டு நாயைக் கண்டதும் அஞ்சி ஒடுங்கித் தனது வாலைச் சுருட்டிப் பின்கால்களுக்கு நடுவே எவ்வளவு திணித்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவுக்குத் திணித்துக் கொண்டு, கண்களில் பணிவு காட்டி, தலையைத் தாழ்த்தியபடி ஒதுங்கி ஒதுங்கிப் போகும் அப்பாவி நாயின் பரிதாபத் தோற்றத்தை நினைவு படுத்துவதாக இருந்தது அவனுடைய அவ்வேளையத் தோற்றம்.

தற்காப்பு உணர்வும், தப்பிப் பிழைக்கவேண்டும் எனும் ஆசையும் அவன் உடலில் புதியதோர் சக்தியைப் புகுத்தின போலும்! இல்லையெனில் அவன் அவ்விதம் நடந்து கொள்வது எவ்வாறு சாத்தியமாகியிருக்கக்கூடும்?... அவன் குபீரென எழுந்து அம்பு போல் வேகமாகப் பாய்ந்தான். திறந்து கிடந்த வாசலின் வழியே ஓடி இருளினுள் மறைந்து விட்டான்.

தன்னைத் தாக்குவதற்காகத் தான் அப்படி அவன் வில்விசை திரித் துள்ளி எழுகிறானோ என்று ஒருகணம் மலைத்து நின்று ட்ட முரடன் அவனுடைய செயலைக் கண்டதும் கடகட வென்று ரித்தான். உற்சாகத்தோடு ரசித்து வெறித்தனமாகச் சிரித்தான்.

கணவனின் போக்கு மனைவியின் உயிரைப் போக்கடிக்கக் கூடிய அதிர்ச்சியாகத் தோன்றியது. அவள் உள்ளம் செத்துவிட்டது. அலறி அடித்து அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு.

தன்னைத் தடுப்பவர் எவருமில்லை என்ற துணிவோடு, உற்சாகத்தோடு, தீமைபுரியத் திட்டமிட்ட வெறியன் அவள்மீது கைவைத்தான்.

தீக் கங்கு மேலேபட்டதுபோல் துடித்து அலறினாள் அவள். தன்னைவிட்டுவிடும்படி கதறினாள்.

அவனோ அவள் கூச்சலையும் துயரத் துடிப்புகளையும் வேடிக்கையாகக் கண்டு நகைத்து அவளையே பார்த்தபடி இருந்தான் ஒருகணம். பொங்கி எழுந்த வெறியோடு, உணர்ச்சிக் கொதிப்போடு, மிருகத்தன்மையோடு அவன் அவளைப்பற்றி இழுத்தான்; தழுவ முயன்றான்.

அப்பொழுது அவன். எதிர்பாராத - எதிர்பார்த்திருக்க முடியாத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அவன் மண்டையில் படாரென்று ஒரு அறை விழுந்தது. அவன் முதுகிலும் பட்டது தொடர்ந்து.

அவன் வேதனையோடு திரும்பிப் பார்த்தான். அவனுடைய பிடி சோர்ந்து தளரவும், அவள் விலகி விழுந்தாள். பதறிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அவள் பார்வை கையில் தடிஏந்தி வெறியனைத் தாக்கி நின்ற மனிதனைக் கவனித்தன.

முன்பு அவனைத் தெருவிலும், தோட்டத்திலும் அங்குமிங்கும் அநேக தடவைகள் சந்தித்திருப்பதாக அவளுக்குப் பட்டது. அதற்குமேல் எண்ணிக் கொண்டிருக்க அவகாசமில்லை அவளுக்கு. அங்கிருந்து தப்பி ஓடவேண்டும் என்று அவளுடைய உள்ளுணர்வு தூண்டியது. ஓடமுடியுமா; ஓடினால் எங்கே போவது; இருட்டில் பயம் இல்லாமல் போகமுடியுமா என்று சந்தேகக் குமிழிகள் முகிழ்த்தன அவள் உள்ளத்தில்.

வந்தவனை எதிர்க்கவேண்டும் என்று எண்ணி, அந்த எண்ணத்தை அவன் செயல்படுத்துவதற்கு முன்னதாகவே, தடியின் வேகமான வீழ்ச்சிக்கு எதிரே குறுக்கிட்டது முரடனின் முகம். அந்த அறையைச் சமாளிக்க முடியாமல் அவன் நிலை குலைந்து விழுந்தான்.

அவன் செத்தானா, அல்லது மயங்கி விழுந்தானா என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாதவனாய், புதியவன் அவளைப் பார்த்தான். அவன் பார்வையிலே வெறி இல்லை; பெண்மையைச் சுவைக்க வேண்டும் என்ற பசி இல்லை.

அது அவளுக்குப் புரிந்தது. ஆயினும் இவன் என்ன செய்வானோ என்ற உதைப்பு அவள் உள்ளத்தில் இல்லாமல் இல்லை.

"ஊம், சீக்கிரம் இங்கிருந்து தப்பி ஓடுவதே நல்லது. இங்கேயே இருந்தால் என்னென்ன ஆபத்து வருமோ! யாருக்குத் தெரியும்?" என்றான் அவன். அக்குரலில் உறுமலோ, கர்ஜனையோ, அதிகார அதட்டலோ இல்லை.

அவளுக்குக் கால்கள் எழவில்லை. அவள் தேகம் பூராவும் படபடவென்ற நடுக்கம் பரவியிருந்தது. நிற்கமுடியாமல் அவள் கீழே விழுந்து விடுவாளோ என்று தோன்றியது. தானாகவே தனியாகச் செயல்புரியும் சாமர்த்தியம் எதுவுமே பெற்றிராத சிறியதொரு பிராணியைப் போல் - ஆற்றல் இல்லாத குழந்தையைப் போல் - தான் அவளும் விழித்துக் கொண்டிருந்தாள்.

சற்றே தயங்கிய அவன் பிறகு துணிந்து கை நீட்டி அவள் கையைப் பிடித்து அவளை இழு;ததுக் கொண்டு வெளியேறினான். அவன் நடையிலே வேகம் இருந்தது. அவன் பிடியிலே உறுதி இருந்தது. அவன் கண்களிலே வஜ்ர ஒளி கனல் தெறித்துக் கொண்டிருந்தது.

அவளுக்கு பயமாக இருந்தது. அவளுடைய பயம் சிறிது சிறிதாக அகன்று கொண்டிருப்பது போலவும் தோன்றியது. அவள் அவன் இழுத்த இழுப்பின்படி இயங்கினாள்.

வெளி உலகத்து இருள் அவர்களையும் விழுங்கியது.

## 2

செல்லம்மா கண் விழித்தபோது,

ஏதோ பயங்கரமான துர்க்கனவின் பேய்ப் பிடியிலிருந்து விடுபட்டு எழுந்தது போன்ற உணர்வு அடைந்தாள். ஆயினும் முந்திய இரவில் நிகழ்ந்தவை எல்லாம் வெறும் கனவுகள் அல்ல என்ற நிச்சயம் அவளுக்கு இருக்கத்தான் செய்தது. அதை உறுதிப்படுத்தியது அவள் கிடந்த புதிய இடம்.

தங்கள் வீட்டில் தானும் தன் கணவனும் அஞ்சி நடுங்கிக் கிடந்ததும். தடியன் புகுந்ததும், தன்னைக் காப்பாற்ற வேண்டிய கணவன் "அவள் விதிப்பயன் அவளுக்கு!" என்று எண்ணியவன் போல் ஆபத்து நிலையில் விட்டுவிட்டு ஓடிப்போனதும் அவள் மறந்து விடக்கூடிய அனுபவங்களாக இல்லை. அவை, தீயினால் சுட்ட வடுக்கள் மாதிரி, அவள் நினைவில் ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிந்து துயருறுத்திக் கொண்டிருந்தன.

அந்நியன் ஒருவன் தைரியமாக வீட்டினுள் புகுந்து அவளுக்குப் பாதுகாப்பு அளிக்கவராது இருந்திருப்பின் அவளுடைய கதி என்ன ஆகியிருக்கும்? அதை நினைக்கவும் அவளுடைய உடல் நடுங்கியது. இதயம் திக்திக் கென்று அடித்துக்கொண்டது.

"நல்ல வேளை! தெய்வம் தான் அந்த நேரத்துலே அவரை அங்கே கொண்டு வந்து விட்டிருக்கணும்'' என்று அவள் எண்ணினாள். " அவரு நல்லவரு தான்" என்று நன்றியுடன் நினைத்துக் கொண்டாள்.

வீட்டினுள்ளிருந்து அவளை இழுத்து வந்து இருட்டில் எங்கெங்கோ அவன் அலையவைத்தபோது செல்லம்மா அவனைப் பற்றி மோசமாகத் தான் எண்ணினாள். முதலாவது முரடனைப் போலவே இவனும் கெட்ட எண்ணத்தோடு செயல் புரிகிறவனாகத் தான் இருப்பான் - எவ்வேளையிலும் இவன் தன்னை பலாத்காரம் செய்யக்கூடும் - என்று அவள் நினைத்தாள். அவன் அவசரப்படுத்திக் கொண்டிருந்தான். அவளால் அவனுக்குச் சமமாய் வேகமாக நடக்க இயலவில்லை. பயமும் பலவீனமும் அவளைத் தள்ளாடச் செய்தன. இருட்டு வேறு. சரியான தடமும் இல்லை. அடிக்கடி வழியில் கிடந்த ஏதேதோ அவள் பாதங்களை "சுகம் விசாரித்து" தொல்லை கொடுத்தன. கல்லும் முள்ளும் தங்கள் சக்தியைக் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. ஒரு இடத்தில் கல் ஒன்று காலில் கடுமையாகத் தாக்கி விடவே, அவள் "அம்மா!" என்று ஓலமிட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். ரத்தம் வருவதாகத் தோன்றியது. சகிக்கமுடியாத வலி. அவனோ "உம்...உம். சீக்கிரம்!... சத்தம் போடாதே... எழுந்து மெதுமெதுவாக நடந்து பாரு" என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டது. "நான் எக்கேடும் கெடுகிறேன். என்னை சும்மாவிட்டு விட்டுப் போனால் போதும்" என்று முனங்கினாள். அவன் "இவ்வளவு சிரமப்பட்டுவிட்டு மறுபடியும் உன்னை ஆபத்திலே சிக்கவிடுவது நியாயமாகாது" என்று சொன்னான்...அவள் வலியினாலும் அசதியாலும் சோர்வுற்று அங்கேயே படுத்து விட்டாள். அவன் காத்து நின்று பார்த்தான். காலதாமதம் வீண் ஆபத்துக்களுக்கே வழி வகுக்கும் என்று கருதியதால், அவன் அவளை அணுகிக் குனிந்தான். அவனும் முரடன் மாதிரியே நடந்துகொள்வான் என்று எண்ணியிருந்த அவள் அவனுடைய செய்கையைத் தவறாகக் கருதி அச்சத்தால் அலறினாள். மூர்ச்சையானாள்...அதுவும் நல்லதே என்று நினைத்து அவன் அவளை மெதுவாகத் தூக்கி எடுத்துச் சுமந்து சென்றான். பத்திரமான இடம் ஒன்றில் அவளைத் தூங்க விட்டுவிட்டு அவன் போய்விட்டான்...

பாதி வழியிலேயே அவள் விழித்துக்கொண்டாள். அவன் தனக்குத் தீங்கு நினைக்கவில்லை. நல்லது செய்யவே எண்ணியிருக் கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. எனினும் அவள் மயங்கிக் கிடப்பதுபோலவே நடித்தாள் பாதுகாப்பான இடத்தில் அவளைச் சேர்த்துவிட்டு, அவன் வெளியே சென்று கதவைச் சாத்திய பிறகுதான்

அவள் எழுந்து உட்கார்ந்தாள். இனி என்ன நேருமோ என்ற பீதி அவளுக்கு இருந்தது. மனக்கலக்கமும் உணர்ச்சிக் குழப்பமும் அவளை அசத்தின. தூக்கம் வராது - தன்னால் தூங்கமுடியாது - என்று எண்ணிக் கொண்டிருந்த அவளுக்கு அமைதி அளிப்பதற்காக, தூக்கமும் எப்படியோ வந்து அருள் புரிந்தது.

துயில் கலைந்த செல்லம்மா தரையில் கிடந்தபடியே சுவர்களையும் கூரையையும் கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு துவாரத்தின் வழியாக உள்ளே பிரவேசித்த சூரிய ஒளிக்கற்றையில் மிதந்த தூசிப்படலத்தை அவள் சிரத்தையோடு கவனித்தாள். நேரம் என்ன இருக்கும் என்று அவளுக்குத் தெரியாது. ''என்ன ஆகியிருந்தால்தான் என்ன''? நான் என்ன செய்யப்போகிறேன்! என்ற நினைப்பு நெஞ்சில் வலி ஏற்படுத்தியது. அவளுடைய கணவன் ஒரு கோழையாக இல்லாதிருந்தால்! அல்லது அவனும் அவளுடனேயே இருந்து அவளுக்காகப் போராடி அம் முயற்சியிலேயே உயிர் விட்டிருந்தால், அவளும் உடன் சாகநேரிட்டிருந்தால்...ஆ, எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! - தானாகவே பொங்கி எழுந்து வெளிப்பட்டது ஒரு பெருமூச்சு.

அப்பொழுது கதவு திறந்த ஓசை எழுவே, அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். அவன்-அவளைக் காப்பாற்றியவன்-தான். வந்தான். அவள் எழுந்து நின்றாள்.

அவன் அவளுக்கு முன்னால் இரண்டு "பொட்டலங்"களை வைத்தான். "உனக்கு சாப்பிடுவதற்கு" என்றான். பிறகு சொன்னான். "உனக்கு இங்கே எவ்விதமான தொந்தரவும் ஏற்படாது. நீ பயமோ கவலையோ இல்லாமல் வாழலாம். இதை உன் வீடாகவே எண்ணிக்கொள்ளலாம். உனக்கு வேண்டிய சாமான்கள், பாத்திரங்கள் எல்லாம் இப்ப வந்துசேரும்..."

அவள் எதுவும் பேசவில்லை. அவளுக்குத் தனிமை அவசியத்தேவை என்று உணர்ந்த அவன் அங்கிருந்து போய்விட்டான்...

செல்லம்மாவின் புதுவாழ்க்கை சாரமற்றதாகத்தான் இருந்தது. அவள் தனக்கு உதவியவனைப் பற்றி அறிய வேண்டியவற்றை எல்லாம் அறிந்து கொண்டாள். அவன் பெயர் காத்தலிங்கம் என்று

தெரிந்தவுடன், அவன் குணத்துக்கும் போக்கிற்கும் பொருத்தமான பெயர் அவனுக்கு அமைந்திருந்ததை எண்ணி அவள் அதிசயித்தாள்.

- காத்தலிங்கம் நல்லவன். பலசாலி. அக்கிரமங்களையும் அநியாயங்களையும் கண்டிப்பதற்குப் பின்வாங்காதவன். அவனாக வம்புச் சண்டைக்குப் போகமாட்டான். உண்மையிலேயே உதவி தேவைப்படுகிற யாருக்காவது பரிந்து சண்டை போடத் துணிந்தால், கடைசிவரை எதிர்த்து நின்று போராடத் தயங்கமாட்டான். அவன் வியாபார விஷயமாக, அவள் இருந்த ஊருக்கு அடிக்கடி வருவது உண்டு. அவள் கணவன் முத்துமாலையை அவனுக்குத் தெரியும்.

முத்துமாலை மனைவியைத் தனியாக விட்டுவிட்டு ஓடிப்போன இரவில், காத்தலிங்கம் தற்செயலாக அவ்வீட்டருகே வந்தவன், உள்ளே பயங்கரமான அலறல் எழுவதைக் கேட்டு எட்டிப்பார்த்தான். நிலைமையை எளிதில் புரிந்துகொண்டான். அபலைப் பெண்ணைத் துன்பப்படுத்தத் துணிந்த அயோக்கியனுக்கு சரியான பாடம் கற்பிக்க முன்வந்தான்.

"மனித உணர்வுள்ள எவனும் செய்யக்கூடியகாரியம்தான் இது" என்று அவன் கூறினான். அவள் அவனை "தெய்வம் போல அப்படி இப்படி" என்று துதித்து நன்றி கூற முயன்றபோதுதான் அவன் இதைச் சொன்னான்.

அவளது கணவனின் போக்கைப் பற்றி அவள் மூலம் அறிந்ததும், "முத்துமாலை அப்படிச் செய்திருக்கக்கூடாது" என்று மட்டுமே அவன் சொன்னான். அவனை அவள் முன்னிலையில் பழிக்கவோ பரிகசிக்கவோ அவன் விரும்பவில்லை. "அவனைத் தேடிப் பிடித்து உன்னிடமே கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்றும் அவன் அறிவித்தான்.

செல்லம்மா வசதியாக வாழ்வதற்குத் தேவையான அனைத்தும் குறைவில்லாமல் கிடைத்துக் ரொகண்டிருந்தன. எனினும் அவள் மனம் நிறைவுறவில்லை. அவள் சதா தன் கணவனைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தாள். அவனது குணத்தையும் போக்கையும் எண்ண எண்ண அவன்மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு வளர்ந்தே வந்தது.

அவன் தன்னைத் தேடித் திரிவான்; எப்படியும் திரும்பி வந்துவிடுவான் என்று அவள் ஆசைப்பட்டாள். "இன்று வருவான்...

இன்று வந்தேவிடுவான்" என்று கனவு வளர்த்து வந்தாள். ஆனால், ஓடிச் சென்ற ஒவ்வொரு தினமும் அவள் ஆசையோடு வளர்த்த கனவுப் பயிரைத் தீய்த்துச் சென்றது.

முன்பு அவள் குடியிருந்த ஊரில் வெடித்த வெறிக்கூத்து ஒருவாறு அடங்கியது. அங்கு சுட்ட மண்ணும் குட்டிச் சுவரும், நாசவேலையை நினைவுபடுத்தும் சின்னங்களும் மலிந்து கிடந்தன. அவற்றின் நடுவே அமைதி கொலுவிருக்கத் தொடங்கியது. புத்துயிர்ப்பு சிலிர்த்தது. புது மலர்ச்சி இனிமை பரப்பியது. மீண்டும் அவ்வூரின் வாழ்க்கை பழைய தடத்திலே நகரலாயிற்று.

காத்தலிங்கம் அடிக்கடி சகல நிகழ்ச்சிகளையும் அவளிடம் அறிவித்து வந்தான். முத்துமாலை வந்துவிடலாம் என்றுதான் அவனும் எண்ணியிருந்தான். நாட்கள் நகர நகர அவனுடைய நம்பிக்கையும் தேய்ந்து கொண்டிருந்தது. "முத்துமாலை இப்படிப்பட்டவன் என்று நான் நினைத்ததே இல்லை" என்று மட்டுமே அவன் அவளிடம் சொன்னான்.

அவனுக்கு அநாவசியமான சுமையாக இருக்கக்கூடாது என்று எண்ணிய செல்லம்மா பலவித அலுவல்கள் செய்து பணம் தேடுவதில் மும்முரமாக ஈடுபட்டாள். என்றுமே உழைப்புக்கு அஞ்சியதில்லை அவள். இருப்பினும், அவனுடைய உதவியும் அவளுக்குத் தேவையாகத்தானிருந்தது.

மாதங்கள் ஓடின. செல்லம்மாவின் உள்ளத்திலே கணவனைப் பற்றிய வெறுப்பும் விரோதமும் முற்றிவிட்டன. அவளுக்குக் காத்தலி ங்கத்தின்மீது பற்றுதலும் பாசமும் ஏற்பட்டிருந்தன.

"கட்டின பெண்டாட்டியைக் காப்பாற்ற முடியாதவன் புருஷனா? அவனை நான் ஏன் புருஷன் என்று மதிக்கவேண்டும்? நான் இருக்கிறேனா, செத்தேனா என்று கவலைப்படாமல் எங்கோ போய்விட்டவனைப் பற்றி நான் ஏன் பக்தியோடும் உரிமையோடும் எண்ணிக் கொண்டிருக்கவேண்டும்?" என்று அவள் நினைத்தாள். "இனி அவன் என் புருஷனுமல்ல. நான் அவன் மனைவியுமல்ல. அவன் என்மீது உரிமை கொண்டாட, அவன் கட்டியதாலி இருக்கிறதாக்கும், உரிமை கொண்டாடுகிறவன் தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டியது அவசியமா இல்லையா? மனைவி கணவனின் உடைமை என்றால், தனக்கு உரியவளை எந்த நெருக்கடியிலும் எப்பாடு பட்டாவது காப்பாற்ற வேண்டிய கடமை

அவனுக்கு உண்டுதானே? கடமை தவறியவன் பிறகு உரிமை கொண்டாட முன்வந்தால் அதில் ஏதாவது நியாயம் இருக்க முடியுமா என்ன?"...

எண்ணி எண்ணித் தனக்கென ஒரு தடம் அமைத்துக் கொண்டு மேலும் முன்னேறிச் சென்ற அவளுடைய சிந்தனை அப்படித்தான் வாதித்தது. அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். அவளைக் காப்பாற்றத் திராணியோ தெம்போ பெற்றிராத கோழை முத்துமாலை கட்டியிருந்த "உரிமைச் சரடை" - தாலியை அறுத்து, தலையைச் சுற்றி விட்டெறிந்தாள் செல்லம்மா.

ஆயினும் அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கிவிட வில்லை. நாட்கள் சாரமற்ற முறையிலே ஓடிக்கொண்டுதான் இருந்தன.

செல்லம்மா காத்தலிங்கத்தைப் பற்றி நன்றியுடன் எண்ணிவந்தாள் முதலில். நாளாக ஆக அவனைப் பற்றி நினைப்பதிலும் அவனைப் பார்ப்பதிலும் அவளுக்கு ஒரு ஆனந்தம் ஏற்படலாயிற்று. அவன் உதவியைப் பெறுவதிலும் அவனோடு பேசிக் கொண்டிருப்பதனாலும் அவளுக்குத் தனியானதொரு மகிழ்ச்சி பிறந்தது. அவன்மீது தனக்கு ஆசை வளர்ந்து வருகிறது என்பதை அவளாலேயே மறுக்கவோ மறைக்கவோ முடியாத கட்டமும் வந்து சேர்ந்தது.

அவள் பெண். அவள் வாழத்தான் விரும்பினாள். வாழ்வில் பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு துணை அவளுக்குத் தேவை. அன்பு காட்டவும் அவளிடம் அன்பு செலுத்தவும் ஒரு ஆண் தேவை.

காத்தலிங்கம் அவள் மன நிலையைப் புரிந்து கொண்டான். அவளடைய உளப் பண்பையும் உணர்ச்சிகளையும் உணர்ந்து போற்றக் கூடியவன் அவன்.

ஆகவே அவர்கள் இருவரும் வாழ்க்கையில் நல்ல துணைவர்கள் ஆனார்கள்.

## 3

ஒரு வருஷத்துக்குப் பிறகு ஒருநாள்...

அந்த வீட்டின் வாசலில் வந்து நின்றான் ஒருவன். மெலிந்து சோர்ந்து, அழுக்கடைந்த வேஷ்டியும் சிக்குப்பிடித்த தலையும்

குழிவிழுந்த கன்னங்களும் கட்டை கட்டையாக இருந்த தாடியும் உடைய உருவம்.

திண்ணையில் நின்ற செல்லம்மா அவனைப் பார்த்ததுமே இனம் கண்டு கொண்டாள். எனினும் அதை அவள் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

"இங்கே இப்ப ஒண்ணுமில்லே, போ போ" என்று எவனோ பிச்சைக்காரனுக்கு உத்திரவிடுவது போல் உணர்ச்சியற்ற குரலில் கூறினாள் அவள்.

அவன் திடுக்கிட்டான். திகைப்படைந்தான். "செல்லம், என்னைத் தெரியவில்லையா உனக்கு?" என்றான். அவன் குரலில் நடுக்கம் இருந்தது. அவனுக்கு ஏற்பட்ட உணர்ச்சிக் குழப்பத்தினால் எழுந்ததாக இருக்கலாம் அது,

"உன்னைத் தெரிந்திருப்பதும் ஒன்றுதான். தெரியாமல் இருப்பதும் ஒன்றுதான். என்னைப் பொறுத்தவரை..." என்று பேசியவள் சட்டென்று பேச்சை நிறுத்திக்ொகண்டாள். "நீ செத்துவிட்டாய்!" என்றுதான் அவள் சொல்ல விரும்பினாள். அதை அவனிடம் சொல்ல வேண்டியதில்லை என்ற நினைப்பு பேச்சுக்குத் தடை விதித்தது. "செல்லம், நீ திமிர் பிடிச்சுப் பேசுவது சரியல்ல. என்ன இருந்தாலும் நான் உன்னைத் தொட்டுத் தாலி கட்டி, உன்னோடு கூட வாழ்ந்தவன்.." - அவன் ஆங்காரமாய் கூச்சலிடத் தொடங்கினான்.

"சீ நிறுத்து! நீயும் ஒரு மனுசன்னு மூஞ்சியைக் காட்ட வந்துட்டியே. உன் பெண்டாட்டி செல்லம் செத்து ஒரு வருஷம் ஆச்சு! அவள் எக்கேடும் கெடட்டுமின்னு விட்டுவிட்டு பயந்து ஓடிப்போன வீரசிங்கம் ஒரு வருஷம் கழிச்சப்புறம் தேடி வந்து உரிமை கொண்டாடத் துணிஞ்சிட்டுது! தூ, வெட்கமில்லே?" என்று ஆத்திரத்தோடு கத்திய செல்லம்மாள் காறித்துப்பினாள். விடுவிடென்று உள்ளே போனாள்.

சட்டி பானைகள் உருளும் ஓசை கடமுட வென்று ஒலித்தது. ஏதோ ஒரு பானையிலிருந்து ஒன்றை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள் அவள். "இந்தா, இதைச் சொல்லித்தானே நீ உரிமை கொண்டாடவந்தே. இதை நீயே எடுத்துக் கொண்டுபோ. இனிமே

உனக்கும் எனக்கும் ஒட்டும் இல்லை உறவும் இல்லை" என்று கூறி அதை அவன் மூஞ்சியில் விட்டெறிந்தாள்.

அழுக்குப் படிந்த மஞ்சள் கயிறு அது. அவன் "சுபயோக சுபவேளையிலே" அவளுக்குக் கட்டிய தாலிக் கயிறு தான்!

முத்துமாலைக்குப் பேசவாயில்லை. போராட உணர்ச்சி எழவுமில்லை. தலைகுனிந்தவாறே அங்கிருந்து நகர்ந்தான். அதன் பிறகு அவன் அந்தப் பக்கம் தலை காட்டவில்லை.

அதற்காகச் செல்லம்மா வருத்தப் படவுமில்லை.

*

# 13

## சூரன் குத்து

ஒளி ஒடுங்கிச் சோர்ந்துவிட்ட பகலை விழுங்கிக் கொழுக்கும் எண்ணத்தோடு விரைந்து வரும் இரவு எனும் அசுரக் குழந்தை சற்றே மலைத்து நிற்கும் நேரம்...

பகலுமற்ற இரவுமற்ற "இரணிய வேளை"...

ஊரின் தென்புறத்திலிருந்து விம்மி எழுந்த ஓலம் காற்றோடு கலந்து எங்கும் பரவியது. இருளும் ஒளியும்கூடி முழங்கும் விந்தையை ரசித்தபடி சோம்பிக் கிடந்த என் காதுகளையும் தொட்டது அது..

இன்றுதான் "சூரன் குத்து" என்ற நினைவு படர்ந்தது எனனுள்...யானைமுகாசூரன், சிங்கமுகாசூரன் போன்ற பல சூரன்களையும் குத்திக் கொன்றுவிட்ட முருகப் பெருமான் சூரபதுமனையும் ஓட ஓடவிரட்டினார். வேல்கொண்டு தாக்கினார். கொய்யக் கொய்ய தலை புதுசு புதுசாக முளைத்துக் கொண்டிருந்தது அவனுக்கு. கடைசியில் அவனையும் ஒழித்துக் கட்டிவிட்டார் குமரக் கடவுள்...

ஆண்டுதோறும் இந்த விழாவை "பொம்மைகள் கொண்டு" விளையாடி மகிழும் மனிதக் குழந்தைகள் இத்துடன் திருப்தி அடைவதில்லையே! எந்த ஊர் மக்கள் திருப்தி அடைந்தாலும் குருவிப்பட்டி வாசிகள் எளிதில் திருப்தி அடையமாட்டார்கள். சூரசம்காரத்தோடு அவ்வூரின் விழா முடிந்துவிடுவதில்லை. சூரக் குழந்தைகளைப் பெற்றெடுத்த அசுரத் தாய் கண்ணீர் வடித்து, மார்பிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு தெருத் தெருவாகச் சுற்றி அலைவதையும் கொண்டாடுவார்கள் அவர்கள்.

அதற்கென விசேஷமாகச் செய்த, ஓங்கி உயர்ந்த உருவம் ஒன்று. அதன் முண்டக் கண்களில் சோழி முட்டைகளைப் பதித்து உடைத்து விடுவார்கள். முட்டைகளிலிருந்து வழிந்து கொண்டிருக்கும் திரவப் பொருள்தான் சூரத்தாய் சிந்தும் கண்ணீர். அந்த "ஆலி பொம்மை"யை (பூத உருவை) உள்ளே புகுந்து நின்று இரண்டு பேர் தூக்கித் திரிவர். அவர்கள் கைகளால் "தப்திப்" என்று ஓசை எழ அறைந்துகொண்டு அழுகை ஒலி பரப்புவர்.

கும்பல் கூடும் சிறுவர்களும் பெரியவர்களும் சூரத் தாயின் துயர ஓலத்தைப் பெரிதாக்கி ஒலி பரப்புவார்கள்.

அவர்களின் மாரடிப்பு ஓசையும் அழுகை ஒலியும் காற்றிலே கலந்து வந்து என் காதுகளைத் தாக்குகிற போதெல்லாம்-

இதோ அவற்றினும் மேலாய் பொங்கி எழுகின்ற அவலக் குரலை நான் தெளிவாகக் கேட்க முடிகிறது. பார்க்கப் போனால், வெறும் பிரமைதான் அது. எனினும் என் இதயம் வேதனையால் கனக்கிறது. துயரம் தொண்டையில் கூடுகிறது. கண்களிலே நீர் மல்குகிறது...

உங்களுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறதோ என்னவோ? நல்ல இலக்கியத்தைப் படிக்கிறபோது, திறமையாக எழுதப்பட்டுள்ள கதையிலே முக்கியமான ஒரு கட்டத்தை வாசிக்கிறபோது, துயரம் அனுபவிக்க நேர்ந்தவர்கள் தம் கதையை உணர்ச்சியோடு சொல்வதைக் கேட்கிறபோது, என் உள்ளத்தில் வேதனை கவிய, என் கண்களிலே நீர் பொங்கிவிடும். வேதனையின் குரல் என் உணர்ச்சிகளை எளிதில் கிளறிவிட்டு விடும்.

ஓலமும் ஒப்பாரியும் பொங்கி எழுகிற போதெல்லாம் அவற்றின் மேலாக விம்மி எழுகின்ற சோக அலறல் ஒன்று எனது நினைவுப் பெருவெளியிலே, அடங்காத நாதமாய் - அடக்க முடியாத ஓலமாய் - ஒலிக்கத் தொடங்கிவிடும். வாழ்க்கை எனும் சோகக் காவியத்திலே என்றோ ஒருநாள் காலம் எழுதிவைத்த நாடகத்தின் நினைவு என் உள்ளத்திலே அழிக்க முடியாத கீறலாய் - ஆழப் பதிந்த "கோரை"யாய் - பதிந்து விட்டது. அதே காலம் பின் மீண்டும் மீண்டும் வேதனை நாடகங்களை விளையாட விடுகிற போதெல்லாம் - மனிதர்கள் விளையாட்டுக்காகவோ, மெய்யாகவே தானோ, கோர

நாடகங்களை ஆடித் தீர்க்கிற போதெல்லாம் - இறந்தகால அனுபவத்தின் நினைவொலியை எனது நுண் உணர்வுகள் மேலுக்கு உந்திவிட்டுவிடும். நான் சோகத்தால் சாம்பிக் குவிய நேரிடும்....

இதோ, சூரத் தாய்க்காக மனித உருவங்கள் தூரத்தில் எழுப்புகின்ற அழுகை ஒலி-ஒளியும் இருளும் கலந்து குழம்புகிற விண்வெளியிலே - மிதந்து திரியும் காற்றைத் துணை கொண்டு ஊர் முழுதும் பரவிக் கொண்டிருக்கிறது.

- அன்றும் இதே மாதிரித்தான்

இருபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தி, ஒரு நாள்... அன்றும் "சூரன் குத்து" திருநாள்தான்.

சூரன் பொம்மைக்கும் முருகனுக்குமிடையே பலத்த போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது! இரண்டு "சப்பரங்"களுக்கும் நடுவில் நீளமாகக் கயிறு கட்டி, அதில் அங்கும் இங்குமாக வாணத்தைக் கொளுத்திவிட்டு வேடிக்கை பார்த்தார்கள் மனிதர்கள். முடிவில், சூரனின் தலை அகற்றப்படும். இப்படி அநேக தடவைகள்.

இந்த "விளையாட்டு" நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, வேறொரு பக்கத்தில் வேறு விதமான விளையாட்டு நடிக்கப்பட்டது. "துணிந்த கட்டைகள்" சிலர் திட்டமிட்டு நடத்திய நாடகம் அது.

கடைகளின் முன்னே "மறியல்" நடந்துகொண்டிருந்த காலம் அது. அந்நியத் துணியை விற்பனை செய்யும் கடைகளுக்கு முன்னால் தேசபக்தர்கள் நின்று, வருவோர் போவோரிடம் அன்பு உபதேசம் புரிந்து வந்தார்கள். அந்த "மறியல்" வேலையை சுவாரஸ்யமானதாக மாற்ற வேண்டும் என்று ஆசைப்பட்ட சில "பக்தர்கள்" புதுமையான - துணிகரமான - வேலைத்தனம் ஒன்று செய்தார்கள்.

ஆட்சி புரிந்துவந்த ராஜப் பிரதிநிதியின் பொம்மை ஒன்றைச் செய்து "சூரன் வாறான் - சூரன்" என்று கூவியவாறு கடைத் தெருவுக்குச் சுமந்து வந்தார்கள். பெரிய ஜவுளிக் கடை ஒன்றின் முன்னால் அதை இறக்கிவைத்து, அதன் நெஞ்சிலே வேல்கம்பைச் சொருகிவிட்டு ஓட்டம் பிடித்தார்கள் செயல் புரிந்தவர்கள்.

அவர்கள் ஓடியதற்குக் காரணம் போலீஸ் வீரர்கள் குண்டாந்தடியோடு விஜயம் செய்ததுதான். வீரர்கள் வந்ததும்,

அவர்களை நோக்கி எங்கிருந்தோ சில கற்கள் வந்து விழுந்தன. அவ்வளவுதான்! தடியடியும், துப்பாக்கிப் பிரயோகமும் பயங்கர ஆட்சி புரிந்தன. கும்பலாக நின்று வேடிக்கை பார்த்தவர்கள் சிதறி ஓடினர். கடைவீதியில் மண்டை பிளந்து சிலரும், குண்டு அடிபட்டுச் சிலரும் ரத்தம் சிந்திக்கிடந்தனர்...

கோயில் சூரசம்காரத்திலே அசுரத் தாய் அலறி அடிக்கும் கட்டம் துவங்கியிருந்தது. அதே கணத்தில் கடைவீதியில் ஒரு பெருங் கூச்சல், நெஞ்சை அறுக்கும் தொனியாய், பொங்கி எழுந்தது. "என்னைப் பெத்த ராசா! எம் மகனே! போயிட்டியே! ஐயோ!" என்ற ரீதியில் புலம்பலும் மாரடிப்பும் விம்மி வெடித்தன.

தரித்திர உருவினள் ஒருத்திதான் அப்படிக் கத்தினாள். அவள் பெத்த "ராசா" கட்டையாய் - சவமாய் - கிடந்தான். ரத்தம் சிந்திக் கிடந்தான். குண்டு அடிபட்டுச் செத்துக் கிடந்தான். கண்ணை அறுக்கும் - நெஞ்சைக் குத்தும் - தோற்றம் அது...

அந்தத் தாயின் உணர்ச்சி மிகுந்த ஓலம் கடைவீதி நெடுகிலும் ஒலித்தது. அடுத்த வீதியிலும், அதற்கு அப்பாலும் ஒலித்தது. ஊரின் மூலைக்கு மூலை எட்டியது.

தன் மகனை இழுத்து மடிமீது கடத்திக் கொண்டு - யாராலும் தேற்ற முடியாத சந்திரமதிபோல - ஓலமிட்டு அழுதாள் அந்தத் தாய். மார்பில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு, மண்டையைத் தரைமீது "நங்கு நங்கென்று" மோதிக்கொண்டு அழுதாள் அவள். தனது கண்ணுக்குள் கண்ணாக - உயிரினும் சிறந்த உயிராக - தன் வாழ்வின் வாழ்வாக - வருங்காலத்தின் நம்பிக்கையாக மதித்திருக்கும் ஒரு மகனைப் பறி கொடுத்த தாய் உள்ளம்தான் அத்தகைய வேதனைகளை - துயர அனுபவங்களை - தனக்குத் தானே விதித்துக் கொள்ளமுடியும்...

அவளது சோகப் புலம்பல் - ஆற்ற முடியாத துயர அனுபவம் எல்லோர் உள்ளத்தையும் தொட்டது. ஊரே திரண்டு விட்டது. கோயில் சூரன்குத்து விளையாட்டு அர்த்தமற்றதாய். வேடிக்கை இல்லாததாய் -'சப்பென்று'-போய்விட்டது.

கடைவீதி நிகழ்ச்சியிலே "யார் சூரர்கள்? எவர் தேவர்கள்?" என்று தீர்மானிக்க முடியாவிட்டாலும்கூட, "இங்கேதான் நிஜமான சூரன்குத்து நடந்திருக்கிறது!" என்று அநேகர் பேசிக் கொண்டார்கள்.

அந்தி இறந்து, இரவு தன் கறுப்புக் கொடியை வெற்றிகரமாக நிலை நாட்டிவிட்ட பிறகும்கூட அந்த தாய் அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய மகனின் உடலை ''அதிகாரமும் சட்டமும்'' அவளிடமிருந்து பிடுங்கிக்கொண்டு அவளை மிரட்டி அனுப்பியபோது, அவள் அலறிய அழுகை-அம்மம்ம!

-இதோ இப்பொழுதுக்கூட என் காதுகளில் ஒலி செய்கிறது அது...

"சூரத் தாய்" தூரத்துத் தெருமூலை திரும்பி, அருகிலிருக்கும் வீதிக்கு வந்து விட்டாள் என்பதை முன்னேறி வரும் ஆரவாரப் பேரொலி உணர்த்துகிறது எனக்கு. எனினும் என் காதுகளிலே இறந்த காலத்தின் ஒற்றைக் குரல்தான் எதிரொலித்து, என் இதயத்தில் வேதனையைக் கிளறிவிடுகிறது.

-உலகில் அசுரசக்தி அகற்றப் பட்டுவிட்டதா? அல்லது, அமுக்கி ஒடுக்கி வைக்கப்பட்டது என்றாவது சொல்ல முடியுமா?... மனிதக் குழந்தையைப் பறிகொடுத்த தாயின் துயரத்தினின்றும் மாறுபட்ட தாகவா இருந்திருக்கும் அசுரக் குழந்தைகளை இழந்த தாயின் வேதனை?....

என் உள்ளம் எனும் கடலிலே மோதுகின்ற நிரந்தரமான அலைகளில் இவையும் சில. விடைதான் எனக்குப் புரியவில்லை.

எனது பார்வை படருகின்ற இடமெல்லாம், இருள் கவிந்து கிடக்கக் காண்கிறேன்!...

இப்பொழுதும் இருட்டிவிட்டது! ஒளி இழந்த கிழப் பகலை இருள் கொழுத்த இரவு விழுங்கிவிட்டுச் சிரிக்கிறது. அது கொரித்துத் துப்பிய எலும்புத் துண்டுகள்போல விண் நெடுக நட்சத்திரங்கள் சிதறிக் கிடக்கக் காண்கிறேன். என் உள்ளத்திலே ஏனோ அவை நம்பிக்கை ஒளி புகுத்தக் காணோம்!

*

# 14

## மனப் பிராந்தி

இது ஒரு மனநோயாகத்தான் இருக்கவேண்டும்.

அல்லது, பைத்தியத்தின் ஆரம்பகட்டமாக இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கு அடிக்கடி எழுகிறது.

ஆனால் ஒன்று மட்டும் நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். நான் ஒரு கோழை. பயந்தாங்கொள்ளி. ஆமாம். இதைப்பற்றி எனக்கு "இத்னியூண்டு" சந்தேகம்கூடக் கிடையாது.

நான் சூரப்புலி மாதிரி வாயடி அடிப்பதைச் சிலர் கேட்டிருக்கக் கூடும். அது எனது மனசின் அடிமட்டத்தில் பரவியிருக்கிற பயம் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக நான் கையாள்கிற தந்திரம்தான்.

இருட்டில் வெளியே செல்வது என்றாலே என்னை வெட்டக்கொண்டு போவதுபோல் தோன்றும். விளக்குகள் சற்றைக்கொருதரம் ஒளிப்பூக்கள்போல் தொங்கும் வீதிகள் நிறைந்த நகரத்திலேயே எனக்கு இந்த நிலை என்றால், இருட்டின் கொலு மண்டபமாக விளங்குகிற பட்டிக் காடுகளில் தங்கியிருக்கிறபோது நான் என்ன பாடுபடுவேன் என்பதை நீங்களே கற்பனை செய்துகொள்ளலாம்.

கற்பனை -

அதுதான் எனது கோளாறுக்கு மூலவித்து என்று எனக்கு இப்பொழுது தெரிகிறது. தெரிந்து என்ன செய்ய? அழிக்க முடியாத நச்சுமரமாக அது வளர்ந்து என் உள்ளத்திலே மண்டி உணர்வுகளை ஆட்டி வைக்கிறதே!

எனக்கு எப்போதுமே பூத, பிரேத, பிசாசு, பயங்கரக் கதைகள்மீது விசேஷமான மோகம். நானே அத்தகைய கதைகள் அநேகம் எழுதியிருக்கிறேன்.

அவற்றிலே ஒரு கதையை, இரவு நேரத்தில் படுக்கை அறையில் கணவன் பக்கத்தில் இருந்து வாசித்த ஒரு பெண்மணி அன்று இரவு பூராவும் தூங்க முடியாமல், விளக்கையும் அணைக்காமல் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு மூலையிலும் எதெதையோ கண்டும், ஒவ்வொரு ஓசையிலும் என்னென்னத்தையோ கற்பனை செய்துகொண்டும் அவதிப்பட்டாளாம். இந்தச் செய்தியை அறிய நேர்ந்ததும் நான் ரசித்துச் சிரித்தேன். அவளைக் கோழை என்றும் பயந்தாங்கொள்ளி என்றும் கூறி நகையாடினேன்.

அவ்விதமான பயங்கரக் கதைகளை எழுதும் நான் பெரிய துணிச்சல்காரன் என்றுதான் அந்தச் சகோதரியும் அவள் கணவனும் எண்ணினார்கள். இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றவர்கள் உள்ளத்தில பயம் எனும் உணர்வைத் தூண்ட வேண்டும் என்ற ஆசையோடு கதை எழுத உட்காருகிற நானே பாதியில் பயந்து நடுங்கிவிடுவேன். அதாவது, கதவைத் தாளிட்டுக் கொண்டு எழுத உட்காராதிருந்தால்! கதவைத் திறந்துபோட்டிருந்தால் எனது கதாபாத்திரத்தின் தாயாதிகள் புகுந்துவிடும் என்ற பயம் எனக்கு.

ஒருசமயம் அப்படித்தான். ரொம்ப ஜோரான பிசாசுக் கதையை மிகுந்த ஈடுபாட்டோடு எழுதிக் கொண்டிருந்தேன். பகல் நேரம்தான். இரவு வேளைகளில் நான் கதை எழுதுவது கிடையாது என்பதுதான் உமக்குத் தெரியுமே! வெகு கர்ம சிரத்தையோடு என் எழுத்தில் நான் ஆழ்ந்திருந்தபோது,

கிலுக்-கிலுக்... இரும்பை இரும்போடு உராய்ந்து எழுப்பிய சிற்றொலி. சர்ரட்-சரட்-காலடி ஓசை போன்ற சத்தம். 'உகுங்' - தானே ரசித்து மகிழும் கிளுகிளுப்பு.

என் உடம்பு புல்லரித்தது. அது என்ன? என் மனம் ரைஸ்மில்லாகித் தடதடத்தது. நான் கதவைத் தாளிடவில்லையே. அது, கடவுளே!... உச்சிப் பகல் நேரம். என்னை பயம் கவ்வ, எனக்கு வேர்த்துக் கொட்டியது. எந்தப் பிசாசு வந்து என்னைப் பலி கொள்ளப்போகிறதோ என்ற திகிலுடன் உட்கார்ந்திருந்தேன். ஆனால்,

நடந்தது என்ன? எனது நண்பன் நடராஜன் பல்லைக் காட்டிக்கொண்டு, தலையை நீட்டுகிறான். "வே, பயந்துட்டீரா? இஹிஹி!" என்றான். எனக்கு வந்த கோபத்துக்கு அளவே கிடையாது. நான் ஒரு கோழை என்பதை அவன் கண்டுகொண்டானே! அந்த ஆத்திரம் வேறு. "நேரே வாறதுக்கு என்ன கொள்ளை? நாதாங்கியை ஏன் குலுக்கினாய்?" என்று கத்தினேன்.

"டிராகுலா" என்ற புத்தகத்தைப் படித்த இரவில்-ஆ. அதல்லவா பிசாசுக் கதை! நானும் எழுதுகிறேன் கதை என்று இப்போது அநேகர் பயங்கரக் கதை எழுத முன்வந்துவிடுகிறார்களே... ஹூம்ப்!

"டிராகுலா" வை நீர் படித்திருக்கிறீரா? ப்ராம் ஸ்டோக்கர் எழுதியது. கேள்விப்பட்டதுகூட இல்லை? அடாடா. அவசியம் படிக்க வேண்டிய புத்தகமய்யா அது. ஆனால், பிரதர், நான் இப்பவே சொல்லிவிடுகிறேன். அதைப் பகல் நேரத்தில் படிப்பது நல்லது. அப்புறம் உம் இஷ்டம்.

நானும் துணிந்தகட்டை மாதிரி அதை ஒரு நாள் ராத்திரியிலே படிக்க உட்கார்ந்தேன். அப்போது நான் ஒரு கிராமத்தில் ரூம் எடுத்திருந்தேன். தனி வீடு. வீட்டைச் சுற்றிலும் புளியமரங்களும் நாலைந்து மாமரங்களும் நின்ற தோப்பு. வீட்டு முன்னாலே மணல் படிந்தபாதை. எதிரே ஆள் உயரத்துக்குத் திருகு கள்ளி. கைகளை உயர்த்திக்கொண்டு நிற்பது போலிருக்குமே, அது தான். எலெக்ட்ரிக் லைட் இல்லாத பிரதேசம். என்னிடம் பாட்டரி லைட்டும் கிடையாது. அரிக்கன் லாந்தர் தான். அதுக்குச் சிலசமயம் "காக்கா வலிப்பு" வந்துவிடும். குதிச்சுக் குதிச்சு, "டபுக்" கென்று அணைந்து போகும். அந்த விளக்கு வெளிச்சத்தில் டிராகுலா கதையைப் படிக்கலானேன். ஏண்டா படிச்சோம் என்று ஒரு வாரகாலம் வேதனைப்பட்டேன்.

பாதி படித்துக் கொண்டிருக்கும பொழுது என் தேகம் சிலிர்த்தது. ஜன்னலுக்கு வெளியே சிவ்வென்று ஓசை கேட்டது. பழந்தின்னி வௌவால் தனது பெரிய இறக்கையை படபடக்க வைத்துக் கொண்டு... அதோ மினுமினுப்பது அதனுடைய ஆழ்ந்த குழிகளில் அடங்கிய மைத்துளிக் கண்கள் தான்... பழந்தின்னி வௌவால் வடிவத்தில் தானே ரத்தக் காட்டேறி வரும்? அது தான் பிரும்மராக்ஷஸ். டிராகுலா கதை கூட அதைப் பற்றியதே...

அந்தச் சமயம் பார்த்து விளக்குக்கு வலிப்பு கண்டது. "டபக், டபக்!... குளோஸ். அறையில் இருட்டு கவிந்தது. ஆண்டவனே, அல்லாவே, ஏசு கிறிஸ்துவே, "அர்ஜுனன் பேர் பத்து" - இடி இடித்தால் தான் இதைச் சொல்லவேண்டும் என்ற நினைப்பு கூட இல்லை. எல்லாப் பேர்களையும் உச்சரித்தால், ஏதாவது ஒரு பெயருக்கு எபெக்ட் இருக்கலாமல்லவா? அப்படியும் என் பயம் அடங்குவதாயில்லை. முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டேன் இருந்தாலும், சவப்பெட்டியிலிருந்து எழுந்து நடமாடும் பிரேதமும், அது மனிதரை வேட்டையாடுவதும், அதை ஒருவன் துரத்துவதும்...அது அடைக்கலம் தேடி என் ரூமுக்குள் வரத்துடிப்பது போலவும்...கனவா, நனவா, கற்பனையா? நான் தூங்கினேனா; விழித்திருந்தேனா? எனக்கு ஒரே பதைபதைப்பு தான்.

ஒரு வார காலம், இரவில் வெளியே தலைகாட்டவே அஞ்சினேன். கள்ளிச் செடி உயர்ந்த எலும்பு மனிதனாகப் பயமுறுத்தும். புளியங்கொம்புகளிடையே வௌவால்கள் பல்லிளிக்கும். சே, என்ன பயங்கர அனுபவமடா அப்பனே!

இந்த விதமான பயம் நான் பிசாசுக்கதைகளை அதிகமாகப் படித்ததனாலும், பயங்கரக் கதைகளை எழுதக் கற்பனை செய்து கொண்டு திரிந்ததாலும் வந்த வினைதான் என்று நீர் நினைக்கலாம். அது சரியல்ல. என்பிள்ளைப் பிராயத்திலிருந்தே முறைத்தெழுந்த கோளாறு இது என்று நான் நிச்சயம் செய்து விட்டேன்.

நான் சின்னப்பயலாக இருந்த போது, பெரியவர்கள் மனமிரங்கி என்னையும் நாடகம் பார்க்க அழைத்துப் போவது உண்டு. ஆனால் நான் நாடகத்தை எங்கே பார்த்தேன்! மற்றவர்களையாவது பார்க்க விட்டேனா? மேடையில் கோரமான உருவங்கள் வந்துவிட்டால் போதும்; அல்லது, அடிக்கிற-உதைக்கிற காட்சி வந்தாலும் சரி. என்னையும் அடிக்கப், போவது போல்-பூதம் என்னைப் பிடித்து விழுங்க வருவதாக எண்ணிக்கொண்டு-நான் "ஓ!" என்று ஊளையிட்டு அழுவேன். என்னை வெளியே இழுத்துக் கொண்டு வருவார்கள். சிலர் எரிச்சலோடு ஏசுவார்கள். எனினும் என் பயம் தீராது.

எவ்வளவோ பயங்கரக் கனவுகள்! எத்தனையோ பயங்கர நினைவுகள்! சொல்லிமாளாது, நண்பரே, சொல்லி மாளாது! அவற்றை உரமாக்கி, பயம் எனும் உணர்வு விசித்திர உருவமேற்று வளர்ந்து

வந்திருக்கிறது. எனக்குத் தெரியாமலே, பச்சை மரத்தில் வேர்க் கறையான் புகுந்தது போல, அது வேலை செய்திருக்கிறது.

நான் இருள் நோக்குவாதி (பெஸிமிஸ்ட்) ஆக இருந்ததும் இதற்குத் துணைபுரிந்துள்ளது என்று யாராவது சொன்னால், மறுப்பதற்கில்லை. என் மனம் "நல்லது நிகழும்" என்று எண்ணுவதே கிடையாது. மோசமான கற்பனைகளைத் தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டும்.

அவ்வப்போது எங்கள் வட்டாரத்தில் வீடுகள் தீப்பற்றி எரியும். இது சகஜ நிகழ்ச்சி. தூரத்தில் நிற்பவர்களின் பார்வைப் புலன்களைத் தாக்கும் விதத்திலே தீ திமுதிமுவெனப் பொங்கிப் படர்ந்து, வான வளையத்துக்குச் செம்மை தடவும். அந்நேரங்களில் எங்காவது அலைகிற என் கண்களும் அதைக் காண நேரிடும். மனம் சித்திரிக்கும். நூற்றுக்கணக்கான வீடுகள் மீது நெருப்பு ஒளிநாட்டியம் பயில்கிறது. எனது வீடும் தீயின் கூத்துக்கு இரையாகியது. நான் ஆசையோடு வாங்கி அடுக்கியுள்ள விலை உயர்ந்த நூல்கள் எல்லாம் தீயில் எரிந்து, சாம்பலாகின்றன. அவற்றிலிருந்து பறந்தெழும் கரித்துணுக்குகள் ஆயிரமாயிரம் பூச்சிகள் போல ஆகாச வீதியிலே மிதக்கின்றன!- இப்படிப் பட்ட காட்சியைக் கண்டு களிக்க நான் வேகமாக வருகிறேன். வீடு முழு உருவத்தோடு நின்று எனக்கு ஏமாற்றம் அளிக்கிறது....

நான் ரயிலில் பிரயாணம் செய்கிறேன. இரவு பயங்கரமாகக் கவிழ்ந்து கிடக்கிறது. ரயில் வண்டி தடதடவென்று பேரோசை செய்கிறது. ஆச்சு! விழுந்தாச்சு! காட்டாற்றுப் பாலத்திலே தடம் புரண்டு வண்டித் தொடர் விழுகிறது, விழுகிறது!... என் மனம் செய்கிற சித்துவேலை தான். வேறு விபத்து எதுவுமில்லை என்று உணர்கிறபோது எனக்கு வருத்தம் ஏற்படுகிறது...

இப்படித் தான் ஒரு சமயம். ரயில் ஆர்யங்காவுக்குப் பக்கத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த பிராந்தியத்தைப் பற்றி உமக்குத் தெரிந்திருக்கலாம். மலைப்பிரதேசம். காட்டு வழி. எங்கு பார்த்தாலும் ஒரே பச்சை மயம்-விதவிதமான மரங்களின் தலைகள். திடுமென்று இருட்டு வண்டியை விழுங்குவது போலிருக்கும். மலையைக் குடைந்து பாதை போட்டிருக்கிறானைய்யா மனுஷன்! "டன்னல்" வழியே வண்டி போகிறபோது எனக்கு பயம் தான். பாறைகளில் நீர்

ஓடுகிறது என்கிறான் ஒருவன். "ஏய் பாம்புடா! பெரிய பாம்பு" என்று கத்துகிறான் ஒருத்தன். எல்லா ஜன்னல் கதவுகளும் டப்-டப் என்று விழுந்து அடைத்தன. நான் பத்திரமாக ஊர் போய்ச் சேருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லவே இல்லை.

ஆனால் நான் சொல்ல வந்தது இதையல்ல. அதுவேறு. என்க்கு எதிர் பெஞ்சியில் ஒருவன் இருந்தான். அவன் முகத்தில் மீசை தான் முக்கியமாய், பெரிசாக, மதுரைவீரன் மீசை மாதிரி விளங்கியது. மூக்கும் எடுப்பாக நின்றது. கண்கள்-அவை பார்த்த பார்வை! அந்தி மயங்கும் நேரம். அச்சம் தரும் சூழ்நிலை. எதிரே ஒரு முரடன் என்னையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கிறான் என்றால்!...-என் மனம் பலப்பல எண்ணித் தவிக்கிறது. என் பார்வை எங்கெங்கு புரண்டாலும் மீண்டும், மீண்டும் ஏதோ வசிய சக்தியால் கவரப்படுவதுபோல், அந்த ஆளின் முகத்திலேயே மோதத்திரும்புகிறது.

இவன் திருடனாக இருப்பான்! கொலைகாரனாக இருக்கலாம். இவன் ஏன் என்னை இப்படி முழிச்சுப் பார்க்கவேண்டும்?-எனக்கு எதுவுமே புரியவில்லை. திடீரென்று அவன் பேச்செடுத்தான்:

"ஐயா, நீங்க விவசாய ஆபீசிலே குமாஸ்தாவாக இருந்தீங்க இல்லே?"

ஆமாம் என்பதற்கு அடையாளமாக நான் தலையாட்டி வைத்தேன்.

"அதானே கேட்டேன்! நானும் அப்பவே புடிச்சி யோசிக்கிறேன், யோசிக்கிறேன்... எங்கேயோ பார்த்த முகமா இருக்குதேன்னு தோணிச்சு. ஆனால் பிடிபடலே... நிங்க ஸ்ரீவைகுண்டம் ஆபீஸ்லே இருந்தீக இல்லே?"

நான் அழகப்பன் காளைமாதிரித் தலையசைத்தேன், மறுபடியும்.

"அதானே பார்த்தேன்! அப்போ பூச்சி இன்ஸ்பெக்டர் சுப்பய்யர்கூட நானும் வந்தேன். பச்சை முந்திரிக் கொடிகளுக்கு பூச்சிமருந்து தெளிக்க. நான் மேஸ்திரியாக வந்தேனே, உங்களுக்கு ஞாபகமில்லே?

என் ஞாபகத்திலே இடிவிழ! என் மறதி நாசமாய்ப் போக! இவையெல்லாம ஒழுங்காக இருந்தால், நான் அனுபவித்த வேதனை எனக்கு ஏற்பட இடமிருந்திருக்குமா?

எஞ் சிவனே, என் மனப்பேய் இவ்விதம் என்னென்ன சித்து விளையாடல்கள் புரிந்துவந்திருக்கிறது என்பது உமக்கு எப்படித் தெரியும்?

சாயங்கால நேரம்தான். வாழ்ந்து அலுத்துப்போன பகல் பொழுது, நோய் முற்றி ரத்தம் கக்கிக்கொண்டு படுக்கையில் ஓய்ந்துகிடக்கிற காச நோய்க்காரன்போல், மேல்திசைச் செக்கர் வானத்தில் தொங்கிக் கிடக்கிறது. அப்பொழுதும் நான் ரயிலில்தான் போய்க் கொண்டிருக்கிறேன். ஆனால் இது வேறு திசையில். இது வேறு பிரயாணம்.

சூழ்நிலையும் வேறுதான். ஆனாலும் இங்கும் மலைகளும் மரங்களும் உண்டு. சுற்றிவர மலை. மரங்கள், காடுமாதிரி. ஆனால் நிஜமான காடு இல்லை. அவற்றிடையே ஒரு ஸ்டேஷன். ரயில் நின்று புறப்பட்டது. மலையின் உச்சியில் சூரிய ஒளி பூசியிருந்த விந்தைக் கோலத்தை வியந்து கொண்டிருந்த என் கண்கள் வண்டிக்குள் திரும்பின. அங்கே கதவோரத்தில் ஒரு இளம்பெண் என்னையே பார்த்தபடி நின்றாள். என் உடல் சிலிர்த்தது.

என்ன உருவம்! நன்கு விளைந்த முள்ளங்கிக் கிழங்குமாதிரி. மேனி முழுவதும் ஒரு மினுமினுப்பு. நாட்டுப்புறம். அதனால உடல் வளத்தைப் பகட்டுத் துணிகளுக்குள் மூடிவைத்திருக்கவில்லை. சாதாரணமான ஒரு சீலைதான். முகம்! அந்த விழிகள். மதமதர்த்த கண்களில் தேங்கி நின்ற பார்வை! வெற்றிலைச் சிவப்போடு வெடித்து நின்ற உதடுகளின் கோணத்திலே சிறு சிரிப்பு தங்கி நிற்கிறதா என்ன?

என் மனம் நடுங்கியது. சந்தேகமேயில்லை. மோகினிப் பிசாசுதான்...மோகினி வேலைக்காரப் பெண்மாதிரியும், பிச்சைக்காரி போலவும் வந்து, அனுதாபத்தைப் பெற்று, கூடவே வந்து வீட்டில் தங்கியிருந்து, தருணம் பார்த்து ஆளையே அடித்து ரத்தத்தைக் குடித்துவிட்டு மறைந்து போவதுபற்றி கிராமங்களில் பலரும் சொல்லியிருக்கிறார்களே. நான்கூட அப்படிச் சில கதைகள் எழுதியிருக்கிறேனே!

அந்தப் பெட்டியில் அதிகமாக ஆட்கள் இல்லை. நாலைந்து பேர்தான் இருந்தோம். மற்றவர்கள் பார்வையில் படாத ஒரு இடத்தில் – கதவருகில், நின்று அவள் என்னையே முழித்துக் கொண்டிருந்தாள். எனக்குச் சந்தேகமேயில்லை. அவள் மோகினிதான்!

இரவு மூன்றேகால் மணிக்கு நான் இறங்க வேண்டிய ஸ்டேஷனில் போய் வண்டி நிற்கும். மீதிப் பொழுதை ஸ்டேஷனிலேயே கழித்துவிட்டு, அஞ்சு மணிக்குக் கிளம்புகிற பஸ்ஸில் இடம் பிடிக்கவேண்டும் என்று எண்ணியிருந்தேன். மோகினி என் பின்னாலேயே இறங்குகிறது. காத்திருக்கிறது. ஸ்டேஷனிலிருந்து பஸ் ஸ்டாண்டுக்கு ஒரு மைல் தூரம் நடந்து போக வேண்டும். தனி வழி. இருள் நிறைந்த பாதை. அந்த இடத்தில் மோகினி என்னை அடித்துவிடும் என்று நிச்சயமாக எனக்குப்பட்டது. என் செய்வது? நான் என்ன செய்யமுடியும்? என் தேகம் நடுங்கியது. இருள் கவிந்து வந்தது. ரயில் வண்டியின் அழுது வழியும் விளக்கு இருட்டைப் போக்கிவிடவில்லை. நான் ரத்தம் கக்கிக்கொண்டு நடுரோட்டில் விழுந்து கிடக்கிற காட்சியை என்மனம் அற்புதத் திறமையோடு படம் பிடித்துக் காட்டுகிறது. வண்டிக்கு வெளியே பார்வையை நிறுத்தவும் முடியாமல், கட்டுடல் பெற்ற, முற்றிய முள்ளங்கிக் கிழங்கு மாதிரி புஷ்டியாக இருந்த, மஞ்சள் மினுக்கும் வெற்றிலைச் சிவப்பும் கண் கறுப்பும் நிறைந்த முகத்தை உடைய பெண்ணையே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாமல் நான் வேதனைப் பட்டேன். அவள் மோகினியேதான் என்ற எண்ணம் என்னைப் படாதபாடு படுத்தியது.

நல்லவேளை! அவள் ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கி இருட்டோடு இருட்டாகிப் போன பிறகுதான் எனக்கு உயிர் வந்தது.

நான்தான் சொல்கிறேனே, உண்மையில் நான் ஒரு கோழை. பந்த சுபாவம் உடையவன்.

இந்த மனநிலை வாழ்வின் அமைதியையும் ஆனந்தத்தையும் கெடுத்துவிடும் என்றுதானே சொல்ல விரும்புகிறீர்? அது எனக்கும் நன்றாகத் தெரிகிறது.

ரோட்டில் நடக்கவே பயம் எனக்கு. நடு ரோட்டில் நடக்கிறேன். திடீரென்று ஒரு கார் வந்து மோதி என்னைக் கீழே தள்ளி... பெரும் கூட்டம் கூடுகிறது. ஆஸ்பத்திரி....போலீஸ் எல்லாம் பிரமை! மனசின் கூத்து... நான் குதித்து ஓடி ரஸ்தாவின் ஓரத்துக்குப் போகிறேன். ஒழுங்காக நடந்து வந்த நான் இப்படித் திடுமெனக் குரங்குத்தனம் பண்ணுவதைக் காண்கிற மற்றவர்கள் "பைத்தியம் போலும்" என்று எண்ணுகிறார்கள், முழிக்கிறார்கள்.

வீடு இடிந்து என்மேல் விழுகிறது-பிரமை. வானம் கறுத்து, ஆகாச வெளியிலே நெளியும் ஒளிப் பாம்புகளென மின்னல் கிறுக்கிச் சிரிக்கையில், இடி இடிக்கிறபோது என் தேகம் நடுங்குகிறது. மின்னொளியால் என் கண் பார்வை போய்விடுகிறது; நான் என்ன செய்வேன் என்று உள்ளம் பதைக்கும். சட்டுச்சட சடக்கும் இடி என்மேலே விழுகிறது... வீதியில் எனக்கு விபத்து. ஒரு கை போய்விட்டது...இன்னொரு சமயம் கால் போய்விடுகிறது. அட கடவுளே, உயிர் வாழ்வதில் இன்பமே இல்லை. இல்லவே இல்லை!

நான்தான் சொன்னேனே-இது ஒரு நோய்தான். அல்லது பைத்தியத்தின் விளிம்பிலே என் சித்தம் தத்தளித்துத் தடுமாறிக் கெண்டிருக்கிறதோ என்னவோ!

நான் பெரிய வீதிகளின் ஒரு ஓரத்தில், வீதியைத் தாண்டாமலும் ஓரமாக நடந்தே போகாமலும், மணிக்கணக்கில் நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறவர்கள் "வேலையற்ற வீணன்" என்றுதான் எண்ணிச் செல்வர். என் மன அரங்கிலே எவ்வளவு குழப்பம் உருவாகி உருவாகி அழிகிறது என்பதை அவர்கள் எப்படி அறிய முடியும்?

இப்பொழுதுகூட, விசாலமான தெற்குக் கடற்கரை ரஸ்தாவின் வலது பக்கத்திலே அரைமணி நேரமாக நான் ஏன் நின்றுகொண்டிருக்கிறேன் என்று விசாரிப்பதற்காகத் தானே நீர் என் அருகில் வந்தீர்? நல்லது நண்பரே, உம்மிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேனே.

பெரிய ரஸ்தாக்களைக் கடந்து போவதற்குள், எனக்கு உயிர் போய் உயிர் வந்துவிடுகிறது. ஆமாம். அப்படித்தான் சொல்ல வேண்டும். ரஸ்தாவைத் தாண்டுவதற்கு முந்தியே என் மனம் சஞ்சலப்படுகிறது. பெண்டாட்டி வீட்டில் நெருப்புப் பற்றிக்கொண்டது போலவும் அதை அணைக்க வாயு வேகம் மனோவேகமாக ஓடுவது போலவும் மோட்டார் பைக்கில் விரைகிறார்களே பலர், நீர் கவனித்த தில்லையா? நான் ரஸ்தாவைக் கடக்கிற சமயத்தில், அப்படி ஒரு மோட்டார் பைக் அல்லது ஸ்கூட்டர் வந்து என்னைத் தாக்கி விடுகிறது. அல்லது கார், பஸ், லாரி - எவ்வளவோ இல்லையா? இவற்றை எல்லாம் தப்பி நான் ஒழுங்காக மறுபுறம் போய்ச் சேர முடியுமா, சேருவேனா என்ற பயமும் சந்தேகமும் அலைக்கழிக்க

நான் ஒரே இடத்தில் நின்றுவிடுகிறேன். காலம் ஓடுகிறது. என் கால்கள் நிற்கின்றன. இப்பவும் அப்படித்தான்.

இதோ பிசாசுப்பயல் மகன் ஒருத்தன் என்ன போக்குப் போறான் பாரும்! எதுக்கய்யா இத்தனை வேகம்? என்ன குடி முழுகிப் போகிற காரியம் கெட்டுவிட்டதாம்? நான் ரோட்டில் குறுக்கே போகிறேன்னு வையும். இது என்மேலே ஏறியிருக்குமா இராதா? நீரே சொல்லுமய்யா.

அதோ அந்தா வாறானே அவங்கப்பன் மகன்! சொந்தக் கார் இருந்தால்தான் என்ன? இவ்வளவு ஸ்பீடாகப் போனால்தான் காரிலே போனது போல இருக்குமோ? இல்லே, நான் கேட்கிறேன். நான் நடந்து போயிருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும்,

இரும்பு நாகரிகம், இயந்திர நாகரிகம், பெட்ரோல் நாகரிகம் எல்லாம் கூடிக்கொண்டு அடிக்கிற கூத்திலே சாதாரண மனிதனுடைய அன்றாட வாழ்க்கையின் அழகும் அமைதியும் ஆனந்தமும் சிதையுண்டு சின்னா பின்னாப்பட்டுப் போச்சு. நான் இவ்வாறுதான் எண்ணுகிறேன்.

சரி. துணிந்தாச்சு. ரோடும் கிளீயர்னு தோணுது. நான் கடக்கப் போகிறேன்... கடந்துவிடுவேன் நண்பரே.

என்னது? காரா?...எங்கே?

ஸ்கூட்டர்? மோட்டார் பைக்?

தாறுமாறாக மோதும் ஒலிக்கடலின் தறிகெட்ட ஓசை அலைகளில் நான் சிக்கிவிட்டது போல் தோன்றுகிறதே! எங்கே இருக்கிறேன்? ஐ...ய்...யோ! கட.....

க்றீச்!...கிர்ர்ரீச்

*

# 15

## பொம்மைகள்

ரோட்டோரத்தில் ஒரு வீடு.

அதில் மூன்று பெண்கள்...

நாகரிகம் கம்பீரமாகப் பெருகி ஓடும் பெரிய ரோடு அது.

நாகரிகத்தை, அதன் வளர்ச்சி வேகத்தை, மாறுதல்களின் கதியை எல்லாம் அளந்து காட்டும் விசேஷ "மீட்டர்"கள் அந்த மூன்று பெண்களும்.

அவ் வீட்டில் – "பெரிய மனிதர்" என்ற தோற்றத்தோடு விளங்கிய அப்பா இருந்தார். செல்வத்திலே பிறந்து, சீரும் செழிப்புமாக வளர்ந்த "பெரிய வீட்டுப் பெண்" என்று தோன்றும் அம்மா இருந்தாள். இன்னும் யார் யாரோ இருந்தார்கள்.

பெரிய குடும்பம் அது. பணம் புரளும் "செயலான" குடும்பம்தான்.

இருந்தாலும்...

பச்சைப் பசிய இலைகளை மிகுதியாகப் பெற்ற "கன்னா வாழை" (கல்வாழை) செடிகளில் கூட, பளிச்சென்று கண்ணைக் கவரும் தன்மையில் உயர்ந்து நிற்கும் தனிரகப் பூக்கள் மாதிரி, அக் குடும்பத்தில் அம்மூன்று பெண்களும் விசேஷக் கவர்ச்சியோடு விளங்கினார்கள்.

பெரியவர்கள் பாஷையில் சொல்லப்போனால் – மூத்தவள் "அப்பாவைக் கொண்டு" இருந்தாள். இரண்டாவது பெண் "அம்மாவைக் கொண்டி"ருந்தாள். மூன்றாவது பெண்?

யாரைக் "கொண்"டிருந்தாள், என்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. அம்மாவையும் அப்பாவையும் "கொண்டு" இருந்திருக்கலாம்; அல்லது, குடும்பத்தில் உள்ள வேறு எவரது சாயலையாவது-தனி ஒருவர் சாயலையோ, பலரது சாயல்களின் கூட்டு மொத்தமான ஒரு வார்ப்பையோ-அவள் பெற்றிருந்திருக்கலாம். அது எப்படி யிருந்தாலும் சரி. மூவரிலும் அவள் தான் நல்ல அழகி.

அவளோ-கவிதை போன்ற அச்சிறு பெண்ணை எண்ணும் போது, கவிதை தான் முன் வந்து நிற்கிறது! "தாவாச் சிறுமான்; மோவா அரும்பு; கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு"! வயது பதின்மூன்று தானிருக்கும்.

பெரியவள் "தண்ணித்தட்டு இல்லாமல் வளர்ந்த முருங்கை மரம் மாதிரி" நெடு நெடுவென்று உயர்ந்திருந்தாள். நன்றாகச் சாப்பிடாமல், வெறும் காப்பியைக் குடித்தும் "ஐஸ்க்ரீமை"த் தின்றும் வளர்கிற காலேஜ் குமாரிகள் சிலரைப் போலவே அவளும் ஒல்லியாய், எலும்பும் தோலுமாய்க்காட்சி அளித்தாள். எலும்பு மூட்டுகளும், நரம்பு முடிச்சுகளும் துருத்திக்கொண்டும், பிதுக்கியவாறும் நின்ற அந்த உருவம் "உடற்கூறு சாஸ்திரம்" கற்பிக்க உபயோகப்படக்கூடிய நல்ல எலும்புக்கூடாகத் திகழமுடியும்.

ஆனால் அலங்காரக் கலையிலே அவள் ஒரு "அத்தாரிட்டி"தான். நாகரிக ஸில்க் புடவைகளின் விளம்பரங்கள் புகழ்பாடுகிற துணிரகங்களை எல்லாம், வேளைக்கு ஒன்றாகச் சுமக்கும் "சீலை மாட்டி" (துணி ஸ்டாண்ட்) ஆக விளங்கும் அவள் உடல். வடநாட்டு சினிமாப் பத்திரிகையின் கலர் படங்கள் காட்டுகிற தலைச் சிங்காரிப்புகள் எல்லாம் அவள் கூந்தலிலும் வரிசைக்கிரமமாகக் குடிபுகும். இன்னும், நாகரிகச் சந்தையில் இறக்குமதியாகும் சகலவிதப் பொருள்களுக்கும்சரியான உரைகல்லாக மிளிர்ந்தாள் அவள்.

அழகு எனும் அம்சம் அவளிடம் இல்லைதான். ஆயினும் என்ன? உருவம் பெண்ணாக இருந்தால் போதாதா, அபிநவ ரோமியோக்களுக்கு! அவள் பின்னால் திரியவும், அவள் வீட்டில் வந்து தவம் கிடக்கவும் அஞ்சாறு "மம்முதர்"கள் இருந்தார்கள்... புராணகாலத்து மன்மதன் கிளிமீதா சவாரி செய்தான்? நாகரிக மதன்களுக்கு ஸ்கூட்டரும், மோட்டார் பைக்கும் பெரிதும் துணை புரிகின்றன... ஆகவே, அவள் வீட்டு முன்னாலும் இந்த ரக வாகனம் ஏதாவது ஒன்று காத்து நிற்பது வழக்கமாகிவிட்டது.

அவள் பிரபல கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அதனால் அவள் அவ்வப்போது உலா போகும் கோலம் வீதியில் நடமாடுவோருக்கு ரசிக்கத் தகுந்த காட்சியாக அமையும்.

இரண்டாவது பெண்ணிடம் அழகுமில்லை; ஆடம்பரமும் இல்லை; தனித்துவமும் கிடையாது. அக்காளை ஓரளவுக்குப் பின்பற்றும் பண்பு பெற்றவள் அவள். எனினும் வண்ணப்பூச்சித் தன்மை இவளிடம் அதிகம் காணப்படுவதில்லை. அடுத்த வீட்டுத் தடி அம்மாளுடன் பேசிப் பொழுது போக்குவதில் தான் இவள் மிகுந்த இன்பம்பெற்றதாகத் தோன்றியது. இவள் அதிகப் படிப்பு படிக்க அவாவியவளாகவும் தோன்றவில்லை.

வீட்டின் முன்புற ரஸ்தாவை அரங்கமாகக் கொண்டு, விதம் விதமான நடிப்புகளைச் செய்து காட்டும் அழகுக் "கலைஞி"யாக மிளிர்ந்தாள் மூன்றாவது பெண். சைக்கிள் சவாரி செய்து பழகுவதற்கும், ஸ்கிப்பிங் ஆடிக் களிப்பதற்கும், கோலமிட்டுப் பயில்வதற்கும், தன்னையே ஒரு எக்ஸிபிஷனாக மாற்றிக் கொள்வதற்கும் அந்த இடம் அவளுக்கு மிகுதியும் பயன்பட்டது. பள்ளிக்கூடத்துக்குப் போவது அவளுக்குப் பொழுதுபோக்கு; மற்றவை எல்லாம் உற்சாகமளிக்கும் அலுவல்கள்...

சமூகத்தில் சிலருக்கு இனிய பொழுது போக்காகவும், உவகையூட்டும் அலுவலாகவும் விளங்கும் "நவராத்திரி" வந்தது. பட்டும் பளபளப்பும், பகட்டும் படாடோபமும் சில வீதிகளிலே பவனி வந்தன; அநேக வீடுகளை முற்றுகையிட்டன.

ரோட்டோரத்து அந்த வீடும் அற்புத உலகமாக மாறியிருந்தது. அம் மூன்று பெண்களும் அதிவிசேஷ மேனாமினுக்கிகளாகக் காட்சி தரலானார்கள்.

தனி ஒருவன் வசதியாக வாழ்வதற்கே போதுமான வாய்ப்புகள் கிட்டாத சமுதாயத்தில் - கணவனும் மனைவியும் வயிறாற உண்டு திருப்திகரமாக உடுத்தி, சௌகரியமாகத் தங்கி மகிழ்வதற்குக் கூட வசதிகள் இல்லாத நாட்டில் - ஒரு குழந்தையைக் கூட நல்ல போஷாக்குடன் வளர்க்க முடியாமல் திணறுகிற குடும்பங்கள் நிறைந்த இடத்தில்-ஒரு நாளைக்கு ஒன்பது விதமாக அலங்கரித்துக் கொள்ளும் ஒய்யாரிகளுக்கு அழகழகான ஆடைகளும், ஆடம்பர

அணிவகைகளும் வாங்கிக்கொடுக்க முடிகிற தந்தை பெரும் பணக்காரனாகத்தான் இருக்கவேண்டும். அல்லது, மிகுதியாகப் பணம் பண்ணும்திறமையும் அதற்கு வகை செய்யும் பதவியும் பெற்றவனாக இருத்தல் வேண்டும்.

அம் மூன்று பெண்களும் அந்தியிலே பூத்தொளிரும் மந்தாரைகளாக விளங்கினார்கள். முன்னிரவிலே ஒளி மழையில் குளித்துப் பளிச்சென மிளிரும் மத்தாப்புக்களாகத் திகழ்ந்தார்கள். ஒரு தரம் பார்த்தவரின் விழிகளை மீண்டும் மீண்டும் தம் பக்கம் கவர்ந்திழுக்கும் காந்தமலர்களாக ஜிலுஜிலுத்தார்கள்.

அவ்வீட்டிலே "பொழுதுக்கும் பாட்டு; பொழுதெல்லாம் சங்கீதம்!" அவர்கள் முகத்திலே ஓயாத மலர்ச்சி. அவர்களைச் சுற்றிலும் எப்போதும் கலகலவெனச் சிதறுகின்ற களி துலங்கும் நகைப்பு. அவர்களுக்குக் கவலை எதுவும் இருக்காது என்றே தோன்றியது.

ஆமாம். இருக்க முடியாது தான்! மனித உள்ளமும் தர்ம உணர்வுகளும் விசாலப் பார்வையும் பெற்றிருப்பவர்களுக்குத்தானே வீண் கவலைகளும்-வேண்டாத குழப்பங்களும்-அடிக்கடி ஏற்படக்கூடும்!...

"நவராத்திரி"யின் மூன்றாவது நாள். மாலை வேளை.

பொம்மைகள் வாங்குவோர் இன்னும் வாங்கிக் கொண்டு தானிருந்தார்கள். மூவரில் மூத்தவளுக்கும் வாங்கும் ஆசை குறைந்து விடவில்லை.

அவள் வீட்டின் ஒரு அறையில் தரையிலிருந்து முகட்டைத் தொடும் வரை பல படிகள். படிகள்தோறும் தினுசு தினுசான பொம்மைகள். அந்த அறையே பொம்மைக் கடை மாதிரிப் பிரகாசித்தது. ஆயினும் அவள் மேலும் ஒரு பொம்மை வாங்க விரும்பினாள்.

நம்பி ஒருவன் நங்கை ஒருத்தியை ஆர்வத்தோடு அணைத்திட வேகமாகப் பிடித்திழுக்கும் ஒரு தோற்றம். அற்புதமான படைப்பு. உணர்வுத் துடிப்பும் ஜீவகளையும், எழில் மலர்ந்த வளைவு நெளிவுகளும் - எழுச்சி வீழ்ச்சிகளும் பெற்ற பொம்மை.

அவள் பார்வையில் பட்ட அது உள்ளத்தையும் தொட்டது. அப்புறம் வாங்காதிருக்க முடியுமா, அவளால்?

வாங்கி, அகமும் முகமும் மலர, பெருமையாகச் சுமந்து வந்து அதைக் காரில் வைத்தாள். ஒயிலாகச் சோம்பல் முறித்தாள்.

அவ்வழியே வந்த "லேம்பிரட்டா" கார் அருகில் நின்றது. அதில் ஜம்மென்று சவாரி செய்த யுவன் "ஹல்லோ! பர்சேஸிங்தானா?" என்றான்.

அவள் சிரிப்பைப் பதிலாக அளித்தாள் அவனுக்கு.

அவன் பொம்மையைப் பார்த்தான்."ஒண்டர்புல்... ஸூப் பர்ப்...பியூட்டிபுல்...ரொம்ப ஜோர்" என்று அடுக்கினான், "விலை என்ன?"

"நாற்பது ரூபாய்"

"ஃபார்ட்டி ருபீஸ்?" என்று சொல்லி, தன் புருவங்களை உயர்த்தினான் அவன்.

"இதென்ன பிரமாதம்! ஒரு கடையிலே புதுசா ஒரு பொம்மை பார்த்தேன். ஜோரா கரடி ஒண்ணு. ஒரு கையிலே கொக்கோ கோலாபாட்டில். இன்னொரு கையில் ஒரு கப். நாம் தொட்டால், அது பாட்டிலைத் தணித்து, கப்பில் ட்ரிங்கை ஊற்றி, நம் பக்கம் நீட்டும்..வெரி வெரி சார்மிங் திங். விலை வந்து...நூத்தி முப்பதோ என்னவோ!"

"ஒரு பொம்மைக்கா அவ்வளவு விலை?" என்றான் மைனர்.

"அந்த ரூபாயைக் கொடுத்து அந்த பொம்மையை வாங்கிப்போய் விட்டார்கள் தெரியுமா? இரண்டு மூணு பொம்மைகள் விலை போய் விட்டதாகக் கடையிலே சொன்னான். நான்கூட ஒண்ணு வாங்கலாம்னு எண்ணினேன். இந்த வருஷம் வேண்டாமேன்னு தோணிச்சு. விட்டுட்டேன்" என்றாள் சிங்காரி. சிரித்தாள்; காரில் ஏறினாள்.

ரோமியோவின் லேம்பிரட்டா பின்தொடர, அந்த ஜூலியட்டின் கார் வேகமாக நகர்ந்தது.

அவர்கள் சம்பாஷணையைக் கேட்டு நின்றான் ஒருவன். ஒரு வாரமாக க்ஷவரம் செய்யப்படாத முகத்தில் நீண்டு நின்ற மயிர்க்கட்டைகளை விரல்களால் சொறிந்தான். தலையைத் தடவினான். பொங்கி வந்த பெருமூச்சை அடக்க முடியவில்லை அவனால். அவனுக்கு ஒரு குழந்தை உண்டு. உயிருள்ள பொம்மை போன்ற

அந்த அழகான குழந்தைக்கு ஏதோ வியாதி வந்தது. அது மெலிந்துவிட்டது. டாக்டர் ஒரு டானிக் பெயரை எழுதிக் கொடுத்தார். அந்தச் சமயத்தில் அவனிடம் ஆறேகால் ரூபாய் இல்லை. இத் தொகையைப் புரட்டிக் கொண்டு மீண்டும் அவன் மருந்துக் கடையை அடைவதற்கு நாலைந்து நாட்களாயின. வந்து விசாரித்தான். அதே மருந்தின் விலை மேலும் ஒரு ரூபாய் அதிகமாகியிருந்தது... ஒரு ரூபா!... நூறு நயா பைசாக்கள்!... எங்கே போவது, குழந்தையை எப்படிக் காப்பாற்றுவது, இந்தக் கவலை அவனை அரித்துக் கொண்டிருந்தபோதுதான் பொம்மை விலையைப் பற்றி அலட்சியமாகப் பேசிய அலங்காரியின் சிரிப்பு அவன் காதுகளை அறுத்தது. அவன் உயிர்த்த பெருமூச்சு வெறும் காற்றில் தான் கலந்தது.

"நவராத்திரி"யின் ஐந்தாம் நாள்.

அந்தி நேரம்.

இரண்டாவது பெண், வர்ணமயமாய் பூத்துக் குலுங்கும் வண்ணச் செடிபோல், வாசல் படியில் நின்றாள். பக்கத்து வீட்டுத் தடிஅம்மாள் அவளைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

துவளும் கண்ணாடித் துணியென யுவதியின் உடம்பில் ஒட்டிக் கிடந்தது நாகரிக வெண்துகில். உள்ளே கட்டியிருந்த - பூவேலைப்பாடுகள் பெற்ற - பச்சை நிறப் பாவாடையையும், ஜாக்கெட்டையும், இரண்டுக்கும் இடைப்பட்ட வயிற்றுப் பகுதியையும் பளிச்சென எடுத்துக் காட்டப் பயன்பட்டது. அச்சீலை.

"புதுசா?" என்றாள் பெரியம்மாள்.

"உம்" எனத் தலையசைத்தாள் ஒய்யாரி.

"என்ன விலை?"

"எழுபத்தெட்டு ரூபா. இன்னொண்ணு பார்த்தேன். இதைவிட நைஸாக இருக்கும். டிஸைனும் வேறே மாதிரி. தொண்ணுத்திரண்டு ரூபா சொன்னான். தீபாவளிக்குப் பார்த்துக்கிடலாம்னு அம்மா சொன்னா. சரிதான்னு இருந்துட்டேன்..."

"அக்காளுக்கும் எடுத்திருக்குதா?"

"அவ இப்ப வேண்டாம்னு சொல்லிட்டா. போன வாரம் தான் அவள் ஒரு ஸேரி வாங்கினா. நீங்க கூடப் பார்க்கலே? ரொம்ப

ஜோரானது.. என்கிட்டேயும் இருக்குது. இரண்டு ஸூட்கேஸ் நிறையப் புடவைகள்தான். இன்னும் ஒரு ஸூட்கேஸ் வாங்கப் போறேன்..."

வழியோடு போய்க்கொண்டிருந்தாள் ஒருத்தி. குமாஸ்தாவின் மனைவியாக இருக்கலாம். அல்லது குறைந்த சம்பளம் வாங்கும் ஒரு உழைப்பாளரின் துணைவியாக இருக்கலாம். அவள் கண்கள் தன் சீலை மீது கவிந்தன. "ஏகப்பட்ட தையல்கள். வாங்கி ரொம்ப நாளாச்சு. நானும் ஒரு சீலை வாங்கணும் வாங்கணுமின்னு எவ்வளவோ மாசமா நினைக்கிறேன்; முடியலே. போன தீபாவளிக்குக்கூடப் புடவை எடுக்கலே. இந்தத் தீபாவளிக்கும் எடுக்க முடியாது. நல்ல புடவை ஒண்ணுகூட இல்லை என்கிட்டே..." அவள் உள்ளம் புகைந்தது. பெருமூச்சு சூடாக வெளிப்பட்டது.

அவளையே கவனிக்கவில்லை தற் சிறப்பில் லயித்துநின்ற அலங்காரி. அவளைவிட மோசமான நிலையில் வாழ நேர்ந்துள்ள எண்ணற்ற பெண்களைப் பற்றி இவள் என்ன அறிந்திருக்கப் போகிறாள்!

"நவராத்திரி"யின் வேறொரு நாள்...

மூன்றாவது பெண் மோகினிபோல் திகழ்ந்தாள். நீல வானத்தை வெட்டி எடுத்து, மிக நைஸாக்கி, மேலாக்காகப் போட்டதுபோல் ஒரு தாவணி. பொன்மயமாய்த் தகதகக்கும் அந்திவானத்தின் அழகை நினைவு படுத்தும் ஒரு பாவாடை. இவை அழகியான அவளுக்கு அற்புதக் கவர்ச்சி தந்தன. வற்றாத சிரிப்பு வழியவிடும் ஊற்று தான் அவளது சின்னஞ் சிறு வாய்.

துள்ளிக் குதித்துக் கொண்டு, அஞ்சனம் தோய்ந்த அழகு விழிகளை அப்படி இப்படி ஏவியவாறு, வந்தாள் அவள்.

பொம்மைகள் கொலுவிருந்த அறைக் குள்ளிருந்து - பொம்மைகளில் ஒன்று உயிர் பெற்று ஆடிப்பாடி வருவதுபோல - வந்தாள். வாசல்படியில் நின்று யாருடைய வரவையோ எதிர்நோக்கினாள்.

"நான் உள்ளே வரலாமா? பொம்மைகளைப் பார்க்க ஆசையாயிருக்கு" என்று ஒரு மென் குரல் அவளருகே விழுந்தது.

ஒரு சிறுமி. அழுக்குப் பாவாடை. அதைவிட அழுக்கு முட்டிப்போன கிழிந்த சட்டை, எண்ணெய் காணாத தலைமயிர்.

அழகற்ற குழந்தைதான். ஆயினும், விளையாடும் துடிப்பும் வேடிக்கை பார்க்கும் ஆசையும் இல்லாமலா போய்விடும்?

"சீ போ!" என்று எரிந்து விழுந்தாள் மோகினி.

"ஒரு தரம் எட்டிப் பார்த்து விட்டுப் போயிடுறேன்..."

"தரித்ரம்! போடி இங்கேருந்து... பீடை, இதும் மூஞ்சியைப் பார்த்தியா! இதுக்கு கொலுவேறே பார்க்கணுமாம்...போடீன்னா..போ..."

இதற்குள் ஒரு கார் வந்துவிட்டது. அதிலிருந்து, பகட்டும் மினுக்கும் ஆடம்பரமும் அலங்காரமும் ஒரு பட்டாளம் போல் கிளம்பி வந்தன.

மோகினி நாட்டிய பாவத்தோடு கை கூப்பி, தலையசைத்து, விழி சுழற்றி "வாங்க வாங்க" என்று கூறி, கலகலவெனச் சிரித்தாள். வந்தவர்கள் பார்வை அழுக்குப் பிடித்த சிறுமி பக்கம் பாயவே இல்லை.

தேவையற்ற கல்லும் மண்ணும் பார்வையில் படாததுபோல் தான் இதுவும்! பகட்டுச் சிறுமியும் பிறகு அந்த "தரித்திர"த்தைப் பற்றி நினைக்கவே யில்லை...

பொம்மை வைத்து விளையாடுகிறவர்களும் சமூகத்தின் மேல் தட்டிலே பகட்டாக விளங்குகிற பொம்மைகள்தான். அவர்களுக்கு உயிர் இருக்கிறதே தவிர, நியாயமான உணர்வுகளும் இல்லை, மனித இதயமும் இல்லைதான்.

ஏழைச் சிறுமி இப்படி நினைக்கவில்லை. அது மட்டுமென்ன? சமுதாயத்தின் முக்கால்வாசிப் பேர் இதைப்பற்றி எண்ணவே யில்லையே, இன்னும்!

*

# 16

## கொடிது, கொடிது!

''ஏய், விளையாட்டில் ஜெயிக்கிறவன் மற்ற எல்லோருக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுக்கணும். ஆமா'' என்று கத்தினான் ஆத்ம கிருஷ்ணன்.

'ஆமா, ஆமோ ஆமா' என்று கூப்பாடு போார்ட்டார்கள் மற்றவர்கள் முருகையா குதிக்கவுமில்லை; கூப்பாடு போடவுமில்லை. எனினும் அவனும் விளையாட்டில் கலந்து கொண்டான்.

ஓட்டப் பந்தயம் மும்முரமாக நடந்தது. முருகையா தான் முதலில் வருவான் என்று அநேகர் எண்ணினார்கள். ஏமாந்தார்கள். எல்லோரையும் ஏமாற்றிவிட்டான் அவன். இரண்டாவதாகத்தான் அவன் வந்தான்.

"கொஞ்சம் மூச்சுப்பிடித்து ஓடியிருந்தால் நீ முதல்லே வந்திருக்கலாம் முருகையா!" என்று அவனுடைய நண்பன் சுந்தரம் சொன்னான்.

"நான் சுலபமாக முதலில் வந்திருக்க முடியும். மூச்சைப் பிடிக்க வேண்டிய அவசியம் கூட இல்லை" என்று அவன் உள்ளம் சொல்லியது. அவனுடைய உதடுகள் இறுக மூடிக் கிடந்தன. அவற்றிடையே அசட்டுச் சிரிப்பு கூட மின்கோடிட்டு மறையவில்லை.

"முதல்லே வந்தால் எல்லோருக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுக்கணுமே என்று பயந்துவிட்டான் அவன். அதனால்தான் அவன் பின் தங்கிவிட்டான்'' என்று குறும்பாக மொழிந்தான் பாலு.

அதில் உள்ள உண்மை முருகையாவின் இதயத்தைத் திருகியது. அவன் முகம் கறுத்தது. கூரிய கருமணிகள் நீந்தும் அவன் கண்கள் பனித்தன. அவனுக்கு அழுகை

வரும்போல்தானிருந்தது. ஆயினும் அவன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டான்.

"சீ போடா!" என்று பாலுவைச் சீறினான் ஆத்ம கிருஷ்ணன்.

"நான் சும்மா சொன்னேன்" என்று பாலு இழுத்தான்.

விளையாட்டில் வெற்றிபெற்ற தாமோதரன் மிட்டாய் வாங்கி வந்தான். எல்லோருக்கும் கொடுத்தான். முருகையாவின் மனம் ஆசைப்பட்டது. அவன் கை முன்னே நீளத் தயங்கியது. "ஊம். சும்மா வாங்கிக்கொள், முருகா. பாலு சொன்னானே என்பதற்காக வருத்தப்படுகிறாயா?" என்றான் தாமு.

"ஊகுங். எனக்கு வேண்டாம்" என்று தயங்கித்தயங்கிச் சொன்னான் முருகையா.

முடிவில் அவனும் வாங்கிக் கொண்டான். ஆசை அடங்கி ஒடுங்கிவிட இசைந்தாலும், மற்றப் பையன்கள் அவனை சும்மா விட்டுவிடுவார்களா?

அன்று முதல் அது வழக்கமாக வளரலாயிற்று. விளையாட்டில் வெற்றிபெறுகிறவன் எல்லோருக்கும் தின்பண்டம் "சப்ளை" செய்ய வேண்டும் என்று ஒரு விதி செய்தார்கள். அதை ஒவ்வொரு நாளும் காப்பாற்றினார்கள்.

சுந்தரம் பாண்டி விளையாட்டில் ஜெயித்தபோது "பெப்பர் மிண்ட்" வாங்கிக் கொடுத்தான். பெரிய வீட்டுப் பையனான பாலு அனைவருக்கும் சாக்லெட் சப்ளை பண்ணினான். ஒருவன் வேர்க் கடலை வாங்கித் தந்தான். இப்படி நாள்தோறும் எல்லோருக்கும் ஏதாவது தின்பண்டம் கிடைத்து வந்தது.

முருகையாவும் சின்னப் பையன்தானே! விதம் விதமான பண்டங்களைத் தின்னவேண்டும் என்கிற ஆசை அவனுக்கும் இருந்தது. வீட்டில் கேட்டால் காசு கிடைக்காது. விளையாட்டிலோ ஆடிக்களிக்கும் இன்பமும் கிட்டியது; தின்பண்டமும் கிடைத்தது ஆகவே அவனுக்கு மகிழ்ச்சிதான்.

"ஏ ஏய்! ஒரு விஷயம் கவனித்தாயா? முருகையா தினம் தோற்றுக் கொண்டே இருக்கிறான். ஜெயிக்காமல் இருப்பதற்கு அவன் பாடுபடுவதாகவே தோன்றுகிறது" என்று ஒருநாள் ஆத்மகிருஷ்ணன் குறிப்பிட்டான்.

"நான் தான் அன்றைக்கே சொன்னேனே! அவன் ஜெயித்து விட்டால் எல்லோருக்கும் ஏதாவது வாங்கிக் கொடுத்தாகணுமே. அந்தப் பயம் தான் காரணம்" என்று பாலு சொன்னான். தனது கட்சி சரி என்பதில் அவனுக்கு எவ்வளவோ பெருமை!

அவன் சொல்வது உண்மை என்று அவனுடைய சிநேகிதர்கள் ஆமோதித்தார்கள்.

"பாவம், ஏழைப் பையன்" என்று சுந்தரம் சொன்னான்.

"அதுக்காக நம்மை அவன் ஏமாற்றலாமோ? முன்பெல்லாம் ஓட்டப் பந்தயத்தில் அடிக்கடி அவன் தான் முதலில் வருவான். இப்போது இரண்டாவது அல்லது மூன்றாவதாக வரும்படி கவனித்துக் கொள்கிறானே!"

"சடுகுடு விளையாட்டில் அவன் தான் கடைசிவரை பிடிபடாமல் இருப்பான். இப்ப என்னடான்னா சீக்கிரமே அகப்பட்டுக் கொள்கிறான்."

இப்படி ஆளுக்கு ஒன்று சொன்னார்கள்.

"நாம் கொடுப்பதை மட்டும் வாங்கி மொக்கி விடுகிறான்!" என்று குறைகூறினான் பாலு. அவன் பெரிய வீட்டுப் பையன் தான். ஆயினும் அவனுக்கு "சின்னப்புத்தி" அதிகம்.

முருகையா இல்லாதபோது தான் அவர்கள் பேசிக்கொண்டார்கள். அவன் செயலைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு திட்டமும் வகுத்தார்கள்.

"இன்றைக்கு வெறும் விளையாட்டு தான். யாரும் யாருக்கும் எதுவும் சப்ளை செய்ய வேண்டியதில்லை" என்று தன்னைத் தானே "தளபதி"யாக நியமித்துக் கொண்ட ஒருவன் அறிவித்துவிட்டான்.

அன்று முருகையா உற்சாகமாக விளையாடினான். வழக்கமான தீவிரத்துடன் கலந்து சில விளையாட்டுகளில் முதன்மை பெற்றான். அவன் திறமைசாலிதான். அதில் யாருக்குமே சந்தேகம் கிடையாது.

"ஏது முருகையா, இன்று நீ தோற்கவே இல்லையே" என்று பாலு கேட்டான்.

முருகையா பதில் பேசவில்லை.

"அவன் தோற்க வேண்டுமா? ஜெயித்தவன மிட்டாய வாங்கித தரணும் என்று சொல்லுங்கள் அப்ப ஐயாப்பிள்ளை லாஸ்டிலே பஸ்டு

ஆகிவிடுவாரு. அதுக்கு வேண்டிய முயற்சிகளை செய்வாரு" என்று கேலி பேசினான் பாலுவின் தோழன்.

இவ்விதம் பேசிப் பேசி வம்புச் சண்டை வளர்த்து விட்டார்கள் அவர்கள்.

"ஏ எச்சிப் பொறுக்கி!" என்றான் பாலு

"ஒட்டுப் பொறுக்கி! நட்டுவாக்காலி!" என்று பள்ளிக்கூடத்து வாய்ப்பாட்டு ராகத்திலே நீட்டி இழுத்தான் அவன் தோழன்.

முருகையாவும் என்னவோ சொல்ல, சிலர் அவன் முதுகைப் "பதம் பார்த்து" அனுப்பி வைத்தார்கள். அவன் அழுது கொண்டே போனான்.

அவன்பட்ட அடிகள் அவனுடைய உள்ளத்தைச் சுடவில்லை. அவர்களுடைய குற்றச்சாட்டின் உண்மைதான் அவன் மனசை வாட்டியது. அவன் குடும்ப நிலைமை அவனது உள்ளத்தைத் தகித்தது.

முருகையாவின் தந்தை பலவேசம்பிள்ளைக்குப் பணம் என்கிற விஷயம் எப்பொழுதும் "தூரத்துப் பச்சை"யாகவே இருந்தது. அவரும் ஏதேதோ தொழில்கள் செய்து பார்த்தார். ஓடி ஆடி முயற்சி செய்தார். வஞ்சனை இல்லாமல் உழைத்து வந்தார். கிடைக்கிற காசு சாப்பாட்டுச் செலவுக்குக்கூடப் பற்றாமல் தானிருந்தது. சில தினங்களில் அவர்கள் வீட்டு அடுப்பு புகையாமலே இருந்து விடுவதும் உண்டு அன்றைக்கு வெறும் பொரி கடலையைத் தின்று தண்ணீரையும் குடித்து வயிற்றை ரொப்பிக் கொள்வார்கள்" அவர்கள். பல நாட்களில், "சோறு கண்ட மூளி யார், சொல்" என்று கோயில் சிலையைப் பார்த்துக் கேட்ட கவிராயனுக்குப் பக்கபாட்டுப் பாடக்கூடிய அந்தஸ்து பெற்றவர்களாகத்தான் இருந்தனர் அக் குடும்பத்தினர்.

"கொடிது கொடிது வறுமை கொடிது" என்கிற ஏட்டுப் படிப்பின் உண்மையை நாள்தோறும் நன்கு உணர்ந்து வந்தான் முருகையா. அறியாத வயசில் அவன் அழுது அடம்பிடித்துத் தன் ஆசைகளை நிறைவேற்ற முயன்றான். ஆசாபங்கத்துடன் அறைகளும்தான் அவன் பெற்ற பலன்களாகும். நாளாக ஆக அவனும் கொஞ்சம் கொஞ்சமாக உண்மை நிலையை உணர்ந்து கொண்டான். அதற்கேற்ப நடந்துகொள்ளும் சாமர்த்தியம் அவனுக்கு இருந்தது. இயல்பாகவே அவன் நல்ல புத்திசாலிதான்.

படிப்பிலும் கெட்டிக்காரன் அவன். விளையாட்டில் தோல்வியுற முயற்சித்து அடிகள் வாங்கிக்கொண்ட பிறகு அவன் மற்றவர்களோடு சேர்ந்து விளையாடப் போவதை விட்டுவிட்டான். தெருப் பையன்களோடு கோலியும், சடுகுடும் பிறவும் விளையாடி மகிழ்ந்தான். அல்லது படிப்பில் ஈடுபட்டான்.

முருகையா பரீட்சையில் தேறிவிட்டான். "மேல் வகுப்புக்குப் போகிற" உற்சாகம் அவனை ஆட்கொண்டது. அந்த சந்தோஷ சமாச்சாரத்தை அம்மா அப்பாவிடம் சொல்வதற்காக ஓடோடி வந்தான் அவன்.

பலவேசம் பிள்ளைக்கு அன்று "மூடு" சரியில்லாத நிலைமை. காரணம் என்னவாக இருக்கும், தெரியாதா? கையில் காசு இல்லை. வீட்டில் அரிசி இல்லை; விறகு இல்லை; எதுவுமே இல்லை. அடுப்பிலே புகையவேண்டிய நெருப்பு அவர் வயிற்றில் திகுதிகுவென்று எரிந்து கொண்டிருந்தது; நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது. அவருடைய மனைவி குறைகூறி ஏச்சும் பேச்சும் வாங்கிக் கொண்டு, ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். ஒரு பீடிக்குக்கூட வக்கு இல்லாத நிலை"யை எண்ணிக் குமைந்து புழுங்கிக் கொண்டிருந்தார் பிள்ளை.

"அப்பா, நான் பாஸ்! பாஸாகிவிட்டேன் என்று உவகைக் கூச்சலோடு துள்ளி வந்தான் முருகையா. தந்தை சும்மா இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைந்த அவன் மீண்டும் கத்தினான். "நான் பாஸ் அப்பா. எட்டாம் கிளாசுக்குப் போய்விட்டேன்" என்று குதித்தான்.

பலவேசம்பிள்ளை திடீரென்று எழுந்தார், தரையிலிருந்து பொங்கி எழும் சூறைக்காற்று போல. அவனை முரட்டுத்தனமாகப் பற்றினார். "நீ ஏண்டா பாசானே? அதுக்கு ஏமிலே இந்தக் குதிப்பு? உனக்கு ஏன்லேய் படிப்பு? நீ படிச்சு என்னத்தை வெட்டி முறிக்கப் போகிறே? சோத்துக்குச் சம்பாதிக்கத் துப்பு உண்டாலே உன்படிப்பினாலே?" என்று கூச்சலிட்டுக்கொண்டே அவனை அறைந்தார்.

"பையன் படிச்சுப் பாஸ் பண்ணி எல்லோருக்கும் சோதுதுககு வழி செய்துவிடப்போகிற மாதிரித்தான்! குதிப்பும் கூப்பாடுமாக வீட்டுக்கு வந்துவிட்டான்" என்று உறுமிக்கொண்டு மேலும் இரண்டு அறை வைத்தார் தந்தை.

இத்தகைய வரவேற்பை முருகையா எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? அடியின் வலியும், உள்ளத்து வேதனையும் சேர்ந்து அவனை விக்கிவிக்கி அழச் செய்தன.

உள்ளே இருந்து வெளியே எட்டிப் பார்த்த தாய், பலவேசம் பிள்ளையின் ஆங்காரம் ஒருவாறு ஒடுங்கியதும் பேச்சு கொடுக்கத் துணிந்தாள். "பாவம், அவனை ஏன் இந்த அறை அறையணும்? படிப்பிலே தேறினது ஒரு குத்தமா?" என்று கேட்டாள்.

அவர் அவளை முறைத்துப் பார்த்தார். "தினசரி சாப்பாட்டுக்கே லாட்டரி அடிக்குது வீட்டிலே. இன்னையப் பொழுது எப்படிடா கழியுமின்னு மனுசனுக்குப் பெரிய கவலையாக இருக்கையிலே, அந்தப் பயல் துள்ளிக் குதிச்சுக்கிட்டுவாறானே! மேல் கிளாசுக்குப் போயாச்சு, புதுப் பொஸ்தகம் வாங்கணும். நோட்டுகள் வாங்கியாகணும். பேனா பென்சில், லொட்டு லொசுக்குயின்னு ஏகப்பட்டது வாங்கணும்; பணம் கொண்டு வா என்பானே. பையனுக்கு நல்ல சட்டை இல்லை; வேட்டி இல்லை. மேல் கிளாசுக்குப் போய்விட்ட உடனேயாவது அதற்கெல்லாம் ஏற்பாடு பண்ணணுமா, வேண்டாமா? பணத்துக்கு நான் எங்கே போவேன்? இதை எல்லாம் பற்றிக் கவலைப்பட வேண்டியிருக்க அவன் குதியாட்டம் போடுகிறானே!" என்று புலம்பினார் அவர்.

வறுமைத் தீயில் வதங்கிக் கொண்டிருந்த அந்தத் தாயினால் சோகப் பெருமூச்சுதான் உயிர்க்க முடிந்தது.

நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது.

பலவேசம் பிள்ளையின் உள்ளத்தில் புகுந்து அவரைப் பேயாக மாற்றியிருந்த ஆத்திரமும் கோபமும் ஒடுங்கிப் போயின. அவருள் குடிகொண்டிருந்த இயல்பான நல்லதனம் அவரைக் கஷ்டப்படுத்த ஆரம்பித்தது. சுவர் ஓரத்தில் கிடந்து விம்மிக் கொண்டிருந்த பையனைக் காணக்காண அவர் மனசில் ஏதோ ஒன்று என்னவோ பண்ணியது. அவனை - அவன் "செய்யாத குற்றத்துக்காக - "பழியாக அறைந்தது" பிசகு என்ற உணர்வு குறுகுறுத்தது. அவர் அவன் அருகே போய் உட்கார்ந்து பரிவுடன் அவனுடைய முதுகை வருடினார். ''கொடுமை, கொடுமை'' நாம் இப்படி வாழ நேர்ந்துவிட்டதே பெரிய கொடுமைதான்'' என்று அவர்

முணுமுணுத்தார். அவர் கண்களில்கூட நீர் மல்கியது. தனது பலவீனத்தை மற்றவர்கள் கண்டு கொள்ளக்கூடாதே என்ற பரபரப்போடு எழுந்து வெளியே போய்விட்டார் பிள்ளை.

முருகையா அழுதுகொண்டே இருந்தான். விளையாட்டில் தோல்வியுற்று அடிபட நேர்ந்ததும், படிப்பில் வெற்றி பெற்றும் "அடி தின்ன" நேர்ந்ததும் வாழ்வின் வேடிக்கைகளாகப் படவில்லை அவனுக்கு. வேதனைகளாகத் தான் உறைத்தன. தந்தை அடித்தது அவன் பிஞ்சு உள்ளத்தில் வடு உண்டாக்கியது. அவர் அன்புடன் தடவிக் கொடுத்ததும், துயரத்தோடு முனங்கியதும் அவனுடைய இளம் உள்ளத்தில் இனம் புரிந்துகொள்ள முடியாத ஒரு வேதனையையே புகுத்தின. எனவே அவன் அழுது கொண்டே கிடந்தான்.

*

# 17

## சிலந்தி

சிதம்பரத்தின் உடல் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது, உள்ளத்தின் பதை பதைப்பும் ஒடுங்கிவிடவில்லை.

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டு விழித்தெழுந்தான். பரபரவென்று போர்வையை உதறினான். அவனை அப்படி எழுந்திருக்கும்படி தூண்டியது...

அது தான் அவனுக்குப் புரியவில்லை. அது வெறும் கனவா? நனவு தூண்டிய உணர்வா? அல்லது, உள்ளுணர்வு தந்த அபாய அறிவிப்பா?

கனவு என்றால்-

நிஜமாக முன் நின்றது அதை மறக்கும்படி தூண்டியது.

நிஜம்-நனவின் விளைவு-என்றால், தூங்கிக் கொண்டிருந்தவன், கன்னக் கனிந்த இருட்டிலே அதை தெள்ளத் தெளிவாக அறிய முடிந்தது எவ்வாறு?

உள்ளுணர்வின் உந்துதல் என்றாலோ-

உள்ளுணர்வு உணர்வைத் தூண்டலாம். மூளையை விழிப்புறச் செய்யலாம். தூங்கும்போது கூட, கண்ணினால் காண்பது போல் பளிச்செனப் புலப்படுத்துவதற்கு அதற்கு ஏது சக்தி? உள்ளுணர்வு அதீதமான கண்களும் பெற்றிருக்குமோ?

சிதம்பரத்துக்கு எதுவுமே புரியவில்லை. அறிவைக் குழப்பும் விஷயமாகத்தான் அமைந்தது அது.

-இரண்டு கண்கள். அவனையே வெறித்து நோக்கும் ஒளிப்பொறிகள். சூரியனின் கதிர்களை ஏற்றுப் பளீரென

ஒளி வீசும் மணிகள்போல் மினுமினுக்கும் கண்கள்... அவனை உற்று நோக்கியவாறிருந்தன. அக்கண்கள் பொதிந்த தலை பெரிதாய், விகாரமாய், வெறுப்பு ஏற்படுத்துவதாய், ஒருவித பயமும் தருவதாய் இருந்தது. அதற்கேற்ற உடல்... அதில் முளைத்தெழுந்த எட்டுக்கால்கள் - உடலைவிடப் பெரியனவாய் அதன் வேக இயக்கத்துக்குத் துணை புரிவனவாய்...

"ஐயோ, சிலந்திப்பூச்சி!" என்று அலறியது அவன் மனம். "ஐய்யோ நம்ம மேலே ஏறிவிடும் போல் தோணுதே! என்று பதறியது.

அவன் விழித்து, அலறியடித்துக் கொண்டு எழுந்தான். அவன் உடல் மீது பூச்சி வேகமாக ஓடுவதுபோன்ற உணர்வு ஏற்பட்டது. கையினால் தடவித் தள்ளினான். துடித்து எழுந்து, ஸ்விச்சைத் தட்டினான்.

இரவின் ஆழத்தில் - கிணற்றில் விழும் கல் "டுபுக்"கென ஒலி எழுப்புவதுபோல் - அது கனத்த ஓசை எழுப்பியது. ஒளியைக் கொட்டி எங்கும் பூசியது சிறு "பல்ப்".

கண்களைக் கூச வைத்த அவ் வொளி வெள்ளத்திலே அவன் அதைக் கண்டான். சுவரோடு தரை கூடும் இடத்தில் - சுவரோடு சுவராய், தரையோடு தரையாய் அது ஒண்டியிருந்தது. பெரிய சிலந்திப் பூச்சி. நன்கு வளர்ந்து தடித்தது. அழுக்கு முட்டிய ஏதோ ஒரு உருண்டை போல, அருவருப்பு தரும் உடல். அதன் மீதுள்ள ரோமங்களும் புள்ளிகளும் அவன் பார்வையை உறுத்தின. அதன் கண்கள் விளக்கொளியில் மினுமினுத்தன.

அப்படியே அந்தப் பூச்சியை நசுக்கிக் கொல்லவேண்டும் என்று துடித்தது அவன் உள்ளம். ஆனால், வெறும் பாதத்தினால் அதை மிதித்து நசுக்க அஞ்சினான் அவன். பழந்துணியையோ, செருப்பையோ தேடித் திரிந்தன அவன் விழிகள்.

அவன் செருப்பை எடுத்து வருவதற்குள் அந்த எட்டுக்கால் பூச்சி வேறு இடத்துக்கு ஓடியிருந்தது. அவன் கண்கள் அதைக் கண்டுபிடிக்கச் சிறிது சிரமப்பட்டன.

சிலந்தி சுவர்களின் ஒரு மூலையில் தரை ஓரத்தில் பதுங்கி யிருந்தது.

"இங்கேயா இருக்கிறே?" என்று முனங்கியபடி அவன் வேகமாக அறைந்தான். செருப்பு பூச்சியின் மீது பட்டது. ஆயினும் அதைச் சாகடிக்கும் விதத்தில் தாக்கவில்லை. அது ஓடியது. அதன் கால் ஒன்று தரையில் தனியாகக் கிடந்தது.

பூச்சி வேறொரு இடம் சேர்ந்து அசையாமல் நின்றது. சிதம்பரம் தாமதிக்கவில்லை. இந்தத் தடவை தவறு செய்யவுமில்லை. சரியாக அதைக் தாக்கி நசுக்கித் துவைக்கும் விதத்தில் செருப்பை உபயோகித்தான்.

சிதைந்து, உருக்குலைந்து, அசிங்கமான திரவமும் உடலும் கூழாகிவிட்ட நிலையில் காட்சி அளித்தது சிலந்தி.

அதைத் துடைப்பத்தால் எடுத்துத் தூர எறிந்து விட்டு அவன் படுக்கையில் படுத்தான். விளக்கு எரிந்து கொண்டு தானிருந்தது. அவன் மனம் ஒடுங்க வில்லையே! அவனுக்கு இனி தூக்கம் வருவதாவது!...

சிலந்திப் பூச்சி என்றாலே சிதம்பரத்துக்கு மன உளைச்சல்தான்.

அவனுக்கு அது ஒரு "அப்ஸஷன்".

சிலந்தி மிக மோசமான ஜந்து என்பது சிதம்பரத்துக்கு அவனது எட்டாவது வயசில் புரிந்தது.

அவன் உடலில் வட்டம் வட்டமாக "பற்று" படர்ந்தது. அரிப்பெடுத்தது. சொறிந்தால், புள்ளிகள்போல் அடை அடையாய் தென்பட்டன. அவை கழுத்திலும், மார்பிலும், முதுகிலும், எங்கும் பரவின.

"இது எட்டுக்கால் பூச்சி விஷத்தினால் ஏற்பட்டிருக்குது. நீ தூங்குகிறபோது சிலந்திப் பூச்சி கடித்திருக்கும். இதற்கு பார்வை பார்க்கணும்" என்ற பெரியம்மா ஒருத்தி உபதேசித்தாள். "பார்வை பார்ப்பதில்" தேர்ந்த ஒரு பெரியவர் இருக்குமிடத்தையும் அவள் குறிப்பிட்டாள். "போகும்போது ஒரு பாட்டிலும் கொண்டு போ. பச்சை நிற பாட்டில் வேணுமின்னு அவர் சொல்லுவார். வெள்ளை பாட்டில் ஆகாதாம். அதனாலே பச்சை பாட்டிலே எடுத்துப் போ. அவரு மந்திரிச்சு தண்ணீர் தருவாரு. அதை என்ன செய்யணுமின்னும் சொல்லுவாரு" என்றும் அறிவித்தாள்.

அவ்வாறே அவன் செய்தான். "சிவப்பழம்" ஆகத் தோன்றிய பெரியவர் அவனைத் தன்முன் நிறுத்தி மந்திரித்தார். முனங்கி, தண்ணீரை அள்ளிச் சுற்றி, அவன் தலைமீது தெளித்தார். தம்ளரில் பாக்கியிருந்த நீரை, அவன் கொண்டு வந்திருந்த புட்டியில் ஊற்றி அவனிடம் கொடுத்தார்.

"இந்த பாட்டிலை கீழே எங்கும் வைக்காமல் வீட்டுக்கு எடுத்துப் போ. வீட்டிலும் தரையிலே வைக்கப்படாது. மரப்பலகை மீதுதான் வைக்கவேண்டும். ஸ்டூல் அல்லது பெஞ்சு அல்லது அலமாரித் தட்டு இதுமாதிரி எதன் மேலாவது வை. இந்தத் தண்ணியை மூன்று வேளைகளில் குடித்துத் தீர்த்து விடு சரியாப் போகும்" என்றார்.

அவனும் பயபக்தியோடு, அவர் அறிவித்தபடியே செய்து முடித்தான். அவன் தேகத்தில் படர்ந்த பூச்சிக்கடி விளைவு மாயமாக மறைந்து விட்டது.

அது எதனால் நேர்ந்தது?

அன்றும் அது அவனுக்கு விளங்கவில்லை. அதன் பின்னரும் தெளிவு ஏற்பட்டதில்லை.

– "சிலர் கண்களுக்கும் எண்ணத்துக்கும் விசேஷமான ஒரு சக்தி உண்டு. அவர்கள் கூர்ந்து பார்த்து, திடமனசோடு எண்ணினால், அந்த எண்ணத்தின்படி பலன் ஏற்படும்" என்கிறார்களே. "பார்வை பார்த்த" பெரியவரும் அத்தகைய ஆத்ம சக்தி பெற்றிருக்கலாம். மற்றவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக ஒருவிதமான பயமும் பக்தியும் உண்டாக்குவதற்காக – தண்ணீர், பச்சை நிற பாட்டில், அதை மரப்பலகை மீது தான் வைக்க வேண்டும் எனும்விதி என்றெல்லாம் அவர் ஒழுங்கு செய்திருக்கலாம்.

இவ்வாறு சிதம்பரம் பிற்காலத்தில் எண்ணியது உண்டு. எனினும் இதுதான் சரி என்று அவன் உள்ளம் துணிந்து சாதித்ததில்லை...

இந்த இரவில், தடித்த பூச்சியைக் கொன்று விட்டு, படுக்கையில் படுத்துக் கிடந்த போதும் அவன் அதைப்பற்றி எண்ணினான்.

முன்பு "பார்வை பார்த்த" பெரியவர் இறந்து எவ்வளவோ வருஷங்கள் ஆகிவிட்டன. அதன் பிறகு சிதம்பரம் பல தடவைகள் சிலந்திப் பூச்சிக் கடியினால் அவதிப்பட்டது உண்டு. அச் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவன் பெரியவரைப் போல் மந்திரிக்கக்கூடிய ஆள் எவரையும் காண முடிந்ததில்லை. மேலும், பூச்சிக் கடியின் விளைவு சில தினங்களில் தானாகவே மறைந்துவிடும்.

எனினும், அவன் உள்ளத்தில் சிலந்தி தனியொருஇடம் பெற்று நின்றது. நினைவாக வளர்ந்து அரித்துக் கொண்டிருந்தது. கனவிலும், நுண்ணிய இழைகளை ஒட்விட்டு வலை பின்னி அவன் மூளையில் பதிய வைத்தது. பித்தாய், பேயாய், படுத்தி வந்தது. கோளாறாய், குணக்கேடாய், வளர்ந்து அவனை ஆட்டிப் படைத்தது.

சிறு சிறு பூச்சிகளிலிருந்து பென்னம் பெரிய சிலந்திகள் வரை, பலரகமான பூச்சிகள் சதா அவன் நினைவில் ஊர்ந்து கொண்டிருந்தன. எப்பவாவது பூச்சி கடித்தாலும் கூட, சிலந்தி தான் கடித்திருக்கும் என்று நம்பி அவன் கஷ்டப்படுவது வழக்கம். "காணாக்கடி"யாக ஏதாவது அவனை அடிக்கடி கடித்துக்கொண்டு தானிருந்தது. தேகத்தில் அங்குமிங்கும் அரிப்பும், கழுத்துப் பக்கத்திலும் மூக்கோரத்திலும் கண் இமைகள் மீதும் முதுகிலும் வட்டங்களாகவும் புள்ளிகளாகவும் பற்று வருவது போவதாகவும் இருந்தன.

அவனைக் கடிக்காத வேளைகளில்கூட, சிதம்பரத்தின் மனம் சிலந்தி பூச்சிகளைத் தேடித் திரிந்தது. அவன் நினைவு அந்தப் பூச்சியைச் சுற்றியே வலைபரப்பியது. எங்கோ எப்போதோ படித்ததன் நினைவு அவன் தூக்கத்திலே கனவாய், பயங்கரமாய் நிழலாடுவது முண்டு.

– ஆப்பிரிக்காவிலோ, அல்லது வேறு எங்கோ, ஒருவகைச் சிலந்தி உண்டு. மனிதர் கீழே படுத்துத் தூங்கும்போது அந்தப் பூச்சி வந்து அவர்கள் தலைமீது ஊர்ந்து, மயிர் முழுவதையும் கத்திரித்துவிடும். அது அப்படிச் செய்வது, படுத்துத் தூங்கு கிறவனுக்குத் தெரியாது. அவன் விழித்தெழுந்த பிறகுதான், தனது தலைமொட்டையாகியிருப்பதை உணர முடியும்.

இதை அவன் ஒரு பத்திரிகையில் படித்தது முதல் இச்செய்தியால் பித்துற்றான். அந்த ரகச் சிலந்தி மனிதர்கள் தலைமுடியை மட்டும் தான் கத்திரிகிக்குமா; அல்லது, மயிர்; அடர்ந்த உடல் பெற்ற பிராணிகள் மீதும் ஊர்ந்து தனது வேலையைக் காட்டுமா? அவன் அறிவு இவ்வாறு குரல் கொடுத்தாலும் கூட, இச் சந்தேகத்தை விட அவனது விசித்திர உணர்வே அதிக வலிமை பெற்று மேலோங்கியது...

தூக்கத்தில் அவன் கை தலையைத் தடவிப் பார்த்துக் கொள்ளும்... இரவில் இரண்டு மணிக்கும், மூன்று மணிக்கும் –

வேளைகெட்ட வேளைகளில் எல்லாம் – விந்தைச் சிலந்தி அவனது அடர்ந்த கரிய தலைமூடியினூடே புகுந்து விளையாடுவது போன்ற உணர்வு பெற்று அவன் திடுக்கிட்டு எழுவான். மயிர் கொட்டி விடவும், மண்டையில் அங்கங்கே சொட்டை விழுந்து விகாரத் தோற்றம் பெற்று விட்டதுபோல் அவனுக்குப்படும். உடனே. விளக்கை ஏற்றி. கண்ணாடி முன் நின்று ஆராய்ச்சி செய்வான் அவன்.

– "டாரன்ச்சலா" என்ற இனத்துப் பூச்சிபற்றி அவன் அறிந்தது முதல், சிதம்பரத்தின் மனப்பித்து மோசமான நிலை எய்தியது...

டாரன்ச்சலா இனச் சிலந்தி பெரியது: மயிர் செறிந்தது. விகார உருவம் பெற்ற இது உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் விஷம் உடையதல்ல. இத்தாலியிலும் ஐரோப்பாவின், வேறு சில நாடுகளிலும் காணப்படுகிற இந்தச் சிலந்தியால் கஷ்டப்படுகிறவர்களுக்கு நாட்டியம் ஆட வேண்டும் என்ற வெறி பிறக்குமாம். அவர்கள் அந்த உணர்வு தீருகிற வரை வெறியாட்டம் ஆடவேண்டியது தான்...

சிதம்பரம் இந்த இனச் சிலந்தியை நேரில் காணும் வாய்ப்பு பெற்றவனல்ல. அதன் படத்தை மட்டுமே கண்டிருந்தான். ஆயினும் டாரன்ச்சலா அவன் மூளையில் ஒரு பகுதியில் குடியேறி விட்டது!

அந்தப் பெருஞ்சிலந்தி அவனைக் கடித்து விட்டது போலவும், "ஆடு! எழுந்து குதித்து, கூத்தாடுடா பயலே!" என்று உத்திரவிடுவது போலவும் உணர்வு எழும் அவனுக்கு.

ஒன்றிரண்டு தடவைகள் அவன் எழுந்து நின்று "திங்கு திங்கென்று" குதித்துக் கூத்தாடவும் செய்திருக்கிறான். நல்ல வேளை! அச்சந்தர்ப்பங்களில் அவன் தனியனாய் தனது அறையிலேயே இருந்தான். வேறு எங்காவது இருந்திருந்தால் அவனுக்குப் பைத்தியம் என்றே மற்றவர்கள் முடிவு கட்டியிருப்பார்கள்.

அவனுக்குப் பைத்தியம் தானா? அல்லது, பைத்தியத்தின் ஆரம்ப நிலையா? பைத்தியத்தின் வித்து விழுந்து, மனம் சிறிது சிறிதாகப் பேதலித்து வரும் தன்மையோ? அறிவு மயக்கமும் தெளிவும் மாறி மாறி வரும் நிலமையாக இருக்குமோ?

திட்டமாகச் சொல்வதற்கில்லை. எதுவாகவும் இருக்கலாம். எதுவும் இல்லாது, வேறு குழப்பமாக இருந்தாலும் இருந்து விடலாம். மனித உள்ளத்தின் சிக்கல்களை யார்தான் எளிதில் விடுவிக்க முடிகிறது?

சிதம்பரம் அன்றாட அலுவல்களை ஒழுங்காகத் தான் செய்த வந்தான். "முக்கியமான வேலை" என்று எதையும் செய்ய வேண்டிய அவசியம் அவனுக்குக் கிடையாது. வாழ்க்கை வசதிகள் பலவும் இருந்தன. ஆகவே, சோம்பியிருக்கவும், வீண் எண்ணங்களை வளர்க்கவும் நேரம் நிறையவே கிடைத்தது. அத்தகைய வேளைகளில் அவன் மனம் அடிக்கடி சிலந்தியைச் சுற்றியே நூல் ஓடவிட்டு, தான் பின்னிய வலையில் தானே சிக்கிச் சுழன்று, எண்ணச் சிக்கலை அதிகமாக்கிக்கொண்டு குழம்பித் தவிக்கும்.

இந்த உலகத்திலேயே தனது முதல் விரோதி சிலந்திப் பூச்சிதான் என்றும், கண்ட போதெல்லாம் அந்த இனப்பூச்சியை நசுக்கிக் கொல்ல வேண்டும் என்றும் தவித்தான் அவன். அந்த இனத்தை அவன் அடியோடு ஒழித்துக் கட்டிவிட முடியாது என்றும், அவனுக்கு அந்தப் பூச்சியினால் தான் மரணம் சம்பவிக்கும் என்றும் அவன் உள்ளம் அடிக்கடி அவனுக்கு நினைவு படுத்திக் கொண்டிருந்தது.

சில சமயங்களில் அந்தப் பூச்சி சிலந்திஇனப்பூச்சிகளில் எதுவாவது ஒன்று – அவன் கண்களைக் கவர்ந்து,. மனசை வசீகரித்து, வியந்து நிற்கும்படி செய்துவிடும்.

ஒரு தடவை சிதம்பரம் ரஸ்தாவில் நடந்துகொண்டிருந்தான். இருபுறமும் மரங்கள் ஓங்கி வளர்ந்த பாட்டை. மரங்களிலிருந்து உதிர்ந்து விழுந்த சருகுகளும், பழுப்புகளும், காய்களும், பூக்களும் எங்கும் சிதறிக் கிடந்தன. அவை இன்னும் உதிர்ந்து கொண்டிருந்தன... திடீரென்று அவன் முன்னே, காலுக்கு அருகிலேயே, "டப்" என்று எதுவோ விழுந்தது. வேப்பம் பழமாக இருக்கும் என்று அவன் எண்ணினான்.

மேலே கவிந்து நின்ற வேப்ப மரத்திலிருந்துதான் அது விழுந்தது. ஆனால் அவன் ஏமாற்றமும் வியப்பும் ஒருங்கே அடைய நேர்ந்தது. வேப்பம் பழம் போல் உருண்டையாக இருந்தது அது. வெண்மையும் பசுமையும், சிறிது மஞ்சள் நிறமும் கலந்த உடலும், பசிய குச்சிகள் போன்ற கால்களும் பெற்ற சிலந்திப் பூச்சியாக இயங்கியது. நகர்ந்தது: அவன் காலை நோக்கி ஓடிவர முயன்றது.

அவன் பாதம் தானாகவே பின்னுக்கு நகர்ந்தது. இயற்கையின் அற்புதமான ஆற்றலை - சூழ்நிலைக்கு ஏற்ப ஜந்துக்களைப் படைத்து, அவற்றுக்கு இயல்பான பாதுகாப்பு அளிக்கும் தன்மையை - எண்ணி வியப்புற்றான் அவன். அதற்குள் அந்தப் பூச்சி அவன் மீது தாவி ஏறுவதற்காக நெருங்கி விட்டது.

செருப்புக் காலால் அதை நசுக்கிக் கொன்றிருக்கலாம். கொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு எழாமலில்லை. எனினும் அதைக் கொல்ல அவன் கால் நகரவில்லை. மனம் தூண்டவுமில்லை. அந்த விஷப் பூச்சி, மலரும் நிலையிலுள்ள குண்டு மல்லி மொக்கு போல் புதுமையாக இருந்தது; பசுமையாயும் அழகாகவும் இருந்தது. அதனால் வசீகரிக்கப்பட்டு நின்ற அவனை அவனுடைய உள்ளுணர்வு வேகமாக உந்தியது. அவன் விலகி நகர்ந்தான்.

அந்தப் பூச்சியையே கண் வைத்துக் காத்திருந்த ஒரு காக்கை குபீரென்று பாய்ந்தது. தன் கூரிய மூக்கால் பூச்சியைக் கொத்தியது. கொன்றது. கவ்வி எடுத்துப் பறந்தது.

சிதம்பரம் அந்தப் பூச்சிக்காக அனுதாபப்படவில்லை. அவனுக்கு ஏதாவது ஒரு சிலந்திப் பூச்சியால் சாவு ஏற்படும் - "ஜலமண்டலி" கடித்தால் மரணம் நிச்சயம் என்று தானே சொல்கிறார்கள்? என்று அவன் உள்மனம் அப்பொழுது ஜாதகம் கணித்தது.

தூக்கம் பிடிக்காமல் கிடந்த சிரம்பரத்தின் கண்கள் ஒளிக்குமிழையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தன. வைரக் கம்பிகள் போல் அதிலிருந்து பாய்ந்த ஒளிக்கோடுகள் எல்லாம் சிலந்தியின் மெல்லிய நூல்கள் போலவும், ஒவ்வொன்றிலும் ஒரு பூச்சி தொங்கிப் பாய்வது போலவும் தோன்றியது.

ஒரு தடிப்பூச்சி வாயில் வெள்ளை வட்டம் ஒன்றைக் கவ்வியபடி வந்து விழுந்தது. உற்றுக் கவனித்தால், அது அவ் வட்டப் பொருளைத் தன் கால்களால் நன்கு பற்றியிருப்பது புரிந்தது.

சிதம்பரம் ஒரு குச்சியால் விரட்டவும், சிலந்தி அதை நழுவவிட்டு விட்டது. அவன் அதைக் குத்தினான். அது கிழிந்து, அதனுள்ளிருந்து பலபல பூச்சிகள் - சின்னஞ்சிறு சிலந்திகள் - வெளிப்பட்டுச் சிதறின. குடுகுடுவென ஓடி ஊர்ந்தன. அவனைச் சுற்றி ஓடின. அவன் உடல் மீதும் ஏறின.

"ஐயோ ஐயோ!" என்று அலறிக் கொண்டு துள்ளி எழுந்தான் அவன். கைகளால் நெடுகிலும் தேய்க்க முயன்றான். எனினும் பூச்சிகள் வேகமாக ஊர்ந்து படர்ந்தன. பெரிய பூச்சி கூட–"அவனைத் துரத்தி வந்தது.

செய்யும்வகை புரியாதவனாய் தலை முடியைப் பிய்த்துக் கொண்டு கைகளை ஆட்டி அசைத்து, "ஐயோ, ஐயோ!" என்று கூச்சலிட்டபடி ஓடலானான் அப்பாவி சிதம்பரம்.

*

18

# பெரிய மனசு

அந்தச் சிறு உருவப் பெண் ஒரு அதிசயம் என்றே எனக்குத் தோன்றுகிறது.

மிஞ்சி மிஞ்சிப் போனால் அதற்கு வயசு ஆறு அல்லது ஆறரைதான் இருக்கும். அந்த வயசுக்கு ஏற்ற வளர்ச்சிகூடப் பெற்றிருக்கவில்லை அதன் உடல். "கத்தரிக் காய்க்குக் காலும் கையும் முளைத்த மாதிரி" என்பார்களே, அதை விளக்குவதற்கு ஏற்ற உயிருள்ள உதாரணமாக ஓடியாடித் திரியும் அந்தக் குழந்தையின் பெயர் என்னவோ-எனக்குத் தெரியாது...

நாகரிக யுகத்தின் தவிர்க்க முடியாத பரிணாமங்களில் ஒன்று "ஓட்டல்களை நம்பி உயிர்வாழும் பிராணிகள்" இனம்! அந்த இனத்தைச் சேர்ந்த எனக்கு இந்த நகரத்தின் எத்தனையோ ''ஓட்டல்''களைத் தெரியும். அந்த ஓட்டல்களில் உள்ளவர்களுக்கும் என்னைத் தெரியும்.

தெரியும் என்றால் என்ன! அடிக்கடி ஆஜர் ஆகி மறைகிற ஒரு முகம் என்ற அளவுக்கு அறிமுகம் ஆகியிருப்பது தவிர, நான் யார்; என் தொழில் என்ன; எனது மாத வருமானம் எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் எதுவும் யாருக்கும் தெரியாது. அதே ரீதியில்தான் அந்தச் சிறுமியும் எனக்கு அறிமுகம் ஆகியிருந்தது.

அதற்கும் என்னைத் தெரியும். அதாவது, எந்த இடத்தில் கண்டாலும், கண்களில் சுடரொளி மின்ன, முகம் நன்கு மலர்ச்சியுற, வெண்பற்கள் தெரிய, களங்கமற்றுச் சிரிப்பு வழங்கத் துணைபுரிகிற அளவுக்கு எனது தோற்றம் அச்சிறுமிக்குப் பழக்கப்பட்டு விட்டது. அது

எங்குநின்றாலும், எந்தக் கூட்டத்திடையே வந்தாலும், எப்படித் திரும்பி நின்றாலும் "அதோ அந்தப் பெண்!" என்று என் மனம் கொக்கரிக்கக் கூடிய விதத்தில் அதன் உருவம் என்னுள் பதிந்திருந்தது.

விந்தையாகக் கண்டு களிப்பதற்கு ஏற்ற வேடிக்கை உருவமாகத்தான் அந்தச் சிறு பெண் விளங்கியது. என்றோ ஒருநாள் "லேடி கிராப்" ஆகக் கத்தரிக்கப்பட்டிருந்த தலை மயிர் ஒழுங்காக வளராமல் நெட்டையும் கட்டையுமாக அடர்ந்து கிடக்கும் பரட்டைத் தலை, அது வாரிவிடப்படாமல் எப்பொழுதும் சீர்குலைந்தே தோன்றும். அந்தப் பெண் குதித்து ஓடும்போது தலைமயிர் தனி நடனம் பயிலும். தலைமயிர் எப்படிக் காட்சியளித்த போதிலும், விசாலமற்ற அதன் நெற்றியிலே சற்று பெரிதாகவே தோன்றும் சாந்துப் பொட்டு, கொலுவிருக்கத் தவறுவதே கிடையாது. அழுத்தமான வர்ணங்கள் பெற்ற முரட்டுத் துணிச் சட்டையும் பாவாடையும்தான் அணிந்திருக்கும் அச்சிறுமி, அழுக்கு முட்டிப்போனாலும் அது அம்பலமாகிவிடாது என்ற காரணத்தினாலேயே அத்தகைய துணிகளைப் பெரியவர்கள் அந்தச் சிறு பெண்ணுக்காகத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். பாவாடையும் சட்டையும் கூட சதா கட்டையானவை ஆகவே தோன்றும். பாஷன் என்றோ, குழந்தை வேகமாக வளர்கிறது என்றோ காரணம் கூறமுடியாது அதற்கு. பெற்றோர் அல்லது கார்டியனின் சிக்கன நோக்கு தான் அடிப்படைக் காரணமாக இருக்க முடியும்.

வாழ்க்கை வசதிகளை வளமாகப் பெற்றிராத குடும்பத்திலே வளரும் குழந்தை அது. அதன் உருவமும் உடையும் இதை எடுத்துக்காட்டின. ஆனாலும் அது சந்தோஷமாகவே விளங்கியது. சந்தோஷமாக இல்லாமல் இருப்பதற்கே வசதி செய்து தருகிற இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் களிதுலங்கும் முகத்தோடு காட்சி தருகிறவர்களைக் காண்பதே மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். ஆகவே, ஆனந்த மயமான அச் சிறு உருவத்தை எனக்கு மிகுதியும் பிடித்திருந்தது.

ஒரு ஓட்டலுக்குப் போய்வரும் பாதையிலும், அந்த ஓட்டலின் முன்னரும் அந்தப் பெண் அடிக்கடி தென்படும். பெரியவர்கள் யாருக்காகவேனும் மிக்ஸ்சர் அல்லது பக்கடா அல்லது வேறு ஏதாவது வாங்கிவர அது ஓட்டலுக்குள் பிரவேசிக்கும். அப்படி

வருகிறபோதெல்லாம். அது சாவகாசமாக நின்று ஆராய்ச்சி செய்யாமல் திரும்பிவிடத் துடிப்பதே கிடையாது.

அலமாரியில் வசீகரமான, வர்ணமயமாக, எடுப்பான வெளிச்சத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இனிப்புத் தினுசுகளை ஆசையோடும் ஆர்வத்தோடும் பார்த்துக்கொண்டே நிற்கும் அது. அங்கே அருகில் உள்ளவனிடம் "அது என்ன? இது என்ன? அதன் விலை எவ்வளவு? இதன் விலை எவ்வளவு?" என்று விசாரிக்கும். அவனுக்கு அதன் தொண தொணப்பு தொல்லையாகவே படும். ஒன்றிரண்டு தடவை பதில் சொல்லிவிட்டு பிறகு "சீ போ!" என்று அவன் எரிந்து விழுவதே இயல்பாகும். முடிவில் அச்சிறுமி "கொஞ்சம் பக்கடாத் தூள்கொடேன்" என்று கேட்டபடி கையை நீட்டும். சில சமயம் கேட்டது கிடைக்கும் சில சமயம் கிடைக்காமலும் போகலாம். கிடைத்து விட்டால் அது அதிக மகிழ்ச்சி அடைவதுமில்லை. கிடைக்காது போயின் வருத்தப்படுவது மில்லை. வழக்கம்போல் சிரித்துக் கொண்டே திரும்பிவிடும்.

விளம்பரப் பகட்டும் வியாபார தடபுடலும்மலிந்துவிட்ட நாகரிக நகரத்தில் மக்களின் எண்ணத்தை, ஏக்கத்தை, ஆசையை, கனவை எல்லாம் தூண்டி விடுவதற்கு வேண்டிய வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. அந்தச் சிறு பெண்ணின் உள்ளம்கூட நிறைவேற முடியாத எண்ணங்கள் மலரும் வனமாக, அடக்க இயலாத ஏக்கங்கள் மண்டும் குகையாக, தீர்த்து வைக்க முடியாத ஆசைகள் அலைமோதும் கடலாக, அனுபவ சாத்தியமற்ற கனவுகள் நிழலாடும் அரங்கமாகத்தான் திகழும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் அந்தக் குழந்தை ஒரு போதுகூடத் தன் சிரிப்பை மறந்து விடவேயில்லை. அதுதான் அந்தச் சிறு பெண்ணிடம் காணப்பட்ட விசேஷச் சிறப்பு.

அதன் தன்மைக்காக அதைப் பாராட்டலாம், தாராளமாக ஸ்வீட்டும் ஐஸ் கிரீமும் வாங்கிக் கொடுக்கலாம் என்று நான் அடிக்கடி எண்ணுவது வழக்கம். ஆனாலும் ஒரு தடவை கூட நான் அவ்வாறு செய்ததில்லை. காரணம், என் எண்ணத்தின் வள்ளல்தனத்துக்கு வேலி போடும் உரிமை எனது பொருளாதாரத்துக்கு இருக்கிறது. நித்திய நிரந்தர "பற்றாக்குறை" என்ற பெருமையை உடையது எனது பொருளாதார நிலை. பையிலே உள்ள அணாக்களை எண்ணிப்

பார்த்துக்கொண்டே வயிற்றுக்கு ஈயவேண்டிய நிலையை வளர்த்துவரும் பொருளாதாரம் நினைத்தவருக்கு நினைத்ததை வாங்கி அருளத் துணை புரியுமா என்ன?

என்றாலும்கூட, ஒரு நாள் என்பையில் முழுசாக ஒரு ரூபாய் இருந்தது...ஒரு ரூபாய்! ஆகா, அதற்கு என்னென்னவெல்லாமோ வாங்கலாமே. அழகு அழகான வர்ணப் படங்கள் நிறைந்த சினிமாப் பத்திரிகையை வாங்கிக் கண்களுக்கு விருந்து கிட்டும்படி செய்யலாம். பழைய புத்தகக் கடையில் பல புத்தகங்கள் வாங்கி அறிவுக்குத் தீனிபோடலாம். இரண்டு வேளை முழுச்சாப்பாடு சாப்பிடலாம். எட்டுக் கப் காப்பி சாப்பிடலாம். (கப் இரண்டரை அணா என்று பில் போடுகிற சுரண்டல்காரர்கள் கடைகளை எட்டிப் பாராமல் இருந்தால்தான்!) ஆகா, ஒரு ரூபாயை வைத்துக்கொண்டு என்னதான் செய்யமுடியாது?

அந்தச் சமயத்தில் ஆனந்தி வழக்கம்போல் குதித்துக்கொண்டு வந்தது... அச்சிறு பெண் சதா ஆனந்த மயமாகவே இருந்ததால் என் மனம் அதை ஆனந்தி என்று குறிப்பிடுவது வழக்கம். அதன் பெயர் எனக்குத் தெரியாது என்றுதான் நான் முதலிலேயே சொல்லி விட்டேனே!

சிரித்தபடி வந்த சிறுமி கேட்டது "ஓட்டலுக்கா?" என்று,

"ஆமா, நீயும் வாறியா?"

"ஏன்?"

"பாஸந்தி வாங்கித் தாறேன்."

இன்று இந்தப் பெண்ணுக்கு எது வேண்டுமானாலும் வாங்கிக் கொடுக்கலாம் என்றது என் மனம்.

"பாஸந்தியா? அது எப்படி இருக்கும்?"

"ஜோராக இருக்கும்!"

"நான் இங்கேயே நிற்கிறேன். நீ வாங்கிட்டு வாயேன்" என்றது குழந்தை.

"அதுக்கு தட்டோ கிண்ணமோ தேடணுமே!"

"சும்மா கையிலேயே எடுத்திட்டுவாயேன்!"

"திரவ பதார்த்தமும் இல்லாமல் திடபதார்த்தமும் அல்லாத - அதாவது, பால் மாதிரியோ வெண்ணெய் மாதிரியோ இராமல்..."

ஒரு சிறுமியிடம் பேசுகிறேன் என்ற நினைவு உறுத்தவே நான் பேச்சை நிறுத்திவிட்டேன். என் குறைபாடுகளில் இதுவும் ஒன்று. சில சமயங்களில் சில விஷயங்களைப் பற்றி சில பேரிடம், புரியும்படியாக மிகத் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியாமல் நான் திணற நேரிடும்.

அது என் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றது.

"அதெல்லாம் ஏன்! நீ என்கூட ஓட்டலுக்கு வா. உனக்கு வேண்டிய ஸ்வீட்டு வாங்கித் தாறேன்" என்றேன்.

"ஐயோ, எனக்கு வெட்கமா இருக்குமே! உன்கூட நான் எப்படி வர முடியும்?" என்று நாணிக் கோணி, தலையைச் சாய்த்துக் கொண்டு அச்சிறு பெண் கூறியது மிகவும் ரசிக்கக்கூடிய காட்சியாக அமைந்தது. என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

அதுவும் சேர்ந்து சிரித்தது.

"சரி, நீ வரவேண்டாம். உனக்கு மிட்டாய் வேண்டுமா?" என்று கேட்டேன்.

"இப்ப எதுக்கு மிட்டாயி?" என்று சவால் விடுத்தது அது.

"காசு வேணுமா? ஒரணா தாறேன்",

"ஏன் எனக்கு உன் காசு?" என்று கேட்டுவிட்டு அது ஓடியது.

இது வேடிக்கையான குழந்தை தான் என்று நினைத்தேன் நான்.

அதன் பிறகும் அவ்வப்போது அது என் பார்வையில் பட்டுக் கொண்டுதானிருந்தது. சிரித்தது. ஏதாவது பேசும்; பேசாமலே போனாலும் போய்விடும் - இதற்கெல்லாம் ஒரு திட்டம், நியதி என்று எதுவுமே கிடையாது.

ஒரு நாள்...

அந்தச் சிறுமி ஓட்டலில் அலமாரி அருகே நின்று, வழக்கமான விசாரணையில் ஈடுபட்டது.

"அதோ அது என்னா?"

"லாடு".

"அது என்ன விலை?"

"மூணு அணா."

"மூணு அணா யின்னா இவ்வளவு தானே?"

மூடியிருந்த விரல்களை விரித்து, கையை நீட்டிக் காட்டியது. அதில் இரண்டு நயா பைசாக் காசுகள் மூன்று இருந்தன.

"ஊகும். இது ஓர்ணாதான்" என்றான் ஸெர்வர்.

"ஓரணாவா? இவ்வளவும் சேர்ந்தது ஒரு அணா தானா?" என்று கேட்டது குழந்தை.

"ஆமா."

"இதுக்கு என்ன வாங்க முடியும்?"

"வடை வாங்கலாம். அல்லது ஒரு இட்டிலி வாங்கித் தின்னு."

"தூ, அது யாருக்கு வேணும்?" என்றது அது. பிறகு மைசூர் பாகையும், ஜாங்கிரியையும், பாதுஷாவையும் சுட்டிக்காட்டி கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தது.

அவனோ பொறுமை இழந்தவனாய் எரிந்து விழுந்தான். "சீ போ!" என்று அதட்டினான்.

அந்தப் பெண்ணின் முகத்தில் ஏமாற்றத்தின் சாயை படர்ந்தது. இன்று நிச்சயமாக ஒரு ஸ்வீட் வாங்கி விடலாம் என்ற நம்பிக்கை அதன் பிஞ்சு உள்ளத்திலே பதிந்து கிடந்தது போலும். அது பாழாகிவிட்டது. அதன் நடையில் சிறிது வாட்டம் காணப்பட்டது...

வெளியே வந்ததும், அது அங்கு மிங்கும் பார்த்தபடி நின்றது.

சற்று தூரத்தில் ஏதோ பரபரப்பு, சிறு கூட்டம், அது சிறுமியின் கவனத்தைக் கவர்ந்தது; கால்களை அங்கே இழுத்தது.

நொண்டியான சிறுமி ஒருத்தி ரஸ்தாவைக் கடந்து வந்தாள். அதே சமயம் கார் ஒன்று வேகமாக வந்தது. நல்ல வேளை. அவள் பிழைத்தது ஆச்சரியம் தான், யாரோ வேகமாக நொண்டிப் பிள்ளையைப் பிடித்து இழுத்துப் பாதுகாத்தார்கள். அதற்காகத் தான் பரபரப்பும் கும்பலும்!

அவள் அழுதுகொண்டே இருந்தாள். பயமும் பசியும் அவள் உடலில் நடுக்கம் ஏற்படுத்தியிருந்தன. "ஐயோ...பசிக்குதே" என்று விம்மினாள்.

பெரியவர்கள் போதித்தார்கள். அனுதாபப்பட்டபடி போனார்கள் சிலர். கவனியாமலே நடந்தார்கள் பல பேர். இரண்டொருவர் காலணாவும் அரையணாவும் கொடுத்தார்கள்.

நொண்டிப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்த சிறுமியின் இதயத்திலே என்னென்ன நாதங்கள் எழுந்தனவோ! அந்த அபலையின் அழுகுரல் ஆனந்தியின் உள்ளத்தில் எந்த உணர்ச்சியைத் தொட்டதோ! சட்டென்று முன்வந்து அக்குழந்தை தன் கையிலிருந்த மூன்று காசுகளையும் நொண்டிப் பெண் கையில் திணித்தது. சிரித்தபடி ஓட்டம் பிடித்தது. அதன் முகத்தில் இயல்பான மலர்ச்சி; அதன் கால்களில் பழைய குதிப்பு!

என் உள்ளத்திலே ஒரு சிலிர்ப்பு பிறந்தது. சிறு உருவத்தினுள் உறைந்துள்ள பெரிய மனதை எண்ண எண்ண எனக்கு வியப்பு தான் ஏற்பட்டது. பெரிய உருவமும் சிறு உள்ளமும் - பருத்த உடலும் தடித்த அறிவும் - பெற்றவர்கள் மிகுந்துள்ள மனித குலத்தில் அபூர்வமாய், அதிசயமாய், ஆனந்த சொரூபமாய்த் திகழ்ந்த அச் சின்னஞ்சிறு பெண்ணைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்று எண்ணினேன்.

ஆனால்....ஆனால்...சமூக தர்மங்கள், நாகரிக வழக்கங்கள், பண்பாடு அது இது என்ற பெயரால் எத்தனையோ வேலிகள் கட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகிற போலிக் கௌரவத்தைப் போற்றும் மனிதப் பிராணிகளிலே நானும் ஒருவன் அல்லனோ! ஆகவே, செயல்படமுடியாத எத்தனை எத்தனையோ எண்ணங்களைப் போலவே இந்த நினைப்பும் பிறந்த உடனேயே மக்கி மடிந்தது.

*